# சமூகவியல் கொள்கைகள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
2000

# சமூகவியல் கொள்கைகள்

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
WITH COURAGE AND FAITH
அண்ணாமலைநகர்
2000

முதற்பதிப்பு - 2000
©அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# சமூகவியல் கொள்கைகள்

நூலாசிரியர்கள்

1. முனைவர்: து. செல்வராசு
பேராசிரியர் & துறைத்தலைவர்,
சமூகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

2. முனைவர்: ச. சரஸ்வதி
பேராசிரியர்,
சமூகவியல் துறை,
தொலைத்தூர கல்வி இயக்ககம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

3. முனைவர்: ரா. இராஜேந்திரன்
இணைப்பேராசிரியர்,
சமூகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

4. முனைவர்: ஜெ. கிருஷ்ணமூர்த்தி
இணைப் பேராசிரியர்,
சமூகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

விலை: ரூ. 100-00

அச்சிட்டோர்:
சாரு ஆப்செட்
வேளாண் கல்லூரி சாலை,
அண்ணாமலைநகர்,
தொ. எண். 04144 - 38652.

# முகவுரை

சமூகவியலைப் படிப்பதன் மூலம் நாம் அதிகமான புதிய உண்மைகளை தெரிந்து கொள்ள முடியும். ஏன் எனில் சமூகவியல் மூலம் நாம் உலகத்தில் பல நிகழ்ச்சிகளையும் மனிதனுடைய நடத்தை முறைகளையும் அறிந்து கொள்ள முடியும். ஒரு பாடப்புத்தகத்தின் சிறப்புத் தன்மை எப்பொழுது வெளிப்படும் என்றால் நாம் அதனைப் படித்து அதிலுள்ள கருப்பொருள்களை கண்டறிந்து அதன் மூலம் நமது சமூகத்தைப்பற்றியும் மற்ற சமூகங்களைப் பற்றியும் சிறப்பான முறையில் நூதனமான கருத்துக்களை அறிந்து கொள்ளும் போதுதான்.

நாங்கள் இந்த சமூகவியல் கொள்கைகள் பாட புத்தகத்தை எழுதும் போது அது மிக சிறப்பான ஆரம்பப் பாட நூலாக இருக்க வேண்டும் எனக்கருதி நாங்கள் சிறந்த பாட நூலுக்கு வேண்டிய நான்கு முக்கியமான பண்புகளை மனதில் கொண்டோம். அவையாவன:

முதலாவதாக, மிகவும் விரும்பத்தக்கதாகவும் ஒவ்வொரு மாணவனும் தனது பாடப்புத்தகத்தை புரட்டும் போது இருக்கும் திருப்தி அதனை படிக்கும் போது இருக்க வேண்டும் என்ற முறையில் எழுதப்பட்ட நூலாகும். எங்களுடைய இலக்கு என்னவென்றால் ஒவ்வொரு பாடத்திட்டத்தையும் படிக்கும் போது இருக்கக்கூடிய விருப்பம் அதனுடைய கருத்துக்களிலிருந்து புலப்படும் படியாக இருக்க வேண்டும் என்பது.

இரண்டாவது, ஒவ்வொரு பாடத்திட்டமும் தற்கால நிலைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப புதுக் கருத்துக்களுடன் மாணவர்களை ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கு அறிவு செம்மைப்படுகின்ற அளவிற்கு எழுதப்பட்டுள்ளது.

மூன்றாவதாக சமூகவியல் என்பது சமுதாய வாழ்கையைப் பற்றிய பாடமாதலால் சமூகவியல் கொள்கைகளைக் கொண்டு ஒவ்வொருவரும் எப்படி நடைமுறை வாழ்க்கையை தெளிவாக அறிந்து கொள்ள

முடியும் என்ற அளவிற்கு பாடக் கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளது.

நான்காவதாக சமூக அறிவியலை படிக்கும் போது ஆரம்ப நிலை மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் விருப்பு வெருப்புக்கு அப்பாற்பட்டு பல வகையான நிலைகளில் கருத்து சிந்தனைகளை உருவாக்கும் வகையில் இந்த சமூகவியல் கொள்கை பாட நூல் அமைந்துள்ளது.

மேலும் இப்பாடநூல் எளிய நடையில் எல்லோராலும் மிக சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில் மேலே கூறப்பட்ட நான்குப் பண்பாடுகளின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். இந்நூல் இளங்கலை சமூகவியல் மாணவர்களுக்கு ஒரு முக்கிய ஆரம்ப நிலை நூலாகவும், சமூகவியலை ஒரு துணைப்பாடமாக எடுத்து படிக்கும் அறிமுக நூலாகவும் இது அமையும்.

இங்ஙனம்

நூலாசிரியர்கள்

# சமூகவியல் கொள்கைகள்


| பாடம் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | சமூகவியல் ஒரு கண்ணோட்டம் | 1 |
| 2. | சமூகவியலும் மற்ற சமூக அறிவியல்களும் | 6 |
| 3. | சமூகவியலின் கருத்துக்கோணம் / நோக்குநிலை | 15 |
| 4. | அடிப்படை சமூகவியல் கருத்துப் படிவங்கள் | 42 |
| 5. | சமூகவியல் ஆராய்ச்சி முறைகள் மற்றும் அளவுகள் | 48 |
| 6. | பண்பாடு | 52 |
| 7. | சமூகமயமாதல் | 63 |
| 8. | சமூக செயற்பாங்குகள் | 76 |
| 9. | சமூக குழுக்கள் | 94 |
| 10. | சமூக நிறுவனங்கள் | 103 |
| 11. | கல்வி நிறுவனம் | 136 |
| 12. | சமய நிறுவனம் | 147 |
| 13. | பொருளாதார நிறுவனம் | 159 |
| 14. | அரசியல் நிறுவனம் | 174 |
| 15. | சமூக அடுக்கமைவு | 182 |
| 16. | சிறுபான்மைக் குழுக்கள் | 193 |
| 17. | சமூக வழியிலிருந்து விலகுதலும் சமூகக் கட்டுபாடும் | 202 |
| 18. | திரளான அல்லது கூட்டான மக்களின் நடத்தையும் சமூக இயக்கங்களும் | 219 |
| 19. | மக்கள் தொகை இயக்கங்கள் | 234 |
| 20. | சமூக மாற்றம் | 248 |

# பாடம் - 1

# சமூகவியல் ஒரு கண்ணோட்டம்

## அறிமுகம் (Introducction)

### சமூகவியல் என்றால் என்ன?

சமூகவியல் என்பது சமூக அமைப்புகளையும், சமூக உண்மைகளையும் அறிவியல் ரீதியாக ஆராய்கின்ற இயல் ஆகும்.

சமூக அமைப்பு என்பது ஒரு குழு மனிதர்கள் சிலவகையான கூட்டுச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பவர்கள். மேலும் இவர்கள் மற்ற அங்கததினர்களுடன் பலவகையான வழிகளில் தொடர்பு கொண்டவர்களாகவும் இருப்பவர்கள் ஆவார்கள். சமூக அமைப்புகள் ஒரு மிகச் சிறிய இணை காதலர்கள் அல்லது ஒரு பெரிய அதிக அளவிலான எண்ணிக்கை உள்ள போர்ப்படையாக அமைந்து இருக்கும். இத்தகைய சமூக அமைப்புகளில் சில அமைப்புகள் ஒரு குறுகிய காலம் மட்டும்தான் நீடித்து இருக்கும் பிற அமைப்புகள் பலதலைமுறைகள் வரைக்கும் கூட நிலைத்திருக்கும்.

சமூக உண்மைகளானவை தனி நபர்களினுடைய முறைப்படுத்தப்பட்ட நடத்தை முறைகளாகும். இத்தகைய முறைகள் சமூக அமைப்புகளின் மூலமாகத் தனி நபர்களின் மீது திணிக்கப்படுகின்றன. மிகப்பெரிய மற்றும் நிலைத்து நிற்ககூடிய சமூக அமைப்புகளில் (உதாரணம்: நாடு) பல லட்சக்கணக்கில் இருக்கின்ற சமூக உண்மைகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான சமூக உண்மைகளைப் படிக்கவேண்டுமேயானால் அவைகளை பல சிறிய இனவகைக்கூறுகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். நடைமுறையில், உதாரணமாக, குடும்பம், வேலை, நகரம், சமூக மாற்றம் போன்ற கூறுகளாக பிரித்துப் படிக்கலாம்.

சமூகவியல் ஆராய்ச்சியின் மூலமாக நாம் தெரிந்து கொண்ட மற்றும் கண்டுபிடித்த சில முக்கியமான சமூக உண்மைகளைப் பற்றி இந்தப் புத்தகத்தில் தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

## சமூகவியலின் முக்கியத்துவம்?

தெளிவாக வரையறை செய்யப்பட்ட சமூகவியலானது ஏறக்குறைய நூறு வருடங்கள் பழமையானது ஆகும். ஆனால் சமூக அமைப்புகள் மற்றும் விளைவுகள் மீது சமூகம் கொண்டிருக்கின்ற ஆர்வமானது நாகரீகம் அடைந்துள்ள நிலையை விட மிகவும் பழமையானது ஆகும். இத்தகைய ஆர்வத்தின் பின்னணி நோக்கமானது எல்லா நபர்களுக்கும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. நீங்கள் சமூகவியலின் மூலம் என்ன கற்று அறிந்து கொள்ளப்போகிறீர்கள் என்பது நீங்கள் அதை ஏன் படிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து அமைந்திருக்கும். உதாரணமாக நீங்கள்

1. சமூகம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்றும் அது எவ்வாறு செயல்படுகிறது என்றும் ஒரு தெளிவான கருத்தினைப் பெற விரும்பி இருக்கலாம்.

2. நம்முடைய வளர்ப்பு முறையின் மூலமாக நம்மீது திணிக்கப்பட்ட குறைகளில் இருந்து விடுபடவும், மேலும் சமூக உலகினை ஒரு மெய்யான கண்ணோட்டத்தோடு பார்த்து அறிந்து கொள்வதற்காகவும்.

3. நம்முடைய மதிப்பீடுகள் பற்றித் தெளிவு பெற வேண்டுமேயானால் இத்தகைய சமூக மதிப்பீடுகள் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பற்றி ஆராய வேண்டும்.

4. நடைமுறை உலகில் ஏற்படுகின்ற சமூக மாற்றங்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்காகவும், மேலும் எதிர்காலத்தைப் பற்றி ஒரு முன் மதிப்பீடு செய்வதற்கான திறனைப்பெற வேண்டியும்.

5. சமூக நுண்ணொழுங்கு அமைவுகள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதற்காகவும், மேலும் அவைகளைத் தனிநபர் வளர்ச்சிக்கு எவ்வாறு உபயோகிக்கலாம் என்று அறிந்து கொள்வதற்காகவும்.

6. சமூக நுண்ணொழுங்கு அமைவுகள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதற்காகவும், மேலும் அவைகளை ஒரு சமூக இயக்கத்திற்காக நாம் எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி அறிந்து கொள்ளவும்.

7. ஒரு தனிப்பட்ட சமூகப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்காகவும்

8. உங்களைச் சமூக அறிவியல்களில் ஏதேனும் ஒன்றின் மூலமாகவோ அல்லது அதைச் சார்ந்த பிரிவுகளின் மூலமாக (உதாரணம் : சட்டம்) வாழ்வின் வளர்ச்சிக்கு தயார்படுத்திக் கொள்ளுதல் மற்றும் உங்களுடைய அறிவுபூர்வமான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் நாம் சமூகவியலைப் படிக்கலாம்.

## சமூகவியல் ஒரு அறிவியல், எப்படி?

சமூகவியல் ஒரு சமூக அறிவியல் என்றால் சமூகவியலைப் பற்றிய .தகவல்கள் எந்த அளவிற்கு நவீன அறிவியல்களில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொது தரத்தின் அடிப்படையில் பெறப்படுவதைக் குறிக்கும். இத்தகைய பொதுவான தரநிலைகள் உண்மையான நிலையையும், துல்லியமான அளவுமுறைகளையும்

உட்கொண்டதாக அமைந்து இருக்கும். மேலும், ஆராய்ச்சிகளுடைய வெற்றி தோல்விகளையும் தகவல்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம். மிக அதிகமான ஆராய்ச்சியின் முடிவுகளைப் பலநிலைகளிலே குறுக்குச் சோதனைகளின் மூலமாகச் சுதந்திரமாக ஆராய்ச்சியாளர்கள் கொடுக்கும் முடிவுகளும் இடம் பெற்றிருக்கும்.

கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படும் நவீன பாடதிட்டங்களானவை மூன்று பரந்த பிரிவுகளில் உட்பட்டதாக அடங்கும். அவையாவன:

1. இயற்பியல் சார்ந்த அறிவியல்கள்
2. சமூக அறிவியல்கள்
3. மனிதப் பண்புகள் பற்றிய கலைப் பயிற்சி (Humanities)

இயற்பியல் சார்ந்த அறிவியலானது இயற்கையைப் பற்றி அறிவியல் ரீதியாகப் படிப்பதாகும். சமூக அறிவியலானது மனித நடத்தை முறைகளை அறிவியல் ரீதியாகப் படிப்பதாகும். மனிதப் பண்புகள் பற்றிய அறிவியலானது பண்பாட்டுக் கூறுகளையும், மொழி மற்றும் கலைகளை முறையாகவும் அதே சமயத்தில் பொதுவாக அறிவியல் தன்மையற்ற ஒரு பயிற்சி முறையாகும். இந்த அறிவுப் பிரிவானது கோட்பாடு மற்றும் நடைமுறை ஒழுங்கு நிலைகளில் மிகத் துல்லியமாகப் பிரிக்கப்படவில்லை. உதாரணமாக உயிரியலானது இயற்பியல் சார்ந்த அறிவியல் பிரிவின் கீழ் வருகிறது. அதே சமயம் மிக அதிகப்படியான மனித நடத்தை முறைகள் இந்த உயிரியலின் கீழ் வருகின்றன. வரலாறு சமூக அறிவியலின் கீழும் அப்படி இல்லையெனில் மனிதப் பண்புகள் சார்ந்த கலைப்பயிற்சியின் கீழும் கணக்கில் கொள்ளப்படுகிறது. சில வகையான நிலவியல் பிரிவுகள் இந்த மூன்று வகையான பரந்த அறிவுப் பிரிவின் கீழ் வருகின்றன.

இயற்பியல் சார்ந்த அறிவியல்களின் ஆராய்ச்சி முடிவானது சமூக அறிவியல்களைவிட மிகவும் துல்லியமானதாகவும் அதே சமயம் நம்பத்தக்கதாகவும் அமையப்பெற்றிருக்கும். ஆனால் சில விதிவிலக்குகளும் உண்டு. உதாரணமாக, நீண்டகாலத் தட்பவெப்பநிலை பற்றிய கணிப்பானது தொலைநோக்கு மக்கள்தொகை வளர்ச்சி பற்றிய கணிப்பைக் காட்டிலும் மிகக் குறைவான அளவே நம்பத் தகுந்த கணிப்பாக இருக்கும். பொருளாதார அறிவியல்களை விட மிகக் குறைவான துல்லியமானதாக வேதியியல் சில சமயங்களில் காணப்படும்.

பொதுவாக, சமூக அறிவியல்களும், மனிதப் பண்புகள் பற்றி கலைப்பயிற்சிப் புலங்களும் பெரும் பகுதி ஒத்திருக்கும். சமூகவியலின் கீழ் வரும் அதிகப்படியான நிகழ்வுகளானவை சரிபார்க்க முடியாதவையாக இருக்கும். அதே சமயம் சில இலக்கிய அறிஞர்கள் கணிப்பொறிகளின் துணையோடு வேலை பார்க்கிறார்கள். எனினும் மனிதப் பண்பு பற்றிய கலைப்பயிற்சி அறிவியல் அறிஞர்கள் பொதுவாக ஒரு மனித நிகழ்வை உதாரணமாக, ஒரு புத்தகம் அல்லது போர் – அந்த நிகழ்வுக்காக மட்டுமே படிக்கிறார்கள். அதே சமயம் சமூக அறிவியல்களின் அறிஞர்கள் மேற்கூறியதைப் போன்ற நிகழ்வுகளின் பொதுத் தன்மையைத் தெரிந்து கொள்வதற்காகப் படிக்கிறார்கள்.

## பாடம் - 2

# சமூகவியலும் மற்ற சமூக அறிவியல்களும் (Sociology and other Social Sciencies)

சமூக அறிவியலானது தனிநபர் நடத்தைமுறைகளின் சிறப்பு அம்சங்களை ஆராய்கிறது. சமூகவியலைத் தவிர்த்து சமூக அறிவியலானது மானிடவியல், பொருளாதாரம், வரலாறு, உளவியல், அரசியல் அறிவியல் போன்ற அறிவியல்களையும் கொண்டதாகும். நாம் சமூகவியலின் அறிவியல் தன்மையைச் சிறப்பாக அறிந்து கொள்ள பிற சமூக அறிவியல்களோடு சமூகவியல் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றி ஆராய்ந்து தெரிந்து கொண்டால் சமூகவியலின் மிக முக்கியமான தன்மைகளை அறிந்து கொண்டவர்களாக ஆவோம். இங்கு நாம் சமூகவியலுக்கும் பிற சமூக அறிவியல்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி ஆராய்வோம்.

## சமூகவியலும் மானிடவியலும் (Sociology and Anthropology)

மானிடவியலானது மனித புலத்தைப் பற்றியும், பண்பாட்டைப் பற்றியும் படிக்கின்ற ஒரு அறிவியலாகும். இந்த அறிவியலானது நான்கு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியானது மிகப் பழமையான மனித குல நாகரீகத்தைப் பற்றிய தகவல்களை ஆராய்வது. இயற்பியல் சார்ந்த மானிடவியலானது புதைப்படிவம் மற்றும் மனித குலத்தின் பழமையான நிலைகள் மற்றும் மனித குல பரிணாமத்தின் பாங்கம் ஆகிய இவைகளைக் கொண்டு ஆராய்கின்ற அறிவியல் பிரிவாக அமைகிறது. மொழியியல் படிப்பானது மொழிகளுடைய அமைப்பு, மற்றும் செயல்பாடுகளை ஆராய்கிறது. நான்காவது பிரிவான பண்பாட்டு மானிடவியலானது நிகழ்காலப் பண்பாடுகளை ஒப்புமை செய்து பண்பாட்டின் தன்மைகளை ஆராய்கிறது. மானிடவியல், சமூகவியல் துறைகளில் சாதாரணமாக,

பாடங்களிலே சேர்க்கப்படுகிறது. இந்த மானிடவியலிலிருந்து பெறப்படுகின்ற கருத்துகள், முக்கியமாகப் பண்பாட்டு மானிடவியலிலிருந்து பெறப்படுகின்ற கருத்துக்களானவை சமூகவியலாருக்கு ஒரு முக்கியமான மதிப்புமிக்க செய்திகளாகவும் அதன்மூலம் பண்பாடுகளை ஒப்பீடு செய்து படிக்கவும் ஏதவாக அமைகின்றன.

## சமூகவியலும் வரலாறும் (Sociology and History)

சமூகவியலும் வரலாறும் மிகவும் நெருக்கமான உறவு கொண்டுள்ளன. சில அறிஞர்கள் இவ்விரண்டு அறிவியல்களும் முற்றிலும் ஒன்றே என்று கருதுகிறார்கள். சமூகவியலின் ஆரம்பமே வரலாறு சம்பந்தப்பட்டது என அடிக்கடி விவாதிக்கப்படுகின்றது. சமூகவியல் தரவுகள் அடிப்படையிலே வரலாற்று செயற்பாங்குகளினால் நிர்ணயிக்கப் படுகின்றன. ஆரம்பகால மற்றும் இன்றைய சமூகவியல் அறிஞர்களும் மனித சமூகத்தைப் பற்றிப் படிப்பதற்காக வரலாற்றின் புறக்கடை பின்புறம் அங்கீகரித்துள்ளனர். குரோஸ் (Croce) முதல் காரல்மார்க்ஸ் (Karl Marx) வரை மனித சமூகத்திற்குத் தத்துவம் மற்றும் வரலாற்று ரீதியிலான விளக்கங்கள் உள்ளன. சமூகவியலின் ஒப்பிட்டுப் பார்க்கும் முறை வரலாற்றுத் தரவுகளிலேயே முக்கியமாகச் சார்ந்துள்ளது.

சமூகவியலுக்கும், வரலாற்றுக்கும் இடையே உள்ள உறவுகளை அவ்வியல்களின் பாட எல்லையையும், அணுகுமுறையையும் கருத்தில் கொண்டு அணுகலாம். வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு சமூகங்களில் நிகழ்ந்த குறிப்பிட்ட மனித நிகழ்ச்சிகளின் அறிக்கையே வரலாறு எனப்படும். நிறுவனங்கள், வாழ்க்கையின் விதங்கள் வழக்குகளின் அடிப்படையில் மனித சமூகங்களில் தோன்றுகின்ற வளர்ச்சிகளைச் சமூகவியல் அங்கீகரிக்கிறது. சமூகக் காட்சி வரலாறுகளை ஆராய்வதில் இவ்விரு அறிவியல்களும் அக்கறை கொண்டுள்ளன.

மனிதனின் சமூக நடத்தைகளைப் பழைய தலைமுறைகளின் செயல்களின் மூலமாக விளக்குவதற்கு வரலாற்றுத் தரவுகளையே சமூகவியல்

உபயோகப்படுத்துகிறது. அதே சமயம் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்த சமூகச் சூழ்நிலைகளை வரலாறு அங்கீகரிக்கிறது சமூக முக்கியத்துவமற்ற நிகழ்ச்சிகளின் சாதாரண அறிக்கை அர்த்தமற்றதாகும். சமூகவியல் விளக்கங்களினால்தான் வரலாற்றுத் தரவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகவியலுக்கும் வரலாற்றிற்கும் இடையே உள்ள பரஸ்பர உறவுகளைப் பற்றி ஜீ.ஈ.ஹோவார்ட் (G.E. Howard) என்ற அறிஞர் குறிப்பிடும் போது "வரலாற்றை கடந்தகாலச் சமூகவியல் என்றும் சமூகவியலைத் தற்கால வரலாறு என்றும் கூறுகிறார்". மனித சமூகம் என்பது தலைமுறை தலைமுறையாகக் கடந்த காலங்களில் வாழ்ந்த மக்களின் அனுபவத்தில் தோன்றிய விளைபொருள், சமூக உறவு முறைகளின் கோலங்களையும், மனிதர்களின் நடத்தை வழியையும் அறிந்து கொள்வூதற்குச் சமூக வரலாற்று அறிவு அடிப்படை தேவையாகிறது. இந்த நோக்கத்திற்காகத்தான் சமூகவியல் வரலாற்றைச் சார்ந்துள்ளது. ஆகவே சமூகவியலும் வரலாறும் நெருங்கிய உறவு கொண்டுள்ளன.

சமூகவியலுக்கும், வரலாற்றிற்கும் இத்தகைய நெருங்கிய உறவுகள் இருந்த போதிலும், அறிவின் பொதுத் திட்டத்தில் அவை இரண்டும் முற்றிலும் வேறுபட்ட வெவ்வேறு பகுதிகளாகவே இருக்கின்றன. அநேக வரலாற்று விபரங்கள் சமூகவியல் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. அதேபோல் சமூகவியல் தரவுகள் வரலாறு சம்பந்தப்பட்டதல்ல. வரலாறு சம்பவங்களை ஓர் ஒழுங்குமுறையோடு காலவரிசைப்படி அடுக்கி வைத்துப் படிக்கிறது. ஆனால் சமூகவியல் கடந்த காலம் ஆனாலும் சரி, நிகழ்காலம் ஆனாலும் சரி, தனிப்பட்ட சம்பவங்களை அது ஆய்வு செய்வதில்லை. வரலாற்றுச் சம்பவங்களில் பொது அம்சங்களையே சமூகவியல் தீர்மானிக்கிறது. மேலும், மனிதர்களின் நடத்தைகளை ஆராய்வதற்கு வரலாற்று விபரங்களுடன் மிகப்பண்டைய வரலாற்றுத் தரவுகளையும் சமூகவியல் பயன்படுத்துகின்றது. எதிர்காலச் சம்பவங்களின் இயல்புகளைப்பற்றி முன் கூட்டியே தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நிகழ்கால ஆய்வுகளிலேயே சமூகவியல் முழுசிரத்தைக் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றிப்

படிப்பதையே தன் எல்லைக்கு உட்பட்டிருப்பதாக வரலாறு நிர்ணயித்துள்ளது. ஆனால் நிகழ்காலத்தின் அனைத்துச் சமூக நிகழ்வுகளையும் சமூகவியல் படிக்கிறது. வரலாற்றுத் தரவுகள் சமூகத் தரவுகளின் ஒரு பகுதியே ஆகும். வரலாற்றுச் சம்பவங்களை விவரிப்பதாகவும் சமூகவியல் அவைகளை மதிப்பீடு செய்து அவற்றின் பொது அம்சங்களை நமக்கு அளிக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது.

அணுகுமுறையில், வரலாறு சம்பவங்களை விவரிக்கும்போது அவை எவ்வாறு சில காரணிகளினால் நிகழ்ந்தது என்பதை விவரிக்கிறது. ஆனால், சமூகவியல் சம்பவத்தைப் பற்றிப் படிக்கும்போது அச்சம்பவம் சமூக மெய்மைகளுடன் தொடர்புடைய ஒரு விஷயமாகவே படிக்கிறது. உதாரணமாகப் போர்-ஒரு பிரசித்தமான வரலாற்றுச் சம்பவம். சமூகவியலறிஞர் போர் எவ்வாறு நேரிடுகிறது என்ற நோக்கத்தில் அறிந்து கொள்வதைவிட அது எவ்வகையில் வாழ்க்கை வழியுடனும், நிறுவனத்துடனும் தொடர்புடையது என்றும், பொதுவாக அப்போர் எப்படிச் சமூக அமைப்பால் பாதிக்கப்படும் என்பதிலும் கவனம் செலுத்துகிறார். சம்பவங்களிலே வரலாறு கவனமாக உள்ளது. ஆனால் சமூகவியலோ குழுக்களின் மீது கவனம் செலுத்துகிறது. இவ்விரு அறிவியல்களும் புது மெய்மைகளாக இருந்த போதிலும் சமூக ஆராய்ச்சியின் நவீன வழிமுறைகள், சமூகவியலை மனிதர்களின் நடத்தையை ஆராய்வதில் வரலாற்றிலிருந்து மிகவும் வேறுபட்டதாகச் செய்துள்ளன. இருந்த போதிலும் நிகழ்காலத்தை அறிந்து கொள்வதற்குக் கடந்த கால அறிவு மிகவும் தேவைப்படுகிறது. சமூக வளர்ச்சியைப் படிப்பதில் சமூகவியலுக்கு வரலாறு மிகவும் உபயோகமாக உள்ளது.

## சமூகவியலும் பொருளாதாரவியலும் (Sociology and Economics)

சமூகச் சூழ்நிலையில் மனிதர்களின் அடிப்படைத் தேவைகளுக்குரிய துறையில் சமூகவியலும் பொருளாதாரமும் மிகவும் நெருங்கிய உறவு உடையவை. உற்பத்தி, விநியோகம் செலவழித்தலுக்குரிய துறையில் செல்வம் ஆகியவை பற்றிப் படிக்கின்ற அறிவியலே

பொருளாதாரவியல் ஆகும். மனித வாழ்வின் பொருள்சார் சூழ்நிலையைப் போலவே தன்னுடைய முழுக்கவனத்தைப் பொருளாதாரச் செயல்கள், அவை சமூக வாழ்க்கையின் இயல்புகளில் பல வழிகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகச் சூழ்நிலையின் ஒரு பகுதியாக விளங்குகின்ற பொருள்சார் சூழ்நிலையிலேயே தன்னுடைய முழுக் கவனத்தையும் பொருளாதாரவியல் செலுத்துகிறது. பொருளாதார சக்திகள் வாழ்க்கை வழிகளில் தங்களுடைய அதிகப்படியான செல்வாக்கைச் செலுத்துவதுடன் சமூக வாழ்க்கையின் குணாதிசயங்களை ஓரளவு நிர்ணயிக்கின்றன. வாழ்க்கையின் அடிப்படைப் பொருளாதார தேவைகளிலேயே சமூக வாழ்வு சார்ந்திருப்பதால் பொருளாதாரக் காரணிகள் சமூக ஊடாட்டங்களில் அடிப்படை சமூகச் செயற்பாங்குகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் பொருளாதாரச் செயல்கள் தன்னாட்சியானவையோ, சுயேச்சையானவையோ அல்ல. அவை சமூக நிலைகளில் தோன்றி, சமூகச் சூழ்நிலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. பொருளாதாரப் பிரச்சனைகளான வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், வறுமை, பிச்சை எடுத்தல், மக்கட்தொகைப் பெருக்கம் முதலியன சமூகச் சூழ்நிலையைச் சார்ந்துள்ளன. ஆகவே சமூகவியல் அறிவு இப்பிரச்சனைக்குத் தீர்வு காணபதில் உதவியாக உள்ளது. பேராசிரியர்கள் லூயி (Lowie) மாக்ஸ் வேபர் (Max Weber) எமைல் டர்க்கீம் (Emile Durkheim) டால்காட் பார்ஸன்ஸ் (Talcott Parons) போன்ற அறிஞர்கள் பொருளாதாரச் செயல்களைப் படிப்பதற்குச் சமூகவியல் அணுகுமுறை தேவை என வற்புறுத்திக் கூறியுள்ளனர். பொதுவாகச் சமூக வாழ்க்கை அமைப்பில் பொருளாதாரச் செயல்கள் சமூகச் சூழ்நிலையின் ஒரு பகுதியாக உள்ளன. அதேபோல் பொருளாதாரக் கோட்பாடுகள் சமூகவியல் கோட்பாடுகளின் ஒரு பகுதியாக உள்ளன.

நவீன சமுதாயத்தில் பொருளாதாரக் காரணிகள் சக்தி வாய்ந்தனவாகவும், சமூகவியல் கோட்பாடுகளின் உருவாக்கத்தை ஆரம்பித்து வைக்க கூடியனவுமாக இருக்கின்றன. கார்ல் மார்க்ஸும் (Karl Marx) பெடரிக் ஏங்கில்ஸும் (Friendrich Engels) பொருளாதாரக்

காரணிகளின் மொத்த முக்கியத்துவத்தை வற்புறுத்திச் சொல்லி சமூகவியல் கோட்பாடான பொருளாதாரத் தீர்மானித்தல் என்பதை உருவாக்கினார்கள். அவர்களுடைய கோட்பாட்டின்படி பொருளாதார அமைப்புமுறை என்பது பரந்த சமூக அமைப்பு முறையாகும். சமூகவியலும், பொருளாதாரவியலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. டபிள்யு சாமன் (W. Shaman) என்ற தற்கால பொருளாதார நிபுணரின் கூற்றுப்படி, பொருளாதார மாதிரிகள் சமூகவியலிலும், சமூகவியல் கோட்பாடுகளைக் குறிப்பாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துகின்ற நன்மை பயக்கக்கூடிய முயற்சிகள் பொருளாதாரத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன.

**சமூகவியலும் அரசியல் அறிவியலும் (Sociology and Political Science)**

அரிஸ்டாடில் (Aristotle) என்ற கிரேக்கப் பேரறிஞர் மனிதன் அடிப்படையிலேயே ஒரு அரசியல் பிராணி எனக் கூறியுள்ளார். அவருடைய எண்ணப்படி சமூக மனிதனும் அரசியல் மனிதனும் முற்றிலும் ஒருவரேயாவர். முந்தைய மற்றும் இப்போதைய சிந்தனையாளர்கள் பலரின் கூற்றுப்படி சமூக வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஆகவே அவைகளை இரண்டு தனிப்பிரிவுகளாகப் பிரிப்பது மிகவும் கடினம். வரலாற்றுப்படி சமூகவியலின் ஆணி வேர் அரசியலிலும், வரலாற்றுத் தத்துவத்திலும் இருப்பதாக மோரிஸ் கின்ஸ்பெர்க் (Morris Ginsberg) குறிப்பிட்டுள்ளார். அரசியல் வாழ்க்கை சமூகத் தொடர்நிலையின் ஒரு முக்கியப் பகுதியாக இருக்கிறது. சமூக வாழ்க்கை சில நெறிகளினால் ஒழுங்குபடுத்தப்பட்டு அவைகளே இன்றைய அரசாங்கத்தில் சட்டமாக வளர்ச்சி அடைந்துள்ளன.

சமூக வாழ்வின் நுட்பத்தில் சமூகவியலும், அரசியல் அறிவியலும் நெருங்கிய ஊடாட்ட உறவுகளுடைய சமூகக் கல்வியாகும், அரசியல் நடத்தையைச் சமூக

அமைப்பில் ஒரு முக்கியமான மூலபொருளாகவே கருதுகிறது. அரசியல் அறிவியல் சட்டங்களின் மூலமாக அரசையும் அரசாங்கத்தையும் படிக்கிறது. அரசியல் அறிவியலின் மேல் சமூகவியலுக்கு உள்ள தொடர்பு அரசியல் சமூகவியல் உருவாகக் காரணமாக விளங்குகிறது. இன்றைய நவீன அமைப்பில் கோட்பாடு மற்றும் ஆராய்ச்சி ஆகிய இரண்டிலும் அரசியல் அறிவியல் சமூகவியலாகவே மாறியுள்ளது.

சமூகவியலுக்கும் அரசியல் அறிவியலுக்கும் இடையே இத்தகையான நெருங்கிய உறவு இருந்த போதிலும், அவை இரண்டும் முற்றிலும் ஒன்றானதாகக் கொள்ள முடியாது. அவைகளின் பாடப் பொருள்களும் ஆய்வுமுறையும் அவ்விரு அரசியல்களையும் தனித்தனி அரசியல் அறிவியல்களாகவே அங்கீகரிக்கின்றன. • அரசு என்பது சமுதாயத்தின் ஒரு அம்சமாகும். இந்நிலையில் அரசியல், அறிவியலின் வாய்ப்பெல்லையும் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆனால் சமூகவியலோ அரசையும் தன்னுள் கொண்டுள்ள சமுதாயத்தை முழுவதுமாகப் படிக்கிறது. அவ்வாறாக அது பரந்த ஆய்வுப் பகுதியைக் கொண்டுள்ளது. இவ்விரு அறிவியல்களும் தங்களுடைய பாடப்பொருளில் வேறுபடுகின்றன.

அரசியல் அறிவியல் வித்தியாசமான அரசு வடிவங்களையும் சட்டங்களின் மூலமாகக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருகின்ற உபாயங்களையும் படிக்கிறது. சமூகவியல் அரசைப் பல அமைப்புகளில் ஒன்றாகவும், அரசியல் சம்பவங்களை இதர சமூகப் பிரிவுகளின் மீது அவைகள் ஏற்படுத்தும் தாக்கங்களாகவும் கருதுகின்றது. அரசியல் மாதிரிகள் சமூக நிலைகளைப் படிப்பதின் மூலம் தயாரிக்கப்படுவதுடன் சமூகவியல் கோட்பாடுகளை முறைப்படுத்தச் சாத்தியமாகிறது. இவ்வாறாகச் சமூகவியலில் ஒரு பகுதியான அரசியல், சமூகவியலின் இயல்பில் அரசியல் அறிவியல் தன்னுடைய நிறை காண்கிறது.

## சமூகவியலும் உளவியலும் (Sociology and Psychology)

மனித சமுதாயத்தை அறிவியல் முறைப்படி படிக்கின்ற சமூகவியல், மனித சமுதாயத்தை நிறுவன நடத்தைகளுக்குரிய வழியில் ஆராய வழி தேடுகிறது. மனித ஊடாட்டம், உடல், மனம், ஊக்கம் என்ற மூன்று காரணிகளைச் சார்ந்துள்ளது. மனிதன் ஒரு உயிரினப் பிராணி, ஆலோசிக்கும் சக்தியுள்ள ஒரு ஜீவன், பண்புள்ள நபர் இந்த மூன்று காரணிகளும் மனிதனின் சமூக இயல்பில் ஒன்றாக இணைந்துள்ளன. சமூக சூழ்நிலைக்கு ஏற்றவாறு எவ்வாறு மனம் செயல்படுகிறது என்ற வழியில் சமூகவியலுக்கும், உளவியலுக்குமான உறவு திட்டமிடப்படுகிறது. உளவியல் மனோதத்துவ அறிவியல் எனப் பொருள்படும். இதை மனத்தின் நடத்தை அறிவியல் எனலாம்.

மனித மனங்களின் ஊடாட்டங்களிலிருந்து தோன்றுகின்ற மனித சமூக நடத்தையையே சமூகவியல் படிக்கின்றது. எல்லாச் சமூக உறவு முறைகளும் அடிப்படையில் உளவியலாகவே உள்ளன. அதன் காரணமாகவே சமூகவியலும் உளவியல் ஊடாட்ட உறவு கொண்டு உள்ளன. இரண்டுமே மனித அனுபவங்களையும் நடத்தைகளையும் படிக்கின்ற புது மெய்மை அறிவியல்களாகும்.

அறிவின் பொதுத் திட்டத்தில் சமூகவியலும், உளவியலும் ஒரு குறிப்பிட்ட பாடப்பொருளையும், பாட ஆய்வு முறையையும் கொண்ட முற்றிலும் வேறான தனித்தனி அறிவியல்களாக கருதப்படு-கின்றன. பல சமூகவியல் மற்றும் உளவியல் ஆட்சேபனைக்குரியதாக வந்துவிட்டன. ஜெ.எஸ்.மில். (J.S.Mill) என்பவரின் கருத்துப்படி மனத்தின் விதிகளில் இருந்து பொதுக்கருத்துக்களை அடையும் வரை ஒரு பொது சமூக அறிவியலை ஏற்படுத்தமுடியாது. தனி மனிதனின் இயல்பு விதிகளுக்குள் தீர்மானிக்கப்பட்டதும், அவைகளில் இருந்து பெறப்பட்டதைத் தவிர வேறு குணாதிசயங்கள் எதுவும் சமுதாயத்தில் மனித இனத்திற்குக் கிடையாது என அவர் மேலும் குறிப்பிடுகிறார். அதே சமயம் டர்கெய்ம் (Durkheim) என்ற சமூகவியல் அறிஞர் சமூகவியல் தனி மனிதனின் மனத்திற்கு அப்பாற்பட்ட சமூக மெய்ம்மைகளைப் பற்றிப் படிப்பதாகக் குறிப்பிட்டுச்

சமூகவியலுக்கும் உளவியலுக்கும் வேறுபாடு காண்கிறார். அவருடைய கூற்றுப்படி சமுதாயம் ஒரு சாதாரண மனிதர்களின் கூட்டமல்ல. அது தனக்கென்று சில குணாதிசயங்களை உள்ளடக்கியுள்ள ஒரு குறிப்பிட்ட உண்மை நிலையைக் குறிக்கின்ற நிலையத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு முறையாகும். மோரீஸ் கின்ஸ்பெர்க் என்பவர் சமூகவியல் கோட்பாடுகள் உளவியல் விளக்கத்தையே சார்ந்திருப்பதாகக் கருதுகிறார் அதேபோல் மேக்ஸ் வெபர் (Max Weber) சமூகச் செயல் உளவியலின் பொது அறிவாகும் என வாதாடுகிறார். சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) என்ற உளவியலறிஞரின் கூற்றுப்படி தனிமனிதனின் நடத்தை உடல் காரணிகளான பால்வினையுடனும். அன்புடனும் தொடர்பு உடையது. இக்கருத்துக்கள் வித்தியாசமாக இருப்பதால் அவை சமூகவியலுக்கும், உளவியலுக்கும் உள்ள உறவுகளை ஆட்சேபனைக்குரியதாக்கிவிட்டன.

பரவலாக சமூகவியலுக்கும் உளவியலுக்குமுள்ள உளவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பல சிந்தனையாளர்களின் கூற்றுப்படி இவ்விரு அறிவியல்களும் நடைமுறையில் நெருங்கிய சம்பந்தமுடையதல்ல. சமூகவியல் உளவியல் சக்திகளை உட்படுத்தாத பல சூழ்நிலைக் காரணிகளின்படி சமுதாயத்தைப் படிக்கிறது. உளவியல் காரணிகள் மனித இயல்பின் அடிப்படையாக இருக்கலாம். ஆனால் மனப்பான்மையும் ஊக்கிகளும் உருவாதலில் அவைகள் சமூக நிலைகளின் பாதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. உளவியல் தன் வழியிலேயே உயிரினம் மற்றும் கலாச்சாரத் தொடர்பு இல்லாத தத்துவரீதியான ஒன்று. தொழில் உளவியல், பிறழ்வு உளவியல், குழந்தை உளவியல், கல்வி உளவியல், மருத்துவ உளவியல் போன்ற பல கிளைகள் உளவியலில் உள்ளன. இக்கிளைகள் யாவும் சமூக வாழ்வின் வெவ்வேறு பகுதிகளையும் தனிநபர் நடத்தையையும் படிப்பதில் அக்கறை கொண்டுள்ளன. இக்கிளைகள் சமூக மெய்மைகளுக்கு உளவியல் விளக்கத்தைக் கொடுப்பதுடன் வியாதிகள், குற்றம், தொழிற்சாலை பிரச்சனைகள் போன்ற சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவி புரிகின்றன. உளவியல் படிப்புகளின் மூலம் சமூக நடத்தையைத் தீர்மானிக்கவும், சம்பந்தப்படுத்தவும் சமூகச் சூழ்நிலை அறிவைச் சமூகவியல் கொடுக்கிறது.

# பாடம் - 3

## சமூகவியலின் கருத்துக்கோணம் / நோக்கு நிலை

சமூகவியல் நோக்கு நிலையானது பலவகையான நோக்கு நிலைகளை உட்கொண்டதாக இருக்கிறது. அதே சமயம் ஒன்றும் சமூகவியல் நோக்குநிலைக்கு ஒவ்வாததாக இருக்கிறது. உதாரணமாக நீங்கள் ஒரு கட்டிட வேலை நடைபெறும் இடத்தை உங்கள் மணத்திரையில் கொண்டு வந்தீர்களேயானால் சமூகவியலின் நோக்கு நிலைபற்றிப் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியும். கட்டிட வேலை நடைபெறும் இடத்தைச் சுற்றி உயரமான அளவிற்கு வேலித் தடுப்பு அமைக்கப்பட்டிருக்கும். அதே சமயம் அந்த வேலியில் பல துவாரங்கள் பல நிலைகளில் விடப்பட்டிருப்பதையும் பார்த்திருக்கலாம். இந்தத் துவாரங்களானவை கட்டிடத்தைச் சுற்றிப் பார்வையிடும் கட்டிடப் பொறியாளர்களுக்கு விடப்பட்ட துவாரங்களாகும். இந்தத் துவாரங்கள் மூலமாகப் பலநிலைகளிலே நடந்துகொண்டிருக்கும் கட்டிட வேலைகளைக் கட்டிடப் பொறியாளர்கள் பார்க்கலாம். அதே போல இந்தப் பகுதியில் நாம் பலவிதமான நோக்கு நிலைகளைக் கொண்ட சமூகவியலைப்பற்றித் தெரிந்து கொள்வோம்.

நீங்கள் இந்தப் பகுதியைப் படிக்கும்போது ஒரு கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களை ஏதாவது ஒரு கோட்பாட்டு நிலையோடு பிணைத்துக்கொண்டு மற்றவைகளைப் பார்க்கக் கூடாது. நீங்கள் திறந்த மனதையும் நடுநிலைத் தன்மையையும் கொண்டீர்களேயானால் நீங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட நோக்கு நிலைகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகநிகழ்வைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய வெவ்வேறு வகையான கோட்பாட்டு நோக்கு நிலையான சமூக வாழ்க்கையை வெவ்வேறு கோணங்களில் சித்தரிக்கிறது. அதே சமயம் இவைகள் ஒன்றோடொன்று

முரண்பட்டதல்ல. மாறாக ஒன்றிற்கு ஒன்று முகப்புகழ்ச்சி செய்வதாக அமைகிறது.

நாம் சமூகவியல் கோட்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன் கீழ்க்கண்ட உதாரணத்தை மனதில் கொள்ளுங்கள். ஒரு நிலத்தின் மையப்பகுதியில் ஒரு அழகான பெரியமரம் இருக்கிறது என்பதைக் கற்பனையில் கொள்ளுங்கள். நீங்கள் அந்த மரத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்/ என்ன உணருகிறீர்கள் என்பதை நேருக்குநேர் விவாதிப்பீர்களேயானால் அந்த மரத்தைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அதே சமயம் என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்ற குழப்பத்திலும் நாம் இருப்போம். இவையாவும் ஒரு ஏற்புடைய சார்புநிலையைச் சார்ந்ததாக இருக்கும். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் மரத்தைப்பற்றிய பல்வேறு நோக்கு நிலைகளைக் காணலாம்.

அட்டவணை : 1 மரத்தைப் பற்றிய நோக்கு நிலைகள்

| நோக்கு நிலை | மரத்தைப் பார்க்கும் தன்மை | வினாக்கள் / தெரிந்து கொள்ள வேண்டியவை |
|---|---|---|
| 1. விறகு வெட்டி | ஏதோ வெட்டுவதற்காக இருக்கும் ஒரு பொருள் | என்ன வகையான மரம்? அடிமரத்தின் அடர்த்தி எவ்வளவு? அந்த மரம் சாய்கின்றதா? |
| 2. தச்சன் | கட்டுமானப் பணிக்கு உதவும் பொருள் | நுட்பமான மரமா? அல்லது திண்ணிய மரமா? இந்த மரம் என்ன வகையான உள்ளணுத்துகள் கட்டமைப்புக் grain) கொண்டது எவ்வளவு பலகையளவுகள் இந்த மரத்திலே இருக்கின்றன. |

| | | |
|---|---|---|
| 3. கவிஞன் அல்லது வர்ணம் பூசுபவன் | ஒரு அழகுப் பொருள், வலிமையைச் சித்தரிக்கும் பொருள் | மரத்தினுடைய தோற்றம் என்ன? மரப்பட்டையினுடைய இழையமைப்பு என்ன? மற்றும் என்ன வகையான மனித உணர்வுகளை அது தூண்டுகிறது? என்ன வகையான நிழல் மற்றும் வெளிச்சத்தை அது உருவாக்குகிறது? |
| 4. சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர் | சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு ப்குதி | எவ்வளவு நீர் மற்றும் நைட்ரஜன் உட்கொள்கிறது? இதனுடைய வேர்களுடைய அமைப்பு முறையானது மண்ணைப் பிணைத்து மண் அரிப்பைத் தடுக்கிறதா? |
| 5. விவசாயி | நிலத்தின் நடுவிலே இருப்பதினால் அசௌகரியம் | இந்த மரம் இருக்கின்ற இடத்தில் எவ்வளவு தானியம் விளைவிக்கலாம்? இந்த மரத்தை அப்புறப்படுத்த எவ்வளவு காலம் ஆகும். |
| 6. சமூகவியலார் | மழைக்காக ஒதுங்க ஓர் இடம் | எவ்வளவு நேரம் தேவை அந்த மரத்தின் அடியில் செல்ல? மின்னலையும், மரத்தையும் இணைத்துச் சொல்வது உண்மையா? |

அட்டவணையில் நாம் கண்ட பல்வேறு நோக்குநிலைகள் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டதாக இல்லை. உண்மை என்னவென்றால் இந்தப் பல்வேறு நோக்கு நிலையானது ஒன்றிற்கொன்று வித்தியாசமானது. அதனால் மற்றவற்றோடு முரண்பாடு கொள்ள வேண்டிய நிலை இல்லாமலாகிறது. உதாரணமாகக் கவிஞர் மரம் மிகவும் அழகானது என்று சொல்வது தச்சருடைய மரத்தின் மீதான

எண்ணத்திற்கு எதிர்மறையான இல்லை. அதே கவிஞர் அந்த மரத்தை மிகவும் அழகற்றது என்று வர்ணித்தாலும் தச்சருக்கு அதுபற்றி முரண்பாடு வராது. இங்கு நாம் பார்க்க இருக்கின்ற பல்வேறு கோட்பாடு நோக்கு நிலைகள் மேற்கூறிய தன்மையைக் கொண்டதாக அமைகின்றன. அவைகள் ஒன்றிற்கொன்று வேறுபட்டவை. ஆனால் அதே சமயம் இந்த நிலைகள் சமூக வாழ்வின் பல வேறுபட்ட தன்மைகளை படம்பிடித்துக் காண்பிக்கின்றன. இருப்பினும், இவைகள் ஒன்றிற்கொன்று இணையக்கூடிய தன்மை கொண்டதாக அமைந்திருக்கின்றன. இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை இப்போது நாம் பார்ப்போம். நீங்கள் மேலே சொன்ன உதாரணத்தை மீண்டும் மனதில் நினைவிற்கூர்ந்து பார்த்தால் பல்வேறு நோக்கு நிலைகளையும் அந்த நிலைகளில் ஒவ்வொருவர் கொண்டிருந்த வெவ்வேறு விதமான தன்மைகளையும் அறிய முடியும். சமூகவியலறிஞர்கள் பலவகையான வேறுபட்ட சமூகவியல் நிகழ்வுகளில் விருப்பம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதே சமயம் அவர்கள் ஆராய்ச்சியில் செய்திக் குறிப்புகளை எவை உற்பத்தி செய்கின்றன; என்ன காரணிகள் சமூக வாழ்க்கையை அதிகம் பாதிக்கின்றன என்பதையும் கவனத்தில் கொண்டு செயல்படுகிறார்கள். பொதுவாகச் சமூகவியலார்கள் சமூகத்தை இரண்டு நிலைகளிலே – துண்மம் மற்றும் பேரியியல் – நுண்மை நிலைகளில் நோக்குகிறார்கள் சமூகவியலானது தனி மனிதர்களுடைய அன்றாட நிகழ்ச்சிகளைப் பற்றியதாகும். அதாவது அவர்கள் மற்றவர்களோடு ஏற்படுத்துகின்ற ஊடாட்டங்களை பற்றியதாகும். இந்த நோக்கு நிலையானது சமூக நிகழ்வுகளை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் மக்கள் எவ்வாறு தங்களுடைய ஊடாட்டங்களை அர்த்தம் செய்து கொள்கிறார்களோ அதன் அடிப்படையில் அமைவதாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். மேலும் அவர்களுடைய குறி இலக்கானது தனி நபர்களுடைய செயல், தூண்டுதல் உணர்ச்சி, மற்றும் ஊடாட்டங்களைச் சீரமைப்பு செய்யும் கருத்துக்கள் ஆகிய இவைகள் எவ்வாறு சமூகத்தை நிலையானதாகவும், மாற்றமும் செய்கின்றன என்பதைப் பற்றியதாகும்.

பேரியியல் சமூகவியலானது சமூகத்தை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டிய முறைப்படுத்தப்பட்ட, நடத்தை முறைகளைப் பற்றிய துணைக் குறிப்புகளைச் சார்ந்ததாகும். இத்தகைய வகை மாதிரிகளை நாம் கட்டமைப்பு (Structures) என்று கூறுகிறோம். பொதுவாக இவை குடும்பம், கல்வி, மதம், அரசு மற்றும் பொருளாதார நிலைகளைக் குறிக்கும். இந்த நிலைகளில் பிறந்த மனிதர்கள் இந்த நிலைகளினால் மிக அதிகமாக கூர்தீட்டப்பட்டு இருப்பார்கள். பேரியியல் சமூகவியலார்களுடைய மிக பெரிய விருப்பம் என்னவென்றால் சமூகப் பகுதிகளுக்கிடையே நிலவுகின்ற உறவுகளைப் பற்றியதாகும். மேலும் இந்த உறவுகள் எவ்வாறு மாறுகின்றன என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள நாட்டம் உடையவர்களாக இருக்கின்றார்கள். நாம் இப்போது இந்த இரண்டு சமூகவியல் நிலைகளிலே காணப்படுகின்ற கோட்பாடுகளைப் படிப்போம்.

## நுண்ம சமூகவியல் கோட்பாடுகள் (Micro Sociological Theories)

சமூகவியலார்கள் ஊடாட்டத்தை விளக்கவும், விவரிக்கவும் அதிக எண்ணிக்கையிலான கோட்பாடுகளை உருவாக்கினார்கள். ஜார்ஜ் ஹோமன்ஸ் (George Homans - 1973) என்ற அறிஞர் சமூக ஊடாட்டங்களைத் தண்டனை மற்றும் பரிசு ஆகிய தன்மைகளின் அடிப்படையிலே புரிந்து கொள்ளலாம் என்று நம்பினார். மேலும் மக்கள் சாதாரணமாக வகைப்படுத்தப்பட்ட நடைமுறைகளை மீண்டும் மீண்டும் செய்முறைப்படுத்துவார்கள் உதாரணமாக அவர்களுடைய முன் அனுபவத்தின்படி ஏதேனும் ஒரு நடத்தை முறைக்கு ஏதாவது ஒரு பரிசு பெற்று இருந்தால் அதே நடத்தையை மீண்டும் மீண்டும் செய்ய முற்படுவார்கள். ஹேரால்ட் கார்பின்கல் (Harold Garfinkel) என்ற அறிஞர் இன ஆய்வு முறையியல் என்னும் கோட்பாட்டை உருவாக்கினார். இந்தக் கோட்பாடானது மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாக மற்றவர்களோடு ஊடாட்டம் கொள்ளும்போது எதிர்ப்படுகின்ற நிகழ்ச்சிகளை ஆராயப்படாமலேயே அப்படியே ஏற்றுக்கொள்கின்ற தன்மை அடிப்படையில்

தோன்றிய விதிகளைப் பற்றியதாகும். இர்விங் காஃப்மேன் (Erving Goffman) என்ற அறிஞர் ஊடாட்டத்தை விவரிக்க நாடக மேடையுடன் உருவகப்படுத்தினார். மக்கள் நடிகர்களைப் போலத் தங்கள் பங்குகளை மிகவும் கவனத்துடன் உருவாக்கி மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்படுவார்கள் என்று காஃப்மேன் விளக்கினார். நுண்ம சமூகவியல் நிலையின் அடுத்த பெரிய அணுகுமுறையானது குறியீட்டுரு ஊடாட்ட நிலை. இந்த நிலையைப் பற்றி இங்கு விளக்கமாக படிப்போம்.

## குறியீட்டு ஊடாட்ட நிலை (Symbolic Interactionism)

இந்த நிலை வல்லுநர்கள் கூற்றுப்படி மனிதர்கள் நேரடியாக வெளி உலக உந்தல்களுக்கு நேரடியாக எதிர்ச்செயல் தரமாட்டார்கள். அதாவது ஒரு தவளை தன்னுடைய நாக்கை ஒரு வண்டினுடைய சத்தத்தைக் கேட்டவுடனே தன்னிச்சையாக நீட்டுவது போல அல்லாமல் மனிதர்கள் உந்தலுக்கான விளக்கத்தைக் கொடுத்து அந்த விளக்கத்தின் அடிப்படையில் அவர்கள் செயல்படுவார்கள். அவர்களுடைய செயல்பாடு அந்த விளக்கம் மற்றும் குறியீடுகளின் அடிப்படையில் அமைந்திருக்கும். மனிதர்கள் செயல்படுவதற்குக் குறியீடாக அமைந்திருக்கின்றவைகளில் வார்த்தைகள், பொருட்கள், தனிநபர் தொலைவு (Personal Distance), முக பாவங்கள் மற்றும் செயல்கள் ஆகியவைகள் அடங்கும். நில், யூகம், கவனி, முக்கோணம், தலையாட்டுதல் இவைகள் எல்லாம் குறியீடுகளாகும். குறியீடுகளின் மூலம் உதவி பற்றி எண்ணங்களை முந்தைய அனுபவம் மற்றும் கூட்டு உந்துதல் மூலம் சில நிலைகளில் ஊடாட்டம் மிகவும் தடங்கல் இன்றி நடைபெறுவதைக் காணலாம். சில சமயங்களில் உந்துதலின் விளக்கமானது தெளிவற்றதாக இருப்பின் மற்ற மனிதர்களுடைய நடத்தை முறையை விளக்குவது மிகவும் சிரமமாக இருக்கும். உரையாடலின் போது அந்நியன் ஒருவன் குறிக்கிடுவானேயானால் அவனுடைய நடத்தையின் வழிமுறைகளை நாம் தெரிந்து கொள்ள ஆவலாக இருப்போம். இது ஏதாவது ஒரு ஏமாற்று வேலையா? இதனுடைய உள்நோக்கம் ஏதாவது விசேஷத்தன்மை உடையதா? அல்லது அந்த அந்நியனுக்கு

ஏதாவது உதவி தேவையா? இப்படிப் பல ஐயப்பாடுகள் தோன்றும். ஏனெனில் நமக்கு அந்த அந்நியனைப் பற்றி ஒன்றும் தெரியாது. நாம் மிகவும் கவனத்துடன் அவனுடைய செய்கைகளைக் கவனித்து அதற்கு ஏற்றாற்போல் சரியான முறையில் செயல்படுவோம். இந்தக் குறியீட்டு ஊடாட்ட (Symbolic Interactionism) நிலை அறிஞர்கள் மக்கள் தினசரி வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கின்ற செயல்களை ஆராய்கின்றார்கள். மேலும் இவர்கள், மக்கள் அவர்களுடைய செயல்பாடுகளின் மீதும் அவற்றின் தோற்ற நிலைகளின் மீதும் வைத்திருக்கின்ற விளக்கங்களைப் பற்றியும் ஆராய்கிறார்கள். இந்த குறியீட்டு ஊடாட்டக் கோட்பாட்டு நியதியானது ஒரு சிறிய குழு அமைப்பிலே குழுவினர்களுடைய உறவுகளை ஆராய்கின்ற ஒரு சிறந்த அமைப்பாக அமைகிறது, மற்ற கோட்பாட்டு நியதிகளைப் போல அல்லாமல் இந்தக் கோட்பாடு நியதியானது. பெரிய குழுக்களின் இடையேயும் சமூக மாற்றம் நிலையமைப்புகளைப் பற்றியும் ஆராய முடியாது.

இதனுடன் மிகவும் நெருக்கமான தொடர்புடைய மற்றொரு கோட்பாட்டு இயலானது இன ஆய்வு முறையியல் ஆகும். இந்த கோட்பாட்டு இயலைப் பற்றி இங்கு அறிந்து கொள்வோம்.

## இன ஆய்வு முறையியல் (Ethnomethodology)

இந்த இயலானது ஹெரால்ட் கார்பின்கல் (Harold Garfinkal) என்பவருடைய எண்ணக்கருத்துக்களின்படி சமூகவியலில் அண்மையில் உருவான ஒரு கோட்பாட்டுக் கொள்கையாகும். இன ஆய்வு முறைவியல் என்பது மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாக மற்றவர்களோடு ஊடாட்டம் கொள்ளும்போது எதிர்ப்படுகின்ற நிகழ்ச்சிகளை ஆராயப்படாமலே அப்படியே ஏற்றுக்கொள்கின்ற தன்மையின் அடிப்படையில் தோன்றிய விதிகளைப் பற்றிப் படிப்பதாகும்.

இத்தகைய விதிகள் பொதுவாக எப்போது பேச வேண்டும்? எப்போது பேசக்கூடாது? எப்போடு நகைச்சுவை செய்யக்கூடாது? எப்போது நகைச்சுவை செய்யலாம்?

எப்போது நாம் எப்படிப் பேச்சை முடிக்க வேண்டும் என்பதைப் பற்றியதாகும். நாம் பொதுவாக மற்றவர்களோடு ஊடாட்டம் செய்யும்போது ஆராயாமலே அப்படியே ஏற்றுக்கொள்கின்றோம். ஏனென்றால் நாம் ஊடாட்டம் கொள்கின்ற நபர்களைப் பற்றி நாம் நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றோம். உதாரணமாக இரண்டு தோழிகள் காபி அருந்திக்கொண்டே உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த உரையாடலின் ஒரு பகுதி

அனிதா : வனிதா நீ எப்படிதான் மிகவும் சிரமமின்றி உன்னுடைய குழந்தைகளைச் சமாளித்துக் கொள்கிறாயோ? எனக்குத் தெரியவில்லை.

வனிதா : இது மிகவும் கஷ்டமானது ஒன்றுமில்லை அனிதா. நான் சில எளிய விதிமுறைகளைக் கையாளுகிறேன். மேலும் அது சரியோ தவறோ அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறேன். நானும் எனது குழந்தைகளும் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்கிறோம்.

இந்த உரையாடலை நம்மால் சரியான முறையில் தெரிந்து கொள்ள முடியாது. அதே சமயம் இந்த உரையாடலின் மூலமாக அந்த உரையாடுபவர்கள் சரியாகப் புரிந்துகொண்டு செயல்படுவார்கள். ஏனென்றால் அவர்களால் அந்த உரையாடலின் சாரம்சத்தை வார்த்தைக்கு வார்த்தை குறுக்காய்வு செய்து புரிந்து கொள்ள முடியும். இந்த உதாரணமானது நாம் பேசாத ஊடாட்டங்களுடைய ஊகங்களாகவும், விளக்கங்களுடைய சிக்கலான இணை அமைப்புகளாகவும் அமைந்திருப்பதை விளக்குகிறது. அந்த இன ஆய்வு முறையியலானது நெறிகள் மற்றும் ஊடாட்டங்கள் மிக நுண்ணி இழையிலான சமூக வாழ்க்கையின் பல தன்மைகளை விவரிப்பதாக இருக்கிறது. இந்த இயல்முறையானது சமூக ஒழுங்குமுறை பற்றிய செயற்பாங்குகளைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. ஆனால் சமூக ஊடாட்டங்களைப் பற்றியதாக அமையவில்லை.

## நிகழ்வியல் (Phenomenology)

சமூகவியலிலே நிகழ்வியல் நோக்கு நிலையானது மிகவும் சமீபகாலத்தில் உருவானதாகும். இந்த ஆய்வு முறையியலின் பிரதம நிபுணர்கள் எட்மண்ட ஹஸ்ரல் (Edmund Husserl) மற்றும் ஆல்பிரட் ஹீட்ஸ் (Alfred Schutz) ஆவார்கள். நிகழ்வு (Phenomenon) என்ற வார்த்தை 'தோற்றம்' (Appearence) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானதாகும். நிகழ்வியலை சமூகவியல் கலைக் களஞ்சியம் கீழ்க்கண்டவாறு வரையறை செய்கிறது. நிகழ்வியலானது தனிமனிதன் மற்றும் அவனுடைய சுயமான மன உணர்வின் அடிப்படையில் தெரிந்து கொண்ட நிலையில் ஆரம்பித்து முன்னரே கொண்ட ஊகங்கள், தவறான எண்ணங்கள், தத்துவ சமயக் கொள்கைகள் ஆகியவைகளை விளக்குகின்ற தத்துவ முறைகளில் ஒன்றாகும். இவ்வாறு நிகழ்வியலானது ஒரு சமூக நிகழ்வை அது எவ்வாறு சமூகச் செயல் நிகழ்வாளர்களால் நேரடியாக உணர்ந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்கின்ற இயல் ஆகும். இத்தகைய சமூகவியல் அறிவியலார்கள் மனிதர்கள் எவ்வாறு தாங்கள் கற்று அறிந்த பண்பாட்டுத் தன்மைகளைத் தற்காலிகமாக விலக்கி வைத்துத் தங்களுடைய சமூக நிகழ்வுகளை வரையறை செய்கிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்வார்கள். இந்த இயலின் அடிப்படை நியதி என்னவென்றால் அன்றாட வாழ்வின் உண்மை நிலையானது ஒரு சமூக எண்ணங்களுடைய கூட்டமைப்பாகும். இத்தகைய கூட்டமைப்பின் ஒட்டு மொத்தமானது காலத்தினூடே அதிகமாக்கப்பட்டிருக்கும். மேலும் குழுவினர்கள் தாங்கள் இச்சைப்படி அதை எடுத்துக்கொண்டிருப்பார்கள். இந்த நோக்கு நிலையானது சமூக ஒழுங்கை ஒரு முக்கிய நிலையிலிருந்து ஆராய்கிறது. அதே சமயம் இந்த நிலையானது நாம் கற்று அறிந்த பண்பாட்டின் அடிப்படையை உருவான எண்ணங்களுக்குச் சவாலாகவும் அதே சமயம் செயற்பாட்டு இயலுக்கு எதிராகவும் அமைகிறது.

பல சமூகவியல் அறிஞர்கள் ஒன்று அல்லது இரண்டு மிக முக்கிய பேரியியல் கோட்பாடுகளை

கடைப்பிடிப்பார்கள். முக்கியமாகச் செயற்பாட்டியல், பூசல் கோட்பாடு இவைகளின் கருத்துக்களைக் கவனத்தில் கொள்வார்கள். நாம் இங்கே இந்த இரண்டு கோட்பாட்டுக் கருத்துக்களுடன் பரிமாற்றம் என்ற வேறு ஒரு பேரியியல் கோட்பாட்டுக் கருத்துகளையும் ஆராய்வோம்.

## செயற்பாட்டியல் (Functionalism)

செயற்பாடுகளும் அமைப்பும் ஒன்றாகச் சேர்ந்த ஒன்றே மனித சமூகம். சமூகத்தின் அமைப்பு நிறுவன உறவுகளின் கோலங்களிலும் தொகுப்பிலும் சமூகக்குழுக்களின் வகைகளைக் குறிக்கிறது, செயற்பாடுகள் பண்பாட்டுடன் தொடர்புடைய குழுக்கள் மற்றும் தனிநபர்களின் பங்கினைக் குறிப்பிடுகின்றன. சில சமூகவியலறிஞர்கள் சமூகத்தின் பல்வேறு வகைகளுடன் ஒப்பிட்டு அமைப்பின் முக்கியத்துவத்தை வற்புறுத்திக் கூறுகிறார்கள். வேறு சில சமூகவியலறிஞர்கள் மனித சமூகத்தின் செயற்பாட்டு அம்சங்களுக்கு மிகுந்த முக்கியத்துவத்தைச் சேர்க்கிறார்கள். செயற்பாட்டியலின் கோட்பாட்டை முறைப்படுத்திக் கூற ஆரம்பமாக அமைந்தது.

பண்பாட்டின் இயக்கங்களையே சுருக்கமாகச் செயற்பாட்டியல் என்கிறோம். இது பழக்க வழக்கங்களின் ஒரு சாதரண விளக்கமல்ல. இது பண்பாட்டின் கூறுகளையும் சமூகத்தின் மீது அவற்றின் தாக்கத்தையும் வெளிப்படுத்துகின்ற ஒன்று. இது சமூக அமைப்பு முறையில் பண்பாட்டின் எந்தப் பகுதியையும் விளக்குவதாக இருக்கிறது. பிரசித்தி பெற்ற மானடவியலறிஞர்களான ரேட்கிளிப் பிரௌனும் (Rodeliff Brown) மாலினோஸ்கியும் (Malinowski) தான் இந்தக் கோட்பாட்டை ஆரம்ப காலத்தில் விளக்கிச் சொன்னார்கள். ரேட்கிளிப் பிரௌன் பண்பாட்டின் செயல்களை விளக்குவதற்கு உயிரியல் ஒப்புமையைப் பயன்படுத்தினார். அவருடைய கருத்துப்படி உயிரினத்தின் ஒவ்வொரு பாகத்தின் செயல்களும் வாழ்வின் செயற்பாங்கைப் பராமரிப்பதைப் போல் பண்பாட்டின் ஒவ்வொரு பாகமும் பண்பாட்டுத் தொகுதி அல்லது மொத்தப் பண்பாட்டைப் பராமரிக்க உதவுகிறது.

மாலினோஸ்கி பண்பாட்டின் எல்லாப் பாகங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. பண்பாட்டின் ஏதேனும் ஒரு பாகத்தில் ஏற்படும் மாற்றம் மற்ற பாகங்களில் இடை நிலை மாற்றங்களை உண்டு பண்ணுகிறது என்கிறார். செயற்பாட்டின்படி சமூகம் ஒரு ஒருங்கிணைந்த அமைப்பு முறை என்பது அவருடைய அபிப்பிராயம். அவருடைய செயற்பாட்டியல் கோட்பாடு பல ஆராய்ச்சியாளர்களால் சாதாரண சமூகங்களைப் படிப்பதில் பின்பற்றப்பட்டது. ஆரம்பகால முறைகளான சரித்திரம் மற்றும் ஒப்பீட்டு முறை ஆய்வுகளுக்குப் பதிலாகச் செயற்பாட்டியல் விளங்குகிறது.

சமூகவியல் அறிஞர்களில் செயற்பாட்டியல் கோட்பாட்டிற்குப் பெரும் பங்கினை ஆற்றியவர்கள் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) எமில்டர்க்கைம் (Emile• Durkheim) டால்காட் பார்சன் (Tolcott Parsons) ராபர்ட் கே.மெர்டன் (Robert K.Merton) போன்ற புகழ்பெற்ற சிந்தனையாளர்களாவார்கள். 19–ஆம் நூற்றாண்டின்போது ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் பரிணாமக் கொள்கையினைச் சமூகச் செயல்பாடுகளுக்கு விளக்கம் கொடுக்கப் பின்பற்றினார். சமூகத்திற்கும், உயிரினத்–திற்குமிடையே ஒப்பிடுதல் ஒப்புமையை அறிமுகப்படுத்தி எவ்வாறு உயிரினத்தின் பல்வேறு பாகங்கள் ஒருங்கிணைந்து இயங்குகின்றனவோ அதேபோல் பண்பாட்டில் எல்லாப் பாகங்களும் ஒரு ஒருங்கிணைந்த வழியில் இயங்குகின்றன எனக் குறிப்பிட்டு உள்ளார். சமூகச் செயலின் பரிணாம எண்ணம் தத்துவ ஊகங்களை நீக்கிவிட்டுச் சமூகத்தைப் படிப்பதற்காக ஒரு அறிவியல் மனப்பான்மையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு உறுதியான நிலையில் பண்பாட்டுப் பிராணிகளாகச் செயல் புரிகின்றவர்களாக இருக்கையில் உயிரினத்தின் பாகங்கள் தன் நினைவு இல்லாமல்தான் இயங்குகின்றன. ஆகவே உயிரினத்துடன் பண்பாட்டை ஒப்பிட்டுச் சொல்லுதல் செயற்பாட்டியலின் ஒரு பொய்யான எண்ணத்தைச் சார்ந்துள்ளது.

எமில் டர்க்கைம் என்ற பிரெஞ்ச் சமூகவியல் அறிஞர்தான் செயற்பாட்டியலை ஸ்தாபித்த முன்னோர் என எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இக்கோட்பாட்டிற்கு இவர் ஆற்றிய பங்கு ஏனைய

அறிஞர்களாகிய ரேட்கிளிப் பிரௌன், மாலினோஸ்கி மற்றும் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர்களாகிய ராபர்ட் கே. மெர்ட்டன், டால்காட் பார்ஸன்ஸ் ஆகியோர் ஆற்றிய பங்கிற்கு முந்தையது, இவருடைய செயற்பாட்டியலின் கோட்பாடு அவருடைய வேலைப் பங்கீட்டுக் கோட்பாட்டின் இயந்திர ஒருமைப்பாட்டிற்கும், உயிரின ஒருமைப்பாட்டிற்கும் மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்குமுள்ள வேறுபாடுகளைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. தனிநபர்களின் வேற்றுமைகள் குறைக்கப்பட்டு உறுப்பினர்கள் ஒரு பொதுச் சிரத்தையுடன் செயல்படும்போது இயந்திர ஒருமைப்பாடு காணப்படும். உயிரின ஒருமைப்பாடு ஒற்றுமையை விட வேற்றுமைகளிலிருந்து வளர்கிறது. அது செயல்களின் வேற்றுமை வளர்ச்சியுடன் கூடிய வேலைப்பங்கீட்டின் பலனாகும். சமூக ஒருமைப்பாடு என்பது ஒருங்கிணைந்த சமூகத்தின் செயற்பாட்டியலின் அனைத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பிரிவு எனப்படுகிறது. அவர் சமூகத்தின் சகஜ நிலைக்கும் பிரச்னை நிலைக்கும் இடையே உள்ள பேதத்தைக் கண்டுபிடிக்க ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் பரிணாமக் கோட்பாட்டையும் ஒப்புமையையும் உபயோகப்படுத்தியுள்ளார். சாதாரண செயற்பாட்டியலின் பயனுள்ள பலனாகச் சமூக ஒருமைப்பாடு இருப்பதாக இவர் குறிப்பிடுகின்றார். சமூக ஒற்றுமைக்கும் மதம் தான் மிக முக்கிய மூல காரணம் என்று வலியுறுத்தியுள்ளார்.

டால்காட் பார்ஸன்ஸ் மற்றும் ராபர்ட் கே. மெர்ட்டன் போன்ற அமெரிக்கச் சமூகவியலறிஞர்களின் படைப்புகளில் செயற்பாட்டியல் கோட்பாடுகள் மிகவும் நிதர்சனமாகவும் உறுதியற்றவையாகவும் மாறி வந்துள்ளன. ஒரு பரந்த நோக்கில் பார்த்தால் சமூகக்குழுக்களின் பண்பாட்டில் செயற்பாட்டியல் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அமைப்பிலிருந்து இது ஒதுக்கி வைக்கப்படவில்லை. இது ஒரு 'அமைப்புச் செயற்பாட்டியல்' இது சமூக அமைப்பு முறையில் சமூகச் செயல்களைப் பொறுத்தும் செயற்பாங்காகும். இது பண்பாட்டின் வழியில் குழுக்களின் தேவைகளையும் தனிநபர் தேவைகளையும் குறிப்பிட்டுச் சொல்லுகிறது.

ராபர்ட் கே. மெர்ட்டன் செயற்பாட்டியல் கோட்பாட்டை மனித நடத்தை பற்றிப் படிக்கப் பயன்படுத்தியுள்ளார். சாதாரண செயல் மற்றும் பிரச்சனைச் செயல் என்ற சொற்களுக்குப் பதிலாகச் செயல் மற்றும், செயலற்றது ஆகிய சொற்களையும், கூட்டுறவையும் பூசலையும் செயல்களின் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களாக அறிமுகப்படுத்தியுள்ளார். மதம் ஒற்றுமையையும், கூட்டுறவையும் கொண்டு வருவதற்குப் பதிலாகச் சச்சரவுகளையும் பூசலையும் கொண்டு வரக்கூடும் என விமர்சனம் செய்து எமில் டர்க்கைமின் சமூக ஒருமைப்பாட்டுக் கொள்கையைக் குற்றங்கண்டுள்ளார்.

அவர் செயற்பாட்டியலின் உயிரியல் ஒப்புமையை ஒதுக்கிவிட்டு நிறுவனங்களில் செயல்களின் இயல்பையும், பரப்பையும் கண்டுபிடிக்க சரித்திரம் மற்றும் ஒப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய கருத்துப்படி செயல் என்பது பல நிறுவனங்களின் செயல்களுடன் தொடர்புடைய ஒரு நிறுவனத்தின் வேலையாகும். சமூக நிறுவனங்களின் ஒப்பந்தங்களில் பண்பாட்டின் வெவ்வேறு பாகங்களுக்கு இடையே உள்ள தொடர்புகளையே இது இறுதியாக வெளிப்படுத்துகிறது. பரிணாம அணுகுமுறையை விட மெர்ட்டனின் செயற்பாட்டியல் கோட்பாடு மிகவும் நிதர்சனமானதாகவும் தர்க்க ரீதியானதுமாக விளங்குகிறது.

அமெரிக்கச் சமூகவியல் அறிஞரான டால்காட் பார்ஸன் என்பவர் 'அமைப்பு–செயற்பாட்டியல்' என்ற தலைப்பில் செயற்பாட்டியல் கோட்பாட்டினை எழுதியுள்ளார். இது ஒரு 'செயல் வடிவக் குறிப்பு' என்று கூறப்படுகின்ற ஒரு நவீன அணுகு முறையாகும். சமூகத்தைப் படிப்பதில் எல்லா நடத்தை அறிவியல்களையும் ஒரே ஒரு அமைப்பு முறையில் ஒன்று சேர்த்துள்ளார். தனி மனிதனின் தொடர்ந்திருக்கும் தன்மைக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்த உண்மை நிலையாகவே சமூகம் இயங்குகிறது என்பது அவருடைய கருத்து, இது ஒரு சமூக ஊடாட்டங்களின் அமைப்பு முறையாக இருக்கிறது. சமூகம் செயல்களின் கோலங்களாக இருக்கிறது. அப்படியிருக்க, அங்கு சமூக அமைப்புகளுக்கு

ஒரு செயல் வடிவக் குறிப்பு இருக்கிறது. பொதுவான விசேஷ அம்சங்களுடன் கூடிய இயற்கை உயிரியல் செயற்பாங்குடன் சமூக அமைப்பு தொடர்புடையது என பார்ஸன்ஸ் சுட்டிக் காட்டுகிறார். அவர் சமூக அமைப்பு முறை படிப்பதற்கு உயிரியலின் அடிப்படைக் கொள்கைகளை உபயோகப்படுத்துகிறார். அவருடைய 'சமூகவினை' என்ற கருத்தினால் ஒரு அமைப்பு செயற்பாட்டுக் கோட்பாட்டை வளர்த்தார்.

செயற்பாட்டியல் ஒரு கோட்பாடாக ஏராளமான கட்டுப்பாடுகளை உடையதென்றும் இன்றைய சூழ்நிலைக்கு ஒவ்வாத கருத்து என்றும் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. ஹெர்பர்ட் ஸ்பென்ஸரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுப் பின்பு டர்க்கைம், மெர்ட்டன் மற்றும் டால்காட் பார்ஸன்ஸ் போன்றவர்களால் பின்பற்றப்பட்ட உயிரினம் சார்ந்த ஒப்புமை சமூகச் செயலைப் போதுமான அளவிற்கு விளக்கமளிக்கவில்லை. மனித சமூகம் அமைப்பிலும் செயற்பாட்டிலும் உயிரினத்திற்கு வேறுபட்டது. அது சுய உணர்வின் மாற்றங்களினால் ஆக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, உயிரினம் சார்ந்த ஒப்புமை ஒரு பொருத்தமற்ற பொய்யான எண்ணமாகும். ரேட்கிளிப் பிரௌன் மற்றும் எமில் டர்க்கைம் ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்ட செயற்பாட்டியளில் பொய்யான உயிரினம் சார்ந்த ஒப்புமையின் காரணங்களினால் கைவிடப்பட்டது. ராபர்ட் கே. மெர்ட்டன் மற்றும் டால்காட் பார்ஸன்ஸ் கூட சமூக வினைகளைப் படிக்க நவீன அணுகுமுறைகள் இருந்த போதிலும் அவர்களுடைய கோட்பாடு உயிரியலின் அடிப்படைக் கொள்கைகளையே சார்ந்துள்ளது. நவீன சமூகவியலின் செயற்பாட்டியல் ஒரு கோட்பாடாகுமா என்பதே மிகப் பெரிய கேள்விக் குறியாக உள்ளது. சமூகத்தைப் பற்றிய படிப்பு அதனை விவரிக்கக் கூடியதாகும், விளக்கமளிக்கக் கூடியதுமாக இருக்க வேண்டும் என்பது இப்போதைய நவீன காலப்போக்காக உள்ளது. சரியானதென நிருபிக்கப்படாத ஒப்பீட்டு முறை மற்றும் கற்பனையான சரித்திர முறைகளுக்கு எதிராகத்தான் செயற்பாட்டியல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இது எந்த ஒரு அறிவியல் அடிப்படையின்றி உயிரினம் சார்ந்த ஒப்புமையாக அதுவாக இனம் மாறிவிட்டது. இருந்த

போதிலும் அதனுடைய உபயோகத்தை அதன் பிறகும் தன்னகத்தே கொண்டு இருக்கிறது.

## பூசல் கோட்பாடு (Conflict Perspective)

பூசல் என்பது சமூக ஊடாட்டச் செயற்பாங்கில் ஒன்றாகும். இதைப் பொதுவாக பிரிக்கும் செயற்பாங்கு என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இது குறிப்பாகத் தனி நபர்களிடமும் குழுக்களுக்கு இடையேயும் கூட காணப்படுகின்ற விருப்பங்களின் வேற்றுமைகளையும் வலிமையை உபயோகப்படுத்துவதையும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. மனித சமூகம் பூசலினால் தான் தளர்ந்தவாறு ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது. தனி நபர்களுக்கும் பண்பாடுகளுக்கும் இடையே வேற்றுமைகள் இருப்பதால் மனித சமூகத்தில் பூசல் ஒரு தவிர்க்க முடியாத விசேஷ அம்சமாக இருக்கிறது. கூட்டுறவு ஒற்றுமையையும் இணக்கத்தையும் கொண்டு வர வேண்டும். ஆனால் பூசல் சண்டையையும், பிளவையும், விரோதத்தையும் ஏற்படுத்துகிறது. முழுமையான இணக்கத்துடன் எந்த ஒரு சமூகமும் பூரணமானதல்ல. தனிப்பட்ட மற்றும் குழுவின் வேற்றுமைகளால் பூசல் நிலைகள் தவிர்க்க முடியாதவைகளாகிவிட்டன. பூசலும் கூட்டுறவும் மனித உறவுகளில் எப்போதும் காணப்படுகின்ற செயற்பாங்குகளாகும்.

சமூகவியலறிஞர்கள் பூசலுக்குப் பல வழிகளில் விளக்கம் அளித்து உள்ளனர். கில்லின் (Gillin) மற்றும் கில்லின் (Gillin) போன்ற அறிஞர்கள் பூசலைச் சமூக செயற்பாங்கில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் தங்களுடைய நோக்கத்தை அடைய அவர்களுடைய எதிரியை வன்முறையினாலோ அல்லது வன்முறை அச்சுறுத்தலினாலோ நேரடியாகச் சவால் விடுவதாகும் என விளக்குகிறார்கள். கார்ல் மார்க்ஸ் (Karl Marx) பூசலை ஒரு பொருளாதார வளர்ச்சிச் செயற்பாங்கு எனவும் தொழிலாளர்களுக்கும், முதலாளிக்கும் இடையே உள்ள போராட்டத்தில் வர்க்கத்தினால் ஏற்படுகின்ற ஒரு புரட்சி மாற்றம் எனவும் அபிப்பிராயம் கொள்கிறார். லெவிஸ் கோஸர் (Lewis

Coser) என்பவர் பூசலை மதிப்பீடுகள் மீதுள்ள போராட்டம் எனவும், தகுதிநிலை அதிகாரம் மற்றும் வசதி ஆகியவற்றில் உரிமை கொண்டாடுவதில் எதிரிகள் குறிக்கோள்களைத் தடுத்தல், தீங்கு செய்தல் அல்லது போட்டியாளர்களை நீக்கி விடுவதாகும் என விளக்கம் கொடுக்கிறார். சமூகவியல் அகராதியில், ஒரு செயற்பாங்கு நிலையில் இரண்டு அல்லது அதற்கு மேல் மனிதப் பிராணிகள் அல்லது குழுக்கள் ஒருவர் மற்றவருடைய நோக்கத்திற்குச் சுறுசுறுப்புடன் இடையூறு செய்தல், ஒருவர் மற்றொருவரை அழித்தல் அல்லது தீங்கு செய்கின்ற அளவிற்கு ஒருவர் மற்றொருவரின் நோக்கத்தைத் தடை செய்வதையே பூசல் என விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தின் அடிப்படையில் பூசல் ஒரு விரோதமான எதிர்வினையாக விளங்குகிறது. ஆனால் சில சமூகவியலறிஞர்கள் அதனைச் சமூக அவதாரம் என்ற நோக்கில் பூசல் கோட்பாடுகளை வரையறை செய்துள்ளார். கார்ல் மார்க்ஸ் (Karl Marx), ராபர்ட் பார்க் (Robert Park), பெரட்டோ (Perato), தர்ஸ்டன் வெப்ளன் (T. Veblen), லெவிஸ் கோசர் (Lewis Coser) மற்றும் டேவிட் ரேஸ்மன் (David Riseman) போன்றவர்கள் பூசலின் கோட்பாட்டின் பிரசித்தி பெற்ற சிந்தனையாளர்கள் ஆவார்கள். காரல் மார்க்ஸ், ராபர்ட் பார்க் ஆகியோரின் பூசலின் கோட்பாடுகள் தீவிரவாதமானது, புரட்சியை எதிர்க்கின்ற மற்றும் இயற்கையான பூசலின் கோட்பாட்டை வில்பெரட்டோ வழங்கியுள்ளார். மதிப்பீடுகள் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலமாகச் சாதாரண நிலை பூசலின் கோட்பாட்டைத் தர்ஸ்டன் வெப்ளன் வளர்த்துள்ளார். லெவிஸ் கோசவரும், டேவிட் ரெய்ஸ்மனும் பூசலைப் படிப்பதில் அவர்களுடைய அணுகுமுறையில் புதுமையானவர்கள்.

பூசல் பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகளிலிருந்து தான் ஏற்படுகின்றன என்று காரல் மார்க்ஸ் வற்புறுத்திக் கூறியுள்ளார். தொழில்மயமாதலும், முதலாளித்துவமும் இயற்கையில் மனிதன் பிரிக்கப்பட்ட மனிதனாகக் கெட்டுப்போக விழிகாட்டின. அதனாலேயே சமூகமும் இயற்கை நிலையில் இருந்து பிரிக்கப்பட்ட நிலைகளுக்கு மாறியது. பூசல் என்பது தொழிலாளர்களுக்கும்,

முதலாளிகளுக்குமிடையே நடைபெறுகின்ற வர்க்கப் பேத மற்ற சமூகத்தை நோக்கிய ஒரு புரட்சி மாற்றத்தை தோற்றுவித்த ஒரு வர்க்கப் போராட்டம். தன்னுடைய பொதுவுடைமைத் தத்துவக் கொள்கையால், காரல் மார்க்ஸ் சமூக வாழ்வை நிர்ணயிப்பது பொருளாதார நிலைகளே என்ற கருத்தில் பொருளாதார நிலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். அவருடைய பூசலின் கோட்பாடு தீவிரமானது.

ராபர்ட் பார்க் (Robert Park) தன்னுடைய பூசலின் கோட்பாட்டைத் தெளிவாகக் கூறுவதற்குச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் கவனம் செலுத்தியுள்ளார். மனித தொடர்நிலையில் போராட்டம் சுற்றுப்புற சூழ்நிலை அல்லது இயற்கை நிலைகளையே சார்ந்துள்ளது என்று கூறகிறார். பூசல், போட்டி, இசைவுபடுதல் முதலியவைகளின் சமூக எதிர் வினைகள் இயற்கையான பெரிய சக்திகளாகவும், மனிதப் பிராணிகள் வாழ்க்கைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவருடைய கருத்துப்படி மனித சமூகம் எப்போதும் இயக்க நிலையில் உள்ளது. அதில் எல்லா மாற்றங்களும் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சார்ந்து தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகப் போராட்டங்கள் ஏற்படுகின்றன. அவருடைய விளக்கம் போட்டி மற்றும் பரிணாமங்களைப் பொருத்த மட்டில் இயற்கையானது, காரல் மார்க்ஸ் மற்றும் ராபர்ட் பார்க் ஆகிய இருவரின் கருத்துப்படி பூசல் கோட்பாடு தீவிரமானதாக உள்ளது. மேலும் பூசல் இயற்கையாக உலகெங்கும் காணப்படுகின்ற கட்டுப்பாடாகச் சேவை செய்கிறது. பூசலின் செயற்பாடுகளைப் புரட்சிகரமான மாற்றங்களின் வாயிலாக ஆராயப்படுகிறது.

வில்பெரட்டோ பெரட்டோ (Vilfredo Pareto) சமூக மாற்றங்களுக்கு வழிகாட்டும் போட்டியின் மனோதத்துவ எதிர் வினைகளின் அடிப்படையில் பூசலின் கோட்பாட்டைத் தெளிவாகக் கூறகிறார். அவருடைய சிறந்தவர்களின் ஆய்வில், இயற்கையானதாகவும், சாதரணமாகவும் அவர் கருதுகின்ற சமூக நெறிகளுக்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தைக்

கொடுத்துள்ளார். எல்லாவற்றிலும் சிறந்தவர்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நெறிகளின் மீது சமூக சமநிலை சார்ந்ததுள்ளதால் இது கூட நடுத்தரமானது.

தர்ஸ்டன் வெப்ளனின் (Thorstein Veblen) கருத்துப்படி பூசல் கோட்பாடு தொழில் நுட்பத்தில் பரிணாண வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. சமூக மாற்றத்தின் அடிப்படைக் காரணிகள் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் பொருளாதாரம் என்று அவர் அபிப்பிராயப்படுகிறார். சமூக மாற்ற செயற்பாங்கில் பூசல் தொழில் நுட்ப நிர்ணயத்திற்கு வழிகாட்டுகின்ற ஒரு இயற்கைச் சக்தியாக இருக்கிறது.

நவீன சூழ்நிலையில் லெவிஸ் கோசர் மற்றும் டேவிஸ் ரெய்ஸ்மன் வழங்கியுள்ள பூசல் கோட்பாடு முக்கியக் கருத்தாகும். லெவிஸ் கோசர் பூசலை மதிப்பீடுகள் மீதுள்ள போராட்டம் எனவும், தகுதிநிலை, அதிகாரம் மற்றும் வசதி ஆகியவற்றில் உரிமை கொண்டாடுவதில் எதிரியின் குறிக்கோள்களைத் தடுத்தல், தீங்கு செய்தல் அல்லது போட்டியாளர்களை நீக்கிவிடுவதாகும் என விளக்கம் கொடுக்கிறார். அவர் பூசலின் சமூகச் செயற்பாட்டு வழியில் ஒரு உயராய்வுப் பூசல் கோட்பாட்டை வழங்கியுள்ளார். அவர் சமூக வளர்ச்சிக்குப் பூசல் மிகத் தேவையானது, என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். முன்னேற்றத்திற்குச் சமூகப் பூசல் ஒரு பூர்த்தி செய்யப்பட வேண்டிய இன்றியமையாத நிபந்தனை எனக் கருதுகிறார். புதுமையான செயலை உண்டாக்கும் திறமையுள்ள மனித சக்திக்கும் ஆற்றல் ஏற்படுத்துவது போன்ற வளர்ச்சியினைக் குறிப்பிட்டுச் சொல்ல இது தேவையாக உள்ளது. சமூகம் எப்போதும் பழைய பழக்கங்களையும் பரம்பரை வழக்கங்களையும் கொண்டதாக இருக்க முடியாது. புதிய எண்ணங்களினாலும் குறிக்கோள்களினாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகப் புதுமைகளில் உண்டாகின்ற பூசலும் சமூக மாற்றங்களும் பொதுவாக முன்னேற்றத்தை நோக்கியே இருக்கின்றன. பூசலின் கோட்பாட்டிற்கான அவருடைய அணுகுமுறை செயற்பாட்டுச் செயற்பாங்காக இருக்கிறது. சமூக ஒருங்கிணைப்பிற்கும், சமூகத்துடன் மனிதன் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் பூசல் மிக

அடிப்படையானது என்று அவர் கருதுகிறார். பூசலின் செயற்பாடுகள் சமூக விளைவுகளின் இயல்புகளையே சார்ந்துள்ளன. பூசல் கோட்பாட்டிற்கு லெவிஸ் கோசரின் பூசலின் செயற்பாட்டு விளக்கம் மிக முக்கியமானதாகும்.

டேவிட் ரெய்மன் (David Riesman) பூசலின் கோட்பாட்டில் புதிய - மார்க்ஸின் கருத்துக்களைக் கூறியுள்ளார். அவர் சில குறிப்பிடத்தக்க சமூக குழுக்களில் உள்ள சமூக நடத்தை என்ற அர்த்தத்தில் பூசலுக்கு விளக்கமளிக்கிறார். நடத்தை விதிகளை அனுசரித்தலையே சார்ந்திருப்பது தான் உண்மையான சமூக ஒழுக்கம் என கருத்துத் தெரிவிக்கிறார். சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்குச் சமூக அனுபவமே முக்கியமானது. சமூக அமைப்பிற்கும் நடத்தைக்கும் இடையே உள்ள பூசலுக்கான மன • நிலைகளின் மீதுதான் அனுசரித்தலின் அளவு சார்ந்திருக்கிறது, பூசலின் செயல்பாட்டிற்குரிய அதிகப்படி அணுகுமுறையாக மக்கட் தொகையின் பிறப்பு மற்றும் இறப்பு விகிதமாகிய மக்கட் தொகையியலின் காரணிகளுக்கு அவர் முக்கியத்துவம் கொடுக்கிறார்.

சமூக நெறிகள் அல்லது பொருளாதார இயற்கையின் போக்கு ஆகியவைகளின் மீது ஒரு முக்கியத்துவம் இருக்கிற நிலையில், பூசலின் கோட்பாடுகள் மனித நடத்தைக் கோலங்களின் ஒரு பகுதியின் விளக்கங்களேயாகும். அநேக சமூகவியல் கோட்பாடுகள் சமூக நெறிகளின் மூலமாகவும், மதிப்பீடுகளின் மூலமாகவும் நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதையே குறிப்பிடுகின்றன. சமூக ஒற்றுமை சமூக அனுசரித்தலின் பயனாக இருக்க வேண்டும். அனுசரணையற்ற நிலை பிறழ்வு எனக் கருதிப்படுகிறது, மாறுபட்ட சமூகநெறிகளுள்ள பல்வேறு சமூகக் குழுக்களைக் கொண்ட தொகுப்பு சமூகங்கள் தேசத்தவர்களுக்கும், இனைக் குழுக்களுக்கும், மத குழுக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், சமூக வர்க்கங்களுக்கும் இடையே பூசலுக்கு வழிவகுக்கின்றன. பூசல் என்ற கருத்தைப் பிறழ்வு என்று மட்டும் கருதிவிடக் கூடாது. இதைக் கருத்து வேறுபாட்டிற்கு வழி காட்டுகின்ற ஒரு சாதாரண விஷயமாகக் கருதாது, புதிய சூழ்நிலையை உருவாக்கக்கூடிய ஒரு சமூக நிலைமையின் ஒரு பலனாகக்

கருத வேண்டும். புதிய எண்ணங்களையும், சூழ்நிலைகளையும் அங்கீகரிப்பதில் தனி நபர்களுக்கு இடையேயும் அதே போல குழுக்களுக்கிடையேயும் இசைவு காணப்படலாம். சமாதானக் குழு என்பது போரில் விருப்பமுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே பூசல் சூழ்நிலையைத் தீர்த்து வைக்கின்ற ஒரு ஸ்தாபனம். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளும் இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் சமாதானம் பூசலைத்தவிர்க்கும்.

பூசல், சமூகத்தில் தவிர்க்க முடியாத முக்கிய அம்சமாகும். ஆனால் இது நிரந்தரமானதோ, எல்லாம் உள்ளடக்கிக் கொண்டதோ அல்ல. கூட்டுறவிற்கு வளைந்து கொடுக்காமல் பூசல் தொடர்ந்து இருக்குமெனில் தனி நபர்கள் தங்களுடைய சமூக உணர்ச்சி இழந்து சமூகம் குழப்பமுள்ளதாக வந்துவிடும். கோட்பாட்டின்படி பூசல் பொது சமூகச் செயற்பாட்டில் ஒரு அம்சமாகும். இது போட்டிக்குக் கொண்டு விடுகின்ற தனி நபர் மற்றும் குழுவின் வேறுபாடுகளுக்கும் அடையமுடியாத ஆசைகளுக்கும் சம்மந்தப்பட்டதில் தற்செயலாக ஏற்படுகிறது. இருந்த போதிலும், இது ஒரு எதிர்மறைச் சக்தி அல்ல. இது ஒரு புதுப்பிக்கப்பட்ட செயலினால், புதிய சூழ்நிலையை உண்டாக்கக்கூடிய நேர்மறை மனோபாவம். சமூக வாழ்வின் சூழலும் செயற்பாங்கில் பூசலும், கூட்டுறவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது. மற்றும் அவற்றின் செயற்பாடுகள் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது.

## பரிமாற்றம் (Exchange Perspective)

பரிமாற்றம் என்ற சொல்லின் சரியான அர்த்தம் கொடுத்தலும், வாங்குதலுமாகும். பொதுவாகப் பரிமாற்றம் என்ற எண்ணம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளுகின்ற பொதுப்-படையானது. அது நிதர்னமானதும் தொட்டு உணரக்கூடியதுமான பொருட்களைச் சார்ந்தது அல்ல. அணைத்துக் கெள்ளல், வெறுப்பு, வலி, திருப்தியைத் தெரியபடுத்துதல், விருப்பம், நன்மதிப்பு போன்ற தெளிவாகத் தெரிகிற எதிர் ஊடாட்டங்களுக்கு உபயோகப் படுத்தப்படுகிறது. அனுகூலமான சூழ்நிலையையும் நல்ல

வாய்ப்பையும் நல்ல வாய்ப்பையும் கூட இது சம்பந்தப்படுத்திக் கொள்ளும். சமூகவியலின்படி மனிதனைப் போலவே பரிமாற்றம் என்ற எண்ணமும் பழமையானது. பலவகையான நீண்ட சரித்திரத்தைக் கொண்டது. தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) எமீல் டர்க்கைம் (Emile Durkhim) கியார்க் சிம்மல் (Georg Simmel) மற்றும் மேக்ஸ் வேபர் (Max Weber) போன்றவர்களின் படைப்புகளில் பரிமாற்றக் கோட்பாட்டின் பழைய எண்ணங்கள் காணப்படுகின்றன. பழங்குடியினரின் சமூக அமைப்பிற்குப் பொருளாதார விளக்கங்கள் கொடுப்பதற்காக மேலினோஸ்கி (Malinowski) இக்கோட்பாட்டை உபயோகப்படுத்தியுளார். 18–ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி புதிய பொருளாதாரக் கண்ணோட்டத்தை அளித்துப் பரிமாற்றக் கோட்பாட்டைக் கூலித் தொழிலாளி, மூலதனம், உற்பத்தி, வியாபாரம் போன்றவற்றின் வாயிலாக வியாபார நுட்பத்திற்குக் குறைந்து விட்டது. பொருளாதாரச் சந்தைகள் சமூக அமைப்பை நிர்வகிக்கின்றன. 19–ஆம் நூற்றாண்டில், பரிமாற்றக் கோட்பாடு தனிப்பட்டதாக வளர்ந்தது. அதன் பிறகு அமைப்பு முறை உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பரிமாற்றத்தில் பொதுவுடைமை அங்கீகரிக்கப்பட்டது. பரிமாற்றக் கோட்பாட்டைப் பற்றிப் பல அபிப்ராயங்கள் உள்ளன. வில்லியம் ஸ்கிட்மோரின் (William Skidmore) கருத்துப்படி பரிமாற்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற அலகு தனி நபரேயன்றிக் கூட்டானதோ, சமூகமோ அல்லது குழுவோ அல்ல, பார்ட்லெட் (Bartlett) என்பவரின் வார்த்தையில் பரிமாற்றம் என்பது அனுசரித்தலுக்கான ஒரு நிலையான குறிப்பு என்ற அளவில் இல்லாமல், ஆனால் சம்மந்தமுள்ள நபர்களுக்கு இடையே ஒரு ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகின்ற செயல் நிலையின் மீது முக்கியத்துவத்தை ஏற்படுத்துகின்ற செயல்பாடு காட்சியாக இருக்கிறது. ஆகையால், இது சாதாரணமானதோ அல்லது தனிப்பட்டதோ அல்ல, ஆனால் உபயோகமானதாகவும் ஊடாட்டமாகவும் இருக்கிறது. சரித்திரம் மற்றும் நவீன கருத்துக்களின்படி, சமூக ஒழுங்கு முறையைப் பற்றிய ஒரு பொதுவிளக்கம் கொடுப்பதற்காகப்

பரிமாற்றக் கோட்பாடு பொருளாதார தனிநபர் கொள்கையையும் பரிசோதனை உளவியலையும் இன்பமே பிரதானமெனும் கொள்கைத் தத்துவத்தையும் சார்ந்துள்ளது.

பரிமாற்றக் கோட்பாட்டின்படி அடிப்படைச் சமூகவியல் கொள்கைகளாவது : (1) ஆய்வுக்கான அலகு (2) இயங்கும் சக்தி, (3) இலாபம் (4) தன்னிச்சைக் கொள்கை (5) சமூக அனுமதி ஆகும்.

தனிநபர்தான் பரிமாற்றக் கோட்பாட்டின் பிரதான அலகு. அவர்தான் ஆரம்பநிலை இருந்த போதிலும் பரிமாற்றம் குழு வாழ்வில் சமூக ஊடாட்ட மாற்றங்களையே சார்ந்துள்ளது. ஏன் என்றால் குழுக்கள் தான் தனிநபர்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் குழுக்கள் ஸ்தூலப் பொருட்களல்ல. ஆகவேதான் தனிநபர்கள் பரிமாற்றக் கோட்பாட்டின் ஆய்வுக்கான உண்மையான அலகுகளாகும்.

இயங்கும் சக்தி பரிமாற்றத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். பொதுவான குறிக்கோள்கள் என்று சொல்வது ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆசைகள் கிடையாது என்று அர்த்தமாகாது. மனிதர்களுக்குத் தனிப்பட்ட ஆசைகள் தண்ணுணர்ச்சியாகவே இயங்கும் சக்தியளிக்கின்றன. இயங்கும் சக்தியானது தனிநபர் சம்மந்தப்பட்ட தனிப்பட்ட சமாசாரம்.

லாபம் ஒருவருக்குரிய இயங்கும் சக்தியுடன் சேர்ந்தது யாரும் வெற்றிடத்தில் செயல்பட மாட்டார்கள். ஒவ்வொருவரும் கொடுக்க விரும்புவதைப் போலவே எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள். சுய திருப்தி இல்லையெனில் அங்கு ஊடாட்டங்கள் இராது. விலை என்பது மூலதனமாகவும், முடிவு என்பது வெகுமானமாகவும் உள்ளது. பரிமாற்றத்தில் விலையை விட வெகுமானம் அதிகமாக இருக்கும் போது லாபம் ஏற்படுகிறது.

தன்னிச்சைக் கொள்கைப் பரிமாற்றத்தில் ஒரு அடிப்படை தேவை. ஒவ்வொரு நபரும் செயலினைத்

தேர்ந்தெடுப்பார்கள். அப்படியில்லையெனில் ஊடாட்டத்திற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும். செயலினைத் தேர்ந்தெடுப்பதே தன்னிச்சைக் கொள்கையாகும். தேர்ந்தெடுப்பது மனித வாழ்க்கையில் முற்றுப் பெறாதது. இருந்த போதிலும் பரிமாற்றத்தில் ஒவ்வொரு நபரும் முடிவு செய்கின்ற சக்தியும், தேர்ந்தெடுக்கும் தன்மையும் கொண்டுள்ளனர்.

சமூக அனுமதி என்பது ஒரு பொது திருப்தி அளிப்பதும் இயங்கும் சக்தியை அளிப்பதுமாகும். தனிநபரின் தேர்ந்தெடுத்தல் அல்லது தன்னிசைக் கொள்கை சமூக அனுமதியினால் கட்டுப்படுத்தப்படுகிறது. சமூக உறவுகளில் மக்கள் சந்தேகத்தை தேடி அனுபவிக்கிறார்கள். சமூக அனுமதி பல நிதர்சமான வடிவங்களைக் கொண்டுள்ளது. ஆனால் தனிநபருக்குத் தானாகத் தேர்ந்தெடுக்க முடியாத, ஆனால் விருப்பம் அல்லது விருப்பமின்மையாகிற பரிமாற்றத்திற்குரிய ஒரு முக்கிய காரணியாகச் சமூக அனுமதி பலனாகக் கிடைத்துள்ளது.

இந்தப் பரிமாற்றக் கோட்பாட்டின் சமூகவியல் கொள்கைகள் நான்கு முக்கிய கூறுளைச் சார்ந்துள்ளது. அதாவது

(1) வெகுமானம் (2) விலை (3) விளைவு மற்றும், (4) ஒப்பிடுதலின் அளவு.

வெகுமானம் என்பது பொதுவாக நம்பிக்கையினாலான உறவுகளின் மூலம் கிடைக்கின்ற சுயதிருப்தியினால் தனிநபருக்கு அனுகூலமாகின்ற செய்கை என்று விளக்கப்படுகிறது. அது நிதர்சமான பொருட்களை பரிமாற்றம் செய்வதாக இருக்கலாம். அல்லது இசைவு, அனுதாபம், மற்றும் அன்பு ஆகியவற்றைத் தெரிவித்தலாக இருக்கலாம்.

விலை நம்முடைய முயற்சியைக் குறிப்பாக உணர்த்துகிறது. இது பொருளியலாகவோ தத்துவ வாயிலாகவோ அல்லது உளவியலாகவோ இருக்கலாம். இது ஆர்வம், மனவெழுச்சி என்று பொருள்படலாம். தியாகத்தைக்

கூட அது குறிப்பிடலாம். விலையும் வெகுமானமும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை. இது வெகுமானத்தின் எதிர்பார்ப்பில் முயற்சி அல்லது விலையை உபயோகத்தில் இருக்கிறது.

விளைவு என்பது வெகுமானத்திலிருந்து விலையைக் கழித்தல் எனப்பொருள்படும். சில சிந்தனையாளர்கள் வெகுமதி அல்லது லாபம் அதிகமாக இருப்பதை நேர்மறை என்றும் வெகுமதியின் விலை அதிகமாக இருப்பதை எதிர்மறை என்றும் நினைக்கின்றனர், பரிமாற்றத்தில் விலையின் எதிர்மறை அல்லது நேர்மறை அம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. பரிமாற்றக் கோட்பாட்டில் தனிநபர்களை விட தனிநபர்களிடையே காணப்படும் உறவுமுறைதான் மிக முக்கியமானது. எதிர்பார்த்தல் வழியில் இருக்கும் ஊடாட்டச் செயற்பாங்கை இது சார்ந்துள்ளது.

பரிமாற்றத்தில் ஒப்பிடுதலின் அளவு ஒரு முக்கிய விளைவாகும். விலைக்கும் வெகுமானத்திற்கும் உள்ள உறவு ஒப்பிடுதல் அளவை சுட்டிக்காட்டுகிறது. தனிநபர்களின் தகுதிக்கேற்றவாறு விளைவு மதிப்பிடப்படுகிறது. தகுதி நிலை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தனிநபர்களுக்கிடையில் ஒப்பிடுதல் வேறுபடும்.

இந்த வெகுமானம், விலை, விளைவு மற்றும் ஒப்பிடுதலின் அளவு ஆகிய நான்கு கூறுகளும் பரிமாற்றத்தின் எல்லா அம்சங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்தது, பொருளாதார சமூக அல்லது உளவியல் ஆகிய எந்த ஒரு பரிமாற்றமானாலும் சரி இந்தக் காரணிகள் மனித ஊடாட்டங்களை நிதர்சனப்பொருட்களில் சம்மந்தப்பட்டுள்ளன. ஆயினும் பரிமாற்றம் என்பது அடிப்படையில் ஒரு சாதாரண தனி நபர்க்குட்பட்ட அல்லது குழு சம்மந்தப்பட்ட சமூக ஊடாட்டச் செயற்பாங்காகும்.

பரிமாற்றக் கோட்பாடு ஊடாட்டத்திற்குச் சந்தர்ப்பங்களை வழங்கக் கூடிய ஒற்றுமைகளைச் சார்ந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்னியர்களைவிட ஒரே மாதிரியான நெறிகளும் மதிப்பீடுகளும் உள்ள ஒரே மாதியான பண்பாட்டுக் குழுக்கள் மற்றும் சமூக ஆதாரங்களுடனிருக்கும் நண்பர்கள் மிக குறிப்பாக பரிமாற்ற வழியில் ஊடாட்டம் கொண்டு இருப்பார்கள். ஒரே மாதிரியான சமூக ஆதரவுள்ள மக்கள் நேரடியாகவே ஊடாட்டங்கள் கொள்வர். மற்றும் பரிமாற்றம் அவர்களிடையே சுலபமாகவும் நெருங்கிய சம்பவமாகவும் வளர்கிறது. ஒற்றுமை என்பது சாதாரணமாக ஒரு பரிமாற்றத்தின் நிலையாகும். இது பூரணமானது அல்ல. ஒரே மாதிரியான சமூக ஆதரவுள்ள மக்கள் அவர்களின் திறமைகளிலும் ஆசைகளிலும் வேறுபட்டிருக்கலாம். கவர்ச்சியும், நட்பும் பல்வேறு காரணிகளைச் சேர்ந்தது. அடிக்கடி ஊடாட்டம் கொண்டுள்ள நம்முடைய பக்கத்து வீட்டுக்காரர்களை நாம் விரும்பாமல் இருக்கலாம். சகோதரர்கள் கூட ஒருவரை ஒருவர் வெறுப்பார்கள். விரும்புகின்ற காரியங்களைச் செய்வதில் அன்னியர்கள் இணையலாம் ஆகவே பரிமாற்றம் செய்ய மனோபாவம் மற்றும் உள் எண்ணங்களைச் சார்ந்திருக்கிறது.

நவீன சூழ்நிலையில், தர்க்க சாஸ்திர ஆய்வின் மூலம் பரிமாற்றக் கோட்பாட்டை முறையானதாக்க முயற்சிகள் செய்யப் படுகின்றன. ஜார்ஜ் சி. ஹோமன்ஸ் (George C.Homans) என்பவர்தான் நவீன பரிமாற்றக் கோட்பாட்டை ஏற்படுத்தினார். அவர் எல்லாவிதமான சமூக உளவு முறைகளைப் பராமரிப்பிற்கும், சமூக அமைப்பிற்கும் பரிமாற்றக் கோட்பாட்டிற்கும் உள்ள சம்பந்தத்தை ஆதரிக்கிறார். அவர் சமூக உறவுமுறைகளை ஆராய்வதில் பரிமாற்றக் கோட்பாட்டை வளர்த்துள்ளார். அவருடைய கருத்துப்படி, தனிநபர்கள் கோட்பாட்டை வளர்த்துள்ளார். அவருடைய கருத்துப்படி, தனிநபர்கள் அவர்களின் மதிப்பீடுகளைப் பற்றிய சொந்தக்கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள் மற்றும் மதிப்பீடுகள் அவர்கள் அனைவருக்கும் ஒன்றேயாகும். பரிமாற்றம் தனிநபரின் செயலுக்கும் மதிப்பீட்டிற்கும் இடையே நிலவும் உறவைச் சார்ந்துள்ளது. பரிமாற்றத்தின் முக்கிய நோக்கத்திற்காகவே தனிநபர்கள் ஊடாட்டம் கொள்கின்றனர். தனிப்பட்ட நடத்தையில் இருப்பதைப் போலவே பரிமாற்றத்தின் அதே போன்ற கொள்கைகளையே நிறுவனம் சார்ந்துள்ளது.

பரிமாற்றங்களின் சிக்கலான வலைப்பின்னலே நிறுவனங்களாக இருக்கின்றன. வெகுமானம் என்பதே வெகுமானம் பெற்றவரின் தனிப்பட்ட விசயம் என்பது அவருடைய கருத்து. பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் நிறுவனங்களின் முக்கிய நோக்கமாகும். ஜார்ஜ் சி, ஹோமனின் பரிமாற்றக் கோட்பாட்டில் தனிநபர்களின் தனிப்பட்ட பிரத்யேகக் குணம் முக்கியக் கருத்தாக விளங்குகிறது. தனிநபரின் செயலுக்கும், வெகுமானத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அவருடைய கோட்பாடு குறை உள்ளதாகக் கருதப்படுகிறது. நிறுவனங்கள் தாங்களாக வளரவோ அல்லது நீடித்திருக்கவோ இயலாது. தனிநபர்கள் சம்மந்தமில்லாத வஸ்துக்களல்ல. பரிமாற்றத்தில் தனிநபரும் சமூகமும் ஒன்றோடென்று தொடர்புடையன.

பரிமாற்றக் கோட்பாட்டிற்கும் குழுவின் சமூக உளவியலுக்குமுள்ள உறவை விவரித்துக் கூறியவர்கள் ஜெ.டிலண்ட் (J.Thilant) மற்றும் ஹெச். கெல்லி (H. Kelley) தனிநபர் மற்றும் உறவுமுறையில் தனிநபரின் பங்கு பற்றி ஆராய்வது அவர்களின் நோக்கமல்ல. எது மிகவும் முக்கியமானதெனில் உறவுமுறைகள் மட்டும் பரிமாற்றம் என்ற கருத்தை ஆராய்வதற்கு அவர்கள் 'நடத்தை வரைப்பட அச்சைப் பயன்படுத்தினார்கள். இந்த ஆய்வு சாதனம் இரண்டு கோணங்களில் விளக்கக்கூடியது, நேருக்கு நேர் நிகழும் தனிப்பட்ட உறவுமுறைகளின் மூலமாக ஒப்பீட்டு அளவை அவர்கள் அறிமுகப்படுத்தி-யுள்ளனர். தனிநபர்களின் செயல்களை விட உறவுமுறைகள்தான் பரிமாற்றக் கோட்பாட்டின் முக்கிய விஷயம்.

பரிமாற்றக் கோட்பாட்டின் மற்றுமெரு முக்கியப் படைப்பை வழங்கியவர் பீட்டர் ஏ. பிலாவ் (Peter A. Blau) அவர் பரிமாற்றத்தைத் தனிப்பட்ட கருத்தாக ஆராயாது சமூக அமைப்பு என்ற அடிப்படையில் ஆராய்கிறார். நேருக்கு நேர் நிகழும் உறவுகளை எடுத்துக்காட்டான பிரிவு என்றும் வலம், ஆதிக்கம் மற்றும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் அவற்றின் ஊடாட்டங்களைப் பெரிய அயவிலான அமைப்பு என்றும் அவர் அழைக்கின்றார். நெருங்கிய உறவின் அடிப்படையில் அவைகளைச் சிறிய

அளவிலான அமைப்பு என்றும்கூட அழைக்கலாமெனக் குறிப்பிடுகிறார். அவருடைய கருத்தில் சமூக அமைப்பு என்பது பெரிய அளவிலான, அமைப்பின் இடையே காணப்படுகின்ற தொடர்புகளாகும். சமூகக் கூட்டொருமைப்பாடு பெரிய மற்றும் சிறிய அளவிலான அமைப்புகளைச் சார்ந்துள்ளது. அவர் மேலும் பரிமாற்றக் கோட்பாட்டைப் பிரத்யோக உரிமை மற்றும் தேவைக்கு மேல் அதிகம் உள்ள உபயோகத்தைக் குறைத்தலின் வழியில் பொருளாதாரச் செயல்களுக்கு உபயோகிக்கிறார்.

நவீன சமூகவியலறிஞர்கள் பரிமாற்றக் கோட்பாட்டை ஊடாட்டத்துடன் சமமாக முயற்சி செய்கிறார்கள். இயங்கும் சக்தியை சுயபயிற்சி என்று ஆராய்ந்து நெல்சன் ஃபூட் (Nelson Foote) என்பவர் பரிமாற்றக் கோட்பாட்டின் ஊடாட்டமாகக் கூறுகிறார்.

பரிமாற்றக் கோட்பாடு ஒரு முக்கியமான சமூகவியல் மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது விலை, வெகுமானம், விளைவு மற்றும் ஒப்பிடுதலின் அளவு ஆகியவைகளின் வாயிலாகச் சமூக மற்றும் தனிநபரின் நடத்தையை ஆராய ஒரு புதிய ஆய்வு முறையை அறிந்துள்ளது. சாதாரணமான அமைப்பு மற்றும் சகஜநிலை ஆய்வுகளுக்குப் பதிலாக சமூக உறவுமுறைகள் மற்றும் மனித இயல்புகளைப் புதிய நிர்ணய அடிப்படை வழிகளைச் சார்ந்த முறையின் வாயிலாகச் சமூகத்தைப் படிக்கிறது. விலை மற்றும் வெகுமானத்தின் வாயிலாக அடையும் தனிநபரின் செயல்கள் பரிமாற்றக் கோட்பாட்டின் இரண்டு முக்கிய எல்லைகளாகும். பரிமாற்றத்தின் வலைப்பின்னலாக அறிவுப்பூர்வமான அமைப்பைக்கூட இது அளிக்கிறது. உளவியல், அரசியல் அறிவியல் மற்றும் பொருளாதாரம் போன்ற இதர சமூக அறிவியல்கள் மனித உறவுகளையும் நிறுவனங்களையும் படிப்பதைப்போல, சமூக பரிமாற்றக் கோட்பாட்டை அனைத்து அறிவியல்களும் இணைந்த ஒரு அணுகுமுறையாக அங்கீகரித்துள்ளன.

# பாடம் - 4

# அடிப்படை சமூகவியல் கருத்துப்படிவங்கள்
# (Basic Sociological Concepts)

## 1. சமூக அமைப்பு (Social System)

(i) ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் மக்கள் உபயோகப்படுத்துகின்ற பழக்கங்கள் மற்றும் அடையாளங்களின் மொத்தப் பரப்பு

(ii) ஒரு சமூகத்தின் மக்களுடைய வழக்கமான மாறாத உறவு முறைகள்.

## 2. சமூகம் (Society)

சமூகம் என்ற சொல்லைப் பெர்டினாட்டு டோனிஸ் (Ferdinand Toennies) என்பவர் அறிமுகப்படுத்தினார். இது பெரிய நகரக் குழுவைக் குறிக்கும் ஒரு நேர்த்தியான சமூக வகை. இத்தகைய சமூகத்தில் இதர நிறுவனங்களின் மூலம் மற்றும் வடிவம் சார் சட்டங்களின் மூலம் மட்டுமே மக்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்த முடியும் மற்றும் அம்மக்களிடையே ஒப்பந்த அடிப்படை மற்றும் ஒருவரையும் சுட்டிக்காட்டாத உறவு முறைகளே தனிச் சிறப்புக் குணங்களாக விளங்குகின்றன.

## 3. பண்பாடு (Culture)

1. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் பின்பற்றப்படுகின்ற வழக்கங்கள், நெறிகள், மொழி, மத, பொருளாதார மற்றும் அரசியல் நம்பிக்கைகளும், பழக்கங்களும், கலை மற்றும் இதுபோன்ற கற்றறிந்த சமூகளவில் அர்த்தமுள்ள எல்லா நடத்தைகளும் பண்பாடு எனப்படும். இந்த விளக்கம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட

அனைத்தும் சமூகஅளவில் அர்த்தமுள்ள பொருளையும் அதாவது பண்பாட்டுப் பொருள்கள் என்று அழைக்கப்படும் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

2. ஒரு சமூகத்தினரால் கற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பங்கிட்டுக் கொள்ளப்பட்ட அனைத்தும், அத்துடன் அச்சமுக மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சமூக அர்த்தமுள்ள பொருள்கள்.

## 4. சமூக நிறுவனம் (Social Institution)

மனிதத் தேவைகளை நிகழ்காலத்தில் அல்லது தொடர்ச்சியாக எதிர் கொள்வதில் சிறப்பு வேலை செய்பவர்களினால் நிறைவேற்றப்- படுகின்ற ஒரே மாதிரியான பழக்கங்களும் சமூக நெறிகளும்.

## 5. குழுக்கள் (Groups)

விருப்பங்களிலும், நோக்கங்களிலும் சில ஒற்றுமையையும், அவர்களுடைய நடைமுறை கட்டுப்படுத்துகின்ற அங்கீகரிக்கப்பட்ட நெறிகள், ஒரு தகுதி நிலை அல்லது அந்தஸ்து அமைப்பு முறையைப் போன்றது. வேலைப் பங்கீடு மற்றும் சில அமைப்பு போன்ற குணாதிசயங்களைக் கொண்ட ஒரு அளவிற்கு நிரந்தரத் தன்மையுடைய சமூகப் பிரிவின் உறுப்பினர்கள் என்பதை உணர்ந்துள்ள ஊடாட்ட உறவு கொண்டுள்ள ஒரு அமைப்பாகும்.

## 6. விழுமியங்கள் (Value)

ஒவ்வொரு சமூகத்திலும் சில எண்ணக் கருத்துக்கள் எது நல்லது என்று சுட்டிக் காட்டுகின்றன. மேலும் இத்தகைய எண்ணக்கருத்துகள் எவற்றை அடைவது நல்லது என்பதையும் அதற்கான வாழ்க்கை முறையையும் சுட்டிக் காட்டுகின்றன. இதையே விழுமியங்கள் என்றும் மதிப்பீடுகள் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

## 7. நெறிகள் (Norms)

நெறிகள் திட்ட ஒழுகலாறுகளைக் குறிக்கின்றன. முசாபர் ஷரீப் (Muzafef sherief) சமூக நெறிகள் என்ற வார்த்தையை உபயோகித்து, அதனைச் சமூக அங்கத்தினரின் பொதுவான திட்ட நிலைகள் என்றும் அதன் மூலம் அவர்கள் நிர்மாணிக்கப்பட்ட குழுக்களுடன் அவர்களுக்கு ஏற்றவாறு இயங்கும் முறை என்றும் வரையறை செய்கின்றார்.

## 8. மனப்பான்மை (Attitude)

சமூகவியலார்கள் மனப்பான்மையை முன்னுக்கு பின் மாறுபட்ட நிலைகளில் உபயோகிப்பதைக் காண்லாம். பொதுவாக மனப்பான்மையை ஒரு பொருள் பன்மொழி வழக்குகளிலே கருத்துகனையும் உள்உணர்ச்சி வெளிப்பாடுகளையும் குறிப்பதாக இருக்கும். ஆனால் பொதுவாக எல்லோராலும் உபயோகப்படுத்தப் படுகின்ற மனப்பான்மை பற்றிய வரையறையானது மனப்பான்மையை தன் உள்ளுணர்வுக்கு உறியாதாகவும் தனித்தன்மை கொண்டதாகவும் விழுமியங்களின் எதிரிணையாகவும் வகை செய்யப்படுத்துகின்றது. இவ்வாறாக மனப்பான்மையானது மதிப்பீடுகளை நேர் மற்றும் எதிர்மறை தரப்புகளை உள்ளடக்கி உள்ளதாக இருக்கின்றது. ஆனால் மனப்பான்மையானது ஒரு சொல்லின் முற்சார்பாக கருதப்படுகின்றது. உதாரணமாக ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட நிலையில்தான் கொண்டுள்ள மனப்பான்மையின் காரணமாக மற்றவர்கள் செயற்படும் பல சிந்தனையாளர்கள் சமூக செய்முறைகளையும் சமூக மாற்றத்தையும் ஒன்று போலக் கருதுகின்றனர். சமூக மாற்றத்தில் முக்கியமாகச் சமூக புதுப்பித்தல் என்ற ஒன்றை காணலாம். சமுதாயத்தில் சமூக அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவற்றின் வாயிலாக நடத்தை செயல்படுகின்றது. இந்த நடத்தையே சமூக ஊடாட்டம் என்றழைக்கப்படுகிறது.

## 9. சமூக ஊடாட்டம் (Social Intaraction)

சமூக ஊடாட்டம் என்பது ஒரு சமூகச் செய்முறை. இதில் தனிநபர்கள் சந்தித்துக் கொண்டு சமூக உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இந்த முறை அமைவிற்கு நடத்தை என்று பெயர்.

## 10. தகுதி நிலை (Status)

ஒரு சமூகத்தில் அல்லது குழுவில் ஒரு உயர்ந்த அல்லது தாழ்ந்த சமூக வரிவையுடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் கடமைகள், சலுகைகள்.

## 11. வாழ்க்கைப் பங்கு (Role)

பங்கு என்பது தனது தகுதி நிலையைப் பொறுத்து ஒருவன் சமூகத்தில் பங்கு கொள்வதைக் குறிப்பதாகும். இது பற்றிப் பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றார்கள். மைக்கேல் பேண்டன் (Miceal Banton) என்பவர் பின்வருமாறு பங்கு பற்றிக் கூறுகின்றார். அதாவது 'உரிமைகள் மற்றும் உதவி புரிதல் ஆகியவற்றின் தொகுப்பிற்கு மக்கள் தங்களின் நடத்தையை உறுதி செய்கிறார்கள்'. பங்கு என்பது தகுதி நிலையைப் பொறுத்தே இருக்கின்றது. அது இயற்கைத் தகுதி நிலையாகவும் செயற்கைத் தகுதி நிலையாகவும் இருக்கலாம்.

## 12. சமூகமயமாதல் (Socialization)

ஒரு ஆளுமையை வளர்க்கும் செயற்பாங்கு. இது எதைக் குறிக்கிறது என்றால் மக்கள் அவர்களுடைய சமூகத்தில் இதர மக்களுடன் ஊடாட்டம் கொள்ள உதவுகின்ற குழுவின் நெறிகளையும், சமூகச் செயல்பாடு அல்லது பங்கு பற்றிய சுய கருத்துக்களையும், எண்ணங்களையும், பழக்கங்களையும் கற்றுக் கொள்கின்ற செயற்பாங்கு.

## 13. பூசல் (Conflict)

1. விரோதமான குழுக்களுக்குள் ஒவ்வொரு குழுவும் வெளிப்படையாகவும், வேண்டும் என்றேயும் ஒருவரை ஒருவர் அழிக்கவும், அடக்கவும் அல்லது தோற்கடிக்கவும் அல்லது எதிர்க்கவும் செய்கின்ற ஒரு எதிர்ப்பு சமூகச் செயற்பாங்கும். அத்தகைய எதிர்ப்பு முரட்டுத்தனமாகவோ அல்லது முரட்டுதனமற்றதாகவோ இருக்கலாம்.

2. குழுக்களுக்கிடையேயான முரட்டுத்தனமான எதிர்ப்பு.

3. இரண்டு தனிமனிதர்கள் ஒருவரை ஒருவர் இடையூறு செய்து தோற்கடிக்க அல்லது அடக்க தேடிச் செல்கின்ற உறவுகள்.

## 14. ஆட்சிதிறன் (Power)

ஆட்சித்திறன் என்பது அரசியல் அறிவியலின் இருதயமாகக் கருதப்படுகிறது. சமூகவியலாளர்கள் ஒரு சமூகத்தினுடைய அரசியல் வாழ்க்கையை ஆராய முற்படும்போது அவர்கள் ஆட்சித்திறன் பிடியில் சிக்குகிறார்கள். மேக்ஸ் வேபர் (Max Weber) என்ற சமூகவியலறிஞர் ஆட்சித்திறனைப் பின்வருமாறு வரையறை செய்கிறார். ஒரு சமூக உறவுகளின் வலைப்பின்னல் அமைப்பின் ஒரு செயல்படும் நபர் தன்னுடைய விருப்பத்தை மெய்ப்பிக்கக் கூடிய வகையில் எதிர்ப்புகள் இருப்பின் நிகழ்ச்சித்தகவாகச் செயல்படுவது 'ஆட்சித்திறன்' ஆகும். இந்த வரையறையானது இரண்டு நபர்களுக்கிடையே அமைகின்ற உறவுகளைக் குறிக்கிறது. இதுவே ஒரு நபர் மற்றொரு நபர் மீது ஆட்சித்திறனைப் பிரயோகிப்பதைக் காணலாம். இத்தகைய ஆட்சித்திறன் சாதாரணமாகப் பலத்தை உபயோகித்தோ, ஒரு அரசு பதவியின் மூலமாகவோ, ஒரு இளங்குழந்தையின் மீது பெற்றோர் என்ற அதிகாரத்தன்மை மூலமாகவோ அல்லது இத்தகைய தன்மையுடைய எண்ணிக்கையில் அடங்கா பல நிலைகளின்

மூலமாகவோ அமைவதாகும். சாதாரணமாக ஆட்சித் திறனானது ஒரு தனி மனிதனுடைய விருப்பத்தை மற்றவர்கள் மீது திணிப்பதாக அமைகிறது. மேலும் தனி மனிதர் தன்னுடைய ஆட்சித்திறன் மூலமாகத் தன்னுடைய இலக்கை அடைய தேவையான வாய்ப்பு வளங்களைத் திரட்டுவதாக அமையும்.

## 15. அதிகாரம் (Authority)

ஆட்சித்திறனைப் போலவே அதிகாரம் என்ற கருத்தானது மிகவும் குறைக்கப்பட்ட ஒன்றாகும். முறை அமைப்புகளின் ஆதரவுடன் முறைப்படுத்தப்பட்ட ஆட்சித்திறனானது அதிகாரம் எனப்படுகிறது. அதிகாரத்தை மேக்ஸ் வேபர் என்ற அறிஞர் ஒரு குறிப்பிட்ட குழு நபர்கள் ஒரு குறிப்பிட்ட நிலையில் கொடுக்கப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியும் நிகழ்ச்சித் தகவானது அதிகாரம் என்று வர்ணிக்கிறார். இவ்வாறு அதிகாரமானது ஒரு முறைப்படுத்தப்பட்ட ஆட்சித்திறலாக அமைகிறது.

## 16. சமூகதரப் பிரிவு (Social Stratification)

சமூகதரப்பிரிவு என்பது தனிநபர்களின் மத்தியில் மற்றும் குழுக்களின் மத்தியில் காணப்படும் பிரிவுகளைக் குறிக்கின்றது. மேலும் சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் உயர்ந்த தகுதிநிலை மற்றும் தாழ்ந்த தகுதிநிலை எனப் பிரிக்கப்படுகின்றது. இவைகளில் சரிசமமற்ற ஒரு நிலையைக் காண முடிகின்றது. இந்நிலையில் அவ்வப்பொழுது மாற்றங்கள் இருந்து கொண்டே இருக்கும். முந்தைய நிலையில் மாற்றங்களும் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. குறிப்பாகச் சமூக தரப்பிரிவு தகுதிநிலையினை அடிப்படையாக வைத்துதான் பிரிக்கப்படுகின்றது. இது தரப்பிரிவில் முக்கியமான பகுதியாகக் கருதப்படுகின்றது.

# பாடம் - 5

## சமூகவியல் ஆராய்ச்சி முறைகள் மற்றும் அளவுகள் (Sociological Research Methods and Measures)

இதுவரை நாம் சமூகவியலினுடைய தன்மை மற்றும் நோக்கு நிலைகள் இவற்றின் அடிப்படையில் சமூக நிகழ்வுகளை எவ்வாறு அணுக வேண்டும் அல்லது ஆராயவேண்டும் என்பதற்கான சில அடிப்படைக் கருத்துக்கள்/ கோட்பாடுகளைப் பற்றி நாம் தெரிந்து கொண்டோம். இப்போது சமூகவியலார்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பது பற்றியும் அவர்கள் எவ்வாறு உண்மைகளைக் கண்டறிகிறார்கள் என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டி சமூகவியல் ஆராய்ச்சியில் என்னென்ன உள் அடங்கி இருக்கின்றன என்பதைப் பற்றி இங்கே படிப்போம்.

### அனுமானமும் கோட்பாடும் (Hypothesis and Theory)

ஆராய்ச்சியானது சாதாரணமாக ஒரு நிகழ்வு. செயலின் காரணத்தைப் பற்றிய வியூகத்தோடு ஆரம்பமாகும். ஒரு குறிப்பிட்ட உண்மைகளினுடைய கூற்றானது மற்றொரு உண்மையின் அமைப்போடு காரணத் தொடர்பு உடைய வகையில் கொண்டுள்ள தொடர்பே அனுமானமானது அதை நிருபிக்ககூடிய வகையில் - சரி அல்லது தவறு- கூறப்படவேண்டும்.

அனுமானமானது எண்ணங்களிலிருந்து தனிமைப்படுத்தப் பட்டவையல்ல. பொதுவாக அனுமானங்களானவை ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கோட்பாடுகளினூடே வேருன்றியிருக்கும், கோட்பாடு என்பது ஒன்றோடு ஒன்று தொடர்புடைய அனுமானங்கள் மற்றும் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்கும். சமூகவியல் முறைகளானவை இந்த உண்மைகள், அனுமானங்கள்,

கோட்பாடுகள் எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்கின்றன என்பதனைப் பற்றிய விதிகள் மற்றும் வழிமுறைகளாகும். கீழே வரும் பகுதிகளில் நாம் இந்த முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

## மாற்றுரு (Variable)

சமூகவியலானது சமூக உறவுகள், சமூக நிறுவனங்கள் மற்றும் சமூகங்களை அறிவியல் ரீதியாக ஆராய்கிறது என்பதை அறிந்து கொண்டுள்ளோம். சமூகவியலார்கள் மாற்றுருக்களுக்கிடையே உள்ள தொடர்பைக் காரண விளைவுகளின் (cause and effect relationship) மூலம் விளக்குகிறார்கள். மாற்றுரு என்ற கருத்துக் கோவையானது பல்வேறு மதிப்பீடுகளை உள்ளடக்கியுள்ளது. சமூகவியல் ஆராய்ச்சியானது ஒரு குறிப்பிட்ட சமூக நிகழ்விலே ஏற்படுகின்ற மாற்றத்தைக் கண்டுபிடிக்கவும், அளவீடு செய்யவு முயற்சிக்கிறது. பின்னர் மற்றொரு சமூக நிகழ்வின் மூலமாக அந்த மாற்றுரு ஆகும். இரண்டாவது நிலையானது சார்பற்ற சுதந்திரமான மாற்றுரு ஆகும். சமூகவியல் அறிஞர்கள் மேற்சொன்ன இரண்டு வகையான மாற்றுருக்களுக்கிடையே உள்ள உறவு பற்றி யூகம் கொள்ளும்போது அவர்கள் அனுமானத்தை உருவாக்குகிறார்கள்.

## ஆராய்ச்சி முறைகள் (Research Methods)

காலப்போக்கில் சமூகவியல் அறிவியலானது சமூகவாழ்விலே காரண விளைவு உறவுகளை ஆராய முறையான அறிவியல் ரீதியான நுணுக்கங்களை முயன்று பெற்றிருக்கிறது. சமூகவியல் ஆராய்ச்சி முறைகளில் மிகவும் முக்கியமான முறைகளாக மாதிரி அளவாய்வு, கள ஆய்வு வரலாற்று முறை ஆராய்ச்சி, சோதனை முறை ஆராய்ச்சி ஆகியவை அடங்கும் மேற்கூறிய முறைகளில் ஆராய்ச்சியாளர் ஒரு நிகழ்வின் மற்ற காரணங்களையெல்லாம் கட்டுப்படுத்தி ஒரே ஒரு காரணத்தை மட்டும் ஒரு சமயத்தில் ஆராய எத்தனிக்கிறார். அதாவது ஆராய்ச்சியாளர் சார்பற்ற சுதந்திரமான மாற்றுருக்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்.

## சமூகவியலும் சமூகமும் (Sociology and Society)

சமூகவியலாருடைய நோக்கமானது நம்மடைய உலகத்தைப் பற்றிய அறிவை அதிகப்படத்துவதுதான், ஏன் என்றால் இந்த நவீன நாகரீக உலகத்திலே நாம் வாழ்கின்ற சமூகத்தைப்பற்றிய அறிவு மிகவும் அத்தியாவசியமான ஒன்று. நம்முடைய நடைமுறை உலகத்திற்க்கும் சமூகவியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சமூகவியலுக்கு ஒரு வகையான அரசியல் சூழ்நிலை தேவைப்படுகிறது. ஏனென்றால் அப்போதுதான் சமூகவியலானது முன்னேற்றம் அடையமுடியும். நாம் அறிவைப்பெற சுதந்திமாக ஆய்வு முடிவுகளைச் சுதந்திரமாகப் பயமின்றி வெளியிடவும் இந்த அரசியல் சூழ்நிலை அவசியமாகப்டுகிறது. சமூக பிரச்சனைகளாலும் சமூகத்தைச் சுற்றியுள்ள சில நெருக்கடிகளாலும் சமூகவியல் வளர்ச்சியானது தடைப்படுகிறது. அதே சமயம் சமூகவியலார்கள் இந்த சமூகப் பிரச்சனைகளை வரையறை செய்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறார்கள். உதாரணமாகக் குன்னார் மிர்டால் (Gunnar Myrdal) என்ற ஆராச்சியாளரின் அமெரிக்காவின் இன உறவுகள் பற்றிய ஆராய்ச்சி முடிவின் அறிக்கை 1944–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட போது அமெரிக்கர்களினுடைய சமத்துவத்தைப் பற்றிய உண்மையான நிலையைப் பிரதிபலித்தது. அதே சமயம் கருப்பர்களின் தாழ்த்தப்பட்ட சமூக நிலைகளையும் பிரதிபலித்தது.

சமூகவியலினுடைய அறிவு சமூகத்தைப் பல வழிகளில் பாதிக்கிறது.

1. சமூகவியலில் பயிற்சி பெற்ற நபர்கள் அரசுத்துறைகளிலும். தனியார் நிறுவனங்களிலும் தங்களுடைய சமூகவியல் பயிற்சியின் திறனை உபயோகித்துச் சிறப்படைகிறார்கள்.

2. சமூகவியலார்கள் உருவாக்கிய சில ஆராய்ச்சி நுட்ப முறைகளைப் பிற அறிவியல் அறிஞர்கள் தங்களுடைய துறைகளில் உபயோகிக்கிறார்கள். உதாரணமாகச் சமூக

ஆய்வு முறையானது சந்தை நிலவரம் மற்றும் அரசு தேர்தல் ஆய்வுகளிலும் உபயோகம் ஆகிறது.

3. சமூகவியலாருடைய படைப்புகளானவை மக்கள் சாதாரணமாக ஒரு சமூக நிகழ்வைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணத்தை மாற்ற வழி செய்யும். மேலும் சமூக அரசியல் திறத்திற்கான முடிவுககளைச் செய்வதற்க்குத் தேவையான செய்திகளைத் தருவதாகவும் சமூகவியலாரின் படைப்புகள் அமைந்துள்ளன. உதாரணமாக ஹாவர்ட் பெக்கர் (Haward S. Beckler) என்பவருடைய கஞ்சா பற்றிய ஆராய்ச்சியைக் கூறலாம்.

4. இறுதியாகச் சமூகவியல் ஆராய்ச்சியானது நடைமுறையில் இருக்கும் சமூக அரசியல் திறன்களை ஆய்வறிவு செய்யவும் மேலும் அதனுடைய விளைவிகளைக் கண்டறியவும் உதவுகிறது. இத்தகைய ஆராய்ச்சிகளைச் சமூக மதிப்பீடு ஆராய்ச்சி என்று கருதுகின்றனர்.

இத்தகைய ஆராய்ச்சிகள் சமூகவியலாருடைய கடந்த இருபது ஆண்டுகளில் அதிகமான அளவில் காணப்படுகின்றன.

சமூகவியல் அறிஞர் சமூக நிகழ்வுகளைப் பற்றி எல்லா வற்றையும் அறிந்து கொள்கின்றார். அதே சமயம் அவர் ஒவ்வொரு தன்மையைப் பற்றியும் மிகவும் தெளிவான முறையில் தெரிந்து கொள்ள இருக்கிறார். இந்தப் புத்தகத்தில் அடுத்து வருகின்ற பக்கங்களிலே சமூகவியலின் சிறப்பான நிலைகளைப் பற்றிய கருத்துக்கள் மிகவும் விபரமாகவும், அழகாகவும் தரப்பட்டிருக்கின்றன. இதைக் கவனமாகப் படிக்கின்ற எவரும் இருதியில் சமூகவியலைப் பற்றிய தற்போதைய அறிவு நிலையில் அதிகமான திறன் பெறுவார்கள்.

# பாடம் - 6

## பண்பாடு

பண்பாடு என்ற சொல் சமூகவியலிலும், மனித இன நூலிலும் ஒரு அடிப்படை கருத்துப்படிவமாகப் பயன்படுத்தப்படுகிறது. பொது வழக்கில் பண்பாடு என்ற சொல் வாழ்க்கையில் அழகு வாய்ந்த பொருட்களையும், நற்சுவையையும், நுண்கலை, இசை, இலக்கியம் ஆகியவற்றில் சாதனை புரிவதையும், ஆர்வம் கொள்வதையும் குறிப்பிடுகிறது. பொதுவாக ஒரு மனிதன் சரியான உணவைச் சரியான இடத்தில் சரியான முறையில் உண்ணும் பொழுது அவரை பண்பாடுள்ளவர் என்று குறிப்பிடுகிறோம். இத்தகைய பண்பாடு உள்ள மனிதர் நல்ல புத்தகத்தைப் படிக்கின்றார், நல்ல விளையாட்டை விளையாடுகிறார், நல்ல இசையைக் கேட்கிறார், நல்ல கலைளை இரசிக்கிறார். பண்பாடு என்ற சொல் மனிதனுக்கு மட்டுமல்லாமல் குழு பொதுமக்கள், நாடு ஆகியவற்றைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக ஒரு நாடு கலையில் சிறப்புற்று விளங்கும் பொழுது அதனை உயர்ந்த பண்பாடுள்ள நாடு என அழைக்கிறோம்.

சமூகவியல் பண்பாட்டிற்குத் தனி விளக்கம் அளிக்கிறது. சமூகவியல் விளக்கத்தின்படி பண்பாடு என்பது முறையான செயல் மட்டும் குறிப்பிடவில்லை மாறாக மனிதன் சமூகத்தில் அறிந்து கொள்ளக் கூடிய எல்லாச் செயல்களையும் குறிப்பிடுகிறது. பண்பாடு என்பது மனிதனின் நடத்தை முறை, எண்ணங்கள், மதிப்பீடுகள், அல்லது நம்பிக்கைகள், திறமை ஆகியவற்றையும் மனிதனால் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தக் கூடிய பொருட்களையும் உள்ளடக்கியதாகும்.

## பண்பாடு - விளக்கம் (Definition)

சர் எட்வர்ட் பி டெய்லர் (Sir Edward B. Tylor) (1871) என்ற ஆங்கிலேய அறிஞர் பண்பாட்டைப் பின் வருமாறு விளக்குகிறார்.

"சமூகத்தில் ஒரு உறுப்பினர் என்ற முறையில் ஒரு மனிதன் பெற்றிரும் அறிவு, நம்பிக்கை, கலை, நெறிமுறைகள், சட்டங்கள், வழக்கங்கள், திறமை மற்றும் பழக்கங்கள் முதலியவை உள்ளிட்ட தொகுதியே பண்பாடாகும்.

சமூகச் செயலிகள் (Social Agency) மூலமாக நலம் அறிந்து கொள்ளும் வெவ்வேறு பகுதிகளைக் கொண்ட தொகுதியே பண்பாடு என டெய்லர் குறிப்பிடுகிறார். இவ்விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கிளக்கோகன் மற்றும் கெல்லி (Kluckoha and Kelley) என்பவர்கள் பின்வரும் விளக்கத்தை அளிக்கின்றனர். "வாழ்வதற்காக, வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ, காரணத்துடனோ அல்லது காரணமின்றியோ சரித்திரத்தால் தோற்றுவிக்கப்பட்ட வழிமுறையே பண்பாடாகும், இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனிதனுடைய நடத்தைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. மனிதன் கடந்த காலத்திலிருந்து பண்பாட்டை தெரிந்துகொள்கிறான். பண்பாட்டு வழிமுறைகள் சில வெளிப்படையாக உள்ளன. சில மறைமுகமாக உள்ளன. என கிளக்கோகன் மற்றும் கெல்லி குறிப்பிடுகின்றனர்.

பண்பாடு சமூகம் ஆகியவை ஒன்றோடுடொன்று தொடர்புடையவை சமூகம் என்பது தனிப்பட்ட பண்பாட்டையுடைய மக்களை உள்ளடக்கியது. பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் மக்களின் தனிப்பட்ட வாழக்கை முறையாகும். மானிடவியல் வல்லுனர்கள் கடந்த காலம், நிகழ் காலத்தில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட சமூகங்கள் உள்ளன என்றும் இவை தனிப்பட்ட பண்பாட்டைக் கொண்டுள்ளன என்றும் மதிப்பிட்டுள்ளனர்.

## பண்பாட்டின் இயல்புகள் (Characteristics of Culture)

பண்பாடு சமூகத்தில் பெரும் பான்மையினரால் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரு சிலர் பண்பாட்டைக் கடைப்பிடிக்காமல் இருந்தாலும் அது எல்லாருக்கும் பொதுவானதாகவே அமைந்திருக்கும்

1. பண்பாடு கற்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒருவன் தன் பிறப்பிலேயே பண்பாட்டைப் பெற்றுக்கொண்டு வருவதில்லை. சமூகத்தில் ஒரு மனிதன் வளரும் பொழுது மற்றவர்களிடமிருந்து பண்பாட்டைக் கற்றுக் கொள்கிறான்.

2. பண்பாடு தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும் ஒரு தலைமுறையினர் தங்களுக்கு முந்தைய தலைமுறையினரிடம் கற்றவற்றைத் தங்களுக்குப் பின்வருகின்ற தலைமுறையினக்குக் கற்றுத் தருவர்.

3. பண்பாடு நிலையானதல்ல. அது தொடர்ந்து மாறிக் கொண்டே வரும். காலம் மாறுவதற்கேற்ப பண்பாடு மாறிக்கொண்டே வரும்.

4. பண்பாடு ஒரு நிலை அமைப்பைப் பெற்றிருக்கும். அதனுடைய மூலக்கூறுகள் ஒரு நிலையான அமைப்பாக அமைந்திருக்கும்.

## பண்பாட்டின் வகைகள் (Types of Culture)

பண்பாடு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது ஒன்று பொருள்சார் வகையினம் (Material Culture). இரண்டாவது பொருள்சாரா வகையினம் (Non-Material Culture) மனிதன் உண்டாக்குகின்ற அல்லது பயன்படுத்துகின்ற அனைத்துப் பொருட்களும் பொருள் சார் பண்பாடு என அழைக்கப்படுகின்றன. ஒரு தங்க மோதிரம் பொருள்சார் பண்பாட்டின் கூறாகும். அதற்கென ஒரு வடிவம் உள்ளது. ஒரு மனிதனால் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோன்று ஆபரணங்கள்,

போக்கு வரத்து சாதனங்கள், விஞ்ஞான கருவிகள் ஆகியவை பொருள்சார் பண்பாட்டு கூறகளாகக் கருதப்படுகின்றன.

உருவமில்லாத தொட்டு உணர முடியாத பண்பாட்டுக் கூறுகள் பொருள் சாராப்பண்பாடு என அழைக்கப்படும். உதாரணமாக மனப்பான்மை, மதிப்பீடு, நம்பிக்கை, சட்டம் எண்ணங்கள் ஆகியவை பொருள்சாராப் பண்பாடு எனக்கருதப்படுகின்றன. பல அறிஞர்கள் பொருள்சாரா பண்பாடு, பண்பாட்டின் முக்கிய அம்சம் எனக் கருதுகின்றனர். பொருள்சாராபண்பாடு ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு எந்தவொரு குறையும் இல்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. பொருள்சாராப்பண்பாடு எளிதில் அழியக் கூடியதல்ல ஆனால் பொருள்சார் பண்பாடு ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டாலும் அதனுடைய பயன் குறைகிறது. அல்லது முற்றிலும் பயனற்று விடுகிறது. இத்தகைய கருத்தை நாம் ஏற்றுக் கொண்டாலும் பொருள்சார் பண்பாட்டின் முக்கியத்துவத்தை நாம் மறுக்க முடியாது. பொருள் சாரா பண்பாட்டின் வளர்ச்சியினால் பொருள்சார் பண்பாடும் வளர்ந்து வருகிறது. முற்காலத்தில் உள்ள பண்பாட்டைத் தெர்ந்து கொள்ளப் பொருள்சார் பண்பாடு நமக்கு மிகவும் உதவியாக இருக்கிறது.

சமூகங்கள் மொழி, பழக்க வழக்கங்கள், நடத்தை நெறிகள் ஆகியவற்றில் மட்டுமல்லாமல், தொழில் நுட்ப வளர்ச்சியிலும். வேறுபடுகின்றன. ஒரு சமூகத்தின் தொழில் நுட்ப வளர்ச்சியானது அச்சமூகத்திலுள்ள எழுத்து மொழியுடன் தொடர்புடையது, எழுத்து மொழி வழக்கத்தில் உள்ள சமூகங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி உயர்ந்து காணப்படுகிறது. எனவே பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு ஆகிய இரண்டும் பண்பாட்டின் இரண்டு முக்கியப் பிரிவுகளாகும்.

**பண்பாட்டின் ஆக்ககூறுகள்**

பண்பாடு பல்வேறு கூறுகளைக் கொண்ட ஒரு தொகுதியாகும். பண்பாட்டில் உள்ள மிகச்சிறிய கூறு பண்பாட்டுத் தனிக்கூறு (Cultural Traits) என

அழைக்கப்படுகிறது. உதாரணம் கத்தி, ஒரு பண்பாட்டுக் கூறு மேலும் அர்த்தமுள்ள பகுதியாகப் பிரிக்க முடியாமல் இருக்கும்பொழுது அது பண்பாட்டுத் தனிக்கூறுகள் தனித்திருப்பதில்லை மற்ற தனிக்கூறுகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. இவ்வாறு தனிக் கூறுகள் இணைந்திருப்பதை பண்பாட்டுப் பல்கூறு கூட்டுத் தொகுதி (Cultural Complexes) என அழைக்கலாம். உதாரணமாக் கத்தி என்பது வெவ்வேறு வகையில் உள்ளது. அறுவைக் கத்தி, பட்டைக் கத்தி, வேட்டையாடும் கத்தி எனப்பல்வேறு வகைகள் உள்ளன. வெட்டுதல், குத்துதல் தொடர்பான அனைத்துப் பண்பாட்டு கூறுகளும் ஒன்றாக இணைந்து பல்கூறு கூட்டுத் தொகுதி உண்டாகிறது.

பண்பாட்டுக் கூறுகள் அதிக அளவில் இணைந்து வாழ்க்கையில் வெவ்வேறு அம்சங்களில் ஊடுருவும் பொழுது அதைப்பண்பாட்டுப் பாங்கம் (Cultural Pattern) என அழைக்கிறோம். உதாரணமாக வெட்டுதல், குத்துதல் என்பது மருத்துவ உதவி, குற்றம், வன்முறை ஆகிய பண்பாட்டு பாங்களின் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

எனவே தனிக்கூறு என்பது பண்பாட்டின் சிறிய அளவாகும் தனிக் கூறுகள் இணையும் பொழுது பல்வேறு கூட்டுத் தொகுதி உண்டாகிறது. பல்வேறு கூட்டுத்தொகுதிகளும், தனிக்கூறுகளும் பெரிய அளவில் இணைந்து வெவ்வேறு வாழ்க்கை முறையை ஏற்படுத்தி பண்பாட்டை உண்டாக்குகின்றன. வார்டு குட்டெனாப் (Ward Goodenafe) என்ற மனித இன நூல் வல்லுநர் பண்பாடு நான்கு முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளதாக விளக்குகிறார் அவை பின்வருமாறு :-

## 1. கருத்துப் படிவம் (Concepts)

கருத்துப்படிவம் மொழியில் காணப்படுகிறது. கருத்துப் படிவங்கள் மூலமாக மக்கள் தங்கள் அனுபவங்களை ஒன்று படுத்துகிறார்கள். உதாரணமாக நம் உலகத்தை உருவம், நிறம், சுவை ஆகியவற்றின் மூலம் காண்கிறோம். ஆனால் வெவ்வேறு பண்பாடு உலகத்தை வெவ்வேறாக

விளக்குகிறது, உதாரணமாக வேல்ஸ் (Wales) நாட்டு மொழியில் கிளாஸ் (Glas) என்ற ஒரே சொல்லால் வெவ்வேறு நிறங்களையும் குறிப்பிடுகிறார்கள். ஆனால் தமிழில் பச்சை, நீலம், வெள்ளை என்ற வெவ்வேறு சொற்களால் நிறங்கள் குறிப்பிடப்படுகின்றன. ட்ரொபிரியண்ட் தீவு மக்கள் ஏழு வெவ்வேறு உறவுகளைக் குறிப்பிட ஒரே வார்த்தையைப் பயன்கடுத்துகின்றனர். தந்தை, தந்தையின் தம்பி, தந்தையின் சகோதரியின் மகன், பாட்டியின் சகோதரியின் மகன், தந்தையின் சகோதரியின் பேரன், தாத்தாவின் சகோதரியின் பேரன் ஆகிய ஏழு உறவுகளையும் ஒரே வார்த்தையில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் தமிழில் நாம் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தி வெவ்வேறு உறவுமுறைகளை குறிப்பிடுகிறோம். ஆங்கிலேயே நாட்டில் மேலே குறிப்பிட்ட உறவுமுறைகளில் இறுதி நான்கு உறவு முறைகளுக்கு ஆங்கில மொழியில் செற்களே இல்லை. ஏனெனில் இந்நாட்டில் உறவு முறைகள் மிகக்குறைவாக உள்ளன.

இவ்வாறு கருத்துப்படிவம் என்பது வெவ்வேறு நாடுகளில் அவர்களுடைய பண்பாடுகளுக்கு ஏற்ப மாறுபடுகிறது.

## 2. உறவு முறை (Relationship)

கருத்துப்படிவத்தில் மட்டுமல்லாமல் உலகத்தில் உள்ள வெவ்வேறு பாகங்கள் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதைப் பற்றியும் பண்பாடும் வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன, உதாரணமாக நாம் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். ஆனால் விஞ்ஞானம் வளராத நாட்களில் மக்கள் வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

மைக்ரோனேஷியாவில் உள்ள மக்கள் வேறு நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். அவர்கள் சூரியன் பூமியைச் சுற்றுவதாக நம்புகிறார்கள். அவர்கள் தங்களுடைய நம்பிக்கைக்கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்கள். சூரியன் காலையிலும் மாலையிலும் குறைவான வெப்பத்தையும், மதிய வேலையில் அதிக வெப்பத்தையும்

கொண்டுள்ளது. இதற்குக்காரணம் சூரியன் காலையில் நீரில் உதித்து மாலையில் நீரில் மறைகிறது. எனவே சூரியன் பூமியைச் சுற்றிவருகிறது எனக்குறிப்பிடுகிறார்கள்.

அது போலவே பண்பாடுகள் இயற்கை உலகிலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகிலும் உள்ள உறவுமுறைகளை பற்றி நம்பிக்கைகள் கொண்டுள்ளன. உதாரணமாக்க கிறிஸ்தவ மதத்தில் கடவுள் எவ்வாறு உலகைத் தோற்றுவித்தார் என்றும் அவர் மக்களிடம் எவ்வாறு தொடர்பு கொண்டார் என்பது பற்றியும் அதிக விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. விழுமியங்கள் (Values)

மனிதர்கள் வாழ்வதற்குத் தேவையான குறிக்கோளை பற்றிய நம்பிக்கைகள் விழுமியங்கள் எனப்படுகிறது. உதாரணமாக கிருஸ்துவ மதத்தில் தேவைப்பட்ட மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உதவ வேண்டும் பெற்றோர்கள் மதிக்க வேண்டும் என்பது விழுமியங்களாகும். வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு விழுமியங்கள் உள்ளன. உதாரணமாகச் சில சமூகங்களில் செல்வத்திற்கும், சில சமூகங்களில் அஸ்தஸ்திற்கும், சில சமூகங்களில் புகழக்கும் சில சமூகங்களில் பேராரிதலுக்கும் முக்கியத்துவம் கொக்கப்படுகின்றது. இவ்வாறு விழுமியங்கள் பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகின்றன.

## 4. ஒழுங்கு முறை (Rules)

விழுமியங்களை அடைவதற்காக மனிதன் பின்பற்றக் கூடிய நெறிமுறைகளை (Norms) ஒழுங்கு முறை என அழைக்கலாம். உதாரணமாக நம்முடைய சட்டத்தில் ஒருவரை காயப்படுத்துதல் கொல்லுதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. மனிதனின் உயிர் மற்றும் உடல் நலன் பற்றிய விழுமியங்களினால் இத்தகை சட்டங்களை கொண்டுள்ளோம். தனி நபர் சொத்து என்ற விழுமியத்தின் காரணமாக ஒருவருடைய சொத்தை அபகரித்தல், ஏமாற்றுதல், ஆகியவற்றைத்தடைசெய்யும் சட்டத்தை நாம்

கொண்டுள்ளோம், வெவ்வேற பண்பாடுகளும் வெவ்வேறு ஒழுங்கு முறைகளைக் கொண்டுள்ளன.

இவ்வாறு நான்கு முக்கியப்பண்பாட்டுக் கூறுகள், உள்ளன என்றும் இத்தகைய பண்பாட்டுக் கூறுகள், ஒன்றையொன்று தொடர்புடையன என்றும் குட்டெனாப் என்பவர் குறிப்பிடுகிறார்,

## பண்பாட்டின் செயல்கள் (functions of culture)

சமூகவியல் அறிஞர்கள் பண்பாட்டின் செயல்களை இரண்டு விதமாக விளக்குகிறார்கள்.

1. தனி நபர் சம்பந்தப்பட்டது.

2. குழு சம்பந்தப்பட்டது.

பண்பாடு தனிமனிதனுக்கு ஒரு உந்தும் சக்தியாக விளங்குகிறது. இது மனிதனைத்தூண்டி பல்வேறு செயல்களை செய்ய உதவி செய்கிறது. பண்பாடு தனிமனிதனுடைய சமூகமயமாக்குதலுக்கு மிகவும் தேவையாக உள்ளது. அது ஆளுமையை வளர்ப்பதற்கு மிகவும் உதவியாக உள்ளது. தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்கள் ஒரு தனிப்பட்ட மனித சமூகத்தில் எவ்வாறு அனுசரித்துப் போக வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றன. மேலும் பண்பாடு ஒரு தனிப்பட்ட மனிதனை அவன் எந்தக் குழுவை சேர்ந்தவன் என்று அவனே அடையாளம் கண்டுகொள்ள உதவுகிறது.

பண்பாடு வெவ்வேறு குழுவின் நெறிமுறைகளை நிர்ணயம் செய்கின்றது. ஊடாட்டம் பண்பாட்டின் மூலமாகவே நடைபெறுகிறது. பண்பாடு தனிப்பட்டவனையும், குழுவையும் உருவாக்குகிறது. இது சமூக ஒழுங்கையும் நிலையான சமூகத்தையும் உருவாக்குகிறது.

## பண்பாட்டுப் பின்னடைவு (Cultural lag)

வில்லியம் எப் ஆக்பர்ன் என்பவர் பண்பாட்டு மாறுதல்களில் சில வேறுபாடுகள் இருப்பதாக நம்பினார். பொதுவாகப் பொருள்சார் பண்பாட்டின் வளர்ச்சி அதிக வேகத்தில் உள்ளது. ஆனால் பொருள்சாரா பண்பாடு மிக மெதுவாக வளர்ச்சியடைகிறது. இதையே பண்பாட்டு பின்னடைவு என ஆக்பர்ன் குறிப்பிட்டார். உதாரணமாக வானொலி, தொலைகாட்சி , கணிப் பொறிகள் ஆகிய இயந்திரங்கள் மிகவேகமாகக் கண்டு பிடிக்கப்பட்டு வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கம், பொருளாதாரம், குடும்பம், கல்வி, மதம், ஆகியவற்றில் மிக மெதுவாகவே வளர்ச்சியடைந்து வருகிறது.

பொருட்சார் பண்பாடு வளர்ச்சியடையும் பொழுது பொருள்சாராப் பண்பாடும் வளருதல் அவசியமாகும். உதாரணமாக இயந்திரங்களின் கண்டு பிடிப்பினால் இளம் ஆண்களும் பெண்களும் பெற்றோர்களின் பாதுகாப்பிலிருந்து விலகி வாழும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் அவர்கள் குற்றம் புரிவதற்கான வாய்ப்பு அதிகமாகிறது. இம்மாற்றத்திற்குத் தகுந்தவாறு குடும்பத்தில் உடனே மாறுதல்கள் ஏற்படாமல் பழைய குடும்ப அமைப்பிலேயே வாழும்பொழுது அதிகமான குழப்பங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் சில சமூகவியல் அறிஞர்கள் பண்பாடு தேக்கம் டேவிஸ் (Kingsly Davis) என்பவர் தொழில் மயம் ஆக்கப்பட்ட சமுதாயம் குடும்ப வாழ்க்கையிலும், திருமணத்திலும், சமயத்திலும், கல்வியிலும், பல மாற்றங்களை உருவாக்கப் பல தூண்டுகோலாக இருந்திருக்கிறது, இங்கு தேக்கம் என்பதில்லை எனக் குறிப்பிடுகிறார்,

ஆர். எம். மெக்கைவர் என்ற அறிஞர் தேக்கம் என்ற 'சொல்லை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார். மனிதப் பண்பாட்டில் தேக்கம் என்ற சொல் சந்தேகத்திற்குரியது எனக்குறிப்பிடுகிறார். மேலும் தேக்கத்தை அளவிட சரியான அளவுகோல் இல்லை எனவும் குறிப்பிடுகிறார்.

## பண்பாட்டு வித்தியாசங்கள்

பண்பாடுகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானதாக உள்ளன. ஒரு சமூகத்தில் பண்பாட்டு வேறுபாடுகள் உள்ளன. ஒரு சமூகத்தில் பொதுவான மக்களின் பண்பாடு அங்கு வாழக்கூடிய சிறு சமூகத்தினரின் பண்பாடு துணைப் பண்பாடு (Sub Culture) என அழைக்கப்படுகிறது. சில சமூகங்களில் ஒரு குழுவினரின் பண்பாடும் மற்றொரு குழுவினரின் பண்பாடுகளை எதிர்மறைப் பண்பாடு (Counter Culture) எனக் குறிப்பிடுகிறோம்.

பண்பாடு, வயது, பாலினம், ஆகியவற்றினாலும் வேறுப்டுகிறது. வயது அடிப்படையில் நெறி முறைகள் மாறுபடுகின்றன. ஆடை உடுத்துவதிலும், தொழில் நிதியிலும் மற்றும் சமூக நடவடிக்கையிலும் பண்பாட்டு மாற்றம் காணப்படுகிறது.

இது தவிர, சமயம், அரசியல், பொருளாதாரம், கல்வி, பொழுதுபோக்கு, ஆகியன இன்னும் பல அமைப்புகளில் பண்பாட்டு வித்தியாசம் காணப்படுகிறது. இந்து, முஸ்லீம் மக்களிடையே பண்பாடு வேறுபடுகிறது. அரசியலில் மக்களாட்சி, சர்வாதிகாரம், கம்யூனிசம் ஆகியவைகள் வெவ்வேறு நடைமுறைகளைக் கொண்டுள்ளன. பண்பாட்டின் வேறுபாட்டைப் பொருளாதார அமைப்பு முறைகள் வேறுபாடாக உள்ளன. செல்வத்தின் மதிப்பு, செல்வத்தை வழங்குதல், செல்வத்தைப் பாதுகாத்தல், ஆகியவை குழுவிற்குக் குழு வேறுபடுகின்றன. இதுபோல கல்வி முறையும் பொழுது போக்கு அமைப்பும் மூன்றுக் கொன்று பண்பாட்டில் வேறுபடுகின்றன.

மேலும் இனம் காரணமாகப் பண்பாடு வேறுபடுகிறது, பண்பாடு இனத்திற்கு இனம் வேறுபடுகிறது. உதாரணமாக அமெரிக்காவில் பல இன மக்கள் வசிக்கிறார்கள். இவர்களுடைய பண்பாடு ஓரினத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு வேறுபடுகிறது.

## இனமயக் கொள்கை (Ethnocentrism)

இனமயக் கொள்கை என்பது ஒரு சமூக நிகழ்வாகும். வேறுபட்ட சமூகக் குழுக்களில் உள்ள விருப்பு மற்றம் வெறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்கிறது. இனமயக் கொள்கையைக் கிங்ஸ்லி டேவில் (Kingsly Davis) என்ற அறிஞர் பின் வருமாறு கூறகிறார், ஒரு மனிதனுடைய முரண்பாடு மற்றும் பல்வேறுபட்ட பண்பாட்டினையுடைய மக்களின் வெறுப்பு ஆகியவற்றிற்கு முக்கிய அடித்தளமாக உள்ளது இனமயக் கொள்ளையாகும், ஜான் சியூபர் (John Cuber) என்ற அறிஞர் இனமயக்கொள்கை என்பது குறிப்பிட்ட நபர்கள், மற்ற சமுதாயத்தில் இருக்கும் பண்பாட்டினைத் தங்களது சமூதாயத்தில் இருக்கும் பண்பாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்து ஒரு தீர்ப்பை வழங்குவது என்ற நோக்கம் உடையதாக உள்ளது என விளக்குகிறார்.

வில்லியம் குட் (William Goode) என்பவர் இன மயக் கொள்கையைப் பின்வருமாறு கூறுகிறார். ஒருவர் தன்னுடைய சமூகம், பண்பாடு, குழு, தன் நாடு இவைகள்தான் சிறந்தது, மற்றவைகள் எல்லாம் அங்கீகரிக்கப்படும் அளவிற்கு இல்லை எனவும் எண்ணம் கொள்ளுதலே இனமயக் கொள்கையாகும்.

இனமயக் கொள்கை என்பது ஒரு குழுவிலுள்ள மனிதர்கள் தம்முடைய பண்பாட்டை உயர்ந்ததாகவும் மற்ற குழுக்களின் பண்பாட்டைக் குறைவாகவும் மதிப்பிடுகிறது. பழங்குடி மக்கள் கூட நாகரிகமான மக்களின் பண்பாட்டினை குறைத்து மதிப்பிட்டுத் தங்களது பண்பாடே உயர்ந்தது எனக் கருதுகிறார்கள்.

இனமயக் கொள்கை எல்லா மனிதர்களிடத்தும் மற்றும் அனைத்துக் குழுக்களிலும் காணப்படுகிறது. இது ஒர் பிறவிக்குணமல்ல. இது பயிற்சி அனுபவம் மூலம் ஏற்படுகிறது. குடும்பம், பள்ளிக்கூடம் விளையாட்டு மைதானம், சமய மையங்கள் ஆகிய இக்குழுக்கள் இனமயக் கொள்கைகளின் கருத்துக்களை போதிக்கின்றன. திரைப்படங்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் படங்கள் ஆகியவை இனமயக் கொள்கைக்கு ஊக்கமளிக்கின்றன.

# பாடம் - 7

## சமூகமயமாதல் (Socialilzation)

சமூகமயமாதல் (Socialilzation) என்ற சொல் இரண்டு நோக்கில் விளக்கப்படுகிறது. முதலாவதாக சமூகநோக்கில் சமூகமயமாதல் என்றால் புதிய மனிதர்களை ஒழுங்கு படுத்தப்பட்ட சமூகவாழ்க்கையில் பொருந்தும் செயற்பாங்கு ஆகும். அது புதிதாகப் பிறந்த குழந்தையை, சமூக உறுப்பினராக மாற்றுகிறது, குழந்தை பிறக்கும் பொழுது மனிதனுக்கும், பிராணிக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. அத்தகையை, குழந்தையை முழுமனிதாக சமூகத்தில் வாழ தகுதியுடைவனாக மாற்றுவதே சமூகமயமாதல் என விளக்கப்படுகிறது. இத்தகைய மாற்றத்தின் காரணமாகக் குழந்தைகள் நன்கு வளர்ந்து சமூகத்தில் செயல்படவும் பேசவும், பண்பாடுகளைக் கற்றுக் கொள்ளவும் ஏதுவாகிறது.

இரண்டாவதாகத் தனிமனிதன் நோக்கில் சமூகமயமாதல் என்பது "தான்" (Self) என்ற எண்ணத்தை வளர்ப்பதாகும். மனிதன் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமாக ஒரு தனித்துவத்தை வளர்த்துக் கொள்கிறான் மதிப்பீடுகளையும் வளர்த்துக் கொள்கிறான். தன்னுடைய ஆற்றலைப் பயன்படுத்தவும் தெரிந்து கொள்கிறான் மனிதன் தன்னைப் பற்றி அறிந்து கொள்ள சமூகமயமாதல் மிக அவசியமாகிறது. எனவே இது இரண்டு வகையான செயல்களைப் புரிகிறது. முதலாவதாக சமூக மரபை வளர்க்கிறது. இரண்டாவதாக ஆளுமையை (Personality) உருவாக்கிறது.

### சமூகமயமாதல் வரையறை (Definition)

வில்லியம் எப். ஆக்பர்ன் (William F. ogburn) சமூகமயமாதலைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"சமூகமயமாதல் என்பது ஒரு மனிதன் தன் குழுவிலுள்ள நெறிமுறைகளுக்குத் தக்கவாறு இணங்கிப்போக அறிந்துகொள்ளும் செயற்பாங்காகும்."

பி. பி. பால் மற்றும் சி. எஸ். ஹண்ட் (Paul and Hunf) என்பவர்கள் "சமூகமயமாதல் என்பது ஒரு தனி மனிதன் மிருகமாக இருக்கும் நிலையிலிருந்து ஆளுமையுடைய மனிதனாக மாறக் கற்றுக்கொள்கின்றன செயற்பாங்கு. அது ஒருவன் தான் வாழும் குழுக்களின் நெறிமுறைகளைத் தன்னுள்ளாக்கி அதன் மூலம் "தான்" என்ற உணர்வை வளர்த்துக் கொள்ளும் முறையான செயற்பாங்கு" எனக் குறிப்பிடுகின்றார்கள்.

லன்ட்பெர்க் (Lund berg) என்பவரின் கருத்துப்படி "சமூகமயமாதல் என்பது ஒரு தனிமனிதன் அவனுடைய சமூதாயத்துடனும், சமூகக் குழுக்களுடனும் இணைந்து நற்பயன் அளிக்கக்கூடிய வகையில் பங்கெடுத்துக் கொள்வதற்காக அவற்றின் பழக்கங்களையும், திறமைகளையும், நம்பிக்கைகளையும், கருத்துமாதிரிகளையும், கற்றுக் கொள்கின்றன சிக்கலான செயற்பாங்காகும்".

மேற்கூறிய வரையறையின்படி "சமூகமயமாதல்" என்பது உயிரினத் தன்மையிலிருந்து சமூக அளவிற்கு மாற்றக்கூடிய, கற்றுக்கொள்கின்ற நடத்தை முறையே என்பது விளங்குகிறது.

## சமூகமயமாதலுக்கு தேவையான உயிரியல் அடிப்படை குணங்கள் (Biological Bases of Socialization)

மனிதன் இயல்பாகவே கூடிவாழும் தன்மை உடையவன் நீண்ட பரிணாமத்தின் காரணமாகக் குழுவாழ்க்கைக்கான தேவையும் திறனும் மனிதனிடம் வளர்ந்து வந்துள்ளன. கூடிவாழும் தன்மையை மனிதன் பிறப்பிலேயே பெற்றிருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு சமூகத்தில் வெவ்வேறு காலங்களில் சமூக

வாழ்க்கையை வாழத் தெரிந்து கொள்வது மிக அவசியம். இப்பொழுது இங்கு நாம் சமூகமயமாதலுக்காக மனிதன் கொண்டுள்ள உயிரியல் அல்லது பிறவிக் குணங்களைக் காண்போம்.

## 1. இயல்புணர்ச்சியின்மை (Absence of Instinctas)

இயல்புணர்ச்சி என்பது ஒரு உள்ளுணர்வாகும். இவ்வுள்ளுணர்வின் காரணமாக உயிரினங்கள் சில சிக்கலான நடவடிக்கைகளில் ஈடுபாட்டுள்ளன உதாரணமாகப் பறவைகள் கூடுகட்டுதல் கூடுகட்ட வேண்டுமென்ற இயல்புணர்ச்சியைப் பறவைகள் தானாகப் பெற்றுள்ளன. அதுபோலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கூடுகட்டும் தன்மையைப் பறவைகள் பெற்றிருக்கின்றன. வெவ்வேறு இனப் பறவைகளின் கூடுகள் வேறுபடுகின்றன. ஆனால் ஒரே இனப்பறவைகளின் கூடுகள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

ஆனால் மனிதன் இயல்புணர்ச்சிக்குப் பதிலாக உயிரினத் தூண்டுதல் (Biological Drive) பெற்று உள்ளான். பசி தாகம், போன்ற தூண்டுதல்கள் நம் உடலில் ஒரு சுகமின்மையை உண்டாக்குகின்றன. ஆனால் இத்தகைய தூண்டுதல்கள் இயல்புணர்ச்சியைப் போன்று குறிப்பிட்ட செயல்களைச் செய்யத் தூண்டுவதில்லை. தாகம் எடுக்கும் பொழுது நீர் அருந்த வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படுகிறது. இத்தகைய தூண்டுதல் நாம் எதை, எப்படி, யாருடன் அருந்த வேண்டும் என்று தீர்மானிப்பதில்லை. இத்தகைய தூண்டுதல்கள் நமது உடலில் சில துன்பங்களை உண்டாக்குகின்றன. மனிதன் இத்தகைய துன்பங்களை நீக்குவதற்கான வழியை அறிந்துகொள்ளும் திறனைப் பெற்றுள்ளன. இதன் காரணமாக பசி, தாகம் போன்றவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைச் சமூகத்திலிருந்து தெரிந்து கொள்கிறான. விலங்குகளுக்கு இயல்புணர்ச்சி இருப்பதால் அறியும் திறன் பெற்றிருப்பதால் சமூகமயமாதலுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

## 2. குழந்தையின் சார்புத்தன்மை (Childhood Dependency)

விலங்குகள் போலன்றி குழந்தைகள் பெற்றோர்களைச் சார்ந்துள்ளனர். விலங்குகள் மிகக் குறிகிய காலத்தில் தனித்து வாழத் துவங்குகின்றன. ஆனால் குழந்தைகள் உணவு, பாதுகாப்பு ஆகியவற்றிற்காகப் பெற்றோர்களை நீண்ட நாட்களுக்குச் சார்ந்துள்ளனர். எனவே அவர்களுக்குச் சமூகசமயமாதலுக்கு அதிக கால அவகாசம் கிடைக்கிறது. எனவே சார்புத்தன்மை சமூகமயமாதலை மிக எளிதாக்குகிறது.

## 3. அறிந்துகொள்ளும் திறன் (The Ability to Learn)

மனிதன் விலங்குகளை விட அதிகமாக் கற்றுக்கொள்கிறான். மக்களுக்கு வெவ்வேறு திறமைகள் இருந்தாலும், அறிவுள்ளவர்களாக திகழக்கூடிய ஆற்றலை அனைவரும் பெற்றுள்ளனர். அத்தகைய ஆற்றலானது மனிதனை மிருங்களிடமிருந்து வேறுபடத்துகிறது. இளம் மனிதக் குரங்குகள் தமது வயதையொத்த குழந்தைகளை விட அதிகமாகச் சில பழக்கங்களைக் கற்றுக்கொள்ளுகின்றன. ஆனால் குரங்குகள் வளர்ந்த பிறகு இத்தகைய கற்கும் திறன் குறைகிறது. மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை அறிந்து கொள்ளும் திறனைப் பெற்றுள்ளான்.

## 4. மொழித் திறன் (The Capacity for Language)

மொழியைப் பயன்படுத்துவது மனிதனின் தனிச் சிறப்பாகும். மனிதக் குரங்குகள் சில சைகை மொழிகளைக் கற்றுக்கொள்கின்றன. ஆனால் அவற்றிற்கு வார்த்தைகளால் பேசும் உயிரியல் அமைப்பு கிடையாது. மொழியின் காரணமாக மனிதன் தன்னுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும், மதிப்பீடுகளையும் வெளிப்படுத்த முடிகிறது. மனித சமூகம் உருவாக மொழி ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

## 5. சமூக உறவின் தேவை (The Need For Social Contact)

ஒரு குழந்தை மனிதனாக வளர சமூக உறவு மிக அவசியமாகும். தனித்து வாழும் குழந்தைகள் சமூக வாழ்க்கைக்குத் தேவையான குணங்களை வளர்த்துக் கொள்வதில்லை. மனித குணங்கள் வளர சமூக உறவு மிக அவசியமாகும். இதைக் கீழ்கண்ட எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம் அண்ணா (Anna) என்ற குழந்தை மனநலம் குன்றிய ஒரு தாயின் சட்டத்திற்குப் புறம்பான இரண்டாவது குழந்தையாகும். ஆறு வயது வரையில் இக்குழந்தை ஒரு இல்லத்தில் இருட்டு அறையில் தனித்து வளர்க்கப்பட்டது. அதனுடைய உடல் தேவைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டன. இச்சிறுமி கண்டுபிடிக்கப்பட்ட பொழுது மிக மெலிந்து காணப்பட்டாள். பேசவும், நடக்கவும், உண்ணவும், தெரியவில்லை. இக்குழந்தைக்குச் சமூக நடத்தைகளைத் தெரிந்துகொள்ளப் பயிற்சி அளிக்கப்பட்டது. மூன்று மாதங்கள் கழித்து நடக்கவும். மனிதர்களை அடையாளம் காணவும் தெரிந்து கொண்டால். ஒரு வருடத்தில் பேசக் கற்றுக்கொண்டாள். பத்து வயதில் இருந்து இறக்கும்வரை அவரடைய நடத்தைகளைத் தெரிந்த கொள்ள சமூக உறவு மிக அவசியமாகும் என அறிந்துகொள்ள முடிகிறது.

மேற்கண்ட அடிப்படைக் குணங்களின் காரணமாக சமூகமயமாதல் மனிதனுக்கு மிக எளிதாகிறது.

## சமூகமயமாதலின் குறிக்கோள்கள் (Aims of Socialization)

சமூகமயமாதல் சமூக வாழ்கைக்குத் தேவையான ஒழுக்கமுறை குறிக்கோள்கள். தனித்தன்மை, பங்களிப்பு ஆகியவற்றைத் தனி மனிதர்களிடம் வளர்க்கிறது. இதன் மூலமாகக்கழிவை அகற்றுவது முதல் விஞ்ஞான முறையைப்பயன்படுத்துவது வரை போதிக்கப்படுகின்றன. இத்தகைய ஒழுக்க முறைகளை மனிதன் தனக்குள்ளே வளர்த்துக் கொள்வதால் எத்தகைய சூழ்நிலையிலும் ஒழுக்கமாக நடந்து கொள்கிறான் உதாரணமாக

அதிகாலைவில் விழித்தல் என்ற ஒழுக்க முறையைச் சிறுவயது முதல் கற்றுக்கொண்ட ஒருவர் தேவையிருந்தாலும், இல்லாவிட்டாலும் பிற்காலத்தில் அதிகாலையில் எழும் பழக்கத்தைக் கொண்டள்ளார். சமூகமயமாதலின் காரணமாக அதிக மக்கள் ஒழுக்கமின்றிச் செயல்பட விரும்புவதில்லை.

சமூகமயமாதல் சில குறிக்கோள்களை மனிதனிடம் ஏறட்படுத்துகிறது. இத்தகைய குறிக்கோள்கள் மனிதர்களுடைய சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. இவை வயது, பால், குடும்ப சூழ்நிலை ஆகியவற்றிற்கு ஏற்றவாறு மாறுபடுகின்றன. உதாரணமாக ஒரு சிறுவன் குடும்பத்தலைவனாகவும் கல்வி அறிவுடையவனாகவும், பணியாளராகவும், குழுத்தலைவனாகவும் திகழ வளர்க்கப்படுகிறான். ஆனால் ஒரு சிறுமி குடும்பப் பெண்ணாகவும் தாயாகவும், நல்ல மனைவியாகவும் திகழ வளர்க்கப்படுகிறாள் சமூகமயமாதலின் மிக முக்கிய நோக்கம் மனிதனின் தனித்தன்மையை வளர்த்தல் ஒருவர் தான் என்ற எண்ணத்தையும் ஆளமையையும் பெறும் பொழுது அவரது தனித்தன்மை வெளிப்படுகிறது.

மேலும் சமூகமயமாதல் மனிதனின் பங்கை உணர்த்துகிறது, குழந்தை வளர வளரப்பிறர் பங்கை அறிந்து கொண்டு அதன் மூலம் தன் பங்கை அறிந்து கொள்கிறது. ஒரு குழந்தை தாயாகவும், மகளாகவும் விளையாடும் பொகுது அக்குழந்தை தன்டைய பங்கையும் தனது தாயாரின் பங்கையும் அறிந்து கொள்கிறது, இவ்வாறு மனிதனின் வெவ்வேறு பங்குகள் மனிதனுக்கு உணர்த்தப்படுகின்றன.

## சமூகமயமாதலின் செயலிகள் (Agencies of Scialisation)

சமூகமயமாதல் பல செயலின் மூலமாக நடைபெறுகிறது. அவைகளில் குடும்பம், நண்பர் குழு, பள்ளிக்கூடம், மதம், மக்கள் தொடர்பு சாதனங்கள், அரசு போன்ற செயலின் குறிப்பிடத்தக்கவை.

## குடும்பம்

சமூகமயமாக்குவதில் குடும்பம் பெரும்பங்கு வகிக்கிறது. வீடுதான் முதல் பள்ளிக்கூடம். தாய்தான் முதல் ஆசிரியை என்பது பழங்காலக்கூற்று. குழந்தை உணவருந்துவது, உறங்குவது போன்ற எல்லா முறைகளையும், மற்றவற்களுடன் எவ்வாறு ஊடாட்டம் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் தெரிந்து கொள்கிறது. குடும்பத்தில் உள்ள உறவினர்கள். குழந்தைக்குத் தேவையான நல்ல நடத்தை முறைகள், நீதிகள், சமூகத்திற்கு உகந்த செயல்பாடுகள் பற்றிய அனைத்து முறைகளையும் கற்றுக்கொடுத்து அவர்களைப் பழக்குகிறார்கள் வெகுமானம் கொடுத்தல், தண்டனை அளித்தல், முன்மாதிரியாகத் திகழ்தல், கதை சொல்லுதல், அடையாளம் காட்டுதல் ஆகியவற்றின் மூலமாகக் குடும்பத்தில் சமூகமயமாதல் நடைபெறுகிறது.

## நண்பர் குழு

குடும்பத்திற்கு அப்பால் குழந்தை தன்னுடைய அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடனும் பள்ளியில் உடன் பயில்பவர்களுடனும் மற்றும் உடன் விளையாடுபவர்களுடனும் ஊடாட்டம் கொள்கிறது. இந்நிலைகள் அனைத்தும் சமூகமயமாதலில் முக்கிப் பங்கு வகிக்கிறது. குழந்தையானது தன் நண்பர்களின் மூலம் பல சமூக செயற்பாடுகளை கற்றுக்கொள்கிறது. உதாரணமாக விளையாட்டுத் திறமைகள், உலகப்பொது அறிவு, சித்திர நுணுக்கங்களையும் திறமைகளையும் தங்களுடைய நண்பர் குழாம் மூலம் ஒரு குழந்தை கற்றுக் கொள்கிறது. மேலும் தன் வயது ஒத்தவர்களுடன் ஊடாட்டம் கொள்வதன் மூலம் மற்றவர்களுடன் சேர்ந்து அனுசரித்து வாழும் முறை, ஒருவருக்கு ஒருவர் குணங்களைப் பெறமுடியுகிறது.

## பள்ளிக்கூடம்

பள்ளிக்கூடம் சமூகமயமாதலில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. பள்ளிக்கூடத்தில் புத்தகப்பாட அறிவோடு இல்லாமல் பல புதிய திறமைகளையும்

நுணுக்கங்களையும் பெற, பள்ளிக்கூடம் வழிவகுக்கிறது. அறிவியல், மொழி மற்றும் இலக்கிய அறிவுகளை முறையாகக் கல்வியின் மூலமாக ஒரு குழந்தை சிந்தனை செய்தல், கருத்தை வெளிப்படுத்துதல் ஆகியவற்றைக் கற்றுக் கொள்கிறது. சமூகத்தின் நெறிகளையும், மதிப்பீடுகளையும் ஒழுக்கத்தையும் மற்றும் பல நல்ல சீறிய குணங்களையும் ஒரு குழந்தை பள்ளிக்கூடத்தில்தான் தெளிவாக அறிந்த கொள்கிறது.

## மதம்

பழங்காலம் முதல் இன்றைய நவீன காலம்வரை பெரும்பாலான மக்கள், மனித சக்திக்கு அப்பாற்பட்டு இயற்கையைக் கடந்த சக்தியைக் கறிக்கும் மத நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள். ஆரம்பத்தில் குடும்பமானது குழந்தைக்கு மதக் கோட்பாடுகளைக் கற்றுத்தருகிறது. பிறகு படிப்படியாக மதக்குழுக்கள் அல்லது மதம் சார்ந்த நிறுவனங்கள் மதப்பணிகளையும், மதக்கோட்பாடுகளையும் வளர்க்கின்றன. இது மனிதனுடைய வாழக்கையில் சில கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது.

## மக்கள் தொடர்பு சாதனங்கள்

இன்றைய நவீன சமூகத்தில் உள்ள பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் தனி மனிதனின் குழந்தைப் பருவம் முதல் வயோதிக காலம் முடிய பல வழிகளில் சமூகமயமாதலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விளம்பரம், பிரச்சாரம், செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்றவைகள் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கிய வடிவங்களாகும். இச்செயலிகள் தனி மனிதர்களின் கவனத்தைப் பலவழிகளில் ஈர்த்து அவர்களுடைய சமூக நடத்தைகளையும், வாழ்வின் இயல்புகளையும் தீர்மானிப்பதாக விளங்குகிறது. இன்றைய நவீன சமூகத்தில் இச்செயல்களின் பங்கு மேற்கூறப்பட்டுள்ள குடும்பம், நண்பர்குழு, பள்ளிக்கூடம், மதம் போன்றவற்றின் பங்குகளை விட உயர்ந்து காணப்படுகிறது.

**அரசு**

அரசு நிறுவனமும் மற்ற அமைப்புகளோடு சேர்ந்து சமூகமயமாதலின் செயற்பாங்கில் முக்கியப்பங்கு வகிக்கிறது. சமூக ஒழுங்கிற்கும், ஸ்திரத்தன்மைக்கும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும் அரசு நிறுவனங்கள் செயல்படும் பொழுது தனி மனிதன் சமூக நெறிகளுக்கு ஏற்றவாறு தன்னுடைய நடைமுறைகளை, ஒழுங்குபடுத்திக் கொள்கிறான். இதன் மூலம், அவன் சமூகத்தில் தனக்குள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் கற்றுக் கொண்டு அதன்படி சட்டம் ஒழுங்கை அனுசரித்து நடக்கும் ஒரு சிறந்த குடிமகனாக இருக்கின்றான்.

இது போன்ற சமூகமயமாதலின் செயலிகளின் பங்கு அல்லது செயல்பாடுகள் எதுவாயினும் சமூகமயமாலின் பலன்கள் எல்லா அளவுகளிலும் ஒரே சீராக இல்லை. சமூகமயமாதலின் செயற்பாங்கில் தவறான பாதையில் செல்ல பல வாய்ப்புகள் உள்ளன. விஷமத்தனமும் குறும்புத்தன்மையுடைய குழந்தைகளும், நெறி பிறழ்ந்த மற்றம் மரியாதையில்லாத இளைஞர்களும், பொருப்பில்லாத பெரியவர்களும் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றனர். இத்தகைய மாறுபட்ட சமூகமயமாதலின் கோலங்கள் சமூக பிரச்சனைகளை உண்டு பண்ணுகின்றன. மேலும், அந்த சமூகத்தின் பண்பாட்டில் காணப்படும் நெறிகள் மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் சமூகமயமாதல் வேறுபடுவதால், சமூகமயமாதல் பொதுவானது அல்ல.

## வயது வந்தோருக்கான சமூகமயமாதல் (Adult Socialization)

சமூகமயமாதல் என்பது ஒரு தொடர்ச்சியான செயற்பாங்காகும், அது பிறப்பு முதல் சாகும்வரை தொடர்கிறது. குழந்தைகள், எதிர்ப்புகள் இருந்த போதிலும் மிக எளிதாக சமூகமயமாக்கப்படுகிறார்கள். மனித வாழ்க்கையில் அதிகப்பகுதியான சமூகமயமாதல் வாலிப பருவத்திற்கு முன்பே நடைபெறுவதாக கூறப்படுகிறது. வயது வந்தோருக்கான சமூகமயமாதல் குழந்தை பருவத்தில்

ஏற்படும் சமூகமயமாதலிலிருந்து வேறுபடுகிறது. அதிகப்படியதன அறியும் சக்தியின் ` மூலமாகவும், சுயசிந்தையின் மூலமாகவும் வயதுவந்தோர் அதிக திறமை உடையவர்களாக உள்ளனர். அவர்களுடைய திறமையை வெளிப்படுத்த பல வாய்ப்புகள் உள்ளன. அவர்களுடைய ஒவ்வொரு புதிய பங்கம் சமூகமயமாதலுக்கான புதிய சூழ்நிலையாகும்.

## வயது வந்தோர் சமூகமயமாதல்

குழந்தைகள் சமூகமயமாதலிலிருந்து மூன்று வகைகளில் வேறுபடுகிறது. முதலாவதாக குழந்தைகளுக்கான சமூகமயமாதல் குறிக்கோள்களையும் மதிப்பீடுகளையும் வளர்த்து அதன் மூலம் நடத்தையை உருவாக்க முக்கியத்துவம் அளிக்கிறது. ஆனால் வயது வந்தோர் சமூகமயமாதல் நடத்தைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்தகைய சமூகமயமாதல் அடிப்படை மதிப்பீடுகளையும் குறிக்கோளையும் மாற்றுவதில்லை. இதில் புதிய பங்கின் எதிர்பார்ப்புகள் (Role expecltation) அறிந்து கொள்வதும் புதிய பங்குகளை ஆற்றக் கற்றுக் கொள்வது அடங்கும்.

இரண்டாவதாக, வயது வந்தோர் சமூகமயமாதலில் மறுசமூகமயமாதல் நடைபெறுகிறது. வயது வந்தோர் பழைய நடத்தை முறைகளை மறந்து புதிய நடத்தை முறைகளைத் தெரிந்து கொள்கிறார்கள். உதாரணமாகச் சமூக அமைப்பில் உயர் நிலையை அடைந்த ஒருவர் தன்டைய குழந்தைப்பருவத்தில் தான் வாழ்ந்த, தாழ்ந்த நிலையை மறந்து, தன்னுடைய புதிய தகுதிக்கு ஏற்றவாறு தன்னுடைய நடத்தையைத் தெரிந்து கொள்கிறார், அதுபோல, சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களாக ஆகும் பொழுது சிறுவயதில் குத்துச்சண்டையிட்டதை மறந்து விடுகிறார்கள்.

மூன்றாவதாக, குழந்தைகள் சமூகமயமாதல் அதிக அன்பு, வலிமை ஆகிய சூழ்நிலையில் நடைபெறுகிறது. பெரியோர்கள் அன்பின் மூலமாகக் குழந்தைகளிடம் சமூக நெறிமுறை, மதிப்பீடு, நடத்தை, ஆகியவற்றை வளர்க்கிறார்கள். அவர்கள் வலிமையைப் பயன்படுத்திச்

சிறுவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள். ஆனால் வயதுவந்தோர் சமூகமயமாதல் அன்பு, வலிமை குறைவாக உள்ள சூழ்நிலையில் நடைபெறுகிறது. இது சமவலிமை உள்ளவர்களிடம் நடைபெறுகிறது. எனவே அதிகாரத்தின் மூலம் வயது வந்தோரிடம் சமூகமயமாதல் நடைபெறுவதில்லை.

வயதுவந்தோர் சமூகமயமாதலில் குடும்பம், வேலை குழு, மொத்த நிறுவனங்கள் (Total Institutions) என அழைக்கப்படுகின்ற சிறைச்சாலை, மனநல மருத்துவமனை ஆகியவை முக்கிய செயல்களாக உள்ளன,

## சமூகமயமாதலின் கோட்பாடுகள்

சிக்மன்ட் பிராய்டு (Sigmund Freud) ஜார்ஜ் ஹெர்பாட் மீட் (George Herbert Meod) சார்லஸ். ஹெச். கூலி (Charies H. Cooley) ஆகிய மூன்று அறிஞர்களும் சமூகமயமாதலைப் பற்றி முக்கிய கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். சமூகமயமாதலின் மூலமாக "தான்" என்ற உணர்வு எல்வாறு உருவாகிறது என்பது பற்றி இவர்கள் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். அவற்றைளப் பற்றி நாம் இங்கு காண்போம்.

சிக்மண்ட் பிராய்டு (1856–1939) என்ற சிறந்த உளநிலைப் பகுப்பாய்வளர் தான் என்ற உணர்வைபற்றி மிக் விரிவாக விளக்குகிறார். பிராய்டு "தான்" என்ற உணர்வை மூன்று பிரிவுகளாக பிரிக்கிறார். அவை (1) தனிப்பட்ட ஒருவரின் உணர்வுந்துதல் (Id) (2) "நான்" என்னும் முனைப்பு (Ego), (3) மேல் மனம் (Super Ego),

தனிப்பட்ட ஒருவரின் உணர்வுந்துதல் அடிப்படை இச்சைகளைப் பூர்த்தி செய்யும் தேவையைத் தூண்டுகிறது. நான் என்னும் முனைப்பு தான் உணர்வைப் பாதுகாத்துக் கொள்ளத் தூண்டுகிறது. மேல்மனம் சமூகத்தில் ஒத்துப்போகத் தூண்டுகிறது. இவை மூன்றிற்கும் இடையே ஏற்படும் மோதலினால் தான் என்ற உணர்வும், ஆளமையும் வளர்கின்றன. ஒரு மனிதன் அடிப்படை இச்சைகளைப்

பூர்த்திசெய்யும் பொழுது சமூகத்தின் எதிர்பார்ப்பை மனதில் கொள்ள வேண்டும் "தான்" என்ற முளைப்பின் உதவியுடன் சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு தன்னுடைய அடிப்படைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொழுது அவனுடைய "தான்" என்ற எண்ணம் பாதுகாக்கப்படுகிறது. அவனுடைய ஆளமையும் வளர்கிறது. உதாரணமாக ஒரு உயர்ந்த நிலையில் உள்ள அரசாங்க அலுவலர் வேலை நிமித்தம் கிராமங்களுக்கு செல்லும் பொழுது பசி எடுத்தால் தன்னுடைய அந்தஸ்து, வேலை ஆகியவற்றிற்கு மதிப்புக்கொடுத்து சமூக எதிர்ப்புகளுக்குத் தகுந்தார் போல் தன்னடைய பசியைப் போக்கிக் கொண்டால் அவருடைய ஆளமையும், "தான்" என்ற உணர்வும் பாதிக்கப்படாமல் இருக்கும்.

ஜார்ஜ் ஹெர்பார்ட் மீட் என்பவரின் கூற்றுப்படி ஒரு தனி மனிதனின் "தான்" என்ற உணர்வு அவனுடைய செயல், எண்ணங்கள் ஆகியவற்றின் விழிப்பு நிலையெனக் குறிப்பிடுகிறார். இது குழந்தையின் வளர்ச்சியின் பொழுது ஏற்படுகின்ற வெவ்வேறு நிலைகளினால் உருவாகிறது. முதலாவதாகக் குழந்தை பிறந்தவுடன் தன்னை அடையாளம் கண்டு கொள்கிறது. அதன்பின் தன்னுடைய விளையாட்டின் மூலமாக வெவ்வேறு உறுப்பினர்கள் பங்கை அறிந்து கொள்கிறது. இச்சமயத்தில் அக்குழந்தை சமூகத்தில் தன்னுடைய பங்கையும் தெரிந்து கொள்கிறது. இச்சமயத்தில் அக்குழந்தையின் தான் என்ற உணர்வு உண்டாகிறது. தான் என்ற உணர்வு பிறக்கும் பொழுது கிடையாது. ஒரு குழந்தை பிறந்து இரண்ட மூன்று வயதான பிறகு மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் தான் என்ற உணர்வு அக்குழந்தைக்கு ஏற்படுகிறது. தன்னுடைய பங்கைப் பற்றி அறிந்து கொள்ளும் பொழுது ஒருவர் மற்றவர்களிடமிருந்து எண்ணங்கள், வார்த்தைகள், சைகைகள் ஆகியவற்றை கற்றுக் கொடுகின்றார். மீட் இவற்றை எனக்கு (Me or Other) என்ற குறிப்பிடுகிறார். அம்மனிதன் தன்னுடைய பங்கை ஆற்றும் பொழுதான் தெரிந்துகொண்ட குணங்கள் அனைத்துடன் தன்னுடைய தனித்தன்மையையும் இணைத்துச் செயல்படுகிறான். அப்பொழுது அவன் மற்றவர்களிடமிருந்து தனித்து விளங்குகிறான். இதனை மீட் நான் (1) என்று குறிப்பிடுகிறார். இதன் காரணமாக ஒவ்வொரு தனிமனிதனும்

மற்றவர்களிடமிருந்து வேறுபடுகிறான். உதாரணமாக ஒருவர் ஆசிரியர் என்ற பங்கைச் செய்யும் பொழுது தன்னுடைய ஆசிரியர்களிடமிருந்து வளர்த்துக்கொண்ட எண்ணங்கள் கருத்துக்கள் ஆகியவற்றுடன் தன்னுடைய தனித்தன்மையையும் சேர்த்துச் செயல்படும் பொழுது அவர் மற்ற ஆசிரியர்களிடமிருந்து வேறுபடுகிறார். தான் என்பது ஒரு மனிதனின் பங்குகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து ஏற்படுத்தபட்ட உணர்வாகும்.

சார்லஸ் ஹெர்பார்ட் கூலி என்பவர் சமூகமயமாதலின் கோட்பாட்டினைப் பார்க்கும் கண்ணாடி தான் (Looking Class Self) என்ற கோட்பாட்டின்படி விளக்குகிறார். இவருடைய கருத்துப்படி தான் என்ற உணர்வு ஒரு மனிதன் மற்றவர்களுடன் உறவு கொள்ளும் கொழுது உருவாகிறது. ஒரு மனிதன் தன்னுடைய முகத்தைக் கண்ணாடியில் பார்த்து தன்னுடைய உருவ அமைப்பைத் தெரிந்துகொள்வது போல் மற்றவர்களுடன் பழகி அவர்கள் தன்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை உணர்ந்து அதன் மூலம் தான் என்ற உணர்வை வளர்த்துக் கொள்கிறான்.

கூலியின் கருத்துப்படி தாம் என்ற உணர்வு மூன்று அடிப்படைக் கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவை

1. மற்றவர்களுக்குத் தான் எவ்வாறு காட்சியளிக்கிறோம் என்பதன் கற்பனை.

2. தன்னுடைய தோற்றத்தைப்பற்றி மற்றவர்களுடைய தீர்ப்பு அல்லது முடிவு பற்றிய கற்பனை.

3. இந்த முடிவுகளிலிருந்து ஒருவர் ஏற்படுத்திக் கொள்ள கூடிய பெருமை அல்லது கர்வம் அல்லது தாழ்வு மனப்பான்மை

எனவே தான் என்பது மற்றவர்கள் கொண்டுள்ள தீர்ப்பைப் பற்றிய உணர்வுகளால் ஆனது எனக் கூலி குறிப்பிடுகிறார். தான் என்ற உணர்வு ஏற்படுவதில் தனி மனிதனை விட சமூகத்திற்கு அதிக பங்கு உண்டெனக் குறிப்பிடுகிறார்.

# பாடம் - 8

## சமூக செயற்பாங்குகள் (Social & Processes)

மனிதன் சமூகத்தில் வாழும் பொழுது மற்றவர்களுடன் சமூக உறவை ஏற்படுத்திக் கொள்கிறான். ஊடாட்டத்தின் மூலமாகச் சமூக உறவுகள் நிகழ்கின்றன. ஒரு மனிதன் செயலெதிர் செயல்களில் ஈடுபடுவதைச் சமூக ஊடாட்டம் (Social & Interaction) என அழைக்கிறோம். ஒரு செயலானது மற்றொரு செயலைத் தூண்டும் பொழுது சமூக ஊடாட்டம் நடைபெறுகிறது.

ஒரு சமூகத்தில் மக்கள் தொடர்ந்து ஊடாட்டங்களை ஏற்படுத்தும் போது சில செயல் முறைகள் நடைபெறுகின்றன. இவற்றை சமூக செயற்பாங்குகள் (Social processes) என அழைக்கிறோம்.

### சமூக செயற்பாங்குகள் வரையறை

வரையறை மோரிஸ் தின்ஸ்பெர்க் (Morris Ginsberg) என்ற சமூகவியல் அறிஞர் பலவகைப்பட்ட ஊடாட்டங்களின் தன்மையே சமூக செயற்பாங்குகள்யாகும் என்றும், மேலும் இவ்வகை ஊடாட்டங்கள் தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் இடையே ஏற்படுபவை என்றும் குறிப்பிடுகிறார்.

ஜான் எப் சியூபர் (John F. Cuber) என்ற அறிஞர் பின்வருமாறு இதனைக் குறிப்பிடுகிறார்.

"இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது சமூகக் குழுக்களிடையே காணப்படும் தூண்டுகோள் மற்றும் பதில் கூறுதல் ஆகியவற்றின் பரிமாற்றத்தின் ஒரு செயல்முறையே சமூக ஊடாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

சமூக ஊடாட்டம் நேரடியாகச் சமூக செயல்களைச் சார்புடையதாக இருக்கிறது".

## சமூக செயற்பாங்குகள் அடிப்படைக்காரணங்கள்

சமூக செயற்பாங்குகள் இரண்டு அடிப்படையான காரணங்களைக் கொண்டு அமைகின்றன. அவை.

(ஸ) சமூகத் தொடர்பு (ஸை) செய்தித் தொடர்பு

சமூக செயற்பாங்குகளில் முதலிடம் வகிப்பது சமூகத் தொடர்பேயாகும். தொடர்பு என்பது 'தொட்டுப் பார்த்தல்" என்ற அர்த்தத்தையே முதன்மையாகக் குறிக்கிறது. கைகுலுக்கிக் கொள்ளுதல், வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளுதல், ஒருவரையொருவர் அணைத்துக் கொள்ளுதல் ஆகியவை உறவு பூர்வமான தொடர்புகளாகும். இவைகள் ஒருவிதத் தூண்டுதலைக் கொடுக்கின்றன. அவற்றில் விரல்களைக் காண்பித்தல், சிரித்தல், அழுதல், இரக்கம் காட்டுதல் ஆகியவற்றின் மூலமாகப் பதில்கள் கிடைக்கின்றன. பொதுவாக சமூகத் தொடர்பு என்பது புதிய எண்ணங்களை உருவாக்க உதவுகிறது. செய்தித் தொடர்பு மூலமாக சமூகத் தொடர்பினை வளர்க்க முடிகிறது.

அங்கங்களின் வாயிலாகத் தெரிவித்தல், அடையாளம் காட்டுதல், பேசுதல், மொழி ஆகியவைகள் செய்தித் தொடர்பில் இடம் பெறுகின்றன. சமூக ஊடாட்டத்திற்குச் செய்தித் தொடர்பு மிக வலுவான ஒன்றாகத் திகழ்கிறது. செய்தித் தொடர்பில்லாத ஒரு சமூகத் தொடர்பு அர்த்தமற்ற ஒன்றாக இருக்கின்றது. சமூக ஊடாட்டத்திற்குச் சமூகத் தொடர்பும் செய்தித் தொடர்பும் மிக அவசியமான தவையாகக் ஒன்றாக கருதப்படுகின்றன.

## செயற்பாங்குகளின் வகைகள்

சமூக செயற்பாங்குகள் அல்லது நடைமுறைகள் பல உள்ளன. இவைகளில் முக்கியமானதாகக் கூட்டுறவு (Co-operation) போட்டி (competition), முரண்பாடு (Conflict), இசைவு (Accomodation) மற்றும் ஒன்றுபடுதல் (Assimilation) ஆகியவற்றைக் கூறலாம். இவைகளில் கூட்டுறவு; இசைவுபடுதல், ஒன்றுபடுதல், ஆகியவை இணையும் செயற்பாங்குகள் (Associative processes) ஆகும். இவை தனிநபர்களையும், குழுக்களையும் ஒன்றொடு ஒன்று இணைய வைக்கும் தன்மை கொண்டதாக இருப்பதனால் குழுக்களையும் தனிமனிதர்களையும் நெருக்கமாக்குகின்றன. போட்டி மற்றும் முரண்பாடு இணையாக செயற்பாங்குகளென (Dissociative process) அழைக்கப்படுகின்றன. பொதுவாக இத்தகைய செயற்பாங்குகள் பிரிக்கும் தன்மையை கொண்டுள்ளதாக இருப்பதால் தனிமனிதர்களையும் குழுக்களையும் தனிமைப்படுத்துகிறது.

## கூட்டுறவு (Co-operation)

கூட்டுறவு என்ற சொற்றொடரானது லத்தீன் மொழியிலிருந்து வந்ததாகும். கோ(Co) என்ற வார்த்தையிலிருந்தும் ஓபராரி (Operari) என்ற வார்த்தையிலிருந்தும் கோவாபரெஷன் (Co-operation) என்ற சொற்தொடர் வந்தது. கூட்டுறவு என்பது அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவான குறிக்கோளுக்கு முயற்சி செய்வதாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பொதுவான இலக்கை அடைய முயற்சி செய்து ஒன்றாக செயல்படுவதையே கூட்டுறவு என்றழைக்கப்படுகிறது.

கூட்டுறவில் இரண்டு மூலங்கள் உள்ளன. ஒன்று பொது இலக்கு. மற்றொன்று சேர்ந்து செயல்படுதல் ஆகும். இவ்விரண்டும் அமைந்திருந்தால்தான் கூட்டுறவு சிறப்புற அமையும். முதலில் தனிநபர்கள் கூட்டுறவின் செயல்பாடுகளின் தன்மைகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும் இவர்கள் இவ்வகை கூட்டுறவினால்

## கூட்டுறவு வகைகள்

### 1. நேர்முக கூட்டுறவு (Direct Co-operation)

இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாக இணைந்து ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய ஒரே மாதிரியான செயல்களை செயல்படுத்துவது நேர்முக கூட்டுறவு எனப்படும். உதாரணமாக விளையாடுதல், வழிபடுதல், அறுவடைசெய்தல் போன்றவைகளில் தனி நபர்கள் ஒரே விதமான செயல்பாட்டை தங்கள் கூட்டாளிகளோடு சேர்ந்து செயல்படுத்துகிறார்கள்.

### 2. மறைமுகக் கூட்டுறவு (Indirect Co-operation)

சில சமயங்களில் மனிதர்கள் தனிப்பட்ட நிலையில் வெவ்வேறு விதமான செயல்பாட்டின் மூலம் பொதுவான இலக்கை அடையச் செயல்படுவார்கள். இத்தகைய செயல்பாடு மறைமுகக் கூட்டுறவு என அழைக்கப்படுகிறது. இம்முறையில் வேலைப் பங்கீடு ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. உதாரணமாகத் துணி உற்பத்தி செய்வதற்காக நெசவாளிகள் நெசவு, நூல் நூற்றல், சலவை செய்தல் மற்றும் சாயம் துவைத்தல் போன்ற தனிப்பட்ட பணிகளை வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு நிலையில் செய்வதை மறைமுகக் கூட்டுறவு எனக் குறிப்பிடலாம்.

ஜான். எப். சியூபர் (John F. Cuber) என்பவர் கூட்டுறவு என்பதின் வகைகள் பற்றி ஐந்து விதங்களாகப் பிரித்துப் பின்வருமாறு விளக்குகிறார்.

முதன் முதலாக கூட்டுறவு என்பது குறிக்கோளையும் விசுவாசத்தையும் அடிப்படையாக கொண்டிருக்கக்கூடிய ஒரு நடத்தையாகும். இதற்கு உதாரணமாக பின்வருபவைகளை கூறலாம். பொதுமக்கள் அமைதிக்காக, அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல், நிர்வாகம், போர் மற்றும் தேசிய விழாக்களில் மக்களின் விசுவாசமான ஈடுபாடு.

இரண்டாவதாகக் கூட்டுறவு என்பது "எதிர்ப்பில் ஒத்துழைப்பு" (Antagonistric Co-operation) என்பதன் முரண்பாடாகவும் இருக்கலாம், இரண்டு குழுக்களிடையே ஒரு ஒப்பந்தத்தின் மூலமாகவே கூட்டுறவு ஏற்படும். ஒரு தொழிற்சாலை நிறுவனத்தில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டுக் கூட்டுறவு என்பது ஒரு பேச்சுவார்த்தை அல்லது ஒப்பந்தம்மூலமாக நிலவுகிறது. ஏனெனில் அதில் கூட்டுறவு என்பது ஒருவரையொருவர் சார்ந்துள்ள நிலைமையாகும்.

மூன்றாவதாகக் கூட்டுறவு என்பது ஒருவருக்கொருவர் அல்லது ஒரு குழுவிற்கும் மற்றொரு குழுவிற்கும் இடையில் தவிர்க்க முடியாத நிலையில் இருக்கக் கூடியதாகும். பணியினைப் பிரித்துக் கொடுத்தல் என்பதன் மூலம் இது தெரிவிக்கப்படுகிறது. வேலை செய்பவர்கள் மத்தியில் ஒரே மாதிரியான ஆர்வம் இருக்காது. அனைவருக்கும் பொருளாதாரத் தேவை என்ற ஒன்று பொதுவானதாகக் காணப்படுகிறது. இதன்மூலம் உற்பத்தித்திறன் உருவாகிறது. இது ஒரு சுயநினைவற்ற நிலையில் காணப்படும் ஒரு ஒத்துழைப்பாகும்.

நான்காவதாக, கூட்டுறவு என்பது போட்டி என்ற ஒன்றின் வாயிலாகக் காணப்படுகிறது. போட்டி என்ற ஒன்று தனி நபருக்கும், குழுக்களுக்கும் இடையில் ஒரு சாதகமற்ற நிலையை உருவாக்கினாலும், இது கூட்டுறவு என்ற ஒன்றின் வாயிலாகவே இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, வியாபாரம், விளையாட்டு, கல்வி மற்றும் அறிவியல் சம்பந்தமான வெற்றிகள், போட்டி மனப்பான்மை ஆகியவைகளுக்கு கூட்டுறவு மிக அவசியமானதாக உள்ளது.

இறுதியாக, கூட்டுறவு என்பது தனிப்பட்ட நபர்கள் அதிகாரம் படைத்தவர்களுக்குக் கொடுக்கும் தன்மையாகும். இதற்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். பொது மக்கள் சட்டதிட்டங்களுக்குப் பணிந்து போதல், அரசியல் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் மேலே உள்ள தலைமைப் பீடத்திற்கு மதிப்பும், ஒத்துழைப்பும், கொடுத்தல் குழந்தைகள் பெற்றோர்களுக்குப் பணிந்து

போதல், இந்த நிலை நமது சமுதாய அமைப்பில் மிக இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகிறது.

## கூட்டுறவின் முக்கியத்துவம்

சமூகத்தின் முன்னேற்றத்திற்குக் கூட்டுமுயற்சி வழி வகுக்கிறது. ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் சமூகம் பல துறைகளில் முன்னேற்றம் அடைவதல்லாமல் சில பிரச்சனைகளுக்கும் சச்சரவுகளுக்கும் கூட்டு செயல்பாட்டினால் தீர்வு காணவும் வழி வகுக்கிறது. இதன் காரணமாக மக்கள் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ முடிகிறது.

## போட்டி (Competition)

கூட்டுறவைப் போலவே, போட்டியும் அனைத்துச் சமூகங்களிலும் காணப்படுகின்றது. போட்டி என்பது மக்களுடைய தேவைகளும், விருப்பங்களும் திருப்தியடையாத பொழுதும், பொருட்கள், தன்மானம் ஆகியவை குறைந்த அளவில் கிடைக்கும் பொழுதும் வளர்கிறது. வசிக்கும் இடம், நகைகள், பணம், வேலை, வாழ்க்கை துணை ஆகியவற்றிற்கு மக்கள் போட்டியிடுகிறார்கள்.

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்கள் ஒரே குறிப்பிட்ட இலக்கை அடையச் செயல்படுவதையே போட்டி என்று கூறலாம். போட்டி என்றால் முயற்சி செய்தல் எனப் பொருள்படும். போட்டியில் தனிநபர்கள் குறிப்பிட்ட இலக்கை அடைய முயற்சி செய்கிறார்கள். அதே சமயம் அவர்கள் பிரயாசையுடன் மற்றவர்களோடு போராடி இலக்கை அடைகிறார்கள். இதுவே போட்டி எனக் கூறப்படுகிறது.

கில்லின் மற்றும் கில்லின் (Gillin and Gillin) என்ற அறிஞர்கள் போட்டியினைப் பின்வருமாறு விளக்குகிறார்கள். "போட்டி என்பது ஒரு சமூக செயல்பாடாகும். இதில் தனி நபர்களும், குழுக்களும், அனுகூலம் மற்றும் தேர்ந்தெடுத்தலின் வாயிலாகப் பலனைப்

பெறும் நிலையில் உள்ளது. மேலும் இது ஆர்வத்திற்கும், மற்றும் மனவேறுபாட்டிற்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றது. ஆனால் இதில் பயம் மற்றும் போராட்டம் ஆகியவைகளைப் பயன்படுத்தாமல் முடிவுகளை அடைய வேண்டும்".

போட்டி என்பது பண்பாட்டுத் தேவையாகும். போட்டியானது செல்வம், கல்வி, மதம், அரசியல் மற்றும் விளையாட்டு துறைகளில் விழுமியங்களை (Values) அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது. போட்டியானது ஒரு குறிப்பிட்ட குழுக்களுடன் மட்டுமே நடைபெறுகிறது. உதாரணமாக மதம் மற்றும் அறநெறி அமைப்புகள் ஒரு சில எதிரியான குழுக்களைப் போட்டியில் சேர்த்துக் கொள்வதில்லை, பண்பாடு ஒரு குறிப்பிட்ட பகுதியைமட்டும் போட்டிக்காக நிர்ணயம் செய்கிறது. இதற்கென ஒரு சில விழுமியங்களை நிர்ணயம் செய்துக் கொள்கிறது. உதாரணமாக வெள்ளையர்கள் மற்றும் கறுப்பர்கள், ஜாதிக்குழுக்களிடையே இருக்கும் போட்டிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட பகுதியின் மீதோ அல்லது ஒரு குறிப்பிட்ட விழுமியத்தின் மீதோதான் இருக்கும். போட்டி என்பது ஒரு சமூக அமைப்பில் காணப்படும் ஒருசிறிய பகுதியேயாகும். இது ஒரு நிறுவனம் அல்ல. இது முழுமையாக பண்பாட்டின் அடிப்படையில் இயங்குகிறது. பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகள் நாட்டுக்கு நாடு அல்லது மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுக் காணப்படுவதால், போட்டியும் பண்பாட்டு ரீதியில் மாறுபட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

போட்டிகள் 85 பல்வேறு விதங்களில் ஏற்படுகின்றன. அவைகள் பின்வருமாறு

### பிரத்யோகப் போட்டி (Personel Competition)

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பதவிக்காகப் போட்டியிடுவதைப் பிரத்தியேகமான போட்டி என்று கூறுகிறார்கள். இம்முறையில் போட்டியாளர்கள் பற்றிய விபரங்களும், அடையாளங்களும் போட்டியாளர்கள் அனைவருக்கும்

தெரியும். போட்டி மிகவும் அதிகமான முறையில் பிரத்யேகமாக மாறும்பொழுது ஒருவரையொருவர் எதிரிகளாகப் பாவித்து முரண்பாட்டிற்கு வழி வகுக்கிறார்கள்.

## பிரத்யோகமற்ற போட்டி (Impersonal Competition)

பொதுவாகப் போட்டியானது இலக்குகளைச் சார்ந்துதான் இருக்கும். போட்டியாளர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருப்பதில்லை, உதாரணமாக வங்கிப் பணிக்காக எழுதும் தேர்வுகளில் போட்டியிடுபவர்கள் மற்றவர்களின் அடையாளங்களைத் தெரிந்துக் கொள்ளாமலேயே போட்டியிடுகிறார்கள்.

## உணர்வுள்ள மற்றும் உணர்வற்ற போட்டி

பொதுவாகப் போட்டி அறிந்தே ஏற்படும். போட்டியாளர்கள் தாங்கள் எதற்காகப் போட்டியிடுகிறோம் என்பதை அறிவார்கள். இருப்பினும் எப்போதாவது தனிநபர்கள் அவர்கள் அறியாமலேயே போட்டியில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கே தெரியாமல் அவர்கள் போட்டியிடும் இனத்தில் அங்கத்தினர்களாக இருப்பார்கள்.

# போட்டியின் வகைகள்

போட்டி பல வகைகளில் மனித நடவடிக்கைகளில் ஏற்படுகிறது, சமூக பொருளாதார அரசியல் நிலைகளில் ஏற்படும் போட்டிகள் மிக முக்கியத் தன்மையைப் பெற்றனவாக இருக்கின்றன. இவைகளைப் பற்றி இங்கு காண்போம்.

## 1. சமூகப் போட்டிகள்

உயர்ந்த அந்தஸ்துக்காக மக்கள் மற்றவர்களோடு போட்டியிடுகிறார்கள். இவ்வாறு அதிக சமூக அந்தஸ்துக்காக ஏற்படுகின்ற போட்டிகள் சமூகப் போட்டிகளாகும்.

## 2. பொருளாதார போட்டிகள்

இவை பொருளாதார நிலைகளில் காணப்படுகின்றன. இவை உற்பத்தி மற்றும் வியாபாரம் போன்ற நிலைகளில் அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக மனிதர்கள் வேலை, லாபம், சம்பளம், பொருள்வளம், சொத்து போன்றவைகளை அடைவதற்காகப் போட்டியிடுகிறார்கள். இத்தகைய போட்டிகள் பொருளாதாரப் போட்டிகள் ஆகும்.

## 3. அரசியல் போட்டிகள்

அரசு அதிகாரத்தை அடைவதற்காக அரசியல் கட்சிகளுக்கு இடையே உண்டாகும் போட்டி அரசியல்போட்டி எனப்படும். உலக அளவில் பல பெரிய நாடுகளுக்கிடையே தங்கள் அரசியல் பலத்தை நிர்ணயிக்க ஏற்படும் கடும் போட்டிகளும் இவ்வகைப் போட்டியைச் சாரும்.

## போட்டியின் விளைவுகள்

போட்டியானது சமூகத்தில் பல நன்மைகளையும், தீமைகளையும் உண்டாக்குகிறது. ஒரு போட்டி நியாயமான போட்டியாக இருந்தால் அது சமூகம் முன்னேற்றமடைய உதவுகிறது. மேலும் போட்டியானது மனிதனுடைய ஆளுமையை வளர்க்கிறது. ஒரு மனிதன் மற்றவர்களோடு போட்டியிடுவதற்காக தன்னுடைய திறமைகளையும், அறிவை[illegible] வளர்த்துக் கொள்கிறான். போட்டியானது பல கடி 87 வேலைகளைச் செய்யவும், பல சாதனைகளைப் புரியவும் மனிதனுக்கு உதவி செய்கிறது. கூட்டுறவு போன்று, போட்டியும் சமூகம் நிலைத்திருக்க வழிசெய்கிறது, ஒவ்வொருவருடைய வாழ்க்கைப் பங்கையும் (Role), தகுதியையும் (Status) போட்டியே முடிவு செய்கிறது. இதனால் சமூகத்தில் ஒரு ஒழுங்கு ஏற்பட்டு சமூகம் நிலைத்து நிற்க முடிகிறது.

போட்டியானது பலதீமைகளையும் உண்டாக்குகிறது. முதலாவதாகப் போட்டியானது

போட்டியில் தோற்றவர்களிடம் சில விளைவுகளை ஏற்படுத்துகிறது. அவர்களுடைய உடல்நிலை, கொள்கைகள், ஆர்வங்கள் முதலியன பாதிக்கப்படுகின்றன. போட்டியானது விரோதத்தையும், நம்பிக்கையின்மையையும் வளர்க்கிறது. மக்களிடையே உள்ள உறவுமுறை பாதிக்கப்படுகிறது. போட்டியில் உள்ள விதிமுறைகள் மீறப்படும்பொழுது பூசல் உண்டாகக்கூடிய ஒரு நிலை ஏற்படுகிறது.

## முரண்பாடு (Conflict)

கூட்டுறவு, போட்டி போன்று, முரண்பாடும் ஒரு குறிக்கோளை அடைவதற்காக நடைபெறுகிறது. முரண்பாட்டில் ஒருவர் தன்னுடைய எதிரிக்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது எதிரியை அழிக்கவோ முயற்சி செய்கிறார். போட்டியில் மற்றவர்களைத் துன்புறுத்துவதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் முரண்பாட்டில் ஒருவர் எந்த வழியிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் கொண்டுள்ளார்.

முரண்பாடு பற்றிப் பலதரப்பட்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. மெக்கைவர் (MacIver) என்ற அறிஞர் பின்வருமாறு அதை விளக்குகிறார். "முரண்பாடு என்பதில் ஒரு நபர் தனது குறிக்கோளுக்காக மற்றொரு நபருடன் எதிராகச் செயல்படுவார்". கில்லின் மற்றும் கில்லின் (Gillin and Gillin) என்ற அறிஞர்கள் "முரண்பாடு என்பது ஒரு சமூகச் செயல்பாடாகும். இதில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் தனக்கு எதிரானவர்களோடு தங்களது குறிக்கோளை வெற்றியடைய செய்ய நேரடியாகவே வண்முறை என்ற மிரட்டலுடனும், மற்றும் வன்முறையுடனும் ஈடுபடுவார்கள்", எனக் கூறுகிறார்கள்.

## முரண்பாட்டின் சிறப்புயல்புகள்

### உணர்வு பூர்வமான செயல்

தனிமனிதர்களும், குழுக்களும் தாங்கள் ஒருவரோடு ஒருவர் முரண்பட்டிருகின்ற உண்மையை

அறிவார்கள். முரண்பாடானது அறிந்து உணர்ந்து செயல்படுவதாகும்.

### தொடர்ச்சியானது அல்ல

முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள மனிதர்கள் அல்லது குழுக்கள் தங்கள் எதிராளிகளைத் தோற்கடிப்பதிலேயே குறியாக இருப்பார்கள். இவர்களுக்கு இலக்கினை அடைவது இரண்டாவது எண்ணமாக இருக்கும் இதனால் முரண்பாடானது தனிப்பட்ட பிரத்தியேகமான செயல்பாடாகிறது.

### தொடர்ச்சியானது அல்ல

முரண்பாடானது ஒரு தொடர்ச்சியாக ஏற்படுகின்ற செயல்பாடு அல்ல. ஆனால் அது விட்டு விட்டு ஏற்படக்கூடியது.

### முரண்பாட்டின் வகைகள்

முரண்பாடுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் அவை 1. நேரடி முரண்பாடு (Direct Conflict) 2. மறைமுக முரண்பாடு (Indirect Conflict).

நேரடியாகவே ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ மற்றொரு நபரையோ அல்லது குழுவையோ தாக்கித் துன்புறுத்தி அழிக்க நினை[illegible]ல் அல்லது அழித்தல் நேரடி முரண்பாடு என அழை[illegible] 89 [illegible]கிறது, எடுத்துக்காட்டாகச் சச்சரவுகள், புரட்சி மற்றும் போர்.

மறைமுக முரண்பாட்டில் எதிரிகளுக்கு மறைமுகமாக ஒரு தடையை உருவாக்கி அவர்கள் எந்த நன்மைகளையும் பெறவிடாமல் தடுக்கப்படுகிறது.

## முரன்பாடு தோன்றக் காரணங்கள்

முரண்பாடுகள் பின்வரும் காரணங்களினால் தோன்றுகின்றன.

## தனிநபர் வேறுபாடுகள்

தனிநபர்களின் வேறுபாடுகள் எல்லா விதங்களிலும் காணப்படுகின்றன. அதாவது அவர்கள் ஒருபொதுவான கொள்கைக்காக ஒத்த மனதுடையவர்களாகயிருந்தாலும், ஒவ்வொருவருக்கும் தனித்தனியான திறமைகள், தகவுகள், குறிக்கோள்கள் உள்ளன. மனித சமூகத்தில் பல்வேறு தகுநிலைகள் (Status), பலதரப்பட்ட பணிகள் மனிதர்கள் மத்தியில் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் மனிதர்களிடையே காணப்படும் எண்ணங்கள், வித்தியாசமான குறிக்கோள்கள் மற்றும் வித்தியாசமான அணுகுமுறைகளேயாகும். இவற்றின் மூலமாகத்தான் முரண்பாடு உருவாகிறது.

குழுக்கள் அளவில், பண்பாட்டு வேறுபாடுகள் முரண்பாடு ஏற்படுவதற்கு ஒரு முக்கியக் காரணமாக கருதப்படுகின்றன. ஒரே குழுவில் உள்ளவர்கள் தங்களது கருத்துக்களை மற்றவர்கள் மேல் திணிக்க முற்படுவதாலும் ஒரு குழுவானது மற்றொரு குழுவின் மேல் தன்னுடைய கருத்துக்களைத் திணிக்க முற்படுவதாலும் முரண்பாடுகள் உண்டாகின்றன. இனம், மொழி, மதம், நாடு ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல் முரண்பாடு உண்டாகக் காரணமாக இருக்கிறார்கள்.

ஆர்வத்தின் மூலமாக இருக்கக்கூடிய சச்சரவுகள் தனி நபர்கள் மற்றும் குழுக்கள் மத்தியில் முரண்பாடு உண்டாவதற்குக் காரணமாக உள்ளது. ஒவ்வொருவருக்கும் பல்வேறு விதமான ஆர்வங்கள் இருப்பதால் தனித்தனியாக ஒரு நல்ல சமூக அந்தஸ்தை அடையப் பாடுபடுகின்றனர். மற்றும் போராடவும் செய்கின்றன. இதன் காரணமாக முரண்பாடுகள் உருவாகின்றன. உதாரணமாகத் தொழிற்சாலைகளில்

முதலாளிக்கும். தொழிலாளிக்கும் இடையே காணப்படும், தகராறுகள், வேலை நிறுத்தம், போராட்டம், கதவடைப்பு போன்ற பல பிரச்சனைகளை உண்டாக்குகின்றன்.

முரண்பாடு என்பது இந்த நவீன சமுதாயத்தில் சமூகமாற்றத்தின் மூலமாக உருவாகிறது. சமுதாய மாற்றத்தின் மூலம், பழைய கொள்கைகள். தகவுகள் நீக்கப்பட்டு புதியவைகள் நுழைகின்றபொழுது இதில் பலதரப்பட்ட முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அமைதியின்மையும் நிலவுகிறது.

## முரண்பாடுகளின் விளைவுகள்

முரண்பாடுகள் சில நன்மைகளையும், தீமைகளையும் உண்டாக்குகின்றன.

முதலாவதாக முரண்பாடு ஒரு குழுவில் விசுவாசத்தை ஏற்படுத்துகிறது. ஒரு குழு மற்றொரு குழுவுடன் முரண்பாடு கொள்ளும் பொழுது, அந்தந்த குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட மனவேறுபாடுகளை மறந்து ஒருவருடன் ஒருவர் மிக ஒற்றுமையுடன் செயல்படுகிறார்கள். இதனை அனைத்துத் தரப்புகளிலும் காணலாம். உதாரணமாகச் சாதி அடிப்படையில் காணப்படும் குழுக்கள், அரசியல்கட்சி, மதத்தை மையமாகக் கொண்ட குழு ஆகியவற்றைக் கூறலாம்.

இரண்டாவதாக, முரண்பாடுகளின் காரணமாக சமூகத்தில் முக்கியப் பிரச்சனைகள் வெளிப்படுகின்றன. முரண்பாடு, பல்வேறு பிரச்சினைகளை மக்கள் உணரச் செய்து அதற்கான தீர்வுகளை உணர்த்தி சமூகம் வளர்ச்சியடைய உதவி செய்கிறது.

முரண்பாடுகளின் காரணமாக, குறிப்பாகப் போரின் மூலமாக தேசிய வளர்ச்சி ஏற்படுகிறது. ஒரு நாட்டில் போர் பற்றிய அச்சம் ஏற்படும் பொழுது அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வெவ்வேறு வழிகளில் ஈடுபடுகின்றனர். குறிப்பாகத் தேசிய வளர்ச்சியின்மூலமாக தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.

முரண்பாடுகளினால் நன்மைகளைவிட தீமைகளே அதிகமாக விளைகின்றன.

முரண்பாடுகளினால் நாட்டிற்கு அதிகமான சேதங்கள் உண்டாகின்றன. அதிகமான மக்கள் கொல்லப்படுகிறார்கள். அதிக சொத்துக்கள் சேதமடைகின்றன. மேலும் இது அதிகச் செலவை ஏற்படுத்துகிறது. உதாரணமாக இரண்டாம் உலகபோரில் அமெரிக்காவில் மட்டும் செலவழித்த பணத்தில், ஒவ்வொரு அமெரிக்கக் குடும்பத்திற்கு 30 வருடத்திற்கு 50,000 டாலர் மதிப்புள்ள வீடும், இரண்டு கார்களும் அளித்திருக்க முடியும். முரண்பாடு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துகிறது. கறுப்பர்கள், வெள்ளையர்கள், ஏழை, பணக்காரன், யூதர்கள் அராபியர்கள் போன்ற பிரிவினைகள் ஏற்படுகின்றன.

## இசைவு படுதல் (Accommdation)

போட்டியிடுதல் அல்லது முரண்பாடுகளின் காரணமாக மக்களுக்குப் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இதனை தவிர்த்து தற்காலிகமாக ஒற்றுமையாக இருக்க அவர்கள் சில வழிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள். போட்டியை முடிவுக்குக் கொண்டுவர செயல்படும் முறைகளை சமூக செயல்பாங்குகள் என அழைக்கிறோம். அவற்றில் முக்கியமானது இசைவு படுதல் ஆகும்.

இசைவு படுதல் என்பது இரு முரண்பாடான குழுக்கள் ஒற்றுமையுடன் செயல்பட ஏற்படுத்திக் கொள்ளும் செயல் ஒப்பந்தமாகும். இதனால் இவர்களைப் பிரிக்கக்கூடிய வேறுபாடுகள் தீராத போதிலும், முரண்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன.

ஆக்பர்ன் மற்றும் நிம்காப் (Ogburn and Nimkof) என்ற அறிஞர்கள் இசைவுபடுதலை முரண்பட்ட தனி நபர்கள் அல்லது குழுவினர்கள் ஒருவரையொருவர் சரி செய்து கொண்டு செயல்படுவதாகும் என்று குறிப்பிடுகிறார்கள்.

கில்லின் மற்றும் கில்லின் என்ற அறிஞர்கள் "இசைவு படுதல்" என்பது ஒரு சமூகச் செயல்முறையாகும். இந்த முறையில் தனி நபர்களும் குழுக்களும் தங்களின் வெறுப்பு உணர்வுகளை மறந்து அனுசரித்து ஒற்றுமை என்ற ஒன்றே குறிக்கோள் என்பதற்காக வாழ்கிறார்கள் என விளக்குகின்றனர்.

## இசைவுபடுதலின் வகைகள்

ஜான் எப். சியூபர் என்ற அறிஞர் இசைவுபடுதலை ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார். அவை பின்வருமாறு.

1. தற்காலிகச் சண்டை சச்சரவுகள் நிறுத்த உடன்பாடு (Truce).
2. சமரச உடன்பாடு (Compromise).
3. கீழோர், மேலோர் என்னும் அமைப்பு (Subordination – Superordination Arrangement).
4. நடுவர் தீர்ப்பு (Arbitration).
5. சகிப்புத் தன்மை (Toleration).

இதில் முதலாவது வகையில், மக்கள் முரண்பாடுகளை நீக்குவதற்காக ஒரு குறிப்பிட்ட அல்லது குறிப்பிடபடாத காலத்திற்கு தற்காலிகமாக ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களிடையே உள்ள பிரச்சனைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கும். உதாரணமாக 93 கலைகழக ஆட்சி குழுவில் மாணவர்களை உறுப்பினராக ஏற்றுக் கொள்ளுதல். இதன் காரணமாக பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையே ஒரு ஒற்றுமை தற்காலிகமாக ஏற்படுகிறது.

சமரச உடன்பாடு என்பது சம அளவு பலம் பொருந்திய இருவர் அல்லது இரு குழுக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து இருதரப்பினரும்

ஏதாவது ஒருவகையில் அனுகூலம் அடைய ஏற்றவாறு ஒத்துப்போவதே உடன்பாடு ஆகும்.

கீழோர் மேலோர் என்னும் அமைப்புமுறையில் அதிகபலம் வாய்ந்தவர் எதிராளியை அச்சுறுத்தியோ அல்லது கட்டுபடுத்தியோ தன்னுடன் இணங்கச் செய்கிறார். பலம் குறைந்தவர்கள் தன்னுடன் இயலாமையின் காரணமாக அதிக பலம்வாய்தவருடன் ஒத்துப்போகக்கூடிய நிலை ஏற்படுகிறது.

இரண்டு முரண்பட்ட தரப்பினர்கள் தங்களுடைய பிரச்சனைகளை தாங்களாகவே தீர்த்துக்கொள்ள முடியாத நிலையில் ஒரு மூன்றாவது நபரை தீர்வுக்காக அணுகுவார்கள். அவர் நடுவர் என்ற முறையில் கூறும் தீர்ப்பு இருவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. இதை நடுவர் தீர்ப்பு என அழைக்கிறோம்.

சகிப்புத்தன்மையின்படி ஒரு தரப்பினர் மற்றவர்களின் செயல்பாடுகளைச் சகித்துக்கொண்டு அவர்களோடு ஒத்துப்போவதாகும். சகிப்புத்தன்மை தேசிய, இன, மத வேறுபாடுகளை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

## ஒன்றுபடுதல் (Assimilation)

இசைவுபடுதல் மூலமாக, முரண்பாட்டிற்கு ஒரு நிலையான தீர்வை பெறமுடிவதில்லை, இதன் காரணமாகச் சில நேரங்களில் முரண்பாடுகள் மறுபடியும் தோன்றும்நிலை ஏற்படுகிறது.

நிரந்தரமாக முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான வழி ஒன்றுபடுதலாகும் (Assmilation). இதன் மூலமாகக் குழு வேறுபாடுகள் சிறிதுசிறிதாகக் குறைந்து ஒரளவு ஒற்றுமை ஏற்படுகிறது. ஜான். எப்.சியூபர் (John. F.Cuber) "ஒன்றுபடுதல் என்பது ஒருப்படிப்படியான செயல்முறை. இச்செயல்முறையின் மூலமாக மனவேற்றுமை மற்றும் பகைமை

ஆகியவைகள் மறைந்துவிடுகின்றன" எனக் கூறுகிறார். ஒரு தனி மனிதன் அல்லது குழு புதுமையான, வித்தியாசமான பண்பாடுள்ள சமூகத்தில் அடி எடுத்து வைக்கின்ற பொழுது, அச்சமூகத்தில் இருக்கும் நெறிமுறைகள் மற்றும் வழிமுறைகளை ஏற்றுக் கொள்வதை ஒன்றுபடுதல் என அழைக்கலாம். இம்முறையில் அம்மனிதன் அல்லது குழு தன்னுடைய பண்பாட்டைப் பின்பற்றுவதில்லை.

ஒன்றுபடுதல் என்பது இருவழிமுறையாகும். இம்முறையில் ஒரு சமூகம் அல்லது நாட்டிலிருந்து மற்றொரு சமூகம் / நாட்டிற்கு இடம் பெயர்ந்தவர்களிடம் ஒன்றுபடுதல் நடைபெறுகிறது. உதாரணமாக அமெரிக்காவில் குடியேறிய பல்வேறு மக்கள் தங்களுடைய பண்பாட்டை மறந்து அங்கு வாழும் மற்ற பெரும்பான்மைக் குழுக்களின் பண்பாட்டை ஒத்துக்கொண்டார்கள். மேலும், ஒரு சமூகம் அல்லது நாட்டின் உள்ள மக்கள் தங்கள் நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிபுரிந்ததின் விளைவாக மேற்கத்திய பண்பாட்டை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

## ஒன்றுபடுதலின் சிறப்பியல்கள்

ஒன்றுபடுதல் என்பது படிப்படியாக நடைபெறுகிறது. திடீரென்று இந்த முறை ஏற்படாது. சில நபர்கள் / குழுக்கள் நீண்டநாட்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளும் பொழுது ஒன்றுபடுதல் ஏற்படுகிறது. உதாரணமாக, கணவன் மனைவி நிண்டநாட்கள் ஒன்றாக வாழும் பொழுது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒன்றுபடுகிறார்கள். இது திருமணம் புரிந்தவுடனேயே ஏற்படுதில்லை.

ஒன்றுபடுதல் என்பது அறிந்து செய்யப்படும் ஒரு செயற்பாடு அல்ல. பொதுவாகத் தனிநபர்களும் குழுக்களும் தங்களை அறியாமலேயே மற்றவர்களோடு அல்லது குழுக்களோடு இணைந்துவிடுகிறார்கள்.

பெரும்பாலும், ஒன்றுபடுதல் என்பது முழுவதும் பூர்த்தியாகாத ஒரு செயல்பாடாக உள்ளது. ஒன்றுபடுதல் மக்களிடம் ஓரளவே ஏற்படுகிறது. ஒரு மனிதக்குழு ஒன்றுபடும் பொழுது தங்களுடைய அனைத்துக் குணங்களையும் மாற்றிக் கொள்வதில்லை. ஒரு சில முறைகளை மட்டுமே மாற்றிக் கொள்கிறார்கள்.

# பாடம் - 9

# சமூகக்குழுக்கள் (Social Groups)

அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க மேதை "மனிதன் ஒரு சமூகவிலங்கு" என்று கூறகிறுார். மனிதர்கள் தனித்து வாழ இயலாதவர்கள். மனிதர்கள் கூட்டமாக வாழ்கிறார்கள். அவர்களுடைய அடிப்படைத் தேவைகளான பசி, பாலுணர்வு, பாதுகாப்பு ஆகியவற்றைப் பூர்த்தி செய்துகொள்ள மக்கள், சமூகத்தில் வெவ்வேறு குழுக்களாக வாழ்கிறார்கள். அடிப்படையில் குழுவானது மக்களின் ஒரு கூட்டமாகும், ஆனால் சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள மக்கள் கூட்டத்தை ஒரு சமூகக்குழு என்று சொல்லமுடியாது. குழு என்ற கருத்துப்படிவத்திற்கு வெவ்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றைக் கீழே காண்போம்.

மெக்கீவர் (MacIver). குழுவைப் பின்வருமாறு வரையறை செய்கிறார். "ஒருவரோடு ஒருவர் ஊடாட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளும் எந்தவொரு சமூக உறுப்பினர்களின் தொகுப்பையும் குழு என அழைக்கலாம்".

மெர்ட்டன் (Merton) என்பவர், "குழு என்பது ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவருடன் ஒருவர் பரஸ்பரத் தொடர்பு கொண்டு. எல்லோரும் ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு கொண்டு மற்றவர்களால் ஒரே குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்று அங்கீகரிக்கப்படும் மக்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்" என சமூகக் குழுவை விளக்குகிறார்.

டீ.டி, பாட்டோமோர் (Bottomore) என்பவர் "தங்களுக்குள் ஒரு தீர்மானமான உறவிகள் மற்றும் தாங்கள் ஒவ்வொருவரும் அக்குழு மற்றும் அதனுடைய அடையாளங்களைச் சேர்ந்தவர்கள் என்ற உள்ளுணர்வு

கொண்டுள்ள தனிநபர்களின் ஒரு தொகுப்புதான் சமூகக் குழு" என்று குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய வரையறையின் படி குழுவில் உள்ள உறுப்பினர்கள் பரஸ்பர உறவு கொண்டுள்ளார்கள். அவர்கள் மேலும் உறவை ஏற்படுத்திக்கொள்ள விருப்பம் கொண்டுள்ளார்கள். குழு உறுப்பினர்கள் ஒரே மாதிரியான நெறிமுறைகளையும் விழுமியங்களையும் கொண்டுள்ளார்கள். குழு உறுப்பினர்களுடையே பரஸ்பர அன்பு உள்ளது. எல்லா உறுப்பினர்களும் குழுவில் தங்கள் அடையாளம் காணுகிறார்கள். குழு மனிதனுடைய ஒழுங்கான நிலையான நடத்தையை ஏற்படுத்துவதால் சமூகத்தில் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## குழுவின் சிறப்பியல்புகள் (Characteristics of Groups)

குழுவின் மிக அடிப்படையான குணம் அதன் உறுப்பினர்களிடையே ஏற்படுகிற சமூக உறவாகும். சமூக உறவு என்பது பேசுவதோ அல்லது கைகுலுக்குவதோ அல்ல. குழுவில் உள்ள மக்கள் பொதுவான நோக்கங்களைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்கின்ற பரஸ்பர உறவு முறையில் காணப்படுகின்ற தூண்டுதலும், செயற்பாங்குமே சமூக உறவு என அழைக்கப்படுகின்றன. இரண்டாவது, சமூகக்குழுவில் உள்ள உறுப்பினர்களிடையே ஒற்றுமை, குழுவின் அடிப்படைக் குணங்களாகும்.

மூன்றாவதாக உறுப்பினர்கள் அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை எந்த ஒரு மனிதனும் தனியாக வாழ இயலாது. பிறப்பிலிருந்து இறப்பு வரை ஒருவரையொருவர் நேரடியாகவே அல்லது மறைமுகமாகவோ சார்ந்திருக்கிறார்கள்.

நான்காவதாக, பொதுவான நோக்கங்கள் காரணமாக அங்கத்தினர்கள் அனைவரும் குழுவில் இணைந்து செயல்படுகிறார்கள்.

ஐந்தாவதாக ஒவ்வொரு குழுவும் அதற்கென்று சில குறிப்பிட்ட நெறிமுறைகளையும் செயல்முறைகளையும் செயல்படுத்துகிறது.

ஆறாவதாக, சமூகக் குழுவில் உள்ள உறுப்பினர்களிடையே அனைவரும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது போன்ற உணர்வு இருக்கும். அங்கத்தினர்கள் அனைவரும் அவர்கள் குழுவோடு இணைந்து அடையாளம் காட்டுவார்கள்.

ஏழாவதாக, குழுவின் அளவு மாறுபடுகிறது. குழுவானது இரண்டு அங்கத்தினர்களிடையே கொண்ட டயாடு (Dyad) எனப்படுகின்ற மிகச்சிறிய குழு முதல் இலட்சக்கணக்கில் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு பெரிய அரசியல் கட்சி குழுக்களாகவும் இருக்கும்.

எட்டாவதாக, குழுவானது உறுதியாகவும், ஸ்திரத் தன்மையுடனும் இருக்கிறது. சில குழுக்கள் ஸ்திரமற்று உறுதியில்லாமல் இருக்கின்றார் சில குழுக்கள் தற்காலிகமானவை. சில குழுக்கள் நிரந்தரமானதாக அமைகின்றன.

ஒரு குழுவில் உறுப்பினராவதின் மூலம் ஒவ்வொரு தனி நபரும் தன்னுடைய அடிப்படைத் தேவையான உணவு, உடை மற்றும் இருப்பிடம் முதலானவற்றைப் பூர்த்தி செய்துகொள்கிறான். வெளியுலக அபாயங்களிலிருந்து குழுவாழ்க்கை தனிநபரைப் பாதுகாக்கிறது. தனிநபரின் கௌரவத்திற்கு அங்கீகாரம் வழங்குகிறது. குழு ஒவ்வொருவருடைய தேவைகள் மற்றும் அவற்றை அடைவதற்கான நடத்தைக் கோலங்களைச் சுட்டிக்காட்டுகிறது.

குழுவே சமூகமயமாதலின் ஒரு சக்திவாய்ந்த செயலியாகும். ஒவ்வொரு குழுவும் பல விருப்பங்களைக் கொண்டுள்ளது. அதே சமயம் எந்த ஒரு குழுவும் அதனுடைய உறுப்பினர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது. ஆகவேதான் ஒவ்வொரு தனிநபரும் பல குழுவில் உறுப்பினராக இருக்கிறார்கள். தேவைகளும்,

குறிக்கோள்களும் மாறும்போது சமூகக் குழுவின் பணிகளும். அதற்கிணங்க மாறுபடும். இல்லையெனில் குழு நிலைத்திருக்க முடியாது. சமூகக் குழுவின் பணிகள் அதன் உறுப்பினர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருப்பினும் இறுதியில் சமூக கூட்டொருமையே அதன் முக்கிய நோக்கமாகும் குழுவின் வகைகள் குழுக்கள், முதல் நிலைக் குழுக்கள், இரண்டாம் நிலைக் குழுக்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மேற்கூறிய இரண்டு வகை குழுக்களைப் பற்றி இங்கே காண்போம்.

## முதல் நிலைகுழுக்கள் (Primary Groups)

பிரைமரி குருப் (முதல் நிலை குழுக்கள்) என்ற சொற்றொடரை சி.ஹெச். கூலி என்பவர் முதன் முதலில் அறிமுகப்படுத்தினார். நேருக்கு நேராக மிகவும் நெருங்கிய உறவுகளைக் கொண்டதாக இருக்கும் குழுக்களை முதல்நிலைக்குழு என அவர் வர்ணிக்கிறார். அவை பல வழிகளில் முதன்மையாக இருந்த போதிலும், மனிதனுடைய குறிக்கோள்களையும், சமூகத் தன்மையையும் உருவாக்குவதற்கு அடிப்படையாக உள்ளன. குடும்பம், அண்டையம், நண்பர்குழாம், விளையாட்டுக் குழாம் போன்றவை முதல்நிலைக் குழுக்களாகும்.

## முதல் நிலைக்குழுக்களின் சிறப்பியல்கள்

1. முதல் நிலைக் குழுக்களின் உறுப்பினர்கள் உடலளவில் ஒருவரோடு ஒருவர் நெருக்கமாக இருக்கிறார்கள். இதையே நேருக்கு நேரான உறவு என்று கூறலாம். இதனால் இவர்களிடையே பிரத்யோகாமான உறவு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள வழிவகுக்கிறது. இல்லாமலேயே இக்குழு உறுப்பினர்களிடையே நெருங்கிய உறவு காணப்படும். உதாரணமாக இன்றைய சமூகத்தில் ஒரு குடும்ப உறுப்பினர்கள் கல்வி வேலை போன்ற காரணங்களால் தனித்தனியாக வெவ்வேறு ஊர்களில் இருந்த போதிலும் அவர்களிடம் காணப்படும் உறவுகள் முதல்நிலை உறவுகளேயாகும்.

2. பொதுவாக முதல் நிலைக் குழுக்கள் அளவில் மிகச்சிறியதாக இருக்கும். இதனால் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் மிக நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். மேலும் உறுப்பினர்கள் சிறந்த முறையில் குழு நடவடிக்கைகளில் பங்கேற்க முடிகிறது.

3. முதல் நிலைக் குழுவானது மற்றகுழுக்களைவிட ஒரு நிரந்தரமான தன்மையைப் பெற்றதாகும். இந்த அம்சங்களினால் அங்கத்தினர்களிடையே ஒரு நிலையான உறவுமுறை ஏற்படுகிறது. உதாரணமாக அதன் உறுப்பினர்கள் பல வருடங்கள் வாழ்ந்து அதன் உறவுமுறைகளைத் தொடர்ச்சியாக நிர்வகிக்கின்றனர்.

4. குழுவின் உறுப்பினர்கள் "நாம்" என்ற உணர்வைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வு இருப்பதால்தான் அதன் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிறார்கள். மேலும் தங்களுக்கு எதிராகச் செயல்கள் நிகழும் போது கூட்டாக நின்று தங்களைக் காத்துக் கொள்கிறார்கள்.

5. முதல் நிலைக் குழு உறுப்பினர்களில் விருப்பங்கள் முன்மாதிரிகள் மற்றும் விழுமியங்கள் பொதுவானவை. அனைவரும் ஒருவருக்கொருவர் குறிப்பிட்ட முறையில் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள், இதன் காரணமாக முதல் நிலைக்குழு உறுப்பினர்களிடையே ஒற்றுமை உணர்வு ஏற்படுகிறது.

6. முதல் நிலை உறவுகள் தானாக தன்னிச்சையாக உருவாகுபவை. அவை திட்டமிட்டு உண்டாக்கப்படுபவை அல்ல. முதல்நிலைக்குழுக்களில் முதல்நிலை உறவுகளின் ஆதிக்கம் காணப்படும். முதல் நிலை உறவுகள் எந்தவொரு லாபத்திற்காகவோ அல்லது இலட்சியத்திற்காகவோ ஏற்படுத்தப்படுபவை அல்ல.

## முதல் நிலை குழுக்களின் முக்கியத்துவம்

தனிநபருக்கும் சமூகத்திற்கும் முதல்நிலைக் குழுக்கள் சில முக்கியப் பணிகளைச் செய்கின்றன.

முதல்நிலைக் குழுவானது தனி நபருக்குக் குழுவின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் சொல்லி தருவதோடு மட்டுமல்லாமல் அது வழிவழியாக தொடரவும் வழி செய்கிறது. முதல்நிலைக் குழுக்கள் ஒரு தனி மனிதனின் சிரிய முறையில் வெற்றிகரமாக சமூகவாழ்க்கையை நடத்தி செல்ல வழி வகுக்கிறது. மேலும் முதல்நிலைக் குழுக்கள் தனி மனிதனுக்குச் சமூகமயமாக்குதல் மூலம் அவனுடைய நடைமுறைக்குத் தேவையான எல்லா வழிமுறைகளையும் தெரிவித்து அவனுடைய ஆளுமைத்திறனை வளர்க்கிறது.

## இரண்டாம் நிலை குழுக்கள் (Secondary Groups)

இரண்டாம் நிலைக் குழுவை, இடைநிலைக்குழு என்றும் வழி நிலைக்குழு என்றும் அழைப்பார். இரண்டாம் நிலைக்குழு தன்னுடைய சிறப்பியல்பிகள் மற்றும் செயல்களில் முதல் நிலைச் சமூகக் குழுவுடன் நேரடியாக மாறுபட்டுள்ளது. அந்நியோன்னியமற்ற, நெருக்கமற்ற, சொந்தமற்ற ஒரு சம்பிரதாயமான உறவுமுறைகளைக் கொண்டவைகளாக இரண்டாம்நிலைக் குழுக்கள் இருக்கும்.

உதாரணமாக அரசியல் கட்சிக் குழுக்கள், தொழிலாளர் சங்கங்கள் மதக் குழுக்கள் போன்றவைகள். இரண்டாம் நிலைக் குழுவில் உறுப்பினர்களின் தொடர்புகள் தற்செயலானதாகவும், பொதுவானதாகவும் இருக்கும், இக்குழுக்களில் உடல்நெருக்கம், சிநேகபாவம் தனிச்சிறப்புப் பண்பு முதலியவைகளை உறுப்பினர்கள் விரும்புவதில்லை, முதல்நிலைக் குழுக்களைப் போன்று இல்லாமல், இரண்டாம் நிலைக் குழுக்கள் சில சமூக விருப்பங்களை அடைவதற்கான அல்லது உணர்வதற்கான ஒரு செயலியாக விளங்குவதால் இக்குழுக்கள் ஒரு குறிக்கோளை அடைவதற்கான வழியாக் கருதப்படுகின்றன. இக்குழுவில் ஒரு பொதுவான பந்தம் அல்லது தனிப்பட்ட ஊடாட்டம் இல்லை. உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் தெரிந்திருக்காவிட்டாலும் இக்குழுவின் சட்ட திட்டங்களுக்க ஏற்றபடிச் செயல்படுகின்றனர். இக்குழுவில் காணப்படும் உறவுமுறைகள் நெருக்கமானதே அல்லது சொந்தமானதோ அல்ல இருந்தபோதிலும் சட்டத்தினால் இக்குழுவின் உறுப்பினர்கள் இடையே கட்டுப்பாடு காணப்படுவதால் இது ஒரு ஒழுங்கு

படுத்தப்பட்ட சமூகக் குழுவாகும். ஒரு இரண்டாம் நிலைக்குழு ஒரு அரசாங்கத்தைப் போன்று பெரிதாக இருக்கலாம் அல்லது சங்கத்தைப் போல சிறியதாக இருக்கலாம், ஆனால் அவற்றில் காணப்படும் தொடர்புகள் ஒப்பந்தங்கள் அல்லது மன ஒற்றுமைகள் போல சில இலக்குகளைப் பூர்த்தி செய்வதைப் போன்றது. செய்தித் தொடர்புகள்யாவும் மறைமுகமானவை மற்றும் ஒருவரையும் சுட்டிக் குறிக்காதது. விசுவாசமனப்பான்மை மற்றும் முழுவதுமாக இக்குழுவுடன் ஈடுபடுத்திக் கொள்வது ஆகியவை தானாக மற்றும் தன்னிச்சையாக உண்டாவதில்லை.

நவீன சமூகத்தில் பல்வேறு நன்மைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான எண்ணிக்கையில் அடங்காத பல இரண்டாம் நிலைக் குழுக்கள் உள்ளன. பல இரண்டாம் நிலைக் குழுக்களில் உறுப்பினராவது தன்னிச்சையானது. ஒரு நபர் பல இரண்டாம் நிலைக் குழுக்களில் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் அக் குழுக்களில் செயல்களில் பங்குகொள்ளாமல் இருக்கக்கூடும், மேலும் இரண்டாம் நிலைக் குழுக்களில் உறுப்பினராவது அந்தந்தக் குழுக்களின் நோக்கங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது, ஆகவே இரண்டாம் நிலைக் குழு எல்லாம் உள் அடக்கிக்கொண்டதல்ல. மனித இனத்தில் இரண்டாம் நிலைக் குழுக்கள் பிரயோஜனத்தையே குறிக்கோளாகக் கொண்டவை. மற்றும் அவை இலக்குகளை அடைவதற்கான வழிகளாகும். இரண்டாம் நிலைக் குழுக்கள் முதல்நிலைக் குழுக்களைப் போல உண்மையான அல்லது இயற்கையானதல்ல, இருந்த போதிலும் இக்குழுக்கள் மனிதன் உயிர்வாழ்வதற்குத் தேவையான அடிப்படைச் செயலிகளாகும் அளவில் பெரிய சமூகக் குழுக்களின் நெருக்கடியான தொடர்புகளுக்குப்பதிலாக அநாமதேய நிலை காணப்படுகிறது. அநேக தனிநபர்கள் தாங்கள் இத்தகைய குழுக்களின் உறுப்பினர்கள் என்பதை உள்ளூர உணர்ந்திருந்த போதிலும், இது போன்ற இரண்டாம் நிலைக் குழுக்களில் ஊக்கமாக அல்லது சுறுசுறுப்புடன் பங்கேற்க மாட்டார்கள். இரண்டாம் நிலைக்குழுக்கள் பொது ஜன உணர்வு அல்லது மனோபாவத்தை உருவாக்குமே தவிர தனிப்பட்ட மன ஒற்றுமையை ஏற்படுத்தாது. அந்த

வகையில்தான் உறவு முறைகள் மறைமுகமாகவும் ஒருவரையும் சுட்டிக் குறிக்காதனவாகவும் உள்ளன.

சி.ஹெச். கூலி என்பவரின் படைப்புகள் தவிர மேலும் பல சமூகவியலறிஞர்களின் படைப்புகளில் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைக் குழுக்களிடையேயான வேறுபாடுகள் காணப்படுகின்றன. எமிலிடர்க்ஹைம், குழு வாழ்க்கையில் இயந்திரவியலான கட்டொருமைப்பாட்டுக்கும் உள்ள வேற்றுமைகளைக் குறிப்பிடுகிறார். பிட்ரிம். ஏ. சரோகின் குடும்பம் மற்றும் ஒப்பந்த உறவு முறைகளின் வேறுபாட்டை விவரிக்கிறார். டால்காட் பார்சன்ஸ் கோல மாற்றங்கள் பற்றி விளக்குகிறார். சமூகக் குழுக்களை முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைக் குழுக்களாக பிரிந்திருப்பது இனக்கமில்லாதது அல்ல. இது முதல்நிலை மற்றும்' இரண்டாம் நிலைக் குழுக்களைப் பிரிக்கின்ற மிக நுண்ணிய கோட்டை உருவாக்குகின்ற, அக்குழுக்களின் நோக்கங்கள் மற்றும் உறவு முறைகளின் மேலெழுந்தவாரியான ஒரு வகைப்படுத்துதலாகும். சமூகக் குழுக்கள் யாவும் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்குச் சேவை செய்வதற்காக ஏற்பட்டன. எந்த ஒரு சமூகக் குழுவும் முழுமையாக முதல்நிலைக்குழு அல்லது இரண்டாம் நிலைக் குழுவாக அதனுடைய அமைப்பின் அடிப்படையில் இருக்க முடியாது. ஒரு முதல் நிலைக்குழு ஒருவருடைய வாழ்நாள் முழுவதும் ஒரே மாதிரியாக நிரந்தரமாக இருக்க முடியாது. உதாரணமாகக் குடும்பத்தில் பெற்றோர் மற்றும் குழந்தைகள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கிடையேயான உறவுகள் அவர்கள் பெரியவர்களாக மாறும்போது வேறுபடுகிறது. அதேபோல் மாறுபட்ட நோக்கங்களினால் சமூகத் தொடர்புகள் வேறுபடுகின்றன. ஒரு குடும்ப உறுப்பினர்கள் தனித்தனியாக வாழும்போது, அவர்கள் எப்பொழுதுதாவது சந்தித்துக் கொள்கின்றனர். மற்றும் அவர்களுடைய தொடர்புகள் இரண்டாம் நிலையாக இருக்கின்றன. தூரம் சமூகத் தொடர்புகளுக்கு இடையூராக அமைந்து அதன் விளைவாக முதல்நிலைக் குழுவின் உறுப்பினர்களிடையே நெருக்கம் குறைந்து விடுகிறது. பழைய நெருங்கிய நண்பர்கள் வேலை அல்லது படிப்பு போன்றவற்றிற்காகப் பிரியும்போது அவர்களின் சந்திப்பு எப்பொழுதாவது நிகழ்கின்றது. மற்றும் அவர்களின் உறவு முறைகள்

மறைமுகமானதாகவும் நெருக்கம் குறைந்ததாகவும் ஆகிவிடுகிறது. நவீன சமூகத்தில் முதல்நிலைக் குழுவின் உறுப்பினர்முறை மாறுபடுகின்றது. இரண்டாம் நிலைக் குழுக்கள் மிகப்பெரிய அமைப்புக்களாக வளர்ந்து, சமூக வாழ்க்கைக்கு மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றன. முதல்நிலைக் குழுவின் பணிகளை இரண்டாம் நிலைக்குழுக்கள் எடுத்துக்கொண்டுவிட்டன. உதாரணமாக, குடும்பம் ஒரு காலகட்டத்தில் அனேக சமூக நோக்கங்களைப் பூர்த்தி செய்தது. ஆனால் இப்போது அது திருமணத்தின் மூலம் சந்ததிகளை உருவாக்குகின்ற ஒரு உடலியல் பகுதியாக விளங்குகிறது. இருந்தபோதிலும், இரண்டாம் நிலைக்குழு முதல்குழுவின் முழுமையான ஈடாகக் கொள்ள முடியாது. ஒரு குழுவைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் முதல் நிலைக்குழுவைக் குழுவின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை இரண்டாம் நிலைக் குழு குறைத்து விட முடியாது. இரண்டாம் நிலைக் குழு நிலைத்திருப்பதற்கு முதல்நிலைக்குழு மிக முக்கியமானது குடும்பம் போன்ற முதல்நிலைதான் தனிநபரின் இதர குழுக்கள் உருவாக உதவிபுரிகின்றது. சி.ஹெச். கூலி குடும்பத்தைச் சமூகத்தின் மூலம் அடிப்படை எனக் கூறுகிறார். நவீன சூழ்நிலையில், குழுக்களை முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை குழுவாக பிரித்துச் செல்ல முடியாது. முதல்நிலைக் குழுவின் காணப்படும் இரண்டாம் நிலை உறவு முறைகளும் இரண்டாம் நிலை குழுவில் காணப்படும் முதல்நிலை உறவு முறைகளும், இவ்வகைப்படுத்துவதை ஆட்சேபனைக்கும் குழப்பத்திற்கு உரியதாக ஆக்குகிறது. அமைப்பு முறையில் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை குழுக்கள் ஒன்றோடென்று இணைந்துள்ளன. ஒரு முதல் நிலைக் குழு முழுமையாக விதிமுறை சாராததும் அல்ல மற்றும் இரண்டாம் நிலை குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதுமல்ல. உதாரணமாக, குடும்பம் கூட சில அளவில் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக் குழுவும் முதல் நிலைக் குழுக்களின் மனப்பான்மைகளை அங்கீகரிக்காத முற்றிலும் வடிவம் சார்ந்தது அல்ல. ஆக, சமூகக் குழுக்களின் வகைப்படுத்தல் செயற்கையானதாக விளங்குகிறது. மொத்த சமூக வாழ்வில், முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் குழுக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன.

## பாடம் - 10

# சமூக நிறுவனங்கள் (Social Institutions)

### முன்னுரை

மனித சமுதாயத்தின் சமூக நடைமுறைகளின் கூட்டு மொத்தமே பண்பாடு எனப்படுகிறது. அப்பண்பாட்டின் விணைப்பபயன்களில் ஒன்றே சமூக நிறுவனங்கள். இவைகள் பண்பாட்டின் வளர்ச்சி முறையையும், வளர்ந்த முறையையும் நாட்டவர் வழக்குகள் மற்றும் வழக்கடிபாடுகள் மூலமாக வழங்குகின்றன. இச்சமூக நிறுவனங்கள் எல்லா சமுதாயங்களிளும் நிலைத்து நின்று சமுதாயத் திட்டங்களைச் சுட்டிக்காட்டுகிறது. சமூக நிறுவனங்கள் சமுதாயத்தில் ஒருங்கினையும் கட்டுப்பாட்டையும் அழியாமல் காத்துவரத் துணைபுரிகின்றன மற்றும் சமூக நிறுவனங்களின் அறிவுச்சார்ந்த ஆய்வு பண்பாட்டையும் சமுதாயத்தையும் அடிப்படை அளவில் அறிய உதவுகிறது.

### விளக்கம்

குழுக்களில் ஏற்படுத்தப்பட்ட ஆணையினை அனுமதிக்கப்பட்டு, முறைப் படுத்தப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டு, ஒன்று சேர்ந்து வாழும் தன்மையே நிறுவனங்கள் என்று சி.எ. எல்வுட் (C.A. Ellwood) கூறுகிறார். இவ்வாறான முறையில் வாழ்வதையோ அல்லது நடைமுறைகளின் முறைகளையோ சமுதாயம் ஒப்புக் கொண்டு, அங்கீகரிக்கிறது. அவைகளே திட்டங்களின் நேரடி விளைவாகும் நிறுவனங்கள் நிரந்தர மனிதர்களின் சேர்க்கைச் செயலாகும் அவைகள் சமுதாயத்தின் சக்கரங்கள், இவற்றின் உதவியோடுதான் மனித சமுதாயம் நடைபோடுகிறது.

வெஸ்டர்மார்க் (Westermark) கருத்தின் படி திருமணம் என்பது "சட்டம் அல்லது சமூகச் செயல்களினால்

அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களுடன் இணைந்து தங்களுக்காகவும் பிறக்கும் குழந்தைகளுக்காகவும் சில கடமைகளிலும், உரிமைகளிலும் பங்கு கொள்ளும் ஓர் உறவு" என்பதாகும்.

நிறுவனங்கள் இயந்திர அமைப்பு என்றும் அதன்மூலம் சமுதாயம் **தன்** செயல் இயந்திரங்களை இயக்குகிறது என்று பர்னஸ் (Burness) விவரிக்கிறார். எடுத்துக்காட்டு குடும்பம். சமுதாய வாழ்க்கைக்குக் குடும்பம் ஒரு புகலிடமென்று விளக்கப்படுகிறது. தேவையின் காரணத்தினாலும் நெருங்கிய தொடர்பினாலும் குடும்பம் ஒரு சமூக நிறுவனமாகத் திகழ்கிறது என்று கூறுகிறார்.

நிறுவனம் என்றால் ஒரு செயலைச் • சுற்றி அமையும் நாட்டவர் வழக்குகள், வழக்கடிபாடுகள், சட்டங்கள் ஆகியவற்றின் தொகுதி என்று வுட்வார்டு (Woodward) மற்றும் மாக்ஸ் வெல் (Max well) வரையறுக்கின்றனர். அதாவது நிறுவனம் என்பது ஒரு செயலைச் சுற்றி அடையும் நெறிகளின் தொகுதியே ஆகும் என்று கூறுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, கல்வி கற்பது என்பது சமூகத்தில் நடைபெறுகிய ஒரு செயல். இச்செயல் சம்பந்தமாகப் பல நாட்டவர் வழக்குகளும், வழக்கடிபாடுகளும்,, சட்டங்களும் அமைந்திருக்கின்றன. அதாவது கல்வி நிலையம் சென்று கல்வி கற்பது, ஆசிரியர்களிடம் மரியாதை காட்டுவது, ஒழுங்காக உடையணிந்து செல்வது, பாடங்களைக் கவனிப்பது என்று பல நாட்டவர் வழக்குகள் இருக்கின்றன. இவையல்லாமல் கட்டணம், பாடத்திட்டம், தேர்வுகள் என்று வழக்கடிபாடுகளும் அமைந்திருக்கின்றன. தேர்வுக் கூடத்தில் ஆள் மாறாட்டம் போன்ற சட்ட விரோதமான செயல்களைச் செய்யக் கூடாது. கல்வி நிலையங்களில் கலவரத்தில் ஈடுபடக் கூடாது என்பன போன்ற சட்ட நியதிகளும் அமைந்திருக்கின்றன. இப்படிக் கல்வி கற்பது சம்பந்தமாக அமைந்திருக்கிற நாட்டவர் வழக்குகளையும்,

வழக்கடிபாடுகளையும், சட்டங்களையும், ஒரு சேரக் கல்வி நிறுவனம் என்கிறோம்.

ஒரு தேவையை நிறைவேற்றுவதற்காக நாம் ஒரு காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் காரியத்தை எப்படிச் செய்வது என்ற வழியை நிறுவனம் காட்டுகிறது. எடுத்துகாட்டாக அறிவுத் தேவையே நிறைவேற்ற நாம் கற்க முயல்கிறோம். இந்த 'கற்றல்' காரியத்தை எப்படி செய்வது என்பதைத்தான் கல்வி நிறுவனம் வழி காட்டுகிறது. இதனால் தான் ராபர்ட் பியர்ஸ்டெட் (Robert Bierstead) நிறுவனம் என்பது, ஒரு காரியத்தைச் செய்யும் நிலையமைப்பு உடைய வழி என்று குறிப்பிடுகிறார்.

சமூக நிறுவனங்களைச் சாதாரணமாக சமூகப் பழக்க்ங்கள் என்று கூட சொல்லலாம். உதாரணமாகக் காலையில் முகச்சவரம் செய்தல், பகலில் சிறு தூக்கம், இரவு படுக்கைக்குப் போகுமுன் இறைவனை வணங்குதல். இப்பழக்கங்கள் குழுக்களால் ஒழுங்குப்படுத்தப்பட்டு நிறுவப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களால் மெதுவாக அவை முயன்று பெறப்படுகின்றன. அச்செயல்கள் தொடர்ந்தும், திரும்பத் திரும்பச் செய்வதாலும் பழக்கப்படுகின்றன. அதிகாரம் பெற்ற ஓரினக் குழுக்களால் ஒன்றாகச் சேர்ந்து வாழும் பழக்கம் அனுமதிக்கப்பட்ட, ஒழுங்குப்படுத்தப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்கள் சமூக நிறுவனம் என்று விவரிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வகுப்பாரின் மனிதத் தொடர்புடைமை ஒரு சமூக நிறுவனம் என்பது எளிதற்ற கருத்துப்படிவங்களும், மனப்பான்மைகளும், ஓர் இனத்தாரிடையே வழங்கி வரும் ஒழுக்கமுறை உடையதாகும். எடுத்துக்காட்டு குடும்பத் தொடர்புகள், கருத்துப் படிவங்களும் பழக்கங்களும், சுருங்கிய, வழக்கடிபாடுகள், மரபுகள், சம்பிரதாயங்கள் ஆகியவை அவ்வினத்தாரிடையே வழங்கி வரும் ஒழுக்கமுறை எனப்படுகின்றன.

சமூகத்தில் எவ்வளவோ செயல்கள் நடைபெறுகின்றன. ஆனால் அவற்றில் முக்கியத்துவம் உடைய செயல்களுக்கு மட்டுமே நெறிகள் அமைந்திருக்கின்றன. அந்த வகையில் அடிப்படைத்

தேவைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்களே முக்கியத்துவம் பெற்று அவற்றிற்கு நிறுவனங்கள் அமைந்திருக்கின்றன. இல்வாழ்க்கை, கல்வி, உற்பத்தி, ஆட்சி, வழிபாடு, சாதி, பொழுதுபோக்கு முதலிய செயல்கள் முக்கியத்துவமானவை. அவை சம்பந்தப்பட்ட குடும்ப நிறுவனம், கல்வி நிறுவனம், பொருளாதார நிறுவனம், அரசியல் நிறுவனம், சமய நிறுவனம், சாதி நிறுவனம், பொழுது போக்கு நிறுவனம் ஆகியன அமைந்திருக்கின்றன. இப்படி முக்கியமான செயல்களுக்காக அமைகின்ற நிறுவனங்களை முக்கியத்துவம் மிக்க நிறுவனங்கள் (Major Social Institutions) என்று அழைக்கிறார்கள்.

மேற்சொன்ன சில முக்கியமான செயல்களோடு சில செயல்கள் துணைபோகும். எடுத்துகாட்டாக உற்பத்தியோடு கடனுதவி பெறுதல் துணைபோகும். அவ்வாறே கல்வி கற்றலோடு பட்டம் பெறுவது துணைபோகும். இப்படி முக்கியச் செயல்களோடு துணை நிற்கிற செயல்களுக்கும் நிறுவனங்கள் அமைந்திருக்கும், அவற்றைத் துணை சார்ந்த நிறுவனங்கள் (Subsidary Institutions) என்று அழைக்கிறார்கள். அவை பெரும்பாலும் நிறுவனங்களில் உள்ளடங்கியிருக்கும்.

## சமூக நிறுவனங்களின் தனித்தன்மைகள்

1 நிறுவனங்கள் சில வரையறுக்கப்பட்ட திட்டவட்டமான குறிக்கோள்களை உடையவை.

2 நிறுவனத்திற்கு ஒரு அடையாளம் இருக்கிறது, அது மூலப்பொருளாகவோ அல்லது மூலப்பொருள் அற்றதாகவோ இருக்கும்.

3 ஒவ்வொரு நிறுவனமும் சில சட்டங்களைக் கொண்டு உள்ளன. அவைகளுக்குக் கட்டாயமாகக் கட்டுப்பட்டே அதன் உறுப்பினர்கள் இயங்குகிறார்கள்.

4 நிறுவனங்கள் மனிதர்களின் கூட்டுச் செயல்களைப் பொறுத்து அமையும்.

5 நிறுவனங்கள் வழக்கங்களையும், உறுதிக் கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு முறைப்படுத்தப்பட்ட சில வரையறுக்கப்பட்ட செயல் முறைகளைப் பெற்றுள்ளன.

6 நிறுவனங்கள் மனிதர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சாதனமாக அமைந்துள்ளன.

7 மனித சமுதாயக் கட்டுப்பாடுகளை விட நிறுவன்ங்கள் சமுதாயத்தில் நிரந்தரம் அல்லது ஸ்திரதன்மை உடையனவாகும்.

8 மனிதர்களின் முதல் நிலையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே நிறுவனங்கள் இருக்கின்றன.

## சமூக நிறுவனங்களில் முக்கியத்துவம்

1. நிறுவனங்கள் பண்பாட்டுக் கூறுகள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குப் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றன.

2. மனிதர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் பழக வேண்டும் என்ற விதிமுறைகளை விதித்து மனிதர்களிடம் ஒருமைப்பாடு வளர்வதற்கு காரணமாக இருக்கின்றன.

3. சமூகத்தில் அறிவுக்கூறுகள், பண்பாட்டு கூறுகள், நன்னடத்தைபற்றிய விதிமுறைகள், இலட்சியங்கள் முதலியவை சமூக நிறுவனங்களின் மூலம் ஒரு தலை முறையினிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு பரவ வழி வகுக்கின்றன.

4. சமூக நிறுவனங்கள் மக்களின் தீய வழிப்போக்கைக் கண்டித்து அவர்களுக்கு நல்ல வழி முறைகளை எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறு அது மக்களை கண்டிப்பதால்,

அது ஒரு மிகச் சிறந்த சமூகக்கட்டுப்பட்டு சாதனம் என்று அறிஞர்கள் வர்ணிக்கிறார்கள்.

5. நிறுவனங்கள் சமுதாயத்தில் உள்ள மக்களை ஒட்டு மொத்தமாக பண்பாட்டுடன் ஒத்துப்போக கட்டாயப்படுத்துகிறது.

## சமூக நிறுவனங்களின் வகைகள்

பெரிய சமூக நிறுவனத்தின் தோற்றமும் செயலும் மனிதனையும் சமுதாயத்தையும் தொடர்பு கொண்டதாயுள்ளது. நாட்டவர் வழக்குகளும் வழக்கடிபாடுகளும் முதிர்ந்த சமுதாய நிறுவனத்தின் திட்டங்களின் அடிப்படையனான அடிச்சுவடு என்று கருதப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் ஆறு பெரிய வகைகளான சமூக நிறுவனங்கள் உள்ளன.

பால் நடை முறையும், குடும்ப உறவுகளும் திருமணம், குடும்பம் என அழைக்கப்படும் நிறுவனத்தில் இது வளர்கிறது. பால் நடைமுறை, குடும்பத்தில் நாட்டவர் வழக்குகளாலும், வழக்கடிபாடுகளாலும் ஒழுங்குப்படுத்தப் படுகிறது. குடும்பத்தலைவன் தந்தை அல்லது மூத்த ஆண்மகன் குடும்பத்திலுள்ள அத்துனை உறுப்பினர்களிடமும் உள்ளன்புள்ள சமூகத் தொடர்பை நிலை நிறுத்த முயற்சிக்கிறான்.

உழைப்பாற்றலும், பொருளாதார நிலையும், தொழிலும் வேலையும் சார்ந்தது நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது. உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் சில சட்டதிட்டங்கள் தொழில் பலத்தினால் அமைக்கப்படுகின்றன. நம் பொருளாதார செயலாற்றலை வளப்படுத்த சில அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள் இதில் உள்ளன, அவைகள் உற்பத்தி, நுகர்வு மற்றும் பங்கீட்டு முறை எனப்படும்.

மனிதனுக்கு மூன்றாம் நிலையில் முக்கியமாக இருப்பது தெய்வநம்பிக்கையும் வழிபாடும் ஆகும். இவை சமுதாயத்திலுள்ள சமயமென்ற நிறுவனத்தில்

பங்குகொள்கின்றன. எடுத்துக்காட்டாக, மனிதர்கள் பேரின்பம் பெற பல கடவுள்களை வழி படுகிறார்கள். உயிர்ப்பலி கொடுப்பது தெய்வ நம்பிக்கையைக் காண்பதற்காகவும் அதைத் தழுவுவதற்காகவும் அமைந்திருக்கிறது.

நான்காவதாக அறிவு பெருக்குதல் இது கல்வி நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது. நாம் குழந்தையின் அறிவை வளர்க்கவும் சமூக உண்மையே அறிந்து கொள்ளவும், சமுதாயத்தில் நீதி நெறிகளைக் கடைப்பிடிக்கவும் பள்ளிக்கு அனுப்புகிறோம். சுருக்கமாகக்கூறின் தனிமனிதன் கல்வியின் மூலமாகச் சமுதாயத்தில் அவன் பங்கையும், நிலையையும் அறிய உதவுகிறது.

தனி ஒருவனின் தனிப்பண்பியல்புகளைக் கல்வி நிறுனங்கள் உருவாக்குகின்றன, வடிவம் கொடுக்கின்றன. ஆனால் சட்டம் இதனைக் கட்டுபாட்டுடன் கவனிக்கிறது. இதனையே சட்டம் மற்றும் சமூகக் கட்டுப்பாட்டுடன் நிறுவனம் என்று அழைக்கிறார்கள். அதனையே நாடு மற்றும் அரசு என்றும் அழைக்கிறார்கள்.

ஆறாவதாக இது மனிதர்களிடேயே பரஸ்பரமான உறவுகள் அமைய சமுதாயத்தின் விருப்புகள் பொழுது போக்கு அமைப்புப்பற்றி நடவடிக்கை மேற்கொள்கிறது.

## திருமணம் (Marriage)

திருமணம் சமுதாயத்தில் ஒரு முக்கியமான சமுகநிறுவனமாகும். இது ஒரு உலகளாவிய நிறுவனமாகும் மற்றும் எல்லாவித சமுதாயங்களிலும், எல்லா நிலையான பண்பாட்டிலும் திருமணம் காணப்படுகிறது. முதலில் இங்கு நாம் இந்தியாவில் இந்துக்கள் திருமண முறைகளில் உள்ள முக்கிய தனிச்சிறப்புகளை ஆய்வோம்.

திருமணம் என்பது ஒரு ஆணும், பெண்ணும் சமயச் சடங்குகளோடு, சான்றோர்கள் முன்னிலையில்

கைப்பிடித்தலையே திருமணம் என்று வர்ணிக்கிறோம். இந்து திருமணத்தில் சமயச் சடங்குகளை செய்தால் தான் திருமணம் நிறைவு பெறுகிறது. முக்கியமான சமயச்சடங்குகளாகிய ஹோமம் வளர்த்தல், மணப் பெண்ணும் மணமகனும் ஒன்றாக ஏழு அடி எடுத்து வைத்தல் போன்றவைகளாகும். இச்சமய சடங்குகள் செய்து திருமணத்தை முடித்தால் தான் இந்து திருமணம் மிகவும் புனிதம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்து திருமண பந்தத்தில் சேர்ந்த மணமக்கள் அவர்கள் விருப்பப்படி மணமுறிவு செய்து கொள்ள முடியாது, அவர்கள் இறக்கும் வரை பிணைக்கப்பட்டவர்களாக உள்ளார்கள், இந்து திருமணம் புனிதமானது என்று அழைக்கப்படக் காரணம் கணவன், மனைவி இருவரும் ஒருவரோடொருவர் பொருந்தாததை வெல்லுதலேயாகும், ஒருவன் திருமணத்தைச் சமரச இணக்கத்தாலும், ஒத்துப் போதலினாலும், நிச்சயமாக வெற்றிகொள்ளமுடியும். குடும்பத்திற்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் திருமணம் ஓர் சமூகக் கடமையாகிறது, திருமண வாழ்வில் எந்த ஒரு கணவனும் மனைவியும் தன் சுயநலத்திற்கு இடமளிக்க இயலாது, நிரந்தரத்தொடர்புடன் உடல் சார்ந்த, சமூகம் சார்ந்த தெய்வநிலைக்குரிய காரணங்களால் பால் இன்பத்திற்காகவும் இனப் பெருக்கத்திற்காகவும், தர்மத்தைமேற்கொள்ளவும் ஓர் ஆணையும் பெண்ணையும் திருமணம் இணைக்கிறது. ஆசை மனிதர்களின் உயிராற்றல் பெற்றதாக உள்ளது. அது மன நிறைவு அடைய வேண்டியுள்ளது. மனிதர்களின் விருப்பம் நிறைவேறாமல் திருப்தி அடைவதில்லை. பால் விருப்பம் பூர்த்தி அடையாமல் ஒருவன் முழுமையான தனித்தன்மையைப் பெற முடியாது, இதற்குத் திருமணம் ஓர் அரணாக அமைந்துள்ளது, அது மனித இனத்தின் சீரான வளர்ச்சியை உறுதிப் படுத்துகிறது. இனவிருத்தியை இரண்டாவது முக்கியச் செயலாகத் திருமணம் காண்கிறது. திருமணத்தின் மூன்றாம் செயல் தர்மம். தர்மம் எனப்படுவது கடமை. இந்துக்களின் கடமை நான்கு முறை வர்ணாஸ்ரம தர்மத்தில் குறிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சியை அடைய ஒவ்வொரு தனிமனிதனும் தர்மத்தை கடைப்பிடித்து ஒழுகிவர வேண்டியதாயிருக்கிறது. வாழ்க்கையின் நான்கு நிலைகளான பிரம்மச்சர்யம், இரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாசம் எனப்படுகின்றன. ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பணி

விதிக்கப்பட்டிருக்கிறது. அதனை அவன் நிறை வேற்றக் கடமை பட்டவனாகிறான்.

மனுதர்மசாஸ்திரத்தின் படி திருமணமாகாத ஒருவனால் இறப்பிற்குப் பின் முக்தி அடைய முடியாது. இந்து வேதங்களின் படியும் திருமணம் தவிர்க்க முடியாத ஒன்றாகும் ஏனெனில் ஒரு பெண்ணுடன் திருமண உறவு கொண்டால் தான் ஒரு மனிதனால் 'கிரகஸ்தா' சிரமத்தில் பங்கு பெற முடியும்.

## திருமணத்தின் காரணங்களும் இயற்கை நிலையும்

குடும்ப அமைப்பில் திருமணம் என்ற நிறுவனம் பால் மனமகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது வழக்கமாக முறைப்படுத்தப்பட்டு சமுதாயம் சார்ந்த வகையில் அனுமதி பெற்றுள்ளது. பால் விருப்பமானது, உடல் நல முடைய சராசரி உடல் சார்ந்த வாழ்க்கைக்குத் திருப்தி அடையும் குறிப்பாகக் கொள்ளமுடிகிறது, சமுதாயத்தில் மக்கள் மரபுப்படி பால் இன்பத்தை பெற திருமணத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். உளவேட்கை ஓர் ஆணை, பெண்ணை நாடச்செய்கிறது. ஒரு பெண்ணை, ஆணை நாடச் செய்கிறது. உளம் சார்ந்த தேவைகள் மனிதனின் உணர்ச்சிகள் சார்ந்த திருப்பங்களாகும், விருப்பம், அன்பு, பாசம் மனிதனின் உணர்வுகள் என அழைக்கப்டுகின்றன, திருமணத்தில் இந்த உணர்வுகள் எல்லாம் பூர்த்தியடைகின்றன. அவ்விருவரும் குழந்தையிடத்தில் அன்பு, பாசம் கொட்டி வளர்க்கிறார்கள். சமுதாயத்தின் பண்பாட்டிற்கேற்ப உயிர் சார்ந்த, உளம் சார்ந்த தேவைகள் இவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன.

பொதுவாக, பாலினத் திருப்தியே திருமணத்தின் ஆதிக்கமுடைய உள்நோக்கமாக அமைந்துள்ளது. மேலும் நாம் குழந்தைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், சமூக இயந்திரச் செயல் முறையின் பொறுப்பிற்கு உரியதாக ஆக்கவும் விரும்புகிறோம். திருமணம் பண்பாட்டினை ஒரு தலை முறையிலிருந்து மற்றதற்கு ஒப்படைக்கிறது. எடுத்துக் காட்டாக, பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கிறார்கள். அது தொடர்ந்து நிற்கும் பண்பாக

அவர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் தொடர்கிறது. மக்களின் பொருளாதார அமைப்பு இரு பாலருக்கும் இடையேயுள்ள கூட்டுறவும், உழைப்புப் பங்கீடும் சார்ந்ததாய் உள்ளது. திருமண வாழ்வில் வேலைகள் பாலியல்பிற்கும், வல்லமைக்கும் ஏற்ப கணவன், மனைவிக்கு பிரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக ஆண்கள் ஏர் உழுதல், விவசாயம் செய்தல் போன்ற கடினமான வேலைகளையும், பெண்கள் குழந்தைகளையும் இல்லத்தையும் பராமரிக்கும் சுலபமான வேலைகளையும் செய்கிறார்கள். இரு பாலரும் சமுதாயத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒருவர் மற்றொருவருடன் திருமணம் என்ற நிரந்தரத் தொடர்பால் பிணைப்பு ஏற்படும் போது பொருளாதார அமைப்பின் நிரந்தர செயலாற்றல் ஏற்படுகிறது.

திருமணம் பற்றிய பிணைப்பின் இயற்கை மரபு எங்கும் இயல்பாகவே உள்ளது. அதன் சமூக அமைதி பொதுவாக சமூகத்திற்குரிய சடங்குகளை பெற்றுள்ளது. அது இரு எதிர்பாலர்களிடையே ஒருவருக்கொருவர் பால் சார்ந்ததும் சமூக பொருளாதாரத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள அதிகாரம் வழங்குகிறது. இந்தத் திருமணப் பிணைப்பு இரு தனி மனிதர்களையும் ஒன்று சேர்ப்பது மட்டுமின்றி இரு குடும்பங்களையும் ஒன்றிணைக்கிறது. அது தனி மனிதருக்குரிய மன நிறைவுக்குரிய வடிவமைக்கப்பட்டுள்ள கருவியல்ல. அது ஒரு சமூக இயந்திர நுட்பம், அது சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி வளர்க்கிறது. நாகரீக சமுதாயத்தில் திருமணம் தனித் தன்மை கொண்டதாகவே இருக்கிறது.

## திருமண வகைகள்

திருமண முறையில் ஒரு ஆண் எத்தனை பெண்களை மணக்கிறான் என்றும் ஒரு பெண் எத்தனை ஆண்களை கணவனாகக் கொள்கிறாள் என்பதைப் பொருத்தும் திருமணம் வகைப்படுத்தப்படுகிறது.

## ஒருதார மணம்

இவ்வகைத் திருமணத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணை மணந்து கொள்கிறான். இவ்வகையில் ஒருவர் உயிருடன் இருக்கும்போது மற்றவர் வேறொருவரை மணக்க இயலாது. இருவரில் ஒருவர் இறந்தால், மற்றவர் மறுமணம் செய்து கொள்ளலாம். மேலும் ஒருதார மணத்தில் மணஉறவிற்கு வெளியே பால் உறவு கொள்ள முடியாது. எல்லாவித நாகரிக சமூகங்களிலும் ஒருதார மணமே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

## பலதார மணம்

ஒரு ஆண் ஒன்றிற்கு மேற்பட்ட பெண்களை மணப்பது பலதாரமணம் என்ப்படுகிறது. அல்லது ஒரு பெண் ஒன்றிற்கு மேற்பட்ட ஆண்களை மணப்பது பல கணவர் மனம் எனப்படும். இது பல் அரிவை மணம், பல ஆண்மணம் என பலவகைப்படுகின்றது.

## பல் அரிவை மணம்

ஒரு ஆண் பல பெண்களை ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொள்வது பல அரிவை மணம் என்று அழைக்கப்படுகிறது. வேதகால இந்தியாவில் இம்முறை நிலவியது. இது 'காண்ட்' பைஷா போன்ற பழங்குடி மக்களிடையே காணப்படுகிறது. இதனால் அவன் செல்வம் பெருகும். பல மனைவிகளும் உழைப்பதின் மூலம் கணவனின் செல்வம் செழிக்க வழியுள்ளது. இதனால் இம்முறை சில சமுதாயங்களில் மதிப்புக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

## பல் ஆண் மணம்

பல ஆண்கள் ஒரு பெண்ணை மனைவியாகக் கொள்வது பல ஆண் மணம் எனப்படும். திரௌபதியை பாண்டவர்கள் மணந்தது இதற்கு எடுத்துக்காட்டாகும். "காசர்" "தண்டர்" போன்ற பழங்குடியினரிடம் – பல ஆண் மணம் இப்பொழுதும் இருந்து வருகிறது. ஆண்களை விட

பெண்கள் குறைவாக இருத்தல், ஆண்கள் பரிசப் பணம் பெண் வீட்டிற்குக் கொடுக்க இயலாத நிலை, பெண்ணை மணந்து தனிக் குடும்பம் நடத்த இயலாத நிலை, வருவாய் பற்றாக்குறை இதற்குக் காரணமாகின்றன. இது போன்ற பல காரணங்களால் பல் கணவர் மணம் தொடர்கிறது.

## புற மணம்

ஒரு குறுதி உறவு கொண்ட உறுப்பினர்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய குழுக்கள் புறமணக்குழுக்கள் என்று அழைக்கப்படும். குருதி உறவில் மிகவும் நெருங்கியவர்களுக்கு இத்தடைகள் உள்ளன. ஒரே கால்வழி வந்தவர்களிடையே திருமணம் நடக்கக் கூடாது. நம் நாட்டில் இத்தகைய புறமணக்குழுக்கள் உள்ளன. அவைகள் கோத்திரப் புறமணம், பிண்டா புறமணம், பிறாவர புறமணம், கிராமப்புற புறமணம், குலவழிக்குறி புறமணம் எனப்படும்.

## கோத்திர புறமணம்

இவ்வழக்கம் உயர் சாதி மக்களிடம் காணப்படுகிறது. இவ்வுறுப்பினர்கள் தங்கள் கோத்திரத்தில் இல்லாமல் வேறு கோத்திரத்தில் மணம் செய்கிறார்கள். தன் கோத்திரத்தில் உள்ள பெண்களைச் சகோதரிகளாக நினைப்பதே இதற்குக் காரணமாகும் மற்றும் உறுப்பினர்கள் ஒரே குருதி உறவு கொண்டவர்கள் எனக் கருதித் திருமணம் ஒரே கோத்திரத்தில் தடை செய்யப்படுகிறது.

## பிறாவர புறமணம்

உயர்சாதி மக்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது. சமய நிகழ்ச்சிகளில் ஒரு சமயத்தலைவர் அல்லது மகானின் பெயர் பயன்படுத்தப்படுமானால் அவர்கள் அது "பிறாவர" என அழைக்கப்படுகிறது.

## கிராமப் புறமணம்

பல இந்தியப் பழங்குடி மக்கள் இன்றும் இதைப் பின்பற்றுகிறார்கள். தங்கள் கிராமத்திற்கு வெளியில் வேறு கிராமத்தில் திருமண உறவு கொள்வது அங்கீகரிக்கப்பட்ட முறையாகும். மத்திய பிரதேசத்தில் உள்ள முண்டா இனப்பழங்குடி மக்களிடம் இவ்வழக்கம் உள்ளது. ஒரு கிராமத்தில் உள்ளவர்கள் உறவினர்கள் எனக் கருதிக் கிராமப் புறமணம் ஏற்பட்டுள்ளது.

## பிண்டா புறமணம்

இந்துக்களில் "பிண்டா" க்களுள் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. பிண்டா யார் என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் பலவித கருத்துக்கள் நிலவிவருகின்றன. ஒரே பெற்றோர்கள் வழியைக் கொண்டவர்கள் "சபிண்டா" என்று மிட்டகுஷர் கூறகிறார். *பிரலிஸ்பதி* என்பவர் குழந்தை ஐந்து தலைமுறை தாய் வழியையும், ஏழுதலைமுறை தந்தை வழியைச் சார்ந்தது என்றும் அக்குழுவில் மண உறவு கொள்ள முடியாது என்றும் கூறுகிறார்.

## குலவழிக்குறி புறமணம்

ஒரே குறி அதாவது குலமரபுச் சின்னம், ஒரு மரத்தையோ, விலங்கையோ, இயற்பொருள் சின்னமாகக் கொண்டு வழிபடுபவர்கள். இவ்வாறு ஒரே குல மரபுச் சின்னம் உடையவர்களுடன் திருமண உறவு கொள்வதில்லை.

## அகமணம்

ஒருவன் தன் குழுவைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதே அகமணம் என்று அழைக்கப்படுகிறது. வேறு குழு பெண்ணைத் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்வதில்லை. இந்து சமயத்தைச் சார்ந்தவன்

வேறு சாதியிலோ அல்லது கிளைச் சாதியிலோ திருமணம் செய்வதில்லை. சமூக வகுப்புகளிடையேயும் அகமணம் தான் வலியுறுத்தப்படுகின்றது. உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள் சாதாரணக் குடும்பங்களில் திருமணம் செய்யும் வழக்கமில்லை. பழங்காலத்தில் அடிமையாக இருந்த ஆண், அடிமைப் பெண்ணைத்தான் திருமணம் செய்து வந்தான்.

## சாதி அகமணம்

இம்முறைத் திருமணத்தில் சாதிக்குள்ளேயே திருமணம் நடைபெற வேண்டும். மீறி வேறு சாதியில் திருமணம் நடந்தால் அவர்களைச் சாதியிலிருந்து அகற்றிவிடுவார்கள். ஆனால் தற்போது சாதிவிட்டு சாதி திருமணங்கள் நடைபெறுகின்றன. தமிழக அரசும் அதனை ஆதரித்து வருகிறது. இதனால் ஒற்றுமையுணர்வு ஏற்படும் என்றும், சாதிப் பூசலைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வகுப்பு அகமணம்

இவ்வகைத் திருமணம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரிடையே நடைபெறுகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட தகுதி உடையவாகளிடமே திருமண உறவு ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

## துணைச்சாதி அகமணம்

இத்தகைய திருமணம் துணை சாதி இனத்துடன் உறவு ஏற்படுத்துகிறது. உதாரணமாக வெட்டர் மக்கள் தங்கள் இனத்தில் அன்றி வேறு இனத்தில் திருமண உறவு கொள்ளமாட்டார்கள்.

## சாதி விட்டுச்சாதி திருமணம்

ஒரு ஆணும் பெண்ணும் வெவ்வேறு சாதியினராய் இருந்து திருமணம் செய்துகொள்வது சாதிவிட்டுச் சாதி திருமணமுறை என்று சொல்லப்படுகிறது. இது முற்கால இந்தியாவில் இருந்ததாகச் சமூகவியல் வல்லுனர்கள் கூறுகிறார்கள். வர்ணாச்சிரம முறையில்

சாதிமுறை புகுந்ததால்தான் அகமண முறைச் சட்டங்கள் ஏற்பட்டது. அகமணமுறை சமூக நடைமுறை வளர்ச்சிக்கு ஒரு தடையாக உள்ளது. நாட்டிற்கு உண்மையுடைவர்களாக இல்லாமல் சாதிக்கு உண்மை உடையவர்களாக இருக்கிறார்கள், இதனால் சாதி பூசல் ஏற்படுவதை நாம் காணமுடியும். சாதிப்பூசல்களினால் அரசாங்க வளர்ச்சித்திட்டங்கள் நன்முறையில் செயல்படுத்த இயலவில்லை, அகமணம் பலதேச வளர்ச்சியைப் பாதிக்கிறது. ஒரு சாதியில், பொருத்தமான மணமகனைத் தேடும் போது பின்வருகின்ற சிக்கலான வரதட்சணை, பொருத்தமற்ற திருமணங்ள், பரிசப்பணம் போன்ற கேடு கெட்ட செயல்களைத் தவிர்க்கமுடியவில்லை. சாதிவிட்டுச் சாதித் திருமணம் செய்தால் இப்படிப்பட்ட செயல்களுக்குச் சமுதாயத்தில் ஒரு முற்றுப்புள்ளியை வைக்கமுடியும். இது நாட்டு ஒற்றுமையையும், சனநாயகக் குறிக்கோள்களையும் வளர்க்க உதவுகிறது.

## சாதி விட்டுச் சாதி திருமண முறைகள்

அனுலோமா (அல்லது) உயர்சாதித் திருமணமுறை பிரதிலோமா அல்லது கீழ்ச்சாதி திருமண முறை என்று இரண்டு வகையாகப் பிரித்துள்ளார்கள்.

## அனுலோமா

இத்திருமண முறையில் உயர்சாதி ஆண்மகன் தன்னை விடத் தாழ்ந்த சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளளுதல் ஆகும். இந்துத் திருமண முறைப்படி ஒரு பெண் திருமணத்திற்கு முன் தந்தையின் சாதித் தகுதியைப் பெற்றிருக்கிறாள். திருமணத்திற்கு பின் கணவனின் சாதித் தகுதியைப்பெறுகிறாள். இதனால் உயர்சாதி ஆண், தாழ்ந்த சாதிப்பெண்ணைத் திருமணம் செய்யும்போது அவள் உயர்சாதி அந்தஸ்தை பெறுகிறாள். இதனால்தான் பெண்கள் ஆசாரவிதிக் கற்பை இழக்காமலிருக்க மனு போன்றோர் இம்மணத்தை ஆதரித்தார்கள். ஒருவன் அவன் சாதியிலோ அல்லது அவனுக்குக் கீழ்ப்பட்ட சாதியிலோ திருமணஉறவு கொள்ளலாம். ஆனால் ஒரு பெண்

தன்சாதியிலோ அல்லது அவள் சாதிக்குமேலோதான் திருமண உறவு கொள்ள வேண்டும்.

### பிரதிலோமா

இதில் கீழ்சாதி ஆண் மேல்சாதிப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதே ஆகும். ஆனால் இவ்வகைத் திருமணம் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. காரணம் முன்பு சொன்னதுபோல் திருமணத்திற்கு பின்பு ஒருபெண் தன் கணவனின் சாதியைச் சேர்ந்தவளாகக் கருதப்படுகிறாள். அது போல் உயர் சாதியைச் சார்ந்தவள் கீழ்சாதி ஆணைத் திருமணம் செய்து கொள்ளும்போது அப்பெண் தன் குடும்பத் தகுதியை இழந்தவளாகிறாள். இது அவள் ஆசார விதிக் கற்பை இழந்ததாகக் கருதப்படுகிறது.

### நெருங்கிய உறவினர் முறை திருமணம்

இது ஒருவகைப் புறமணமாகும். இது பரிசுப் பணம் கொடுப்பதிலிருந்து தவிர்க்கப்படுகிறது. இது அவ்வீட்டிலேயே சொத்துக்களைக் கொடுத்துப் பாதுகாக்கவும் வழி செய்கிறது. மாமனாரால் தன் மனைவிக்கு வழங்கப்படும் பரிசுப்பணம் தன் குடும்பத்திற்கே தன் பெண்ணைத் தன்தாயின் சகோதரன் மகனுக்கு மணம் செய்து கொடுப்பதாகும். இது போல் தாய் மாமனின் மகளைத் திருமணம் செய்து கொள்வதால் குடும்ப ஒற்றுமை வலுப்படுகிறது.

### மதனி மணம்

இறந்து போன சகோதரரின் மனைவியை ஒருவன் திருமணம் செய்து கொள்வதை மதனி மணம் என்கிறோம். இறந்து போன சகோதரனின் உடைமைகளைப் பெற்றுக் கொள்வதைப் போல மனைவியையும் ஒருவன் பெற்று கொள்ள உரிமை உண்டு என்று கருதப்படுகிறது. அண்ணன் இறந்துபோனால் தம்பி மதனியைத் திருமணம் செய்து கொள்ளலாம். அப்பெண் அக்குடும்த்திலேயே இருக்க இம்மணம் வழிசெய்கிறது.

## மைத்துனி மணம்

ஒருவன் தனது மனைவி இறந்த பிறகு அவன் மனைவியின் சகோதரியைத் திருணம் செய்து கொள்வது மைத்துனி மணம் என்று அழைக்கப்படும். இவ்வகைத் திருமணம் குடும்ப ஒற்றுமையைப் பலப்படுத்துகிறது. ஒருவனின் மனைவி இறந்தபிறகு அவளின் குழந்தைகளைப் பேணி வளர்க்க மைத்துனி மணம் வாய்ப்பளிக்கின்றது. சகோதரியின் குழந்தைகளாக இருப்பதனால் இம்மனைவி கண்ணுங்கருத்துமாகக் கவனித்துக் கொள்வாள். சந்தா பழங்குடியினரிடம் இத்தகையத் திருமணம் காணப்படுகிறது.

## குடும்பம் (Family)

• சமூகத்திலுள்ள எல்லா குழுக்களைக் காட்டிலும் அதன் அங்கத்தினருடன் தொடர்ச்சியான, மிகவும் நெருக்கம் வாய்ந்தது குடும்பமேயாகும். பிறப்பு முதல் இறப்பு வரை மனிதவாழ்வில் எல்லா நிலைகளிலும் குடும்பம் மாறாத சக்தியாக இருந்து வருகிறது. குடும்பத்திலிருந்து தான் வாழ்க்கையின் முதல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறோம். ஒரு சில தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக நாம் மற்ற குழுக்களிலும், நிறுவனங்கலிலும் சேர்ந்துகொள்கிறோம். இதற்கு மாறாகக் குடும்பம் எப்போதும் நம்முடனேயே இருக்கிறது.

### விளக்கம்

குடும்பம் என்பது திருமணம், இரத்தஉறவு அல்லது தத்தெடுத்தல் போன்ற உறவுகளால் ஐக்கியமான பலர் ஓர் இடத்தை அமைத்து கணவன் மனைவி, தாய், தந்தை, மகன், மகள், சகோதரன், சகோதரி என்ற முறையில் அவரவர் சமூகப் பங்கிற்கு ஏற்றவாறு செயலெதிர்ச் செயலிலும் கருத்துப் பரிமாற்றத்திலும் ஈடுபட்டு, பொதுவான பண்பாட்டைத் தோற்றுவித்து அதைப் பராமரித்து வரும் ஒரு குழு என்று பர்ஸெர்லாக் (Burcer lock) வரையறுக்கிறார்.

எல்லா மனிதக் குழுக்களிலும் குடும்பம் ஒரு முக்கிய முதல் நிலைக் குழுவாக உள்ளது. தந்தை, தாய் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் அடங்கிய ஒரு சிறு சமூகக் குழுவாக உள்ளது. இக்குழு அல்லது குடும்பம் ஒரு இடத்தையோ அல்லது இடச்சூழலையோ குறிப்பதன்று, குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் சமூக உறவு முறைகளைக் கொண்டு பின்னப்பட்டதாகும். குடும்பம் மனிதர்களின் உலகளாவிய நிறுவனங்களுள் ஒன்றாக உள்ளது, இதற்குக் காரணம் எல்லா நிலைகளிலும் பண்பாடு வளர்ச்சி அமைந்துள்ளதேயாகும்.

குடும்பம் என்பதற்கு ரோமானிய வார்த்தை 'பார்முலாஸ் வேலையாள் என்ற பொருளைக் கொடுக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு குடும்பம் என்ற வார்த்தை பிறந்தது. பாலுணர்வினால் போதுமான அளவு துல்லியமானதும் நிலைத்திருக்கிறதும் இனப்பெருக்த்தைக் கொடுத்து குழந்தைகளை வளர்க்கும் தன்மைவாய்ந்ததுமான ஒரு குழுவே குடும்பம் எனப்படுகிறது என்று மெக்கைவர் (Mac Iver) கூறுகிறார்.

நிலைத்துள்ளதுமான கணவன், மனைவி குழந்தையுடனோ, குழந்தை அற்ற நிலையிலோ, அல்லது ஆணும் பெண்ணும் குழந்தையுடன் சேர்ந்து உள்ளதே குடும்பம் என்று நிம்காப் (Nimkolf) கூறுகிறார்

மனிதர்கள் குழு ஒருவருக்கொருவரிடமுள்ள இரத்த சம்மந்தப்பட்ட உறவை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் ஒருவருக்கொருவர் உறவினர்கள் ஆவதே குடும்பம் என்று டேவிஸ் (Davis) கூறுகிறார்.

உயிரியல் சமூகம் சார்ந்த கணவன், மனைவி குழந்தைகள் ஒன்று கூடிய இணைப்பே குடும்பம் என்று (Elliott & Merrill) இலியட் மற்றும் மெரில் அழைக்கிறார்கள்.

## பண்புக் கூறுகள்

குடும்பம் கணவன், மனைவி மற்றும் குழந்தைகளைக் கொண்டதாகும் பெற்றோர்கள் குழந்தைகளிடம் பாசம் வைத்து அவர்களைப் பாதுகாக்கிறார்கள், பேணி வளர்க்கிறார்கள், கல்வியறிவை ஊட்டுகிறார்கள்.

ஆணிற்கும் பெண்ணிற்கும்இடையில் குடும்பம் நிரந்தர பந்தத்தை ஏற்படுத்துகிறது. எல்லா நாடுகளிலும், எல்லாப் பண்பாடுகளிலும் திருமணத்திற்குப் பிறகு ஒரு ஆணிற்கும் பெண்ணிற்கும் நிரந்தர உறவு ஏற்படுகிறது. இந் நிரந்தரத் தன்மை திருமண உறவில் குழந்தைகளைப் பெறவும் பேணி பராமரிக்கவும் குடும்பம் தொடர்ந்து இயங்கவும் உதவியாக உள்ளது.

திருமணத்தின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று நிரந்தரப் பாலுணர்வு உறவை நிலைக்கச் செய்தலேயாகும். இது குடும்பம் நிலைபெற்றிருக்க உதவி செய்கிறது. திருமணமின்றிப் பலவித உறவுகள் இருந்தாலும் குடும்பம் அமையாது. மற்றும் மணமுறிவு, கணவனால் கைவிடப்படுதல் போன்றவைகளால் திருமண உறவில் பிளவு காணும்போது, குடும்பச்சிதைவு ஏற்படுகிறது. நிரந்தரமான மண வாழ்க்கைக்குரிய உறவு இருக்கும் போது தான் குழந்தைகளை நன்முறையில் பராமரிக்கவும், வளர்க்கவும் முடியும்.

குடும்பத்தின் முக்கியத் தனிச்சிறப்பு அதன் உறுப்பினர்களிடம் நிலைத்திருக்கும் இரத்த சம்பந்தமேயாகும். இக்கருத்தின் உறுப்பினர்கள் பொதுவான மூதாதையினரை பெற்றிருக்கிறார்கள். குழந்தையைப் பெறாதவர் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்கிறார்கள்.

குடும்ப உறுப்பினர்கள் பொருளியல் தேவைளைத் திருப்திபடுத்த பணம் தேவைப்படுகிறது. குடும்பத்தலைவன் எதோ ஒரு தொழிலில் ஈடுபட்டுக் குடும்ப நிர்வாகம் செய்யப் பணம் சம்பாதிக்கிறான். இவ்வாறு ஒவ்வொருவரும் மற்ற உறுப்பினர்களின் கடமையையும், உரிமையையும் குடும்பத்தில் தெரிந்திருக்கிறார்கள்.

மாறுபட்ட பண்பாடுகளுக்கேற்ப குடும்பத்திலுள்ள உறுப்பினர்களிடம் பணம் சம்பாதிக்கும் தன்மை மாறுபட்டுள்ளது. எல்லா உறுப்பினர்களும் வாழ வழி வகுக்கிறது.

குடும்பத்தில் உள்ளவர்கள் வசிக்க ஒருவீடு அல்லது குடும்ப அமைப்பு தேவைப்படுகிறது. அக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஒரே உறைவிடத்தில் வசிக்கிறார்கள். வீடு இன்றிக் குழந்தைகளைப்பெற்றுப் பராமரித்தல் சிரமமாகும். நாடோடி மக்கள் கூட ஒன்றாக ஒரே இடத்தில் வசிக்கிறார்கள்.

ஒவ்வொரு குடும்பமும் ஒரு பெயர்க்கொகுதி கொண்டுள்ளது. அதுகுடும்பத்தை அடையாளம் காண உதவுகிறது. திருமணத்திற்குபின்பு வழக்கமாக மனைவி அவள் கணவனுடன் சென்று கணவன் உறவினர்களுடன் சேர்ந்து கொள்கிறாள். இதனைத் தந்தையிடம் தங்கும் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவியுடன் சென்று அவள் உறவினர்களுடன் சேர்ந்து வாழ்தலைத் தாயிடம் தங்கும் குடும்பம் எனப்படுகிறது.

## குடும்ப நிறுவனத்தின் தனிச்சிறப்பு

மனித வரலாற்றில் குடும்பம் முதல் சமூக நிறுவனமாக இருக்கிறது. பண்டையக்காலங்களில் மனிதன் சிறு குடும்பங்களில் வசித்தான். அது எவ்வித அமைப்பும் இல்லாமல் ஒரு நிரந்தரமற்றதாக இருந்தது. மனித இனத்தின் உயிரியல் சார்ந்ததும் உளவியல் சார்ந்ததுமான தேவைகளைப் பூர்த்தி செய்ய அது உதவியது. பொதுவாகக் குடும்பம், கணவன், மனைவி மற்றும் அவர்களின் குழந்தைகள் அடங்கியதாகும். நிலையான விவசாயத் தொழில் குடும்பத்தை நிலைப்படுத்தியது.

குடும்பம் சமுதாயத்தின் அடிப்படைக் கூறாக இருக்கிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளை அது பூர்த்தி செய்கிறது. தற்போது குடும்பத்தின் செயல்களை மற்ற நிறுவனங்கள் செய்துவருகின்றன. இருந்தும் அநேக

உயிரியல் சார்ந்ததும், உளவியல் சார்ந்ததுமான தேவைகளைக் குடும்பம் இல்லாமல் பூர்த்தி செய்ய முடியாது. குழந்தையின் தாய்ப்பாலின் சிறப்பினை வேறு எவ்வகையிலும் பெற முடியாது என்று ஹெவ்லக் இலிஸ் கூறுகிறார்.

பெற்றோரின் பராமரிப்பு, பாசம், அன்பு, குழந்தையை நன்றாக வளர்க்க ஆயத்தப்படுகின்றன. அவ்வித வளர்ச்சிகள் குடும்பத்தில்தான் திருப்தி படுத்தப்படுகின்றன. மனிதன் ஓர் சமூக விலங்கு அதனைக் குடும்பம் இன்றி அவனால் வசிக்கமுடியாது ஆகையால்தான் குடும்பம் சமுதாயத்தின் அடிப்படைக் கூறாகக் கருதப்படுகிறது.

குடும்பம் மனித சமுதாயத்தின் மையக்கருவாக உள்ளது. குடுமபத்திலுள்ள உறுப்பினர்கள் குடும்பத்தின் பொது நன்மைக்காகப் பாடுபடுகிறார்கள். உழைப்பு பங்கீடு மற்றும் உறுப்பினர்களின் செயல்கள் குடும்பச் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றன. ஒரு உறுப்பினர் மற்றவர் நலனுக்காக உழைப்பதை நாம் இங்குதான் காணமுடியும். இதனால் தான் குடும்பம் சமுதாயத்தின் மையக்கருவாக உள்ளது.

நன்றாக அமைக்கப்பட்ட குடும்பங்கள் நல்ல சமூக அமைப்புகளின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கின்றன. சமூகச் சீர்குலைவிற்கு முக்கிய காரணம் குடும்பசீர்குலைவேயாகும். குடும்பத்தில்தான் மனிதர்களின் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. சமூகமயமாதலுக்குக் குடும்பம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த செயற்பாடாக அமைந்துள்ளது.

இனத்தின் கல்விக்கும், பாதுகாப்பிற்கும், குடும்பம் ஒரு சமூகச்செயற்பாடாக இருக்கிறது. குடும்பத்தில் குழந்தைகள் நல்ல குணங்களான உண்மை பேசுதல், இரக்கம் காட்டுதல், நற்பணிவு, பொறுப்புடைமை, நேர்மை முதலியவற்றைக் கற்றுக் கொள்கின்றன. குழந்தையின் தனித்தன்மைக்கு இடமளித்துப் பேச்சுச் சுதந்திரம்,

குழந்தையின் நல்லெண்ணங்களை ஊக்குவித்து குழந்தையின் தனித்தன்மை நன்கு வளர்ச்சி அடைய உதவுகிறது.

குடும்பத்தில் பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டுகிறார்கள். குழந்தைகளின் எல்லாச் செயற்பாடுகளிலும் பெற்றோர்கள் பங்கு கொள்கிறார்கள் மற்றும் குழந்தைகளுக்குச் செயல்முறைக் கல்வியை போதிக்கிறார்கள். இதனால்தான் *குழந்தைகளுக்கு முதல் பள்ளிக்கூடம் குடும்பம் என்றும், முதல் குரு தாய் என்றும்* கூறுகிறார்கள். குழந்தையின் பண்பும் தனித்தன்மையும் குடும்பத்தினால் உருவாக்கப்படுகின்றன. சமுதாயத்தின் பண்பாட்டை போதிக்கும் முக்கியச் செயல் குடும்பத்தினால் செயல்படுத்தப்படுகிறது. ஆகையால் இது தனித்தன்மை வய்ந்த சமூதாயச் சார்புடமையாக்கும் செயலாகிறது. சமுதாயத்தின் பொருளாதார சமய அரசியல் வாழ்க்கை மாற்றம் காண்பதுபோன்று குடும்பத்திலும் அதன் பண்புகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. இவ்வகையில் குடும்பம் தனிமனிதனைச் சமுதாயத்தின் பண்பாட்டிற்கேற்ப சமூக உறவை ஏற்படுத்துகிறது.

## குடும்பம் சமூகக் கட்டுப்பாட்டின் ஒரு செயற்பாடு

சமூக வாழ்க்கை என்பது சமூக உறவினால் ஆன வலையைப்போன்றது என்று விவரிக்கப்படுகிறது. சொத்துக்களின் சம்பந்தத்தைக் காக்க முறையான கடமைகளும், உரிமைகளும் வகுக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள் பூசலில் ஈடுபடாமலிருக்க இது உதவிபுரிகிறது. சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள் சுமூக உறவை வளர்க்க அனேகக் கட்டுப்பாடுகள் உள்ளன. வயதானவர்களுக்குக் கீழ்ப்படியவும், மதிப்புச் செலுத்தலும், இளையவர்களிடம் மற்றவர்களிடமும் இரக்கங்காட்டவும் அவர்கள் போதிக்கப்படுகிறார்கள். சமூகச் சட்டங்கள் நிலை நிறுத்த இது உதவி புரிகிறது. ஆண்கள், பெண்கள் இவர்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது. திருமணமாகாத உறுப்பினர்கள், அவ்வயதை அடையும் வரை குடும்பம் அவர்களிடம் கட்டுப்பாட்டை விதிக்கிறது. குடிப்பழக்கம். திருடுதல் போன்ற குற்றங்கள், மற்றும் மற்ற குற்றங்களில்

ஈடுபடாமலிருக்க அது புத்திமதி வழங்குகிறது. சமுதாயம் அனுமதிக்கப்படாத செயல்களை குழந்தைகள் செய்யும் போது, குடும்ப உறுப்பினர்கள் அதைக் கண்டிக்கிறார்கள். நல்ல செயல்களைச் செய்யும் போது அவர்களை ஊக்குவித்துப் பரிசுகளும் கொடுக்கிறார்கள் மற்றும் அவர்கள் கெட்டபழக்கங்களிலிருந்து மறக்கடிக்கப்பட்டு நல்ல வழக்கங்களைப் பின் பற்றச் செய்கிறார்கள்.

குடும்பத்தில்தான் ஒரு தனிமனிதன் சமயச் சடங்குகளையும், நடைமுறைகளையும் கற்றுக் கொள்கிறான். சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு ஆரம்பச் சமயக்கல்வியயை அது அளிக்கிறது. அதை அவன் மீறும் போது தண்டிக்கவும் செய்கிறது. அதனால் தான் குடும்பம் மிகச்சிறந்த சமுகக்கட்டுபாட்டுச் சாதனமாக அமைந்திருக்கிறது.

## குடும்பத்தின் தோற்றம்

குடும்பம் ஓர் உலகளாவிய நிறுவனமாகும் இது எல்லா நிலையான பண்பாட்டு வளர்ச்சிகளிலும் காணப்படுகிறது. ஆகையால் குடும்பத்தின் தோற்றங் காரணமாண கோட்பாடுகளை நாம் விவாதிப்பது தேவையற்ற ஒன்றாகும். இருப்பினும் மேக்கைவர் (MacIver) குடும்பத்தின் தோற்றத்தின் பல கூறுகளைக் கூறுகிறார். அவை பால் ஒழுக்கம், இனப்பெருக்கம் மற்றும் பொருளியல் ஒழுங்கமைப்பு.

### 1. பால் ஒழுக்கம்

இது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உணர்வாகும் இவ்உறவை நிரந்தரமாக மற்றும் ஒரு ஒழுங்கு முறையில் பூர்த்தி செய்யக் குடும்பம் தோன்றியது.

### 2. இனப் பெருக்கம்

மனித வர்க்கம் நிலைத்துநிற்க இனப்பெருக்கம் தேவை. இனப்பெருக்கத்திற்காகவும் குழந்தைகளை

வளர்ப்பதற்கு ஆண், பெண் நிரந்தரமான கூட்டுறவின் தேவையினாலும் குடும்பம் தோன்றியது.

## 3. பொருளியல் ஒழுங்கமைப்பு

பொருளாதாரத் தேவைகளுக்குப் பெண்களும், குழந்தைகளும் ஆண்களையே நம்பி இருக்கிறார்கள். இதற்காக நிரந்தரமான குடும்பம் என்னும் நிறுவனம் தேவைப்படுகிறது.

எத்தனைக் கோட்பாடுகளால் குடும்பத்தின் தோற்றம் விளக்கப்பட்டாலும் அதன் உண்மையான தோற்றத்தைக் கண்டறிவது மிகவும் கடினமாகும்.

## வகைகள்

தங்குமிடம், மூதாதையர் பெயர், தந்தை அல்லது தாயின் ஆதிக்கம் போன்ற வற்றின் அடிப்படையில் சமூகவியல் வல்லுனர்கள் குடும்பத்தைப் பல வகைகளாகப் பிரிக்கின்றனர்.

1. தங்குமிடத்தின் அடிப்படையில் தாயிடந்தங்கும் குடும்பம், தந்தையிடந் தங்கும் குடும்பம், தங்குமிடம் மாறுபடும் குடும்பம் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
2. மூதாதையர் அடிப்படையில் குடும்பத்தைத் தாய்வழிக்குடும்பம், தந்தை வழிக்குடும்பம் என இருவகைப்படுத்தப்பட்டுள்ளது.
3. அளவின் அடிப்படையில் குடும்பத்தைக் கருக்குடும்பம் , கூட்டுக்குடும்பம் விரிந்து பெருகும் குடும்பம் என மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. கருக்குடும்பம் என்பது கணவன், மனைவி அவர்கள் குழந்தைகளுடன் ஒரு வீட்டில் வாழ்வதாகும். கூட்டுக்குடும்பம் என்பது ஒன்றிற்கு மேற்பட்ட தலைமுறையினர் ஒரே வீட்டில் வாழ்வதாகும். விரிந்து பெருகும் குடும்பத்தில் கணவன் மனைவி அவர்தம் குழந்தைகள் மற்றும் உறவினரும் வசித்து வருவதேயாகும்

இந்தியாவில் குடும்பம் என்றால் இந்துக்களின் கூட்டுக்குடும்பமேயாகும்.

## கூட்டுக் குடும்பம் (Joint Family)

கூட்டுக்குடும்பம் என்பது பல கருக்குடும்பங்களின் இணைப்பு என்று கருதப்படுகிறது. அது பெற்றோர்கள், திருமணமான பிள்ளைகள், பெண்கள், முறையே அவர்களின் மனைவிகள், கணவர்கள் பெற்றோர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு ஒன்றாக வாழ்தலேயாகும். இந்துக்குடும்பம் பொதுவாக ஒரு கூட்டுக்குடும்பமாகும் இக்கூட்டுக்குடும்பம். ஒரு வீட்டிலோ அல்லது வீடுகளிலோ ஒரு கூட்டுக் குடும்ப எல்லைக்குள் அல்லது அவ்வீடுகள் மிகவும் விரிவானதாகப் பரவியிருக்கும். சமுதாயத்தில் நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஒரு முதல் நிலைக் குழுவாகும் என்றும் ஒரு சுயபூர்த்தி அடைந்த அங்கம், சரியான அமைப்பைப் பெற்று உண்மையான சம்பந்தப்பட்ட பிரிவினருடன் முதலில் அமைந்து வழங்கபட்டது என்றும் வரலாறு கூறுகிறது. இனத்தில் தோன்றிய இனமக்களுக்காகத் தொடர்ந்து சேவை செய்கிறது. ஆனால் தற்சமயம் இந்தியாவில் அதன் அமைப்பிலும் கடமைகளிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகையால் கூட்டுக்குடும்பத்தின் இயற்கை நிலையையும் அதன் கடமைகளையும் நன்மைகள் மற்றும் தீமைகளையும் இப்பகுதியில் காண்போம்.

இந்துக் குடும்பத்தின் மிக முக்கியப் பண்பு அது இணைந்திருப்பது, இது ஒரு புனிதமான சமூக நிறுவனமாகி மதம், மரபு ஆகியவைகளின் ஆசியுடன் இருக்கிறது. இதில் ஒரு தலை முறைக்கு மேலாக மக்கள் வாழும் கூட்டுத் தொகுப்பாகி, கணவன், மனைவி, கணவனின் பெற்றோர்கள், அவருடைய சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் சில உறவினர்களுடன் ஒரு பொதுவான வீட்டில் வசிப்பார்கள். குடும்பநிர்வாகம் வயதில் மூத்த ஆணிடம் இருக்கும். அங்கத்தினர்களுக்குக் குடும்ப வருமானம், உடைமைகளில் சம உரிமை உண்டு மற்றும் இவர்கள் எல்லோரும் ஒரே சமையல் அறையில் சமையல் செய்த உணவை உண்பார்கள்.

கார்வே (Carvey) என்பவர் கூட்டுக்குடும்பம் ஒருமக்கள் குழுவைக் கொண்டது அவர்கள் ஒரே கூரையின் கீழ் வசித்து, ஒரே அடுப்பில் சமைந்த உணவை உண்டு பொதுவாகச் சொத்தை பெற்று, பிரார்த்தனையில் பங்கு பெற்று ஒருவருக்கொருவர் ஒரு குறிப்பிட்ட குருதி உறவை உடையவர்களாக இருப்பார்கள் என்று வரையறுகிறார்.

## கூட்டுக் குடும்பத்தின் தலையாய பண்புக் கூறுகள்

### 1. அளவில் பெரியது

கூட்டுக்குடும்பத்தின் முதல் முக்கிய தனிச்சிறப்பு அதன் பெரிய அளவு. ஆகையால் ஒரு கூட்டுக்குடும்பம் பெற்றோர்கள், குழந்தைகள், பேரக்குழந்தைகள், நெருங்கிய உறவினர்கள் அடங்கியதாகும். இக்குழுவில் அனேக அடிப்படைக் குடும்பங்கள் ஒன்றாக வசிக்கிறார்கள்.

### 2. பொது வசிக்கும் இடம்

கூட்டுக்குடும்பத்தின் உறுப்பினர்கள்வழக்கமாக ஒரே கூரையின் கீழ் வசிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே உணவை உட்கொண்டு ஒரேவிதமான ஆடை அணிகிறார்கள்.

### 3. பொதுச் சொத்து

சொத்துரிமை, உற்பத்தி நுகர்வு முதலானவைகள் கூட்டு அடைப்படையில் இடம் பெற்றிருக்கின்றன. குடும்பத்தலைவன் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்காக குடும்பத்தைப் பராமரித்துப் பொருட் செல்வமும், அருள் செல்வமும் பெற்றுத் தர பொறுப்புள்ளவனாக இருக்கிறான். குடும்ப உறுப்பினர்களின் வருமானம் அனைத்தும் ஒன்றாகக் குடும்பத்தில் சேர்க்கப்படுகிறது.

### 4. பொதுச் சமயமும் இறைவணக்கமும்

பொதுவாகக் கூட்டுக்குடும்ப உறுப்பினர்கள் ஒரே சமய நம்பிக்கையுடன் ஒரேமாதிரியான தெய்வங்களை வழிபடுகிறார்கள். அவர்கள் ஒன்றாக சமயச்சடங்குகளையும் கடமைகளையும் செய்கிறார்கள். எல்லாவிழாக்களையும் சடங்குகளையும் ஒன்றாகவே கொண்டாடுகின்றனர். அவர்கள் துக்கங்களிலும், சுகங்களிலும் ஒன்றாக ஈடுபடுகிறறார்கள். குடும்பச் சுமையையும் ஒன்றாகவே ஏற்கிறார்கள்.

### 5. பரஸ்பர உரிமைகளும் உதவிகளும்

கூட்டுக்குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒத்த • உரிமைகளும், உதவிகளும் பெற்றுள்ளார்கள். குடும்பத்தலைவன் தவிர மற்றவர்களுக்குத் தனி உரிமை ஏதும் இல்லை. கடமைகள் உறுப்பினர்களிடையே பிரித்து வழங்கப்பட்டிருக்கின்றன.

### கூட்டுக் குடும்பத்தின் குணநலன்கள்

இந்து குடும்பத்தின் சிறந்த பண்பாக என்றும் இருப்பது விருந்தினரை உபசரித்தலேயாகும். விருந்தினரைக் கடவுளுக்கு அடுத்தபடியாக நினைத்து அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று அவர்களின் அகமும் முகமும் மலர உபசரிக்கவேண்டும். விருந்தினரை அவமதிப்பது என்பது மாபெரும் குற்றமாகும். வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்து உணவளித்த பின்னரே குடும்பத்தினர் உணவருந்துவார்கள். இந்துக்குடும்பங்களில் பெண்களுக்கு மதிப்பு நிறைந்த இடம் இருந்தது. எந்த ஒரு மதச்சடங்கிற்கும், வழிபாட்டிற்கும், மனைவி அவசியம் ஆகிறாள். அவளை வீட்டின் இலட்சுமி என்று போற்றி, கிரகலட்சுமி, என்று மிகவும் மதிப்போடு அழைக்கிறார்கள். குடும்பத்தின் அனைத்து உறுப்பினரும் ஒருவருக்கொருவர் அன்பினால் கட்டுண்டவர்களாவர்கள். அங்கு கடமைகளே உரிமைகளைவிட முக்கியமாகக் கருதப்படுகின்றன. இன்றைய நாகரீக உலகில் கூட்டுக் குடும்ப நெறி விவசாயக் குடும்பங்களில் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையில் பல நன்மைகள், தீமைகள் உள்ளன. முதலாவதாக நன்மைகளைப் பார்ப்போம்.

## நன்மைகள்

1. அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே குடும்பமாக வசிப்பதால் பாதுகாப்பு கிடைக்கிறது. தனி மனிதனுக்கு ஓர் இடர் வந்தால் அது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

2. குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தத்தம் திறமைக்கு ஏற்ப உழைத்து அதன் பலனைக் கொடுக்கிறார்கள். அனைவரும் சேர்ந்து உழைப்பதால் வேலைப்பளு சுலபமாகிறது.

3. பொருட்கள் அனைத்தும் அதிகமான அளவில் மொத்தமாக வாங்கப்படுவதால் அவற்றின் விலை குறைக்கப்படுகிறது. எனவே குடும்பச் செலவு குறைகிறது.

4. அனைவரும் சேர்ந்து வேலை செய்வதால் வேலைப்பளு குறைந்து, வேலை சீக்கிரம் முடிவடைகிறது. எனவே அனைவருக்கும் பொதுவாக ஓய்வு கிடைக்கிறது.

5. விதவைகளுக்கும் குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் மற்றும் நோயாளிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது.

6. தியாகம், அன்பு, ஒத்துழைப்பு தன்னலமற்ற செயல், பரந்த நோக்கு இவை அனைத்தும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்றன.

7. சொத்துக்கள் சிதறாமலும், நிலங்கள் துண்டாகாமலும் தவிர்க்கப்படுகின்றன. இப்படிப் பல நன்மைகள் இருந்தாலும் சில தீமைகளும் உள்ளன.

## தீமைகள்

1. உழைத்தாலும் உழைக்காவிட்டாலும் தேவைகள் நிறைவேறி விடுவதால் உறுப்பினர்களிடையே சோம்பல் தனத்தை வளர்க்கிறது.

2. இளைஞர்கள் குடும்பப் பெரியவர்கள் செய்த தொழிலையே மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்பொழுது தான் குடுமப்மானம் காக்கப்படும் என்று குடும்பப் பெரியவர்கள் கருதினார்கள். இதனால் திறமை முடக்கப்பட்டது.

3. தகராறுகள், சச்சரவுகள் ஏற்படவழி வகுக்கிறது.

4. குடும்பத்தலைவன் தகுதி இல்லாதவனாக இருப்பின் மொத்தக் குடும்பமே அவதிப்படும் நிலை ஏற்படுகிறது.

5. பெண்களுக்குத் தனிமை மறுக்கப்படுகிறது. இதனால் அவர்களுடைய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

6. கட்டுப்பாடற்ற இனப்பெருக்கம். ஏனெனில் குழந்தைகளைப் பராமரிப்பது கல்வி வழங்குதல் போன்றவை பொதுவாக இருப்பதால் யாரும் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டியதின் அவசியத்தை நினைப்பதில்லை.

குடும்பத்தில் ஏற்படும் சண்டையிடுதல் வழக்கிடுதல் வரை போகிறது. கூட்டுக் குடும்பத்தில் பழக்கங்களும், மரபுகளும் கடுமையாகப் பின்பற்றப்படுவதாலும், மூடநம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளிப்பதாலும் வழிநடத்திச் செல்பவர்கள் வீட்டின் வயதானவர்களாக இருந்ததாலும், இளைஞர்கள் தன்னம்பிக்கை யற்றும் சுயசார்பத் தன்மையற்றுள்ளனர் புதிய சிந்தனைகளில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. இவ்வாறு கூட்டுக்குடும்பத்தில் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக உள்ளன. மேலும் கூட்டுக்குடும்பம் குடும்பச் சீர்குலைவிற்கு வழி வகுக்கின்றது,

இந்த சீர்அழிவைத் தவிர்க்க முடியாது என்று ஆர்.என்.சர்மா கூறுகிறார்

## கூட்டுக் குடும்பம் சிதைவுறுதலுக்கான காரணங்கள்

### 1. தொழில் மயம்

விவசாயமும் குடிசைத்தொழிலும் நன்றாக இருக்கும் வரை கூட்டுக்குடும்பமுறை செழித்தோங்கியது. ஆனால் இன்றோ பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. அவை இயந்திரங்கள் உதவியால் உருவாக்கும் பொருட்களுடன் இவர்களால் போட்டி போட முடியவில்லை. கிராம நிறுவனங்கள் இதனால் பாதிக்கப்பட்டன. எனவே கிராம மக்கள் நகரங்களுக்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். இவ்வாறு இந்நபர்கள் நகர்வதால் கூட்டுக் குடும்பம் சிதைவு ஆரம்பித்தது.

### 2. மேற்கத்தியப்பாதிப்பு

இந்தியாவில் அதிக அளவில் சமூக நோக்கத்தில் மேற்கத்திய எண்ணங்கள், கருத்துப்பாங்கு செல்வாக்குப் பெற்றிருக்கிறது. தற்காலத்திய திருமணச் சட்டங்கள், விவாகரத்துகள் மேற்கத்திய முறையை பின்பற்றப்பட்டுள்ளன. நம் எண்ணங்கள், பிரத்தியேகமாக இளைஞர்கள், யுவதிகள், பால் சார்ந்த வகையிலும் குடும்பத்திலும் மாற்றத்தைப் பெற்றிருக்கின்றன. தனித் தன்மையில் செல்வாக்கு ஆழமாக இடம் பெற்றுள்ளது.

### 3. செய்தி பரவுதலும் போக்குவரத்து விதரிப்பும்

செய்தி அனுப்புதலும், போக்குவரத்தும் பண்டைக்காலத்தில் சிரமமாக இருந்ததால் குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் ஒன்றாகவே வாழ்ந்து விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார்கள். செய்தித்துறை முன்னேற்றம் அடைந்து போக்குவரத்து விஸ்தரிக்கப்பட்டதால் நகரங்களுக்குச்

சென்று எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டுப் புதிய வீட்டை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

## 4. புதிய நிறுவனங்கள்

முன்பு கூட்டுக்குடும்பம் ஒரு சுய வளர்ச்சியடைந்ததாக இருந்தது ஆனால் தற்போது உணவிற்குப் பல உணவு விடுதிகள் வந்துள்ளன. குழந்தை வளர்ப்புப் பற்றிக் கற்றுத்தர பல நிலயங்கள் உள்ளன. குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளப் பல அமைப்புகள் உள்ளன. கேளிக்கை நிறுவனங்கள் (பொழுது போக்கு) பல ஏற்பட்டுள்ளன. இதனால் கூட்டுக் குடும்பத்தின் முக்கியத்துவம் குறைய ஆரம்பித்தது.

## 5. மாறிவரும் சமூகக் கண்ணோட்டம்

பெரியவர்களுக்கு, இளைஞர்கள் கட்டுப்படுவது என்பது இயலாமல் போய்விட்டது. ஆர்வமும், திறமையும் உள்ள இளைஞர்கள் அடுத்தவர்களால் தாங்கள் ஆதிக்கம் செலுத்தப்படுவதை வெறுக்கிறார்கள். படித்த இளைஞர்கள் தனிக் குடித்தனமே செய்ய விரும்புகிறார்கள் குடும்பம் என்பது ஓர் ஒப்பந்தமே இதில் புனிதத்தன்மை என்பது ஏதும் இல்லை என்ற எண்ணம் வேரூன்றி விட்டது.

## 6. சமூகச்சட்டங்கள்

சமூகச் சட்டங்கள் இந்தியாவில் கூட்டுக்குடும்பந்தை அதிகம் பாதித்தன. அவை

1. திருமணமான பெண்கள் தனித்து வாழ உரிமைச்சட்டம் 1946.

2. இந்துத் திருமணச் சட்டம் 1955.

3. இந்து வாரிசுரிமைச்சட்டம் –1956

இவை நேரடியாகக் கூட்டுக்குடும்பத்ததைச் சார்ந்துள்ளன. இச்சட்டங்களால் கூட்டுக்குடும்பம் பாதிப்புக்குள்ளாகியது.

1. இந்தியாவில் திருமணமான பெண்கள் தனித்து வாழ உரிமைச்சட்டம் 1946–இல். ஏற்பட்டபிறகு பெண்கள் கூட்டுக்குடும்பத்தில் வேலைப்பளு குறைந்து மற்றும் மாமியார் கொடுமையை மேற்கொள்ளும்போது கணவனிடமிருந்து பிரிந்து வாழ வழி செய்தது. மற்றும் அவ்வாறு பிரிந்த பெண்கள் அக்குடும்பத்தில் ஜீவனாம்சம் கேட்டுப் பெறவும் வழி செய்தது. இதனால் கூட்டுக்குடும்பம் சிதைவுற அரம்பித்தது.

2. இந்துத் திருமணச்சட்டம் 1955. இஃசட்டம் கொண்டுவந்த பிறகு எந்த ஒரு கணவனோ, மனைவியோ சில நிலைகளில் விவாகரத்துச் செய்து கொள்ளலாம் என்று கூறுகிறது. அதுவரை கொடுமைகளை அனுபவித்த பெண்கள் இச்சட்டத்திறகுப் பிறகு சிறிய காரணங்களைக் காட்டியும் விவாகரத்துக் கோர ஆரம்பித்தனர். இதுவும் கூட்டுக்குடும்பம் சிதைவுறக் காரணமாக அமைந்தது.

3. இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956. இச்சட்டத்தின்படி பெண்ணுக்குத் தந்தையின் சொத்தில் சம உரிமை உண்டு. அப்பெண் அச்சொத்தை விற்பதற்கும் அடமானம் வைப்பதற்கும், அவள் விருப்பம் போல் எதுவும் செய்ய அனுமதி அளித்துள்ளது. இதனால் கூட்டுக் குடும்பத்திலுள்ள பொதுச்சொத்து பிரிய ஆரம்பித்தது.

இச்சட்டங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டுக் குடும்பத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தின. சகோதரர்கள், சகோதரிகள், பெற்றோர்கள், குழந்தைகள், மனைவி இவர்களிடையில் உறவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. முன்பெல்லாம் பெண்கள் பல கொடுமைகளையும், பழிச்சொல்லையும் பொறுத்துக் கொண்டனர். அவர்களின் சமூக அந்தஸ்தும் மிகவும்

தாழ்ந்து இருந்தது. சில சமயங்களில் மாமியார் கொடுமைகளாலும், மனிதத்தன்மையற்ற நிலையில் நடந்து கொண்டாலும் பொறுத்துக் கொண்டார்கள். ஆனால் சட்டங்கள் அவர்களின் தனி வாழ்க்கைக்கும், நிர்வாகத்திற்கும் வழிசெய்த பிறகு பெண்கள் சட்டத்தின் உதவியால் அடக்குமுறையை எதிர்க்க ஆரம்பித்தனர். சம உரிமை பெண்களுக்கு சமூக சட்டங்கள் மூலம் கிடைத்ததால் அதிகமாகச் சம்பாதிக்கும் ஆண்களின் மனைவியர்கள் தங்கள் கணவர்களைத் தனிக்குடித்தனம் நடத்த ஏற்பாடு செய்தார்கள். கணவன்மார்களும் மனைவியர்களுடன் ஒத்துப் போகவேண்டியுள்ளது. இதனால் கணவன் மனைவி கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து சென்று வாழ ஆரம்பித்தார்கள்.

பொதுவாக வெள்ளையர் ஆட்சி இந்தியரை அரசியல் ரீதியால் ஒன்றுபடுத்திக் குழுக்கள் நிர்வாகம், செய்தித் தொடர்பு, போக்குவரத்து முன்னேற்றம், புதிய கல்வி, தொழில், நகர மயங்கள், நவீன அரசியல், புரட்சிகரமான எண்ணங்கள், குடியரசு வாழ்க்கைமுறை, மகளிர் வேலைவாய்ப்புகள், சம அந்தஸ்து, வருமானத்தில் உயர்வு, மத நம்பிக்கைக் குறைவு, முதியோர் கட்டுப்பாடு குறைந்து வருதல், மேலை நாட்டு நாகரீகம் முதலியவற்றால் இந்து கூட்டுக் குடும்பத்தைச் சீர்குலையச் செய்தது. ஆனாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முற்றிலும் மறையவில்லை. குடும்பத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்களும் பரம்பரைத் தொழிலையும், பழக்க வழக்கங்களையும் முற்றிலும் விடாமல் பாதுகாத்து வருபவர்களால் இன்னும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை பழக்கத்தில் உள்ளது. இதனை ஏளனம் செய்வோர் கூட இதனால் ஏற்படும் நன்மைகளை உணராமலில்லை. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல், புரிந்து கொள்ளுதல், நல்ல குணங்கள் வளருதல் இவை கூட்டுக் குடும்பத்தில்தான் சாத்தியமாகின்றன. இது ஒரு கூட்டுறவேயாகும். இங்கு அனைவருமே தத்தம் கடமையைப் பெரியவர்களின் வழிகாட்டலின் உதவியோடு செயல்படுத்துகிறார்கள். கூட்டுக்குடும்பம் ஒரு மனிதனை ஒரு நல்ல குடிமகனாக்குகிறது.

## பாடம் - 11

# கல்வி நிறுவனம் (Educational Institution)

### விளக்கம்

கல்வி என்பதைக் குறிக்கும் எடுகேஷன் என்ற சொல் 'எடு கேர்' என்ற லத்தீன் மொழியிலிருந்து தோன்றியதாகும். அதற்கு 'வெளிக் கொண்டு வா' எனப் பொருள் கொள்ளப்படுகிறது. நம் பண்பாட்டில் கல்வியின் உண்மையான நோக்கம் மாணவர்களின் அறிவை பெருக்குவதும், அனுபவத்தைப் பெறுவதற்கும் அவர்களின் நல்ல பழக்க வழக்கங்களை வளர்த்து எதிர்காலத்தைச் சிறப்புடன் அணுகச் செய்வதுமேயாகும். கல்விக்குப் பல விளக்கங்கள் உண்டு அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற கிரேக்க மேதை 'கல்வியை மனிதனின் திறமையை, குறிப்பாக அவனுடைய மனதை, வளர்க்கின்ற ஒரு செயற்பாங்கு எனவும் அதன் மூலம் அவன் சீரிய உண்மை, அழகு போன்ற நற்குணங்களின் கற்பனைகளை அனுபவிப்பதேயாகும்' என்றும் விளக்குகிறார். சம்னர் (Sumner) என்னும் சமூகவியலறிஞர், கல்வியானது ஒரு சமூகக்குழுவின் வழக்கடிபாடுகளைக் குழைந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் ஒரு முயற்சி என்றும், அதன் மூலம் அவர்கள் எத்தகைய நடத்தை சமூகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் அனுமதிக்கப்படவில்லை என்பதைக் கற்றுக் கொள்வதேயாகும் என்றும் விளக்கமளிக்கிறார். எமில் டர்கீம் (Emile Durkheim) என்பவர் 'கல்வி என்பது குழந்தை தன்னிச்சையாக அடைய முடியாததாகிய சிந்தித்தல், உணர்ச்சி வசப்படல் மற்றும் செயல்படுதலின் வழிகளை குழந்தையின் மீது செலுத்துவதற்கான ஒரு தொடர் முயற்சி' என்று விளக்கமளிக்கிறார். பொதுவாகக் கல்வியானது ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலை முறைக்கு சமூக நடத்தைகளின் அறிவைக் கடத்துகின்ற ஒரு செயற்பாங்கு எனலாம் என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இது உண்மையின் அறிவை பெருக்குவதற்கான ஒரு முக்கியப் பண்பாட்டுச் செயற்பாங்கு ஆகும்.

## கல்வியின் முக்கியத்துவம்

கல்வி சமூகத்தில் அதிக அளவில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகும். பல மேதைகள் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள். சமூகவியலின் தந்தை என அழைக்கப்படும் ஆகஸ்ட் கோம்ட் (August comte), கிரேக்க மாமேதை அரிஸ்டாடில் (Aristotle) கல்வி, விஞ்ஞானம், மற்றும் பண்பாட்டின் ஐக்கிய தேசிய ஸ்தாபனம் ஆகியன சமூக ஒற்றுமை மற்றும் மனித ஆளுமையின் வளர்ச்சிக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உள்ளார்கள். கல்வி மனதிற்கும் உடலுக்கும் பயிற்சி அளிப்பதோடு அல்லாமல் சில முக்கிய நோக்கங்களையும் மனித சமூகத்திற்கு எடுத்துரைக்கிறது. மேலும் கல்வி மனித சமுதாயங்களில் உலகம் முழுவதும் பரவியுள்ள ஒரு நிறுவனமாகும்.

கல்வியின் முதல் நோக்கம் சமூகமயமாதலை வெற்றிகரமாகச் சமுதாயத்தில் செய்து முடிப்பதேயாகும். நவீன சமூகத்தில் குடும்பம் சமூகமயமாதலின் அனைத்து அம்சங்களையும் செயல்படுத்தத் தவற விட்ட சூழ்நிலையில் இதர அமைப்புகள் அப்பணியைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றன. இதனால் நவீன சமூகத்தில் கல்வி இப்பணியைச் செய்து வருகின்றது.

கல்வி ஒரு சமூகத்தின் பண்பாட்டை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்குப் பரப்பும் சிறந்த ஒரு சாதனமாகத் திகழ்ந்து வருகிறது. இதன் மூலம் தனிமனிதன் தன்னுடைய கலாச்சாரத்தைத் தெரிந்து கொண்டு, சமூகத்தில் சிக்கல் இல்லாமல் வாழ கற்றுக் கொள்கிறான். மேலும் தன் முன்னோர்களின் பண்பாட்டையும் தெரிந்து கொள்கிறான்.

கல்வியின் உலகளாவிய செயல்பாடாகக் கருதுவதாவது உருவாக்கத்தக்கதாகவும், வளர்ச்சியடையத் தக்கதுமான மனித இனத்தை தகுதியுடையதாக்கும் நிலை,

மற்றும் அம்மக்களின் செயல்படுதல் என்று சியூபர் (Cuber) கருத்துத் தெரிவிக்கிறார். ஒவ்வொரு சமுதாயமும் சீர் கெடாமலிருக்கக் கல்வி இதைச் செய்து வருகிறது என்றும் அவர் கூறுகிறார். குழந்தைகளுக்கு நாட்டவர் வழக்குகளையும், வழக்கடிபாடுகளையும், போதிக்கப்பட்டு, சமுதாயம் நிலை பெறச் செய்கிறது. இவ்வாறு சமுதாயப் பண்பாட்டு மரபுரிமை பாதுகாக்கப்படுகிறது. இது எல்லாச் சமுதாயத்திலும் எல்லா இனத்திலும் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கிறது.

சமூகத்தில் உள்ள பல்வேறு அமைப்புகளையும் கல்வி இணைக்கிறது. உதாரணமாகப் பல்வேறு பிரிவுகள், மற்றும் பண்பாட்டு குழுக்கள் இவற்றிடையே சரியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள கல்வி ஒரு பாலமாக அமைகிறது மற்றும் பண்பாட்டைப் பரப்புவதற்கும், அதை பாதுகாப்பதற்கும் கல்வி அவசியமாகிறது.

கல்வி நவீன சமூகத்தில் மதம், அரசாங்கம், பொருளாதாரம் மற்றும் குடும்பம் போன்றவற்றில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குடும்பத்தின் அமைப்பு திருமணம் போன்றவற்றிலும் நவீன கல்வியினால் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. குடும்பத்தில் கணவன், மனைவி, மற்றும் குழந்தைகளிடையே உறவுகளையும், புதிய செயல்பாடுகளையும், தகுநிலையும் ஏற்பட்டு உள்ளன. நவீன சமூகத்தில் கல்வி பல்வேறு வர்க்கங்களின் செயல்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரு சிறப்பான அமைப்பாகத் திகழ்கிறது. அரசியல் ரீதியில் நவீன கல்வி குடியரசாக விளங்குகிறது. கல்வி நாட்டுப்பற்றின் தத்துவத்தை உணர்த்துகிறது. மதச் சார்பற்ற எண்ணங்களின் மூலமாக, மரபு சார்ந்த நம்பிக்கையைத் தற்காலப் போக்கிற்கு ஒவ்வாததாக்கி விட்டது. நவீன கல்வியின் தனிச் சிறப்பு என்னவெனில் அது எல்லாச் சமுதாயங்களிலும், எல்லாச் செயல்களுக்கும் ஒரு அடிப்படையான அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது.

கல்வி, சமூகத்திற்கும் தனி மனிதர்களுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துகிறது. மேலும் இது ஒரு மிகச் சிறந்த சமூகக்கட்டுப்பாட்டுச் செயலியாக இருந்து

நல்லொழுக்கத்தைக் கற்றுத் தருகின்ற மிகப் பெரிய சக்தியாக இருக்கிறது. சிக்கல் நிறைந்த நவீன சமூகம், மனிதர்களை புரிந்து கொள்ளவும், சமூக இணக்கத்திற்கும் சரியான கல்வி முறை தேவைப்படுகிறது. தனி நபர் அளவில் கல்வியானது பயிற்சி மற்றும் சமூக ஏற்பு மூலம் அந்த நபரை ஒழுங்குபடுத்துகிறது. சமூக அளவில் பண்பாட்டு இணக்கத்தின் நோக்கத்திற்காகப் பல்வேறு பிரிவுகளைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு சக்தியாக விளங்குகிறது.

குழந்தைப் பருவத்திலிருந்து ஒருவன் இறக்கும்வரை கல்வியானது தொடர்ந்து நடைபெறும் ஒரு நடைமுறையாகும். ஆரம்பப்பள்ளி நிலையிலிருந்து பல்கலைக் கழகப் படிப்பு வரை பல்வேறு நிலைகள் உள்ளன. முறை சார்ந்த அமைப்புகள் இல்லாமல், தொலைக் காட்சி,, வானொலி, செய்தித்தாள்கள், போன்ற வேறு பல அம்சங்கள் நவீன கல்வியில் இடம் பெற்றிருக்கின்றன. சமூக ரீதியில் கல்வி எல்லாவற்றையும் தன்னுள் சேர்த்துக் கொண்டுள்ளது மேலும் இது சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் அலசுகிறது. கல்வி அறிவைப் பெறுவதற்கான ஒரு செயலியாக விளங்குவதால் அதற்கென்று நேரம், காலம் மற்றும் இடம் என்று எதுவும் கிடையாது. இது அறிவைப் போலவே நிலையான ஒன்றாகும், மேலும் மக்களிடையே நம்பிக்கையை வளர்த்து அவர்களின் கனவுகளை நனவாக்குகிறது. நவீன கல்வி விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மனித நாகரீகத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு குழுக்களின் சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் ஒரு அளவு கோலாக இருக்கிறது. பொதுவாக ஒரு நாட்டின் கல்வி நிலையிலிருந்து அந்நாட்டின் அந்தஸ்தை நிர்ணயிப்பதாக அறிஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு நாடு முன்னேறுவதற்கும், முன்னேறாமல் இருப்பதற்கும் கல்விதான் அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார்கள். படித்த மக்கள் அந்நாட்டின் சொத்தாகக் கருதப்படுகிறார்கள். கல்வி கற்கின்ற சமுதாயம் சமூக ரீதியாக முன்னேறுகிறது. இதற்கு எடுத்துக்காட்டு அமெரிக்கா, மற்றும் ஜப்பான். இவ்விரு நாடுகளில் கல்வி

கல்லாதவர் எவருமே இல்லை என்று கூறுகிறார்கள். கல்வி சமுதாயத்தில் மக்களின் தேவைகளைத் தன்னால் முடிந்த அளவிற்குப் பூர்த்தி செய்து சமூகத்திற்குச் சேவை செய்கிறது. மக்களிடையே சண்டை, சச்சரவு, போட்டியைத் தவிர்த்து கல்வி தகுதி மூலம் அவர்களின் தரத்தை நிர்ணயிக்கிறது. உதாரணமாகப் பல்லாயிரம் மக்கள் வங்கி வேலைக்காக மனுப்போட்டு, தேர்வு எழுதுகிறார்கள். ஆனால் ஒரு சிலரே வெற்றி பெற்று வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதனால் தோல்வியுற்றவர் தங்களின் தகுதியின்மையைப் புரிந்து கொள்கிறார்கள். இல்லையென்றால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மடிவர். ஆகவே சமூகப் பிளவுகளை இது முறியடிக்கின்றது மேலும் நவீன சமூகத்தில் வகுப்பு அமைப்பு தரப்பிரிவு (அ) சமூக அடுக்கமைப்பு தோன்றுவதற்கு வழி காட்டுகிறது.

## கல்வி முறைகள் / வகைகள்

கல்வியைப் பொதுவாக இரண்டு வகைப்படுத்துகிறார்கள் முறையான கல்வி, முறைசாராக் கல்வி. இவையில்லாமல் நிறைய வகைகளும் உண்டு. எளிய மற்றும் கல்வியறிவு இல்லாத சமூகங்களில் கல்வி முறையானதாக இல்லை. குடும்பம் மற்றும் சமுதாயம் தான் குழந்தைகளுக்கு அவர்களுடைய பண்பாடு, மற்றும் நெறிகளைப் போதித்து வந்தது. கல்வி முறை சமுதாயத்தோடு ஒட்டியே இருந்தது எனக் கூறலாம்!. பண்டைய இந்தியாவில் குருகுல அமைப்பு மூலம் மாணவர்களுக்குக் கல்வி மற்றும் பல்வேறு வித்தைகளை கற்றுக் கொடுத்தார்கள். இந்த நிலையில் இது மிகவும் புனிதமானதாகவும், சமுதாயத்தோடு ஒட்டியும் ஆன்மீகத் தன்மையோடும் விளங்கியிருந்தது. ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையே ஒரு புனிதமான பக்தியுடன் கூடிய தொடர்பு இருந்தது. மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், கல்வி ஞானத்தைப் பெறவும், வில் வித்தை மற்றும் போர்ப் பயிற்சி பெறவும் குருக்களுக்குக் கடினமான சேவைகளைச் செய்து கற்றார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய அரசு குருகுல அமைப்பு முறைக்குப் பதிலாக ஆங்கிலக் கல்வி அதாவது நவீன கல்வி முறையைக் கொண்டு வந்தது.

இக்கல்வி முறை இந்தியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. ஏனெனில் குருகுலமுறையில் கல்வி உயர் சாதியினருக்கு மட்டுமே கற்பிக்கப்பட்டது. ஆனால் ஆங்கிலக் கல்வி முறையில் சாதி, மத பேதமின்றி அனைவரும் அனுமதிக்கப்பட்டார்கள்.

நவீன கல்வியில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று செய்முறைப் பயிற்சியற்ற சர்வகலாசாலை முறை, மற்றொன்று தொழில் முறை. மேலே சொன்னது போல தற்காலத்தில் கல்வியின் எல்லை முறையான கல்வி நிறுவனங்களோடு மட்டும் இல்லாமல் முறை சாரக் கல்வி முறையின் மூலம் (தொலைதூரக்கல்வி) கல்வியை மாணவர்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டு செல்லப்பட்டு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் கற்றுத் தரப்படுகிறது.

## தொழில் நுட்பக்கல்வி

கல்வியின் மிக முக்கியமான பிரச்சனைகளில் ஒன்றாக இருப்பது முறையான கல்வி மனிதப் பண்பாட்டினைப் பற்றி அறிய அறிவியல் சார்ந்ததும், மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியும் ஆகும். நமது நாடு வளர்ந்து வரும் நாடு. அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம் போன்றவற்றில் வளர்ச்சி ஏற்பட்டால் தான் நம் நாடும் முன்னேறும். ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு, அந்நாட்டின் மனித சக்தியைச் சார்ந்துள்ளது, அந்நாட்டின் செல்வம் அம்மக்களிடம் இருக்கிறது. அம்மக்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் வளர்த்து நாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமெனில் அது தொழிற்கல்வியால் மட்டுமே சாத்தியமாகும். ஆகவே நம் நாட்டிற்குத் தொழிற்கல்வி இன்றியமையாததாகும்.

"தொழிற்கல்வி என்பது தொழில் அல்லது வேலையோடியைந்த கல்வி. இது மாணவர்களுக்கு அவர்களைத் திறமையுடனும், உபயோகத்துடனும் வேலை செய்ய அளிக்கும் பயிற்சியேயாகும்". எடுத்துக்காட்டு துணி நெய்தல், இரும்பு உருக்குதல். மரத்தொழில் போன்றவைகளாகும். நம்நாட்டில் உயர்கல்வி மிகவும் நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கிறது. இந்நிலை மாற

வேண்டும். தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறந்த பொறியியல் வல்லுனர்களையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும் உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு மேலை நாடுகளைப் போல் வளர முடியும்.

## சமுதாயக்கல்வி

சமுதாயக்கல்வி என்பது ஒரு மனிதனுக்குத் தேவையான கல்வி அறிவைத் தருவதேயாகும். அது ஒரு மனிதனுக்கு எழுத்தறிவைக் கொடுக்கிறது. இதனால் உலக அறிவை அவனால் எளிதில் பெறமுடிகிறது. அதை அவன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவனுக்குப் போதிக்கப்படவேண்டும். சமுதாயக் கல்வி முறை முதலில் முதியோர் கல்வி என்று அழைக்கப்பட்டு வந்தது. பிறகு இந்தியாவின் முதல் கல்வி மந்திரியான மௌலானா ஆஸாத் முதியோர் கல்விக்குச் சமுதாயக் கல்வி எனப் பெயர் சூட்டினார். இம்முறையில் ஒருவனுக்குக் கல்வி அறிவு கொடுப்பதோடு, கைத் தொழில்கள், உற்பத்தியின் முறைகளையும் போதிப்பதால் அவனால் பொருளாதாரச் சிறப்பைப் பெறமுடிகிறது. அது மேலும் அவனுக்கு உடல் நல இயலின் அடிப்படைக் கூறுகளையும் போதிப்பதனால், அவனுடைய குடும்ப வாழ்க்கை ஆரோக்கியமாகவும், செழிப்புடையதாகவும் இருக்கச்செய்கிறது. பேராசிரியர் உமாயூன் கபீரின் கருத்துப்படி சமூகக்கல்வி ஒரு முறையான படிப்பு. அது மனிதர்களிடம் மனச்சாட்சியை ஏற்படுத்தி அவர்களிடம் குடிமை உணர்வை ஏற்படுத்துகிறது. எழுத்தறிவை முதியோர்கள் மற்றும் படிக்காதவர்களிடம் அறிவு சார்ந்த மன நிலையை ஏற்படுத்துகிறது. மேலும் அது அவர்களிடம் குடிமை உரிமைகளையும், கடமைகளையும், சட்டங்களையும் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் உணர்த்தி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இதன் மூலமாகச் சமுதாயக்கல்வி ஒரு கட்டுப்பாடுடைய அனுபவமாக இருந்து தனிமனிதர்களின் சமூக செயற்பாங்குகளில் அவர்களின் ஈடுபாட்டை வளர்க்கிறது. மேலும் மக்களிடையே நவீனமயமாகுதல், சமூக விழிப்புணர்ச்சி, சமூகவளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

## சமுதாயக்கல்வியின் நோக்கங்கள்

சமுதாயக்கல்வியின் நோக்கங்களாகக் கூறப்படுவதாவது

1. குடிமக்களிடம் கல்லாமையைப் போக்கி, எழுத்தறிவை வளர்த்து அவர்களின் உரிமைகளையும், கடமைகளையும், சமூகச்சேவை மனப்பான்மையையும் வளர்த்தல்.

2. சமூகக்கல்வி மூலம் நமது பண்பாட்டுப் பெருமையையும், அதன் தன்மைகளையும் உணரும்படி எடுத்துரைத்தல்.

3. ஜனநாயக அமைப்பை அவர்களுக்கு விளக்கி, அரசியலில் அவர்களும் பங்கு கொள்ளச் செய்தல்.

4. சமூகக்கல்வி மூலம் நாட்டில் உள்ள பிரச்சனைகளை மக்களுக்கு விளக்கி, அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும், எவ்வாறு அதை ஒழிக்க முடியும் என எடுத்துரைத்தல்.

5. சாதாரண கணிதத்தைக் கற்கவும், எழுதவும் கற்றுக் கொடுத்து, நடைமுறை வாழ்க்கையில் அவர்களுக்குப் பயனளிக்கச் செய்தல்.

6. கைத் தொழிலுக்கு முறையான பயிற்சி அளித்து அதன் மூலம் ஓய்வு நேரத்தில் பொருளாதார மேம்பாட்டிற்கு வகை செய்தல்.

7. அவர்களிடம் ஒற்றுமை உணர்வை வளர்த்து, நீதியின் மதிப்பை (நெறிமுறைகளை) எடுத்துக்கூறி அநீதி களைய வகை செய்தல்.

8. தேசிய வளங்களைப் பாதுகாத்து, மேலும் அதை வளம்பெறச் செய்தல்.

9. மனிதக் கூட்டுறவின் நன்மைகளை எடுத்துக்கூறி தேச ஒற்றுமை உணர்வை வளர்த்தல்.

மேற்சொன்ன கொள்கைகளின் அடிப்படையில் சமூகக் கல்வி அமைந்து செயல்படுவதால் சுதந்திர இந்தியா நல்லதொரு அரசாங்கம் அமைத்து அதன் மூலம் தனி மனிதனின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டி வருகின்றது.

## கல்வியும் ஆசிரியரும்

எவ்வாறு உடலும் உயிரும் ஒன்றியிருக்கிறதோ, அவ்வாறு கல்வியும் ஆசிரியரும் ஒன்றியிருக்க வேண்டும். கல்வி முறையில் ஆசிரியரின் பங்கு உயிர் போன்றதாகும். ஆசிரியர்கள் சுயநலமின்றி, சமுதாய நலனில் அக்கறைக்காட்டி, நல்ல வழிமுறைகளை மாணாக்கர்களுக்குக் கற்றுத்தந்து, நல்லதோர் இளைய தலைமுறையினரை உருவாக்கி, நல்ல சமுதாயம் உருவாக வித்திட வேண்டும். மனித இனத்தின் அறிவு சார்ந்ததும் ஒழுக்கம் பற்றியதுமான மரபுரிமையை இளைய சமுதாயத்திற்கு அளித்திடல் வேண்டும். மேலும் இம்மரபுரிமையை வளர்ச்சியடையச் செய்து அறிவை வளர்த்திடல் வேண்டும். டாக்டர் சர்வபன்ளி இராதாகிருஷ்ணன் அறிக்கையின்படி ஆசிரியர்கள் உயர்ந்த நீதியின் நேர்மைக்கேற்ப வாழ்ந்திடல் வேண்டும். நல்ல ஆசிரியர்களால் தான் நல்ல கல்வியைக் கொடுக்கமுடியும். ஆனால் தற்காலத்தில் அரசாங்கத்தின் குறைவான நிதிஉதவி, மாணவர்களின் குறைந்த கட்டணம், அதிக அளவிலான செலவுகள் இருப்பதால் ஆசிரியர்களுக்குப் போதியமான ஊதியம் அளிப்பதில்லை. மேலும் கல்வி நிறுவனங்களால் அரசாங்கத்திற்குச் செலவே தவிர வருமானம் கிடையாது. இதனால் வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள் நன்றாக ஊதியம் வழங்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களின் பங்கு சமுதாயத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆசிரியர்களின் பங்கு அவ்வாறு கருதப்படுவதில்லை. கொடுக்கும் ஊதியமே அதிகம் என்று நினைக்கிறார்கள். மேலும் அரசாங்கம் கல்வி நிறுவனங்களைத் தனியார் நடத்துவது

சுயதேவைப்பூர்த்தியை நிலை நிறுத்துவதாக எண்ணிக்கொண்டு அவர்களுக்கு அங்கீகாரம் அளித்து வருவதால், இந்நிலை இன்னும் மோசமாக மாறியுள்ளது. மேலும் நல்ல கைதேர்ந்த ஆசிரியர்கள், மற்ற தொழிலில் அதிக ஊதியம் கிடைக்கக் கூடியதைத் தேர்ந்தெடுத்து விடுவதால், தரமில்லாதவர்கள் ஆசிரிய தொழிலுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள். அவ்வாறு நல்லதிறமை வாய்ந்தவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வந்தாலும் தன் குறைவான ஊதியத்தைப் பெருக்கிக் கொள்ளத் தனிவகுப்புகள், வெளிப்புறத்தில் வேறு வேலைகளை செய்து வருகிறார்கள். இதனால் முறையான தன்தொழிலில் ஒரு ஈடுபாடு இல்லாமல் இருந்து வருகிறார்கள். மேலும் சில ஆசிரியர்கள், அரசியலில் தொடர்பு ஏற்பட்டுத் தகுதியில்லாமல் உயர் நிலையை அடைகிறார்கள் என்று இராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார். மேலும் தற்காலத்தில் பெருகிவரும் ஜனத்தொகையினாலும், அதிக கல்லூரிகள் திறக்காததால், இருக்கும் கல்லூரிகளிலேயே அதிக மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் இடநெருக்கடியும், அதிக கூட்டமும் ஏற்பட்டுத் தரமான கல்வி வழங்க முடியாமல் போகிறது.

ஆகவே நல்ல திறமை வாய்ந்தவர்களை, ஆசிரியர்களாக நியமித்து, நல்ல ஊதியம் வழங்கி, நல்ல கல்வியைப் போதித்தாலொழிய கல்வி சிறப்புறாது என்று கிஸ்பர்ட் கூறுகிறார்.

கல்வி அமைப்பு ஒரு சமுதாயத்திற்கு அடிப்படையாக இருந்து சமூக முன்னேற்றத்திற்கு உதவுகிறது. ஆகையால் அரசாங்கம் எப்பொழுதும் அதில் சிறப்பான அக்கறை எடுத்துக் கொண்டு வருகிறது. கல்வியின் நிலையை வைத்துதான் அந்நாட்டின் நிலை நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் அரசாங்கம் கல்வியை மேற்பார்வையிடும் உரிமையைப் பெற்றிருக்கிறது. கல்வி முறையில் புதிய திட்டங்களைத் தோற்றுவித்து, கல்வி நிறுவனங்களுக்குப் பொருளுதவி வழங்கியும், விதி முறைகளையும், நிபந்தனைகளையும் விதித்து, கல்வியின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டும் வருகிறது.

ஆனால் நவீன சமூகத்தில் கல்வி எதற்காக உள்ளது, அதனால் என்ன பயன்கள், எப்படி நிர்வகிப்பது போன்ற விவாதங்கள் தோன்றியுள்ளன. மரபு சார்ந்த கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வந்ததின் விளைவாக நவீன சமூகம் இளைய தலைமுறையினர்களிடையே ஒரு நிதானமற்ற நிலையை உருவாக்கியுள்ளது. சாதியின் அடிப்படையில் கல்வி நிறுவனங்களில் இடவசதி அளிக்கப்படுவதால், கல்விமுறை பொருத்தமற்றதாக மாறியுள்ளது. மேலும் பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் மாணவர்களிடையே காணப்படும் அமைதியின்மை, கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய நிலையில் கல்வி நிறுவனங்கள் பொருளாதார லாபத்திற்காக வியாபாரமாக்கப்பட்டுள்ளன. இதனால் கல்வியின் தரம் குறைந்து காணப்படுகிறது.

இன்றைய நிலையில் இளைய தலைமுறையினர் எழுத்தறிவு இன்மையைப் போக்க எல்லா வகை அறிவாற்றலோடும், உற்சாகத்துடனும், தொண்டு மனப்பான்மையில் ஈடுபட்டு அறியாமையை போக்க வேண்டும். எல்லோரும் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும். சிறந்த நாட்டை உருவாக்க ஒவ்வொருவரும் பங்கெடுக்கச் செய்ய வேண்டும். தனிச்சிறப்பு வாய்ந்த குடிமக்கள் நன்மை பெறவும் ஏற்ற முறையில் கல்வி முறை அமைய வேண்டும். வகுப்பு, இனம், மதம் பார்க்காமல் தகுதியான இளைஞர்களுக்குத் தனிப்பயிற்சி அளித்து அவர்களின் திறமையை வளர்க்க உதவவேண்டும். இவர்களால் தான் நாட்டில் முன்னேற்றத்தை கொண்டுவர முடியும். இவையே ஒருநாட்டின் கல்வி நிறுவனத்தின் எண்ணமாகும் என்று கிஸ்பர்ட் (Gisbert) கூறியிருக்கிறார்.

# பாடம்- 12

# சமய நிறுவனம் (Religious Institution)

## முன்னுரை

சமய நிறுவனம் மனித குலத்தில் காணப்படும் ஒருமுக்கியமான நிறுவனமாகும். இது உலகெங்கிலும் காணப்படும் நிறுவனமாகும். சமய நிறுவனத்தையும், அதன் வளர்ச்சியையும் பற்றி அறிவியல் சார்ந்த படிப்பு சமூக வாழ்க்கையை புரிந்து கொள்ள உதவுகிறது. இந்தப் படிப்பு சமுதாயத்தில் சமூக நிறுவனங்களுக்கிடையேயுள்ள உண்மையான உறவை விளக்குகிறது. நமது நடைமுறை வாழ்க்கையில் உள்ள பண்புக்கூறுகள் எல்லாம் சமயத்தினால் செல்வாக்குப் பெற்றும், பரவியும் காணப்படுகின்றன. ஆகவே சமூகவியலில் இது முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது.

## விளக்கம்

பிரேஸர் (Bracer) என்னும் அறிஞர், சமயம் என்பது மனித வாழ்க்கை மற்றும் இயல்பின் பாதையைக் கட்டுப்படுத்தும் மற்றும் அது மனிதனை வழிநடத்துவதாக நம்பப்படுகின்ற மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளின் மீதுள்ள நம்பிக்கையே ஆகும் என்று விளக்குகிறார். டாசன் (Dawsen) என்பவர், ‘எப்பொழுதெல்லாம் மனிதன் தன் சக்திக்கு அப்பாற்பட்ட மற்றும் அறிவுக்கு எட்டாதது என்று கருதப்படுகின்ற பிறவியல் சக்திகளைச் சார்ந்திருக்கின்ற ஒரு மனத்தைப் பெறுகிறானோ அங்கு மத நம்பிக்கை எழுகிறது’, என்று கூறகிறார். எமில் டர்கீம் (Emile Durkheim) என்பவர். சமயம் என்பது ‘தடை செய்யப்பட்ட மற்றும் ஒதுக்கி வைக்கப்பட்ட பொருள்கள் என்று சொல்லப்படுகிற புனிதமான பொருட்களுடன் தொடர்புடைய பழக்கங்கள் மற்றும் விளக்கங்களின் ஒன்றுபடுத்தப்பட்ட அமைப்பு முறையே ஆகும் என்று கூறுகிறார். ஆர்னால்டு கிரீன்

(Arnold Green) என்பவர் நம்பிக்கைச் சார்ந்த செயல்பாடுகள் மற்றும் பொருட்களின் அமைப்பு மனிதனை அவன் பார்க்க முடியாத தெய்வீக உலகத்தோடு அவனால் கட்டுப்படுத்த முடியாத, அவன் கண்களுக்குப் புலப்படாத நம்பிக்யையே சமயமாகும் என்கிறார். வில்லியம் எப் ஆக்பர்ன் (William F. Ogburn) என்பவர், மதம் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படையான பிரச்சனைகளைச் சமாளிப்பதற்காக ஒரு மக்கள்குழு முயற்சி செய்யக்கூடிய பழக்கங்கள், உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகளின் அமைப்பு முறையாகும், என்று கூறுகிறார்.

இவ்விளக்கங்களிலிருந்து பொதுவாக சமயம் மனித சக்தியையும், இயற்கையையும் கட்டுப்படுத்துகின்ற ஒரு தெய்வீக சக்தி என்று பொருள் படுகிறது. சமயமானது முதல்நிலையில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக சக்திகளின்பால் கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் வாழ்க்கை பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக அந்த சக்திகளை மனிதன் சார்ந்திருத்தலேயாகும். மனிதர்களின் மத்தியில் சமயம் ஓர் உயிரின சக்தியாகத் திகழ்கிறது. இது மனிதப் பண்பாட்டுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகவும், புனிதத்தன்மை வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. சமயமானது மறுக்கக்கூடாத, புராணக்கதைகள் மற்றும் பழங்கதைகளிலிருந்து தோன்றிய உபகாரம், சடங்குகள் போன்ற பல்வேறு செயற்பாங்குகளினால் நிறுவனமாக்கப்பட்டதேயாகும். மனித சக்திக்கு அப்பாற்பட்ட, தெய்வீக சக்தி மனிதனின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. வேதகாலம் முதல் இன்றைய நவீன காலம் வரை சமயம் மனித வாழ்க்கையின் பல்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளது. பழங்குடி சமுதாயத்தில் சமயம் அனைத்து சமூகச் செயல்களுக்கும் நடுமையாக விளங்கியது, மற்றும் அந்தத் தெய்வீக சக்திக்கு ஒருதனிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பழங்குடியினரின் மிக முக்கியமான ஆத்மவாதம் அதாவது எல்லாப் பொருட்களிலும் உயிர் வாழ்கிறது என்று நம்பினார்கள். இயற்கையில் எல்லாப் பொருட்களிலும் தெய்வீக சக்தி இருப்பதாக நம்பி, இயற்கைப் பொருட்களை மரங்கள், மிருகங்கள், மலைகள், நதிகள், பாம்புகளை வணங்கும் நிலை ஏற்பட்டது.

சமயத்தின் மற்றொரு வடிவம் குல மரபுச் சின்ன வழிபாடு. இவ்வடிவத்தில் பழங்குடி மக்கள் உயிருள்ள அல்லது உயிரில்லாத ஒன்றைத் தங்கள் குலச் சின்னமாக அங்கீகரித்து, அச்சின்னத்தை வணங்கினார்கள், குல மரபுச் சின்னப் பொருளைக் கொல்வதோ அல்லது அழிப்பதோ, தின்பதோ கூடாது. பழங்குடிமக்களின் மத நம்பிக்கைகள் அவர்களுடைய மாயாஜாலத்தில் வெளிப்படையாகின்றன. அம்மக்களிடையே ஒரு கடவுள் கொள்கை மற்றும் பல கடவுள் கொள்கையும் காணப்பட்டன. ஒரு சமயத்தில் ஒரே ஒரு தெய்வத்தை மட்டும் வழிபடுவார்களேயானால் அது ஒரு கடவுள் சமயம் என்று அழைக்கப்படுகிறது. பல தெய்வங்களிடம் நம்பிக்கை வைத்து வழிபடுபவர்களேயானால் அது பல கடவுள் மதம் எனப்படுகிறது. மத செயல்களின் மையமாகப் பள்ளிவாசல், மசூதி, தேவாலயம் மற்றும் கோவில் போன்ற வடிவங்களில் குறிப்பிட்ட நிறுவனங்கள் உருவாகியிருப்பது நாடோடி காலம் முதல் தொழில்யுகம் தோன்றும் வரை சமயத்தின் வளர்ச்சியைத் தெளிவாக்குகிறது. நவீன சமூகத்தில் பல சமய நிறுவனங்கள் பல முனிவர்கள், சிந்தனையாளர்களினால் பல தத்துவக் கொள்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. தெய்வீகச் சிந்தனையாளர்களின் பேரில் புதிய மதங்கள் பல்வேறு நிறுவன வடிவங்களில் வளர்ந்துள்ளன.

சமயம் மற்ற நிறுவனங்களிடம் கூட மிகப் பெரிய அளவில் செல்வாக்குப் பெற்றுள்ளது. சமயமும் ஒழுக்கமும் எப்பொழுதும் நெருக்கமான இடையுறவைக் கொண்டுள்ளன. நேரடியாகவும், பயன் தரக்கூடியதாகவும், மனிதர்களுக்குத் தொண்டு செய்தலையும், மற்ற தெய்வங்களைத் திருப்திபடுத்தவும் நியாயமான நிகழ்ச்சிகளைத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சமயம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களின் பொருளாதார வாழ்வில் செல்வாக்குக் கொண்டுள்ளது. பொருளாதார நிறுவனங்களும், தெய்வங்களின் நற்செயல்களினால் நற்பயன் அளிக்கப்படுவதாக நம்பப்படுகிறது. மனிதன் பொருளாதார முயற்சிகளில் வெற்றியடைய அவன் தெய்வங்களை இணங்க வைத்தான் என்று கூட மனித மனம் நம்புகிறது. பண்டைக்காலம் தொட்டு இந்நாள் வரை

பொருளாதாரச் செயல்களிலும் முறைகளிலும் சமயக் கோட்பாடுகள் வேறூன்றி நிலைத்து நிற்கின்றன.

அரசியலும் அரசாங்கமும் கூட சமயத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன. திருச்சபை சமயக் குருக்களின் ஆசிகளினால் அரசாங்க வகைகள் நிலை பெற்றிருக்கச் செய்துள்ளன. அவர்கள் தெய்வங்களின் விருப்பப்படியே ஆட்சி செய்தார்கள் என்று கருதப்படுகிறது. அவர்கள் தங்களைக் கடவுளின் பிரதிநிதிகள் என்று கருதினார்கள். தற்பொழுது நம் நிறுவனங்களுக்கு ஒருவிதமான தெய்வ அனுமதி இருப்பதாக ஒப்பீட்டுப் பார்க்கிறார்கள். தற்சமயம் கூட அனேக பெரிய சமயப்பள்ளிகள் உள்ளன. தற்காலத்தில் கல்வி போதனைகளில் சமயபோதனை ஒரு முதன்மை வாய்ந்த இனமாக இருக்கிறது. கலை, இலக்கியம் கூட சமயப் பழங்கதைகளில் வளர்ந்து சமய சார்புடையதாக இருக்கின்றன. சிறந்த பிரசித்தமான அனைத்து வரலாற்றுப் புத்தகங்களும், புனித இலக்கியங்களும் தலையாய சமய முறைகளைப் பெற்றிருக்கின்றன. சிறந்த பண்பாட்டின் கூறுகள் கூட சமயசார்புடையதாக அமைந்திருக்கின்றன. சமயம் மேலே கூறியது போல அது வழக்கமான மூடநம்பிக்கை, ஆன்மவாதம், போலி உருவ வழிபாடு, மந்திர ஜாலம் போன்றவைகளுடன் தொடர்பு கொண்டு இருப்பது காணப்படுகிறது.

## மூடநம்பிக்கை

பொருத்தமற்ற செயல்களுக்கு ஏதாவது விளைவுகள் நடக்கும் என்று உறுதியான எண்ணம் உடையதே மூடநம்பிக்கை எனப்படுகிறது. எடுத்துக் காட்டாக வெள்ளிக் கிழமையில் ஈடுபடும் வியாபாரம் வெற்றிபெறாது. ஏனெனில் அது ஒரு வெற்றியை அளிக்காத நாள் என நம்பப்படுகிறது. காலையில் எழுந்ததும் முதலில் பாம்பு, நரியைப்பார்த்தல் அது வெற்றியைக் கொடுக்கும் என நம்பப்படுகிறது.

## ஆன்மவாதம்

ஆன்மவாதம் என்பது ஆன்மாவில் நம்பிக்கை வைப்பதாகும். இறந்தவர்களின் ஆன்மா (ஆவி) சில இடங்களிலோ அல்லது பொருள்களிலோ உறைந்து அவைகளில் வாழ்கின்றன எனப்படுவதாகும். இவைகள் மனிதனுடன் தொடர்பு கொண்டு நன்மைகளையும், தீமைகளையும் உண்டுபண்ணுகின்றன என நம்பப்படுகிறது.

## போலி உருவ வழிபாடு

இது ஒரு பொருளை (மரத்தை) வழிபடுதலைக் குறிக்கிறது. சில பொருள்கள் மனிதனைப்பல இன்னல்களிலிருந்து காப்பாற்றி உதவி செய்யும் விருப்பங்களை அடைய அவனுக்கு உதவி புரிவதாக நம்பப்படுகிறது. அது ஒரு கல்லாகவோ, மண்டை ஓடாகவோ, தாயத்தாகவோ அல்லது ஒரு இறகாகவோ இருக்கலாம். அப்பொருளை வழிபடுதலும் மற்றும் இழிவுபடுத்தலும் உண்டு. இது அதைப் பெற்றிருப்பவரின் விருப்பங்கள் நிறைவேறுதலையும், நிறைவேறாததையும் பொருத்தே அமையும். இச் சக்தி 'மானா' என்று அழைக்கப்படுகிறது. சிலசமயம் இது பக்தியைக் கூட்டுதலும், ஒதுக்கி வைக்கவும்கூடச் செய்கிறது.

## குலமரபு சின்னம்

குலமரபுச் சின்னம் தெய்வத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. அது வழக்கமாக ஒரு பொருளாக இருக்கிறது, அதன் பெயரைக் கொண்டு அவர்கள் தனிப்பட்ட முறையில் பழகுகிறார்கள். அப்பொருள் ஒரு மிருகமாகவோ அல்லது ஒரு செடியாகவோ அல்லது வேறு ஒரு பொருளாகவோ இருக்கலாம். குலமரபுச் சின்னப்பொருளை கொள்வதோ, தின்பதோ கூடாது, அதனைப் பலி கொடுக்கவும் கூடாது. அது பெரும்பாலும் அற்புதமாகவும் மூடநம்பிக்கையையும், மாயாஜால வித்தையுடன் ஒன்றுபட்டிருக்கும்.

## மாயாஜாலம்

மாயாஜாலம் ஒரு கைத்திறன் முறைமை. கண்ணுக்குப் புலப்படாத உடலைப்பற்றிய அழிவைக் கருதாத சக்தியால் ஏற்படும் பலன் எனப்படுகிறது. மாயாஜாலம் உலக ரகசியத்தால் பாவச் செய்யப்பட்டிருக்கிறது. அது கட்டாயமாகவும் கருதப்படுகிறது. மந்திரவாதி மேலும் புரோகிதர் (குரு) இவர்களின் ஒன்று சேர்ந்த செயல்கள் ஒருவனிடம் இருப்பதாகக் கூறுகிறது. மாயாஜாலம் போன்று சமயம் இவ்விரண்டின் வித்தைகள், சடங்குகள் கொண்டதாக அமைந்திருக்கிறது.

## சமயத்தின் கடமைகள்

சமயம் ஒரு சக்திவாய்ந்த சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக இருக்கிறது. சமயம் மனிதனின் சமூக உயிர் வாழ்வுக்கும் பண்பாட்டு ஸ்திரத்தன்மைக்கும் உதவி புரிகிறது. முதலாவதாகப் பொருளாதாரம் மற்றும் அரசாங்க நிறுவனங்களைப் போல இல்லாமல் தனி நபர்கல் தன்னிச்சையாக மற்றும் அரசியல் அமைப்புகளின் கட்டுப்பாடுகளிலிருந்து மதம் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் செயல்படுவது அதனுடைய தனிச் சிறப்பாகும்.

இரண்டாவதாகப் பண்பாட்டு நெறிகளைக் கொண்டு சமூக அமைதியைக் காக்கிறது. மத நம்பிக்கைகள், சடங்குகள், பிரார்த்தனைகள் மற்றும் கடவுள் வழிபாடுகள் மூலமாகச் சமூகத்தில் நெறிகள் பலப்படுத்துகின்றன. மதநெறிகள் சாதாரண சமூகதிட்ட அளவுகள் மட்டுமல்ல, அவைகள் சமூகக்கட்டுப்பாட்டு உபகரணங்களுமா. மத நெறிகள் எப்பொழுதாவது அபூர்வமாக மீறப்படும். ஏனென்றால் அவை கடவுளால் உத்தரவிடப்பட்டுள்ளன.

மூன்றாவதாக, சமயம் ஒரு மிகப்பெரிய நீதி சம்பந்தப்பட்ட சக்தியாகும். ஏனெனில் அது தத்துவ மதிப்பீடுகளிலிருந்து தோன்றியதாகும். பழங்குடிச் சமூகத்தில் மதம் என்பது எதிர்க்கமுடியாத அல்லது பயங்கரமான சக்திகளை எதிர்த்து அதன்பின் மனித

விருப்பங்களுக்கான பணி செய்வது என்று விளக்கமளிக்கப்படுகிறது. சமயம் குழுவின் வழக்கடிபாடுகளைச் சார்ந்துள்ளது மேலும் இதனை அறநெறி நிலைகளிலிருந்து வித்தியாசப் படுத்த முடியாது.

நான்காவதாக, சமயம் இதர சமூக அமைப்புகள் மீது ஒரு குறிப்பிட்ட பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குடும்பம், பழங்குடி மக்கள், பொருளாதார அமைப்புகள், கல்வி அமைப்பு மற்றும் கட்டுப்படுத்துதலில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றியுள்ளது. சமயம் மனித செயல்களுக்கு வழிகாட்டுவதற்காக, நீதி நெறி மற்றும் சீரிய பண்புகளுக்குச் சக்திவாய்ந்த ஆதரவு வழங்கியுள்ளது, மதத்தினால் ஐரோப்பியப் பொருளாதாரத்தில் பெரும்மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. மாக்ஸ் வெபரின் (Max Weber) மதமும் பொருளாதார வளர்ச்சியும் கோட்பாடு புரோடஸ்டண்ட் நீதி நெறிக்கும் நவீன முதலாளித்துவ கொள்கைகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவுபடுத்துகிறது. பண்பாட்டை பரப்புகின்ற செயற்பாங்காகக் கல்வி இயங்குகிற நிலையில் மதக் கருத்துகளையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

ஐந்தாவதாக சமயம் மரபுச் சார்ந்த வாழ்க்கை வழிகளை மதிப்பதாக விளங்குகின்றது. இது தன்னுடைய சிந்தனை மற்றும் வாழும் வழிகளை ஏற்கனவே கடைப் பிடிக்கப்பட்டு வரும் வழக்கத்திலேயே வெளிப்படுவதால் இது பழைய பழக்க வழக்கங்களைப் பாதுகாப்பதாக இருக்கிறது. இது ஒரு மரபு சார்ந்த நடத்தையின் கோலங்களாக இருப்பதால் இதர நிறுவனங்களையும் மரபு சார்ந்த தன்மையுடன் ஒத்துப்போகச் செய்கிறது.

ஆறாவதாக, சமயம் தனி நபர் ஆளுமை மற்றும் சமூக ஒற்றுமைக்குத் தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்கிறது. எமில் டர்கீம் (Emile Durkeim) மதம் சமுதாய ஒற்றுமையையும், சமூக அமைதியையும் காப்பதாகக் கூறியுள்ளார். சமயம் தன்னுடைய பண்பாட்டு நெறிகளின் மூலம், தனி நபர் சமூகமயமாதலின் போது அவன் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளச் செய்கிறது. இது நம்பிக்கை மற்றும் நல்லதைச் செய்வதினால் கிடைக்கபிருக்கும் வெகுமானம், போன்றவைகளினால் தனி

நபரைப் பயத்திலிருந்து விடுபடச் செய்கிறது. இது கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்கால நிகழ்வுகளை ஒருக்கிணைத்து, சமூக ஒருமைப்பாட்டிற்கும், தனி நபர் ஆளுமைக்கும் ஒரு சக்தி வாய்ந்த செயற்பாங்காகச் செயல்படுகிறது.

## சமயத்தின் நன்மைகள்

### 1. சமயமும் கல்வியும்

கல்வியின் மூலமாக மனித சமுதாயத்திற்குச் சமயம் தொண்டு செய்துள்ளது. உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் சமய நிறுவனத்தின் சமயம் சார்ந்த கேளிக்கைகளிலும், நடவடிக்கைகளிலும் கல்வி பரவி ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. கிறிஸ்தவக் கோயில், பள்ளி வாசல், கோயில், மடாலயங்கள் ஆகியவை கல்வியைப் பரப்புதலில் நீண்ட நாட்களாகவே ஈடுபட்டு வந்திருக்கின்றன. சமயம் உயர்கல்விக்கு அதிக ஊக்கம் கொடுத்திருக்கிறது. எடுத்துக்காட்டு நாளந்தா மற்றும் தக்கஷீலா.

### 2. சமயமும் தரும குணமும்

சமயத்தின் பெயரால் சமுதாயத்தில் பல நல்ல தொண்டுகள் செய்யப்பட்டு வருகின்றன. சமயத்தில் ஈடுபாடு உடையவர்கள் உதவியற்றவர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும் மருத்துவத் தொண்டுபுரிவது கண்கூடாகக் காண்கிறோம். இவர்கள் இத்தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதுகிறார்கள். இந்து சமயத்தில் முனிவர்களின் முக்கிய வேலை பிறருக்குத் தொண்டு செய்வதேயாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

### 3. சமயமும் பிச்சையிடுதலும்

உலகத்தின் மிகப்பெரிய சமயங்களான இந்துமதம், கிருஸ்துவமதம், புத்தமதம், முகமதிய மதம்

போன்றவைகள் பிச்சையிடுதலின் சிறப்பை ஒத்துக் கொள்கின்றன. ஒரு தனி மனிதன் பிறருக்கு உதவாமல் தான் மட்டும் பயன் படுத்துவது திருடுவதற்கு ஒப்பாகும் என்று இந்துசமயம் கூறுகிறது. சமுதாயத்திலுள்ள ஏழைகளுக்கு உதவி செய்வதே தர்மத்தின் நோக்கமாகும். அது ஏற்றத்தாழ்வைச் சரி செய்து சமநிலை ஏற்படுத்துகிறது. இன்று கூட சமயத்தின் பெயரால் ஆடைகளைக் கொடுப்பதையும், உணவை வழங்குவதையும் நாம் காண்கிறோம்.

## 4. சமயமும் அருளிரக்கமும்

எல்லாச் சமயங்களும் தியாகம், அருளிரக்கம் போன்றவைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உள்ளன. ஒருவன் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்று இயேசு கிறிஸ்து கூறியிருப்பது இதற்கு உதாரணமாகும். இந்து மதத்தில் பொறுமை ஒருமிகப்பெரிய சக்தி என்றும் இந்து மக்களின் தலையாய கடமை பொறுமையைக் கடைப்பிடித்தலே ஆகும் என்றும் முனிவர்கள் கூறியுள்ளார்கள். பொறுமை ஒரு சமூக நன்மையாதலால் குழுக்கள் மத்தியல் உடன்பாடு ஏற்பட்டுக் குழுப்பூசல்கள் தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறு சமயம் சமூக முன்னேற்றத்திற்கு உதவி புரிகிறது.

## 5. சமயமும் அஹிம்சையும்

உலகத்தின் பெரிய சமயங்களைத் தோற்றுவித்தவர்கள் அன்பையும், அஹிம்சையையும் போதித்திருக்கிறார்கள். ஜைனர்களும் பௌத்தர்களும் அஹிம்சையைத் தெய்வமாக வழிபடுகிறார்கள். முகமது, இயசுகிருஸ்து, மகாத்மா காந்தி ஆகியோர்கள் பல கடுமையான சிரமங்களுக்கு ஆளாகியுள்ளார்கள். மகாத்மா காந்தி சுதந்திர இந்தியாவில் உண்மை, அஹிம்சை ஆகிய இரண்டு சிறந்த நியமங்களைப் பின்பற்றினார். சமயம் உலகச் சகோதரத்துவ உணர்வை வளர்க்கிறது. உலகமே ஒரு குடும்பம் என்ற உணர்வை நமக்கு உண்டாக்குகிறது. இயேசு கிருஸ்து, காந்தி, புத்தர், முகமது போன்றவர்கள்

எல்லாச் சமயங்களும் உலக சகோதரத்துவத்தைப் போதிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். சமயம், தியாகம், தொண்டு, சுயநலமற்ற செயல், பொருள் பற்று அற்ற நிலை போன்ற தன்மைகளின் சிறப்பை அது போதிக்கின்றது.

## சமயத்தின் தீமைகள்

சமுதாயத்தில் சமயத்தின் பெயரால் நீதிக்குப் புறம்பான செயல்கள் எதுவும் நடக்கவில்லை என்று கூற இயலாது. சமயத்தின் பெயரால் சமுதாயமும் பல இன்னல்களை அடைந்திருக்கின்றது. அதன் விளைவால் சமுதாயத்தில் பல கொடுமைகள் நடந்து முடிந்து விட்டன. நாம் முக்கியமான சமயம் சார்ந்த தீமைகளையும் அதன் விரும்பத்தகாத போக்கையும் ஆராய்வோம்.

### 1. பிடிவாதம்

சமயம் பிடிவாதத்தின் அடிப்படையாக இருக்கிறது. பழைய மரபுகளையும், வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதால் அதை ஏற்க மறுப்பவர்களைச் சமுதாயம் ஒரு குற்றக் கண்ணோடு பார்க்கிறது. பண்டைக் காலத்தில் பால்யவிவாகம், உடன் கட்டை ஏறுதல், பலதாரமணம் போன்றவற்றிற்குச் சமயம் உடந்தையாக இருந்து, சமூக முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாக இருந்திருக்கிறது.

### 2. பெண்களுக்குக் கொடுமை

மனித வரலாற்றில் பெண்கள் சமயத்தின் பெயரால் இரக்கமற்ற வகையில் உபயோகப் படுத்தப் பட்டுள்ளதைத் நான் காண முடிகிறது. குருமார்கள் பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களை அவர்கள் காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள உபயோகித்து வந்திருக்கிறார்கள். 'கர்மவினை' போன்ற கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ள மக்கள் இதற்கு எதிராகச் செயல்படவில்லை.

### 3. சோம்பலை வளர்த்தல்

சமயம் விதியிடம் நம்பிக்கையை ஊக்குவித்து மக்களைச் சோம்பலாக்குகிறது. இன்னும் பல சமயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சுரண்டி வாழ்க்கையை நடத்தி, இச்சமுதாயத்திற்கு ஒரு சுமையாக இருக்கிறார்கள்.

### 4. இகழ்ச்சியும் வெறுப்பும்

ஒரு சமயத்தினர் மற்ற சமயத்தாரிடம் வெறுப்புக் கொள்ளச் செய்கிறார்கள். நம் நாட்டில் எத்தனையோ இனக்கலவரங்கள் சமயத்தின் பேரில் ஏற்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக இந்து, முகமதியக் கலவரங்கள் நம் நாட்டையே பாதித்துள்ளன. மனித நேயமற்ற செயல்களை சமயத்தின் பேரில் செய்து முடித்தார்கள். எத்தனையோ மக்கள் தங்கள் உடைமைகளை இழந்தார்கள். பெண்களை மானபங்கம் செய்தார்கள், குழந்தைகளை தீயில் இட்டார்கள். இதன் விளைவாக மக்கள் தெருவில் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

### 5. சமய சச்சரவுகள்

தன்னுடைய சமயம்தான் உயர்ந்தது, மற்றவர் சமயம் தாழ்ந்தது என்பது போன்ற எண்ணங்கள் காரணமாகச் சமய சச்சரவுகள் ஏற்படுகின்றன. பண்டைக்காலத்திலும் கொடிய சண்டைகள் பல நூற்றாண்டுகளாகக் கிழக்கிலும் மேற்கிலும் சமயத்தை அடிப்படையாக கொண்டு நடந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக சிலுவைப் போர்கள்.

சமயத்தினால் சமுதாயத்தில் சில தீமைகள் ஏற்பட்டாலும் இன்றும் அது ஒரு சிறந்த வல்லமையுடைய சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக இருந்து மனிதனின் வாழ்க்கையைப் பயனுடையதாக நெறிப்படுத்துகிறது, நீதி, நேர்மை, மாசற்றதன்மை, ஊழலுக்கு ஆட்படுத்தமுடியாத

நியாயம், தர்மம், சுதந்திரம், இரக்கம் போன்ற முக்கிய தர்ம சிந்தனைகளை சமயத்தின் கொள்கைகளாக சித்தரித்து மனிதனைப் பின்பற்றச் செய்து வருகிறது, மேலும் இவை சமுதாய கால ஓட்டத்தை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த செயற்பாடுகளாக அமைந்திருக்கின்றன, மனிதாகள் சமூக நியதிகளையும், தர்ம நியதிகளையும் கடைப்பிடித்து, சமூக அமைதிகாக்க வழி கோலுகிறது, தனி மனிதனின் தலையாய செயல்கள், அவனுடைய எண்ணங்கள், உணர்வுகள், வாழ்க்கையில் அவனுடைய ஆசைகள், செயலின் தத்துவங்களை இயற்கை, இயற்க்கைக்கு அப்பாற்பட்ட சக்தி (தெய்வம்) இவற்றோடு தொடர்பு கொள்ளச் செய்து, ஒரு சுற்றெல்லைக்குள் அடக்குகிறது. இதனால் மனிதன் தவறு செய்வதற்கு பயந்து ஓரளவு நேர்மையாக வாழ முற்படுகிறாள். மற்றும் அது மனிதனின் எதிர்கால நலவாழ்விற்கு உறுதியான நம்பிக்கைகளையும் வழங்குகிறது. மனிதனின் அதிகாரம் அவன் விருப்பப்படி இயற்கையிடம் செயல்படுகிறது, பொதுவாகச் சமயம் மனித இனத்திடம் சிறந்த பண்படுத்தப்பட்ட கடமை உணர்வை ஏற்படுத்தி அதன் சக்தியை அடக்குமுறையாக மாற்றி, மனிதனின் பொருள் தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டும் அல்லாமல் அவனின் நீதி முறைகளையும், அறிவுபூர்வமான வாழ்க்கையையும் ஏற்படுத்தி, வளப்படுத்தி அவன் முழு வன்மையை இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வ நிலையில் தான் பெற முடியும் என உணர்த்துகிறது.

# பாடம் - 13

# பொருளாதார நிறுவனம் (Economic Institution)

## சொற்பொருள் விளக்கம்

பொருளாதாரத் தேவைகளும், செயல்களும் சமுதாயத்தின் அடிப்படையாகும். பொருட்களை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், மற்றும் புசித்தல் என்பதின் அடிப்படையில்தான் பொருளாதாரம் அமைந்திருக்கிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் சில ஏற்பாட்டுடன் கூடிய ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்புதான் பொருளாதார நிறுவனம் எனப்படுகிறது. மனிதனின் தேவைகளோ அளவு இல்லாதவை. அதனால் தான் பொருளாதார உபகரணங்களும் அதிகமாகி மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வது சிக்கலானதாக மாறிவிட்டது. தற்கால மனிதன் அதிகப்படியான நேரத்தை தன் வாழ்க்கைக்காகவே செலவுசெய்கிறான். தன் மகிழ்ச்சிக்காகவும், லாபத்திற்காகவும், தினப்படி வேலையில் ஈடுபட்டுள்ளான். அவனுடைய நிலைமை அவன் செய்யும் வேலை, அவன் பொருளாதார நிலைமையைப் பொருத்து அளவிடப் படுகிறது. சமுதாயத்தில் பொருளாதார நிறுவனங்கள் ஒரு பகுதியாக இருப்பதால் அது சமூகவியலில் ஒரு பகுதியாக இருந்து சமுதாயத்தை அறிந்து கொள்ள உதவுகிறது.

ஆக்பர்ன் மற்றும் நிம்காப் (Ogburn & Nimkolf) என்பவர்கள பொருளாதார நிறுவனம் என்பது உணவுக்கும், சொத்திற்கும், தொடர்புள்ள மனித செயல்களைப் பற்றிப் படிப்பதாகும் என்று விளக்கியுள்ளார்கள்.

மேக்கைவர் (MacIver), சேவைகளையும் பொருட்களையும் மாற்றிக்கொள்ளுதல் மற்றும் விநியோகித்தல், உற்பத்தி செய்தல் பேரம் பேசுதல் மற்றும் போட்டியிடுதல் போன்ற முக்கியமான பொருளாதார

செயற்பாங்குகளில் ஈடுபடும் நபர்களின் ஒரு அமைப்பேப் பொருளாதாரம் என்று விளக்கமளிக்கிறார்.

நிறுவனங்களில் இடையளவு ஏற்பட்டு அதிலிருந்து மனிதர்களின் பொருளாதார முறைமை ஏற்பட்டது என்று நம்மால் விவரிக்க முடிகிறது. மனிதனின் முயற்சியால் அவனின் அடிப்படைத் தேவைகள் அவனின் இன்பத்திற்காகவும், ஆடம்பரத்திற்காகவும் உண்டான ஆசைகளைப் பூர்த்தி செய்யும் செயலே பொருளாதார செயல் என்று விவரிக்க முடிகிறது. உணவு உறைவிடம், ஆடை, முதலியன மனிதர்களின் அடிப்படைத் தேவைகளாகும். இத்தன்மை வாய்ந்த செயல் பொருள்களை வலிந்து பெற்று அதனை உபயோக முள்ளதாகவும், உபயோகத்தைச் சரிபடுத்திக் கொண்டு அவைகளை அடைவதேயாகும். இவ்வாறு பெறப்பட்ட பொருட்கள் பொருளாதார பொருட்கள் என அழைக்கப்படுகின்னறன.

## வரலாறு மற்றும் வளர்ச்சி

வரலாற்றைப் படித்துப் பார்த்தால் பொருளாதாரச் செயல்கள் ஒரு வரிசையாக வளர்ந்து வந்திருக்கின்றன. அவ்வரிசை பழங்குடிமக்களிடம் காணப்பட்ட உணவு சேகரித்தல் நிலையிலிருந்து நவீன சமூகத்தின் சந்தை நுட்பம்வரையிளான போக்குகளை விரிவா விளக்குகிறது. பழைய சமூகத்தில் உறவுமுறை குடும்பக் குழுக்களைப் போன்ற முக்கியமான சமூக குழுக்களிடம் பொருளாதாரப் பணிகள் இருந்ததால், பொருளாதாரப் பணிகள் வேறுபடுத்தபடவில்லை. குடும்பத்தின் பண்பாட்டு நெறிகளில் பொருளாதாரம் அடிப்படையாக விளங்கி வந்தது. இந்நிலையிலிருந்து வளர்ந்து இன்று நவீன சமூகத்தில் பரந்த அளவிளான மனித தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நவீன தொழிற்சாலை பொருளாதாரமாக வளர்ந்து நிற்கிறது. இதன் வளர்ச்சியை அளசிப் பார்க்கும்போது பொருளாதாரத்தில் பலநிகைள் உள்ளன, அவை நாடோடி, உணவு சேகரித்தல், தோட்டக்கலை, விவசாயம் மற்றும் தொழிற்சாலை முதலியன ஆகும். முதல் நிலையான நாடோடி நிலை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலையும் நாடோடிக் கூட்டமாக

வேட்டையாடி வாழ்ந்து வந்தார்கள். இரண்டாம் நிலையான உணவு சேகரித்தல் குகைகளிலே உண்டு வாழந்து வந்தார்கள், மூன்றாவது மற்றும் நான்காம் நிலைகளில், அதாவது தோட்டக்கலை, மற்றும் விவசாயம் நிரந்தரமாக ஒரு இடத்தில் குடி அமர்ந்து வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில்தான் மிருகங்களை வீட்டிற்கு உடையதாக பழக்குதல் பின்பற்றப்பட்டது, கடைசியாக உள்ள தொழிற்சாலை நிலை 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்குப் பிறகு ஏற்பட்டது. இது போன்ற பல்வேறு நிலைகளுக்கு ஏற்றதாகப் பல்வேறு வடிவங்களில் தோன்றி அதற்கு ஏற்றபடிப் பொருட்களையும், சேவைகளையும், பறிமாறிக்கொள்ளும் தன்மையில் தோன்றியிருக்கிறது. பண்டமாற்று முறை, தோட்டக்கலை மற்றும் விவசாய நிலைகளில் ஆரம்பகாலத்தில் தோன்றிய தெளிவான ஒரு முறை, உணவு வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் நிலைகளில் பொருளாதாரப் பரிமாற்றம் தேவையற்றது என்ற நிலையில் காணப்பட்டது. பிறகு பண்டமாற்றுமுறை தேவைகள் மற்றும் பொருட்களின் மதிப்பைச் சரியாகத் தீர்மானிப்பதற்காகப் பணம் பொருளதாரமாக வளர்த்தது, அதன் பிறகு பொருளாதாரம் முதலாளித்துவப் பொருளாதாரம், விலை பொருளாதாரம் என்று அழைக்கப்படுகிற நவீன பொருளாதார வடிவங்கள் தோன்றின. இது உற்பத்தி மற்றும் பொருட்களின் விற்பனையின் பொதுவான நிர்வாக வழிமுறைகளைச் சார்ந்துள்ளது. பழங்குடி சமூகத்தில் எளிய தன்னிறைவு பொருளாதார நிலையிலிருந்து மாறுபட்ட சந்தைப் பொருளாதரமாக வளர்ந்து நவீன சமூகத்தில் செயலாற்றி வருகிறது.

## முதலாளித்துவம்

முதலாளித்துவம் என்பது சமூகப் பொருளியல் முறைமையாகும். அதில் மூலதனம், வட்டி மற்றும் லாப நோக்கம், மற்றும் முதல் ஊக்கச் சக்தியின் நடைமுறைமை என்று மெஸ்னர் (Mesner) விளக்குகிறார். முதளாளித்துவத்தின் முக்கியப் பொருளாதார அடிப்படைகள் தனி உடமை, உற்பத்திப் பெருக்கம், பணம், வரவு, வியாபார அமைப்பு, இலாபம், சம்பளம், போட்டி, விலை மற்றும் இயந்திரங்கள் ஆகும்.

## 1. தனி உடைமை

முதலாளித்துவ சமுதாயங்களில் பொருளாதார அமைப்பின் அடிப்படை தனி உடைமை நிறுவனங்களை உருவாக்கிப் படைக்கிறது. தனி உடைமை உரிமை ஒரு புனிதமான உரிமை, அதில் யாரும் தலையிடமுடியாது என்று கருதப்படுகிறது. அதன்படி அனேக வணிகர்கள் முதலாளித்துவங்களில் நிறைய மதிப்புள்ள சொத்தைப் பெற்றிருக்கிறார்கள். தொழிற்புரட்சிக்கு பிறகு நவீன தொழிலில் இயந்திரங்களினால் மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் முதலாளிகளுக்கு இடையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தொழிலாளிகளின் உழைப்பில் அதிக லாபம் ஈட்டினார்கள்.

## 2. உற்பத்தி

தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து, உற்பத்தியைப் பெருக்கிப் பயன் அடைகின்றனர். முன்னேற்றம் அடைந்த போக்குவரத்துச் சாதனங்களாலும், செய்தித் தொடர்புகளாலும் பன்னாட்டு வியாபாரம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதனால் உலகத்தின் எப்பகுதிக்கும் பொருள்களை அனுப்பமுடிகிறது. ஒவ்வொரு நாடும் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உழைத்து வருகின்றன. புதிய கண்டுபிடிப்புகள் ஒவ்வொருநாளும் உற்பத்தியின் பெருக்கத்தை அதிகரித்துத், தொழிற்சாலைகளில் புதிய பொருள்களை உற்பத்தி செய்யும் தன்மையை அடைந்துள்ளது.

## 3. மூலதனம்

முதலாளித்துவ பொருளாதார வெற்றியின் காரணமாக அமைந்திருப்பது வரவு. மக்கள் வங்கிகளிலிருந்து பணம் பெருகிறார்கள். இதை மூலதனமாகப் போட்டு வியாபாரத்ததைத் தொடங்கி வளர்ந்து வருகிறார்கள். இது முதலாளித்துவ முறையில் தனி உடைமைக் கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது.

## 4. வியாபார அமைப்பு

முதலாளித்துவத்தின் முக்கிய தனிச்சிறப்பு அதன் வியாபார அமைப்புகளும் கடிதங்களும் ஆகும். இதில் பல பங்குதாரர்கள் மூலதனம் போட்டுத் தொழிற்சாலைகள் நிறுவுகிறார்கள். இது பங்குதாரரின் தனி இடர்வைத் தவிர்க்கிறது, மேலும் இது அவர்களிடையே போட்டியைத் தவிர்த்து இலாபத்தை ஈட்ட வழி செய்கிறது.

## 5. இலாபம்

அதிக மூலதனம், கூட்டு முயற்சியால் அதிக லாபம் பெற்று மகிழ்ச்சி அடைகிறார்கள். முதலாளிகள் பணத்தை முதலீடு செய்கிறார்கள். தொழிலாளிகள் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். விற்பனையாளர்களும், வியாபாரிகளும் சரக்குகளை சந்தையில் வரும்போது லுகன்வோரை சென்றடையச் செய்கிறார்கள். இவ்வகையில் முதலாளிகளும், வியாபரிகளும் அதிக லாபத்தைப் பெருகிறார்கள். முதாலளித்துவம் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு நிலைத்திருக்கிறது என்று காரல் மார்க்ஸ் (Karl marx) கருத்து மிகையாகாது.

## 6. ஊதியம் / சம்பளம்

இம்முறையில் தேவைக்கு ஏற்ப தொழிலாளர்களைப் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்து வருதலேயாகும். இருப்பினும் முதலாளித்துவக் கோட்பாட்டின்படி தொழிலாளர்களுக்குக் குறைவான ஊதியத்தைக் கொடுத்து அவர்களிடமிருந்து அதிக வேலையை வாங்குவதேயாகும்.

## 7. போட்டி

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் போட்டி தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. ஒரு

தொழிலதிபருக்கும், மற்றொரு தொழிலதிபருக்கும், ஒரு விற்பனையாளருக்கும் மற்ற ஒருவருக்கும் இடையே தீவிரமான போட்டி இருப்பதை நாம் காணலாம். சில நேரங்களில் செயற்கையாகத் தங்கள் பொருட்களுக்குக் கிராக்கியை ஏற்படுத்தி அப்பொருளை அதிகவிலைக்கு விற்று பணம் சம்பாதிக்கிறார்கள், சில நேரங்களில் போட்டியினால் போலிப் பொருட்களும் சந்தையில் விற்கப்படுகின்றன, இதனால் மனித நலம் பாதிக்கப்படுகிறது.

ஆகவே முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஒரு பொருளின் விலை அதனுடைய உற்பத்தி அதாவது அடக்கவிலையோ, உபயோகத்தைப் பொருத்தோ இல்லாமல் கிராக்கியையும் பொருத்தே முடிவு செய்யப்படுகிறது. முதலாளிகள் பொருட்களை உற்பத்தி செய்து அதிக கிராக்கியை ஏற்படுத்தி அதிக லாபத்தை அடைகிறார்கள்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் சில நன்மைகளும், தீமைகளும் இருக்கின்றன. அவற்றை இப்போது பார்ப்போம்.

முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முனனேற்றத்திற்கு வழி வகுக்கிறது. பொருளாதார சுதந்திரம் இருப்பதால் மக்கள் பணம் சம்பாதிக்கக் கடுமையாக உழைக்கிறார்கள். இதனால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வடைகிறது. முதலாளித்துவத்தில் அதிக பொருட்களை உற்பத்தி செய்து உலக நாடுகளோடு தொடர்பு கொள்கிறது. இதனால் பல பண்பாடுகளையும் நாகரீகத்தையும் இணைக்கும் பாலமாக அது திகழ்கிறது. முதலாளித்துவத்தில் கூட்டு முயற்சி அதிகம் உண்டு. இக்கூட்டு முயற்சி வளர்ச்சியைக் கொண்டுவருகிறது, இதனால் முன்னேற்றம் ஏற்படுகிறது. மேலும் கூட்டுமுயற்சியால் மனித இனம் இனப்பாகுபாடு, சமயப்பாகுபாடு, சாதிப்பாகுபாடு போன்றவைகளின் ஆதிக்கதிலிருந்து விடுபட வழி செய்கிறது. முதலாளித்துவத்தில் பொருளாதார சுதந்திரம் ஒரு தனிமனிதனுக்கு உண்டு. ஒரு சாதாரண மனிதன் தன் தனிப்பட்ட கடின உழைப்பால் வாழ்க்கையில் அவன்

நினைத்த வகையில் முன்னேற்றம் அடைகிறான் என்று ஆர்.என்.சர்மா (R.N. Sharma) கூறுகிறார்.

முதுலாளித்துவத்தில் மேலே கூறிய நன்மைகள் இருந்தாலும், அதற்கு ஈடாகத் தீமைகளும் இருக்கின்றன. முதலாளித்துவத்தின் மிக மோசமான பலன் வகுப்புச்சண்டை. முதலாளி வர்க்கத்திற்கும், தொழிலாளிவர்கத்தினருக்கும் சண்டை. இதனால் போராட்டங்கள், கதவடைப்புகள், கலகங்கள், சமூகத்தில் ஏற்படுகின்றன. மேலும் முதலாளித்துவ முறைமையில் கடுமையான பொருளாதார சமத்துவமின்மை மேலோங்கி நிற்கிறது. இதனால் ஒரு பெரிய இடைவெளி மக்களுக்குள்ளே ஏற்படுகிறது. வசதிப் படைத்தவர் மேலும் வசதியை பெருக்கவும், ஏழைகள் மேலும் ஏழையாகவும் இது வழிவகுக்கிறது. முதலாளிகள் புதிய இயந்திரங்களை அறிமுகம் செய்வதாலும், தங்கள் பொருட்களுக்குச் செயற்கையான கிராக்கி ஏற்படுத்துவதற்கும், மேலும் தொழிலாளர்களிடையே பிரச்சினை தோன்றும் போதும், தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லி கதவடைப்பு செய்கின்றார்கள். மேலும் முதலாளிகளின் நோக்கம் இலாபத்தை ஈட்டுவதில் இருப்பதால், தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுத்து அதிக வேலையை வாங்குகிறார்கள். மற்றும் தொழிலாளர்கள் சுகாதாரமற்ற வீடுகளில் வாழ்ந்து, கடுமையாக உழைப்பதால் நிறைய நோய் நொடிகளுக்கு உள்ளாகிறார்கள். ஏழ்மையினாலும், வகுப்பு வேற்றுமையினாலும், வேலையின்மையினாலும், பொருளாதார ஏற்றத் தாழ்வினாலும் சமூக வாழ்க்கை ஒழுங்கு உடையதாக அமைவதில்லை. ஆகவே இது முதலாளிவர்க்கத்தினரையும் மற்றும் தொழிலாளவர்க்கத்தினரையும் நீதியின் சீர்கேட்டைக் கொண்டு வரும் காரணியாக அமைந்துள்ளது என்று ஆர். என். சர்மா (R.N. Sharma) கூறுகிறார்.

## நவின சமுதாயத்தில் முதலாளித்துவ முறைமையின் பாதிப்பு

நவீன சமுதாயத்தில் முதலாளித்துவத்தால் புத்தகங்கள், வானொலி, தொலைக்காட்சி, கல்வியின் பிற

சாதனைகள் விரிந்த அளவில் இருப்பதால் சாதாரண மக்களுக்கும் கல்வி பரவியுள்ளது. போக்குவரத்துச் சாதனங்கள், செய்தித்துறை வளர்ச்சியால் அயல் நாடுகளின் எண்ணங்களை மக்கள் அறிந்து கொள்கிறார்கள். முதாளித்துவம் அறிவியல் ஆராய்ச்சிற்குச் பெரிதும் உதவியிருக்கிறது. முதாளித்துவம் சார்ந்த நாடுகளில் எல்லாவிதமான அறிவியல் ஆராய்ச்சி சார்ந்த தேசிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. முதலாளிகள் வியாபாரத்திற்கும், தொழிலுக்கும் நிலையான ஊக்குவிக்கும் தன்மைக்கு மூலமாக இருக்கிறார்கள். இது சமுதாயத்தின் பண்பாட்டை வளர்ச்சியுறச் செய்கிறது. முதலாளிகள் பெரிய இயந்திரங்களை இறக்குமதி செய்து, உற்பத்தியைப் பெருக்குவதினால் தொழில்மயமாதல் ஏற்பட்டுள்ளது. இதனால் மிகப் பெரிய கட்டிடங்கள், கால்வாய்கள், பாலங்கள், அணைகள் போன்றவற்றை உறுதியாகவும், விரைவாகவும் கட்டி முடிக்கிறார்கள். முதாளித்துவம் நவீன நாகரீகம் வளர்ச்சியுற ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. முதலாளிகளின் ஆதரவில் இலக்கியம் மற்றும் சங்கீதக் கலைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அறிவியல் முன்னேற்றமும், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் பருவ வெளியீடுகள், புத்தகங்களின் பெருக்கம், இலக்கிய, சங்கீத, கலை நுகர்ச்சிக்கு மக்களுக்கு வசதி அளிக்கப்படுகின்றன. முதலாளித்துவ முறைமையில் தற்போது ஒவ்வொன்றும் பணத்தால் அளவிடப்படுகிறது. ஆகவே மனிதர்கள் எப்படியாவது பணம் சம்பாதிக்க நினைக்கிறார்கள். அன்பு, பாசம், இரக்கம் போன்றவை வெள்ளி நாணயத்தால் மதிப்பிடப்படுகின்றன. பசி, பட்டினியால் மக்கள் அவதியுற்றாலும், லட்சாதிபதிகள் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஏனெனில் செல்வத்தின் மீதுள்ள பிடிப்பு பணக்காரர்கள் மனித இனத்தை திக்குமுக்காடச் செய்கிறார்கள். சமயமும், ஞான மார்க்கமும் பழைய கதையாகி விட்டது. பணத்தின் செல்வாக்கினால் நீதியை விலைக்கு வாங்கி அநீதி வளர்ச்சியடைய வழி வகுக்கிறது.

முதலாளித்துவ வளர்ச்சியால் நவீன பண்பாடு வளர்ந்திருக்கிறது. மக்கள் நவீன பண்பாட்டிற்கேற்ப

புதுப்பாணியில் தங்கள் வரவேற்பறைகளை அலங்கரித்து தங்கள் செல்வ சிறப்பை வெளிப்படுத்துகிறார்கள். மனித வாழ்க்கை செயற்கையான ஒன்றாக மாறியிருக்கிறது. திருமணபந்தம் வீழ்ச்சியடைந்து ஒரு ஒப்பந்தமாக மாறியிருக்கிறது. திருமணத்திற்கு முன்பும், பின்பும் ஏற்படும் பாலின உறவுகளால் குடும்ப சீர்குலைவு அதிகரித்து வருகிறது. தம்பதியினரிடையே நம்பிக்கை இன்மை, முறை தவறான குழந்தைகள், கருக்கலைப்பு, விவாகரத்து போன்றவை பெருகி வருகிறது. சமூக கோட்பாடுகளும், ஞான மார்க்க மதிப்புகளும் இத்தகைய சூழ்நிலையில் மதிப்பற்றதாக இருக்கிறது. தனிமனித சுதந்திரம் என்ற போர்வையில் இலக்கியம், கலை, சமுதாயம், குடும்பம், கல்வி, நடத்தை, எண்ணம் போன்றவைகளில் இருந்த கோட்பாடுகளை தகர்த்த தெரிந்துள்ளார்கள். இது சமூக சீர்கேட்டிற்கு வழி கோள்கிறது.

## சமதர்மக் கொள்கை

சமதர்மக் கொள்கை சமுதாயத்தில் உள்ள ஒரு பொருளாதார முறைமையாகும். இதில் சமுதாயம் சமுதாயத்தின் பிரதிநிதிகளால் கட்டுப்படுத்தப்பட்டு, பொருள்கள் அனைவருக்கும் உரிமையுடையதாகக் கருதப்படுவதேயாகும். சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும் சமதர்ம வாத அடிப்படையில் பொருள்களை உற்பத்தி செய்து, பொருளின் லாபத்தையும், பலன்களையும் ஒட்டு மொத்தமாகப் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகிறார்கள் என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் விளக்குகிறது. சமதர்மப் பொருளாதார முறைமையின் முக்கியமான அடிப்படைகள் அரசு உடைமை, சம வாய்ப்பு, வருவாயின் உச்சவரம்பு, பகிர்ந்தளிப்பு என்பன ஆகும்.

## 1. அரசுடைமை

சமதர்மப் பொருளாதார முறைமையில் நிலப்பகுதி, தொழில், போக்குவரத்து, செய்தித்துறைச் சாதனங்கள், வங்கிகள், நாட்டின் செல்வங்கள் அனைத்தும் அரசுக்கே உரியனவாகும். அவ்வரசே சமுதாய வசதிகள்,

கல்வி, துப்புரவு, சுகாதாரம், வேலை, பொழுதுபோக்கு போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றது.

## 2. சம வாய்ப்பு

இவ்வகைப் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஒவ்வொருவருக்கும் சம உரிமை, சம வாய்ப்பை அளிக்கிறது. மக்களிடையே பாலின, சாதி, மதம், இனம், மற்றும் வகுப்புகள் அடிப்படையில் வேறுபாடு காண முடியாது.

## 3. வருவாயின் உச்சவரம்பு பகிர்ந்தளிப்பு

சமதர்ம கொள்கை பொருளாதாரம் பின்பற்றும் நாடுகளில், வருவாய் உறுப்பினர்களுக்கு பங்கீடு செய்யப்படுகிறது. மக்களின் வருமானம் அளவிற்கு அதிகமாக வேறுபடுவதை இது அனுமதிப்பதில்லை.

சமதர்ம முறைமையின் முக்கியக் கொள்கைகள் சமதர்மப் பொருளாதார முறை பொருள்களின் உற்பத்தியிலும் பங்கிடுதலிலும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தி ஒரு மாறுதலுடன் சமுதாயத்தில் உள்ள அனைவரும் அனுபவிக்க வழி செய்கிறது.

முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம், இவ்விரு வகுப்பாரிடம் எப்போதும் பூசல் இருந்து கொண்டே உள்ளது. ஆகையால் பொது உடைமைக் கொள்கையின் நோக்கம் முதலாளித்துவ முறையிலான நடுத்தர வர்க்கத்தை அழித்து அரசு சார்ந்த தொழிலாளர் நல ஆட்சி அமைத்தலேயாகும் என்று கார்ல் மார்க்ஸ் (Karl Marx) கூறியிருக்கிறார்.

பொருளின் அடக்கவிலைக்கும், விற்பனை விலைக்கும் உள்ள வேறுபாடு மிகை மதிப்பு எனப்படும். மார்க்ஸின் கருத்துப்படி மிகை மதிப்பு தொழிலாளிகளுக்குச் சொந்தமானது. ஏனெனில் தன்னுடைய கடுமையான உழைப்பால் இந்த பெருக்கம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அவனே அதற்கு உரியவன். ஆனால் முதலாளி வர்க்கம்

தொழிலாளிகளுக்குச் சொந்தமான பங்கையும் அபகரித்துக் கொள்கிறது. இவ்வாறு தொழிலாளர்களைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, நியாயமாக அவர்களுக்குச் சேரவேண்டியதை முதலாளி வர்க்கம் சுரண்டுவதற்குப் பொது உடமைக் கொள்கை முற்றுப் புள்ளி வைக்கிறது.

பொது உடைமைப் பொருளாதாரக் கொள்கை மக்களாட்சி முறையை நம்புவதில்லை. அது உழைப்பாளிகளின் அதிகாரத்தைப் புரட்சியின் மூலமாக ஏற்படுத்த விரும்புகிறது. பொது உடைமைக் கொள்கை அரசு ஒரு அழியும் தன்மை வாய்ந்த நிறுவனம் என்று கருதப்படுகிறது. சமுதாய உற்பத்தியில் அரசின்மை மேலும் அழிகிறது என்று கருதப்படுகிறது. இதனால் ஒரு அரசுஅற்ற சமுதாயம் உருவாகிறது. மேலும் சமதர்மக் கொள்கையில் ஒவ்வொருவரும் கட்டாயம் கடினமாக உழைத்துத் தங்கள் திறமைக்கு ஏற்ப தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். இதனால் உழைப்பது தவிர்க்க முடியாததாகிறது.

## முதலாளித்துவத்திற்கும் பொது உடமை முறைமைக்கும் உள்ள வேறுபாடுகள்

இவ்விரு பொருளாதார முறைகளுக்கிடையே சொத்துரிமை, சொத்து பங்கீட்டு உரிமை, செய்தித் தொடர்பு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, காப்பீடு, வரவு, விற்பனை அமைப்பு, இயக்கவாதம் போன்றவற்றில் நிறைய வேறுபாடுகள் உண்டு. இவ்வேறுபாடுகளால், சிக்கலான வேறுபாடுகள் நிறைந்த பண்புக் கூறுகள் இவ்விருமுறைகளுக்கும் உள்ளன.

## 1. சொத்துரிமை

முதலாளித்துவ முறையில் சொத்து தனிமனிதனுக்குச் சொந்தமானது அதாவது தனி உடைமைக் கொள்கையுடையதாகும். பொது உடைமைக் கொள்கையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தனி உடைமைச் சொத்து வளர்ச்சி அடைய முடியாது. நாட்டின் எல்லாச் சொத்தும்

நாட்டிற்கே அதாவது அரசிற்கே உரிமை உடையதாகிறது. நுகர் பொருள்களின் உற்பத்தியான பூமி, தொழிற்சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், அனைத்தும் அரசிற்குச் சொந்தமானவை. மேலும் எல்லாம் நாட்டுடமையாக்கப்பட்டு எல்லா சொத்துகளும் பொதுச் சொத்தாகக் கையாளப்படுகின்றன.

## 2. சொத்து பங்கீடு உரிமை

பொதுஉடைமை முறையில் ஒவ்வொருவனும் தன்னுடைய திறமைக்கேற்ப உழைக்கிறான். அவன் தேவைக்கேற்ப நிதி பொது நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. இம்முறையில் தொழிலாளர்கள் காணப்படுவதில்லை. அவன் உழைப்பிற்கும், தேவைக்கும் ஏற்ப ஊதியம் கொடுக்கப்படுகிறது. சொத்து நேர்மையான முறையில் பங்கீடு செய்து, நாட்டு நலனுக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் முதலாளித்துவ முறை அதற்கு நேர் மாறானது. ஒருவன் தன் சொத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு எந்தத் தடையுமில்லை. இதனால் முதலாளி வர்க்கம், தங்களை வளர்த்துக் கொள்ளவும், அபிவிருத்தி செய்து கொள்ளவும் சந்தர்ப்பங்களைப் பெற்றிருக்கிறது. இதனால் தொழிலாளர்கள் உதவியற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பணக்காரர்கள் மிகவும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மிகவும் ஏழைகளாகவும் ஆகின்றனர். இக்கருத்தையே நம் மறைந்த பாரதப் பிரதமர். ஜவகர்லால் நேரு அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். முதலாளித்துவத்தில் உற்பத்தியாளரின் கவனம் அவர்களின் சொந்த தனிப்பட்ட அக்கறையுடையதாகவும், மேலும் நாட்டின் நலத்தில் அக்கறையற்றதாகவும் இருக்கிறது. ஆகையால் அவன் பணத்தைச் சேர்க்க நாட்டின் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூட தயங்குவதில்லை.

## 3. சமூக அமைப்பு

முதலாளித்துவ முறையில் மக்களின் வாழ்க்கைத் தரமும், வாழ்வின் வசதிகளும், இயற்கையிலேயே நிறைய வித்தியாசப்படுகின்றன. ஒருவன் மிகப் பணக்காரனாகவும், ஒருவன் பிச்சைக்காரனாகவும் இருக்க வழி செய்கிறது.

இதனால் இவ்விரு வகுப்பினரிடையே சண்டைச் சச்சரவுகள் ஏற்பட்டு நாட்டு நலன் பாதிக்கப்படுகிறது. மேலும் மக்களிடையே ஒற்றுமை உணர்வைக் குலைத்து ஒற்றுமையின்மையை உருவாக்குகிறது. ஆனால் பொது உடைமை முறையில் ஆளுபவர்களுக்கும், ஆளப்படுபவர்களுக்கும் உள்ள வேறுபாடு சந்தேகத்திற்கிடமின்றிக் குறைவான நிலையில் இருக்கிறது. மற்றும் முற்றிலும் பொருளாதாரச் சுதந்திரம் இவ்வமைப்பில் இல்லை என்று கூற முடியாது. இம்முறையில் கூட ஒருவன் தன்னுடைய சுய சொத்தை ஓர் அளவு பெருக்கிக் கொள்ளலாம். ஆனால் எவரும், எவரையும் சுரண்ட முடியாது.

## 4. போட்டி மற்றும் பொறாமை

• முதலாளித்துவ முறையில் தனி மனிதனுக்குப் பணம் சம்பாதிக்க மற்றும் தனி உடைமைகள்பற்றிய முழுச் சுதந்திரம் இருப்பதால், ஒவ்வொருவனும் அதிக அளவில் எப்படியாவது பணத்தைச் சம்பாதிக்க விரும்புகிறான். இதனால் போட்டி தவிர்க்க முடியாததாகிறது. மற்றவர்களுடன் போட்டி போடும் போது பொறாமை, சச்சரவு போன்றவைகளும் ஏற்படுகின்றன. ஆனால் பொது உடைமை முறையில் வியாபார அமைப்புடன் கூடிய முழு உரிமையில் ஒருவன் இருப்பதால் வேலையின்மை, ஏழ்மை, பசி பட்டினி, போன்றவைகள் அவர்களை எதிர்கொள்வதில்லை. ஒவ்வொருவரும் உழைத்து வேலை செய்ய முடிகிறது. உழைப்பதால் போதுமான அளவு தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். மக்களின் வேலைத்திறனிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதிக திறன் உடையவர்களை அடையாளம் காணப்பட்டு அரசால் பரிசுகள் வழங்கப்படுகிறார்கள். ஆகவே தொழிலாளர்களிடையே போட்டி தங்கள் திறமையை வளர்த்து கொள்வதற்காகவும், நாட்டிற்காகவும் உள்ளது அது மற்றவர்களைப் பாதிக்காது.

## 5. காப்பீடும், வரவும்

காப்பீடு, வரவு போன்றவைகள் முதலாளித்துவ முறையில் தனி மனிதர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்நிறுவனங்களை நடத்துபவர்களின் முதல் எண்ணம் இலாபத்தை அடைதலேயாகும், ஆகவே இங்கு ஒரு பொதுநோக்கு கிடையாது. பொதுஉடைமை முறையில் இந்நிறுவனங்களை அரசே ஏற்று, அதிகாரம் செலுத்தி, பொது மக்கள் அவைகளை அதிக அளவு பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, அதிக இலாபம் ஈட்டி, அதை மக்களுக்குக் கொடுக்கிறது.

## 6. விலை மற்றும் இயக்கம்

முதலாளித்துவத்தில் விநியோகம், அடிப்படைவிலை இயக்க வாதத்தைச் சார்ந்துள்ளன. விலையை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாது. வியாபார அமைப்பு ஒருவரிடமே இருப்பதால், அவைகளின் விலையை நிர்ணயித்தல் உரிமை அவரிடமே இருக்கிறது. இதனால் பொருளின் விலை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டு பொதுமக்கள் சுரண்டப்படுகிறார்கள். ஆனால் பொது உடைமை முறையில் அரசு விலையைக் கட்டுப்படுத்தி ஒரு குறிப்பிட்ட அளவில் அவைகளை நிறுத்தி வைக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சுரண்டலைப் போக்கவும் இது உதவுகிறது.

## 7. பிற நிறுவனங்கள்

பொது உடைமை முறையில் அனைத்து நிறுவனங்களும் அரசு கட்டுப்பாட்டில் இருந்து அரசால் நிர்வகிக்கப்படுகின்றன. முதலாளித்துவத்தில் சில அரசு கட்டுப்பாட்டிலும், சில தனி மனிதர்களிடமும் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன. முதலாளித்துவத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, போன்ற நிறுவனங்கள் தனி மனிதர்களால் அல்லது வியாபார அமைப்புகளால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் பொதுவுடைமை முறையில்

இவைகள் நாட்டு நாட்டுடைமையாக்கப்பட்டு, பொதுமக்கள் நலத்தை வளர்கின்றன.

பொது உடைமைப் பொருளாதார முறைக்கும், முதலாளித்துவ பொருளாதார முறைக்குமுள்ள வேறுபாடுகளை அலசிப் பார்த்ததில், பொது உடைமை முறை சிறந்த நிலைகளை ஏற்படுத்தித் தனிமனிதனின் வளர்ச்சிக்கு உதவுவதை நாம் காண முடிகிறது. ஆனால் நாட்டரசின் அதிகாரம் சில வேலைகளில் தனி மனிதனின் சுதந்திரத்திற்கு ஓர் பேரிடியாக அமைந்து அவனுடைய நல்ல வளர்ச்சியைப் பாதிக்கிறது. பொதுவுடைமை முறை சந்தர்ப்பமும், சூழ்நிலையும் மனிதனின் முழுவளர்ச்சிக்குச் சாதகமாக இருந்த போதிலும், தனி மனிதனுக்கு முழுச் சுதந்திரம் இல்லாததால் மக்கள் அதை விரும்புவதில்லை என்று ஆர். என். சர்மா கருத்துத் தெரிவிக்கிறார்.

# பாடம் - 14

# அரசியல் நிறுவனம் (Political Institution)

சமூகத்தில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தி, அமைதியைக் காத்து, சமூக முன்னேற்றத்தைக் கொண்டுவர ஏற்படுத்தப்பட்ட அமைப்பே அரசியல் நிறுவனம் எனப்படும். கட்டுப்பாடு, தனி மனிதர்கள், குழுக்கள், சங்கங்கள் மற்றும் நிறுவனங்களில் காணப்படும். இதன் மூலம் சமூகத்தில் ஒழுங்கும், பராமரிப்பும் நிலை நிறுத்தப்படுகின்றன. ஒரு மாநிலத்தின் தலைமைச் செயல் அரசாங்கமாகும். சமூக அமைப்புகளைப் பற்றிப் படிக்கும் போது மாநிலம் ஒரு நிலையம் அல்லது சங்கமாகவும், அரசாங்கம் அல்லது அரசியல் நிறுவனம் ஒரு நிறுவனமாகவும் கருதப்படுகின்றன. சங்கங்கள் ஆலோசனை அல்லது நிர்வாகக் குழுக்களாக, நீதி மற்றும் சட்டம் ஆகியவற்றின் இயல்பில் பல ஈடான நிறுவனங்களை உள்ளடக்கியுள்ள ஒரு மிகப் பெரிய சமூக நிறுவனமாக அரசாங்கம் அமைந்திருக்கிறது. அரசாங்கம் அல்லது அரசு நிறுவனம் எனும் கருத்துப்படிவம் பொதுவாக அதிகாரத்தை வைத்து நடத்தப்படுகின்ற ஒரு நிர்வாகத்தைக் குறிக்கிறது. இதர அமைப்புகளுடன் ஒப்பிடும்போது அரசாங்கம் மட்டுமே மனித தேவைகளுக்குத் தொடர்புடைய பலபணிகளை நிறைவேற்றி, மற்றும் விரும்பத்தகாத செயல்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு அடிப்படையான அதிகாரம் மற்றும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தக்கூடிய சக்தியுடன் விளங்கி வருகிறது. மாநிலத்தின் முக்கிய உபகரணம், பிரத்தியேக அதிகாரத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் கண்டிப்பான கட்டுப்பாட்டைக் கொண்டு வரும் ஊர்தி அரசாங்கமேயாகும். மாநிலம் என்பது அரசியல் ரீதியில் அமைக்கப்பட்ட சமூகம், ஆனால் அரசாங்கம் மாநிலத்தின் உபகரணம் மற்றும் அது ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அதனுடைய செயல்களை நிறைவேற்ற வேண்டிய ஒரு செயலியாக அமைந்துள்ளது.

## அரசாங்கத்தின் தோற்றம்

அரசாங்கம் நம் சமுதாயத்தில் எவ்வாறு தோன்றியது என்பது வரலாற்றில் பல சிந்தனையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதனுடைய தோற்றம் குறித்து உலகளாவிய அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட கோட்பாடுகள் எதுவும் இல்லை. இருந்தாலும் ஒரு சில கோட்பாடுகள் அரசாங்கத்தின் தோற்றத்தை விளக்குகின்றன. பழங்காலத்தில் அரசாங்கத்தின் தோற்றம் தெய்வீகத்தன்மையுடைய பிரதிநிதிகள் மக்களை ஆள்கிறார்கள் என கருதப்பட்டது. அத்தகைய அதிகாரத்துடன் இயங்கிய அரசாங்கம் சொர்க்கலோகம் என்று மக்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தோற்றத்தைப் பற்றிய இரண்டாவது கோட்பாடு வலிமையை அடிப்படையாகக் கொண்டது. வலிமையுடையவர்கள் வலிமையற்றவர்கள் மீது தங்களின் அதிகாரத்தைச் செலுத்தி அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நீதி வழங்கி வந்தார்கள். வலிமை வாய்ந்த நபர்களால் வடிவமைக்கப்பட்ட அரசாங்கம் அவர்களின் அதிகாரத்தன்மை மற்றும் திறமையைப் பொருத்து அமைந்திருந்தது.

மூன்றாவது கோட்பாடு தாமஸ் கோப்ஸ் மற்றும் வில்லியம் ரூஸோ (William Rousseau) வால் உருவாக்கப்பட்டது. இவர்களின் கருத்துப்படி மனிதன் தன்னுடைய இயல்பான நிலையில் வாழும் போது தங்களுக்குள்ளே சண்டையிடும் இயல்புடையவனாக இருந்து வந்தான். இம்மனோபாவத்தை ஒழிக்க அவர்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தக் கோட்பாடு மனிதனின் பகுத்தறிவுள்ள வெளிப்படையான செயலால்தான் அரசாங்கம் தோன்றியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆர். எம். மெக்கெய்வர் (R.M. MacIver) அரசாங்கத்தின் தோற்றத்தைக் குடும்பத்தில் காண்கிறார். குடும்பத்தில் தான் முதன் முதலில் பாலுணர்வு மற்றும் உறவு முறையினரிடையே உள்ள உறவு முறைகளை

ஒழுங்குபடுத்துவதின் மூலம், ஒரு சமூக ஒழுங்கைக் காண முடிந்தது. ஒழுக்கம் மற்றும் அமைதி இல்லாமல், குடும்பத்தை நிர்வகித்தல் மற்றும் நிலைத்திருக்கச் செய்தல் முடியாத ஒன்றாகும். குடும்ப நிலைத் தன்மைதான். பரந்த அளவில் அரசாங்கம் உருவாக முதல் நிலையாக இருந்திருக்கிறது என கருத்துத் தெரிவிக்கிறார்.

பழங்குடி சமூகத்தில சமூக வாழ்க்கை குறிப்பிட்ட அமைப்பு முறை இல்லாமல் அதைத் தனியாக எடுத்துக்கூற முடியவில்லை. இத்தகைய சமூகத்தில் மாநிலம் ஒரு தனிப்பட்ட அமைப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டிய அளவிற்கு அல்லது செயல்படவேண்டிய அளவிற்குத் தேவை ஏற்படவில்லை. எல்லாச் சமூக செயல்களும் ஒரு பொதுவான சமூக அமைப்பில் இணைக்கப்பட்டிருந்தன. அதிகாரம் மற்றும் கட்டாயப்படுத்தும் தன்மை ஆகிய கருத்துப்படிவங்கள் மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறையில் இருந்து வந்தன. அதிகாரம் மற்றும் கட்டாயப்படுத்தும் தன்மைகளினால் தான் அரசாங்கம் உண்டாக்கப்பட்டது என்று எண்ணுவது தவறான கருத்தாகும். ஏனெனில் மனித நடத்தையைக் கட்டுப்படுத்த வழக்கங்கள், நாட்டவர் வழக்கங்கள், வழக்கடிபாடுகள் மற்றும் நெறிகள் எனப் பல வழிகள் உள்ளன. நவீன சமூகத்தில் சட்டப்பூர்வமான தண்டனைகள் உருவாக்கப்பட்டன. அரசாங்கத்திற்கு ஒரு வித மாறுபட்ட விளக்கத்தைக் கொடுத்துள்ளது. அரசாங்கம் அதிகாரம் என்ற பெயரில் ஒரு நிறுவனமாகவும் மற்றும் மனித வரலாற்றைப் போல ஒரு பழமையானதாகவும் உள்ளது. எங்கெல்லாம் சமூகம் இருக்கிறதோ, அங்கெல்லாம் ஒழுங்குமுறை இருக்கும். ஒழுங்கு முறை அரசு நிறுவனத்திற்கு முன்னால் இருக்கும். அதே போல் நெறிகள் அரசு நிறுவனத்தை உருவாக்குவதற்கு முந்திய ஆரம்ப நிலைகளாக இருந்திருக்கின்றன. பல நெறிகளை நிறுவனமாக்கி, அவற்றைச் சட்டங்களின் கோலமாகக் கொண்டு வருவதின் மூலம் அரசாங்கம் மாநிலத்தின் ஒரு குறிப்பிட்ட உபகரணமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க வகைகள்

தனி நபர்களின் உரிமைகள், மாநிலத்தின் அதிகாரம் மற்றும் நிர்வாக முறைகளின் அடிப்படையில் அரசாங்கம் பல வகைகளாக இருந்திருக்கின்றது. ஆனால் தற்காலத்தில் அரசாங்கம் இரண்டு அமைப்புகளாக உள்ளது. அதாவது ஒன்று சர்வாதிகாரம் முறை; மற்றொன்று குடியாட்சி அல்லது சனனாயக முறை என்று கூறப்படுகிறது. சர்வாதிகார முறையில் அதிகாரமும் கட்டுப்பாடும் ஒரு தனிப்பட்ட நபர் அல்லது ஒரு சில மனிதர்களிடையே இருக்கும். ஆனால் குடியாட்சி முறையில் அதிகாரம் பிரதிநிதித்துவம் மூலம் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தற்காலத்தில் சில சமுதாயப் போக்குகள் பெரிய அரசாங்கம் விரைவான மாற்றங்களினால் சிக்கல் தன்மையுடையதாக மாறுகிறது. இந்நிலையில் மக்களைக் கலக்காமல் ஆளும் தன்மை அறைகூவப்படுகிறது. அதாவது சர்வாதிகாரப் போக்கில் செயல்படத் துவங்குகிறது. சில சமயங்களில் சில போக்குகள் சனனாயகம் முன்னேறவும் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக விரைவான செய்தித் தொடர்புச் சாதனங்கள். மாதிரி வாக்கெடுப்பு முறை என்பவற்றைக் கூறலாம்.

## அரசாங்கத்தின் பணிகள்

அரசாங்கம் சமூகக் கட்டுப்பாட்டிற்கான சில முக்கியப் பணிகளைச் செய்து வருகின்றது. இந்தப் பணிகள் எல்லாம் சட்டங்களை சார்ந்துச் உருவாக்கப்படுகின்றன. மேலும் அரசு சட்டங்களை மையமாகக் கொண்டு செயல்பட்டு சமூக அமைதிகாக்கப் பாடுபடுகிறது.

## ஒழுங்கும் பராமரிப்பும்

அரசாங்கம் ஒழுங்கை நிலைநாட்டும் செயலில் மும்மரமாக ஈடுபட்டு, அதைப் பராமரித்து வருகின்றது. முன்பைவிட ஒழுங்கு பராமரிப்பு செய்யும் பிரச்சனை ஓரளவு தற்சமயம் அதிகமாக இருக்கிறது. ஏனெனில்

நகரங்கள் அதிகரித்து வருவதால் குற்றம் புரிதலும் கூடவே வளர்ந்து வருகிறது. கிராமங்களை விட, நகரங்களில் தான் குற்ற எண்ணிக்கை பெருகி வருகின்றது. அனேக திருட்டுகள், சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சனைகள், கொலை, கற்பழிப்பு, போன்ற குற்றங்கள் நகரங்களில் பெருகி வருவதால் காவல் துறை இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் முறையில் இயந்திரம் போன்று செயல்பட வேண்டியுள்ளது. இருந்தாலும் காவல் துறை பெரிய நகரங்களில் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் தடுமாறுவது கண்கூடாகப் பார்க்க முடிகிறது. எடுத்துக்காட்டாகத் தற்போது பஞ்சாப், ஹரியானா, காஷ்மீர் பகுதிகளில் நிகழும் வன்முறை மற்றும் படுகொலைகள், அரசியல் கட்டுப்பாடற்ற நிலைகூட ஒரு பிரச்சனையாக பல மாநிலங்களில் தோன்றியுள்ளன. பிரத்தியேகமாக மேற்கு வங்காளம், அஸ்ஸாம், கோவா போன்ற மாநிலங்களில் அடிக்கடி அரசியல் புரட்சிகள் ஏற்படுகின்றன. கட்டுப்பாடற்ற ஊர்வலங்களும் காணப்படுகின்றன.

## அதிகாரத்துவம்

அதிக எண்ணிக்கை உடைய அரசாங்க அலுவலர்கள் இருத்தலை அதிகாரத்துவம் என்று அழைக்கப்படுகிறது. நிர்வாகத் தொகுதி அதன் கீழ் அவர்கள் வேலை செய்வது அலுவல்கூடம் அல்லது அரசியல் துறை என்று அழைக்கப்படுகிறது. இது போன்ற அலுவல் முறையைத் தனியார் துறையினரால் தனியார் துறை அதிகாரத்துவம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது மேசையடி தொழிலாளர்கள். அதிகாரத்துவம் நிலையானபோது, தனியார் துறை நிறுவனங்கள், தொழிற்சாலைகள் வியாபாரஸ்தலங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. இத்துறைகளில் வேலை செய்பவர்கள் ஒரு புதிய சமூக வகுப்பினை உருவாக்கி வருகிறார்கள். பொது முறையான சமுதாய உறவை அதிகார இனத்திற்குரிய அமைப்புகள் தனிச்சிறப்புக்களால் தனித்து விளக்குகின்றன. அரசாங்கமும், தொழில் துறையும், அதிகார வர்க்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அலுவலகம் சார்ந்த சக்தியால் நிர்வாகம் செய்து வருகின்றன.

அதிகாரத்திற்குரிய அமைப்பு அரசியல் கட்சிகளிடம் பரவியுள்ளது.

## சமுதாயத் தொண்டு

அரசாங்கத்தின் அநேக செயல்கள் குடிமக்களுக்கும், சமுதாயத்திற்கும், சமூக நிறுவனங்களுக்கும் தொண்டு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மைப் பொருள்களின் விலை விவசாயிகளுக்கு உதவி புரிகிறது. ஒரு உயர்தீர்வை சிறு தொழில்களைக் காப்பாற்றுகிறது. வயதானவர்கள், அனாதைகள், இவர்களைப் பாதுகாக்க வழி செய்கிறது. அரசு நோயாளிகளுக்கும், வேலையற்றவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவுகிறது. குப்பை கூளங்களை அகற்றித் தொற்று வியாதிகள் ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. குழந்தைகளின் விளையாட்டுக் களங்கள், பொழுது போக்குச் சாதனங்கள் அமைத்து அரசாங்க உதவியுடன் நகரங்கள் பாதுகாக்கப்படுகிறன்றன.

## வியாபாரத்தையும் தொழிலையும் ஊக்குவித்தல்

வியாபாரத்தையும், தொழிலையும் ஊக்குவித்து அதனை வளர்ச்சியடையச் செய்வது அரசின் கடமையாகும். எங்கும் அரசு பொருளாதார முறைகளைக் கட்டுப்படுத்தி ஒரு முறைமையை ஏற்படுத்தியிருக்கிறது. அளவு கோல், நிலுவை, போன்ற தரத்தை நிர்ணயிக்கும் செயலை அரசு பெற்றிருக்கிறது. ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் முறையான சட்டதிட்டங்களைத் தீட்டி மற்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு தேவையைப் பூர்த்தி செய்கிறது. நாட்டில் தொழிற்சாலை நிலவுதல், குடிசைத் தொழில்களை ஊக்குவித்தல், வங்கிகள் மூலமாகக் கடன் உதவி செய்து தனியார் தொழில் துவங்க அரசு வழி வகை செய்து வருகிறது. தற்காலத்தில் எல்லா மக்களுக்கும் கல்வி அறிவு அளித்தலுக்கு அரசு வழிவகை செய்து வருகிறது.

## சுகாதாரப் பாதுகாப்பு

தற்கால அரசுகள் மக்களின் பாதுகாப்பிற்கும், சுகாதாரத்திற்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றன. துப்புரவு, மருத்துவமனைகள், இலவச மருந்து வழங்குதல், அம்மை வைத்தல், ஏழைகளுக்கு அவசியமான சத்துணவு அளித்தல் போன்றவைகளைச் செய்து வருகின்றன. பல மருத்துவக் கல்லூரிகளை அமைத்து மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது. அரசாங்க ஆராய்ச்சி மையங்கள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டு பொது நலம் பேணப்பட்டு வருகின்றது.

## ஆக்கநல அரசு

ஒரு நல்ல அரசு சமூகத் தொண்டுகள் அளிக்கக் கூடியதுமான நாட்டின் முக்கியத் தொழில்களைப் பொது உடைமையாக்கி தனியார் தொழில்களில் சில கட்டுப்பாடுகளை விதித்து சனனாயக அமைப்பைத் தேசிய அளவில் கொண்டு வருவதேயாகும். நம் நாட்டில் பொது விமானப்பயணம், காப்பீட்டுக் கழகம், சில வங்கிகள் ஆகியவை தேசியமயமாக்கப்பட்டுள்ளன. அதுபோன்று போக்குவரத்து, பல ஆலுகள், பள்ளத்தாக்குகள் இரும்புத் தொழிற்சாலைகள் தற்போது நாட்டிற்குச் சொந்தமாக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு நல்ல அரசின் நோக்கங்கள் முற்றிலும் பொருளாதாரத்தைச் சார்ந்து பொருள் உடையவர்களுக்கும், பொருள் அற்றவர்களுக்கும் உள்ள இடைவெளியைச் குறைக்க மறுபங்கீட்டுமுறை, மற்றும் வருமானத்தைச் சமன் செய்யப் பாடுபட வேண்டும். வருமான வரிகள் மூலம் அதிக அளவிலான சமத்துவமின்மையைச் சமப்படுத்தி நாட்டு உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். இவ்வாறு சமத்துவத்தை வளர்ப்பதன் மூலம் நாம் மக்களிடையே ஒற்றுமை உணர்வை, பரஸ்பர உறவை ஏற்படுத்த முடியும். இத்தகைய நோக்கங்கள் இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கடைபிடித்து வருவதை நாம் காணலாம். நாட்டு வருமானத்தை அதிகரிப்பதின் மூலம், மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடையும். அடிப்படைத் தொழில் மற்றும்

தொழில்களில் தீவர வளர்ச்சியை ஏற்படுத்தி வினரவில் தொழில்மயமாதலை ஏற்படுத்துதல். இதன் மூலம் மக்களுக்கு நிறைவான வேலைவாய்ப்பு ஏற்படுத்த முடியும். பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க முடியும் என்று பி. கிஸ்பர்ட் (P.Gisbert) கூறுகிறார். ஒரு நல்ல அரசு பொது உடைமை கொள்கைக்கும், தனி உடைமைக் கொள்கைக்கும் இடையில் பிணக்கு வராமல் சமாதான முறையில் சமுதாயத்தை வழி நடத்திச் செல்ல வேண்டும். பொதுவாக அரசு எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு அளித்து, உழைப்பவர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு, முதியோர்கள், குழந்தைகள், நோயாளிகள், பெண்கள், ஆதரவற்றவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முழு அளவில், பொதுச் சேவை மனப்பாங்கில் செயல்பட வேண்டும். இவையல்லாமல் சட்டம் சார்ந்த பணிகளையும், நீதி சார்ந்த பணிகளையும், அதிகாரப் பணிகளையும் செவ்வனே நிறைவேற்றி சமூக அமைதியைக் காத்து, சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி, சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டும்.

## பாடம் - 15

# சமூக அடுக்கமைவு (Social Stratification)

இன்றைய நவீன சமூகத்திலும், பழங்குடி சமூகத்திலும் தனிமனிதர்களின் அடுக்கமைவு தகுநிலையினைக் காணலாம். இந்த நிலையினை வெகுமதிகளும் கனிச்செல்வங்களும் தீர்மானிக்கின்றன. இந்த வெகுமதிகளும் மற்றும் கனிச்செல்வங்களும் ஒரு பரம்பரையிலிருந்து மற்றொரு பரம்பரைக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், அவைகள் சரிசமமான நிலையில் வழங்கப்படுவதில்லை. இதனால் மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. உடற்கூறு, பண்பாடு ஆகியவற்றிலும் மனிதர்களிடையே வேறுபாடுகள் உள்ளன. இத்தகைய வேறுபாடுகளினால் மக்களின் தகுநிலை மாறுபடுகிறது. வெவ்வேறு தகுநிலைக்கேற்ப சமூகத்திலுள்ள மக்கள் தரம் பிரிக்கப்படுவதைச் சமூக அடுக்கமைவு என அழைக்கிறோம்.

வில்லியம் ஆக்பர்ன் (William Ogburn) என்ற அறிஞர் "சமூக அடுக்கமைவு என்பது தனி நபர்களையும், குழுக்களையும் தகுதி அடிப்படையில் பிரித்து வைக்கப்படுகின்ற ஒரு செயல் முறை" எனக் கூறுகிறார். ஒரு சமூக அமைப்பில் அடுக்கமைவு என்பது மிகவும் தவிர்க்க முடியாத ஒன்று. உறுப்பினர்கள் மத்தியில் சமத்துவம் என்ற நிலையைக் காண்பது ஒரு முடியாத செயலாகும். ஒட்டுமொத்தமாக, சமூக அடுக்கமைவு என்பது சரிசமமற்ற நிலையில் சமூகத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற உரிமைகளைக் குறிக்கின்றது. அதே சமயத்தில் மனிதர்களிடையே இருக்கக் கூடிய அனைத்து வேறுபாடுகளும் அடுக்கமைவுக்கு உட்பட்டதல்ல. வயதினை பாலினம், வயது ஆகியவற்றை மையமாக வைத்து அடுக்கமைவு அமைவதில்லை. வெவ்வேறு விதமான தகுநிலையைப் பொறுத்தே தனிப்பட்ட மனிதர்களின் தரப்பிரிவு அதாவது வெவ்வேறு வகுப்புகள்

காணப்படுகின்றன. தெளிவாககூறினால் அனைத்து தரப்பிரிவு குழுக்களும் சமூகக் குழுக்களாகும். ஆனால் அனைத்துச் சமூகக் குழுக்களும் தரப்பிரிவுக் குழுக்கள் அல்ல ஒழுங்கான முறையில் அமைக்கப்படாத சமூகக் குழுக்கள் அதாவது கூட்டம் (Crowd) போன்றவைகள் தரப்பிரிவில் வருபவை அல்ல. ஆனால் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்ட குழுக்கள் ஒழுங்கான முறையில் அமைந்தவைகளாக இருக்கின்றன. இதில் அமைப்பு மற்றும் பணி ஆகியவைகள் தனிப்பட்ட நபர்களின் தகுதிகள் மற்றும் பணிகளைப் பொருத்து அமைகின்றன.

சமூக தரப்பிரிவு என்பது உயர்வு தாழ்வு நிலையின் அடிப்படையில் ஏற்படுகிறது. அனைத்துச் சமூகங்களிலும் உயர்வுதாழ்வுகள் காணப்படுகின்றன. இத்தகைய உயர்வு தாழ்வுகளைப் பற்றிச் சமூகவியல் அறிஞர்களிடையே பல கருத்துக்கள் நிலவுகின்றன.

## செயல்முறைச் சார்ந்த கோட்பாடுகள் (Functionalist Theories)

எமிலி துர்க்கெய்ம் (Emile Durkheim), தன்னுடைய "சமூகத்தில் வேலைபங்கீட்டு முறை" என்ற ஆய்வில் வேலையின் அடிப்படையில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அனைத்துச் சமூகத்திலும் சில பணிகள் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக மதப்பணி மிகப் புனிதமானதாகக் கருதப்படுகிறது. மேலும் மக்களின் திறமையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. துர்க்கெய்ம் சமூகம் நிலைத்திருக்க அதிக திறமை உள்ளவர்கள் உயர்ந்த பணியைச் செய்தல் அவசியம் எனக் குறிப்பிடுகிறார். துர்க்கெய்மின் கருத்தை கிங்ஸ்லி டேவிஸ் மற்றும் வில்பர்ட் மூர் (Kingslay Davis and Wilbert Moore) என்ற அறிஞர்கள் ஆதரிக்கின்றனர். இவர்களின் கருத்துப்படி ஏற்றத்தாழ்வின் மூலமாக சமூகம் அதிக திறமையுள்ளவர்களை இன்றியமையாப் பணிகளில் ஈடுபடச் செய்கிறது. மதம், அரசு, தொழில் நுட்பம் ஆகிய பணிகள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. த்தகைய பணிகளைச் செய்பவர்களுக்குச்

சமூகம் உயர்ந்த அந்தஸ்து அளிக்க வேண்டுமென இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## பூசல் கோட்பாடு (Conflict Theories)

கார்ல் மார்க்ஸ் (Karl Marx) பொருளாதார நிலையின் ஏற்றத் தாழ்வுகளே வர்க்கத்தை ஏற்படுத்துகின்றன எனக் குறிப்பிடுகின்றார். மார்க்ஸின் கருத்தின்படி, மனித வரலாற்றை உற்பத்திமுறையின் அடிப்படையில் வெவ்வேறு நிலைகளாகப் பிரிக்க முடியும். முதலாவதாக, நிலப்பண்ணை உரிமை முறையில் (Feudalism) விவசாயம் முக்கியமான தொழிலாக இருந்தது. நிலச்சுவான்தார்கள் நிலத்திற்கு உரியவர்களாகவும், அவர்களுடைய பண்ணையாட்கள் நிலத்தில் தொழில்புரிபவர்களாகவும் இருந்தார்கள். முதலாளித்துவ முறையில் முதலாளிகள் தொழிலாளிகளுக்கு ஊதியம் கொடுத்து வேலையில் அமர்த்திக் கொண்டார்கள். கார்ல் மார்க்ஸ் பொருளாதார நிறுவனமே சமூகத்தின் அடிப்படை எனக் குறிப்பிடுகின்றார். பொருளாதார நிறுவனத்தில் தொழில்நுட்பம், வேலைபங்கீடு, உற்பத்திமுறையில் பங்கு பெற்றுள்ள மக்களின் உறவு முறை ஆகியவை அடங்கும். இத்தகைய உறவுமுறையே கார்ல்மார்க்ஸின் வர்க்கம் என்ற கருத்திற்குத் திறவுகோலாகும்.

முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி தொழிலாளியைக் கட்டுப்படுத்துகிறார். தொழிலாளியிடமிருந்து அதிக உழைப்பைப் பெற்று குறைந்த ஊதியத்தை அளிப்பதன் மூலமாகச் சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இதனால் முதலாளித்துவ வர்க்கம், தொழிலாளித்துவ வர்க்கம் என்ற வர்க்கங்கள் ஏற்படுகின்றன என மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

## வெபரின் கோட்பாடுகள் (Weber's Theory)

செல்வம் (Wealth), தன்மானம் (Prestige) மற்றும் ஆட்சியுரிமை (Power) ஆகிய மூன்று ஆக்கக்கூறுகளின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன என

வெபர் குறிப்பிடுகிறார். இத்தகைய ஆக்கக்கூறுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை எனக் குறிப்பிடுகிறார்.

முதலாவதாகச் செல்வம், ஊதியத்தை விட அதிகமானதாகும். செல்வமுடையவர்கள் வேலை செய்வது கிடையாது. இவர்களுக்கு, சொத்து, முதலீடு, சரக்குகள், பத்திரங்கள் ஆகியவற்றின் மூலமாக வருமானம் கிடைக்கிறது. ஒவ்வொரு வகுப்பினரும் (விவசாயிகள், வாணிபர்கள், தொழிலாளிகள்) வருமானம் பெறுவதில் வெவ்வேறு வகையான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேலும் தன்மானம், கௌரவம் ஆகியவற்றை இரண்டாவது ஆக்கக் கூறாக வெபர் விளக்குகிறார். உயர்ந்த தன்மானத்தையும், கௌரவத்தையும் உடையவர்கள் உயர்ந்தவர்களென்றும், குறைந்த தன்மானத்தையும், கௌரவத்தையும், உடையவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். உயர்ந்த தன்மானத்தை உடையவர்களுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கை முறை உள்ளது எனக்குறிப்பிடுகிறார்.

மூன்றாவதாக ஆட்சியுரிமை (Power) ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார். ஆட்சியுரிமை அரசியல் தொடர்புடையது. ஆட்சியுரிமை என்பது திட்டங்கள், முயற்சிகள், கொள்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றக் கூடிய திறமையாகும். ஆட்சியுரிமை உடையவர்கள் உயர்ந்த வர்க்கமாகக் கருதப்படுகின்றனர்.

எனவே வெபர் செல்வாக்கு, தன்மானம், ஆட்சித்திரன் ஆகியவை மக்களின் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் லாய்டு வார்னர் (Loyd Warner) என்பவர் சமூக வகுப்புகள், மக்கள் அவற்றை எவ்வாறு விவரிக்கின்றார்களோ அதன் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது எனக்குறிப்பிடுகிறார். உதாரணமாக ஒரு பலசரக்குச் கடையின் உரிமையாளர் வங்கியின் உரிமையாளரை தன்னுடன் உயர்ந்தவர் என்று குறிப்பிட்டால் வங்கி உரிமையாளர் உயர்ந்தவர் எனக் கருதப்படுகிறார். ஒரு வகுப்பு என்பது மக்கள் அதை

எவ்வாறு தரம் பிரிக்கிறார்களோ அதன் அடிப்படையில் அமைந்துள்ளது.

இவ்வாறு பல அறிஞர்கள் ஏற்றத்தாழ்வுகள் வெவ்வேறு அடிப்படையில் உண்டாகின்றன எனக் கூறுகின்றனர்.

## சமூக அடுக்கமைவின் வகைகள் (Types of Stratification)

சமூக அடுக்கமைவானது இரண்டு முக்கிய பொதுப்பிரிவுகளாக உள்ளது. இவை சாதி மற்றும் வர்க்க அமைப்பாகும்.

## சாதி அமைப்பு (Caste System)

நம் நாட்டில் சாதி முறை உள்ளது. இதில் மிகப் பழமையான மற்றும் பரம்பரையான வழிமுறைகள் உள்ளன. ஆங்கிலத்திலுள்ள காஸ்ட் (Caste) என்ற சொல்லானது போர்ச்சுக்கீசிய வார்த்தையான காஸ்டா (Casta) என்ற சொல்லிலிருந்து தோன்றியது. காஸ்டா என்பதற்கு இனம் என்பது பொருளாகும். சாதியானது வர்ணாவின் (Varna) அடிப்படையில் தோன்றியுள்ளது. வர்ணாசிரம அமைப்பின் மூலம் உருவான சாதிமுறையானது நாளடைவில் நன்கு வளர்ந்து முழுமைப் பெற்றது.

## சாதியின் வரையறை (Refinitive)

சாதியைப் பற்றிப் பின்வரும் விளக்கங்கள் கூறப்படுகின்றன. மார்ட்டின்டில் (Martindle) மற்றும் மொனாக்கெஸிஸ் (Monachesis) என்பவர்கள் "சாதி என்பது பிறப்பின் காரணமாக ஒரே விதமான சலுகைகளையும் பொறுப்புகளையும் பங்கிட்டுக்கொள்கின்ற மக்களின் சேர்க்கையாகும். சாதியைச் சமயமும், மாந்தரீகமும் ஆதரிக்கின்றன", எனக் குறிப்பிடுகிறார்கள்.

ரிஸ்லி (Risely) என்பவர் "சாதியானது ஒரு கூட்டமான குடும்பங்களைக் கொண்டு பொதுவான ஒரு பெயரைத் தாங்கி, பொதுவான ஒரு புராண மூதாதையார் வழிவந்தவர்கள் எனக்கோரி, அதே பரம்பரைத் தொழிலைச் செய்து, ஒரு ஒத்த சமூகமாக விளங்குகிறது" எனக் குறிப்பிடுகிறார்.

கிரீன் என்பவரின் கூற்றுப்படி "சாதி அமைப்பு" என்ற சமூக அந்தஸ்து ஏணியில் ஒருவன் மேலாகவோ கீழாகவோ செல்ல முடியாது. ஒருவனுடைய பிறப்பின் மூலம் வந்த அந்தஸ்து அவன் வாழ்நாள் முழுவதும் தொடரும். பிறப்பானது ஒருவனுடைய தொழில், குடியிருப்பு, வாழ்க்கைமுறை, நண்பர்கள் போன்றவற்றை நிர்ணயிக்கும். தாழ்ந்த சாதியினருடன் உயர் சாதியினர் தொடர்பு கொள்ளுதல், தன்னைத் தானே தாழ்த்தும் முறையாகும். சாதி அமைப்பானது சட்டத்தில் பாதுகாக்கப்பட்டது, அல்ல சமயத்தால் பாதுகாக்கப்பட்ட ஒன்றாகும்".

கூலி (Cooley) "சமூக வகுப்பானது பிறப்பின் வழியாக அமையும் பொழுது அதைச் சாதி என்று குறிப்பிடலாம்" எனக் குறிப்பிடுகிறார்.

## சாதியின் தோற்றம் (Origin of Caste System)

சாதியின் தோற்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுவது மிகக் கடினமாக உள்ளது. இதனைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. சாதியின் தோற்றம் பற்றிப் பின் வரும் கோட்பாடுகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

## மரபு வழிக்கோட்பாடு (Traditional Theory)

இக் கோட்பாட்டின் படி சாதியானது படைப்புக் கடவுளான 'பிரம்மன்' உடலிலிருந்து தோன்றியது என விளக்கப்படுகிறது. பிரம்மனின் வாய் வழியாகப் பிறந்தவர்கள் பிராமணர்கள் என்றும்,

தோள்பட்டையிலிருந்து பிறந்தவர்கள் சத்திரியர்கள் என்றும், தொடைப்பகுதியிலிருந்து பிறந்தவர்கள் வைசியர்கள் என்றும் அவனுடைய பாதங்களிலிருந்து உதிர்ந்தவர்கள் சூத்திரர்கள் என்றும் கூறப்படுகிறது. பிரம்மனின் உடம்பிலுள்ள அங்கங்களை முன்னிலையாக வைத்து இந்தச் சாதிகளின் அடுக்குமுறை அமைந்துள்ளது. அதாவது இதன் அடிப்படையில் ஒவ்வொரு சாதியினரின் வேலைகள், அதன் தன்மை ஆகியவைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. பிராமணர்கள் புனிதமான வேலைகள் அனைத்தையும் செய்பவர்கள். கல்வியறிவுத் தொடர்பான வேலைகள், தியானம் செய்தல், சடங்கு முறைகளைச் செய்தல், வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வேதங்களைப் போற்றிப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் கூறலாம். சத்திரியர்கள் இரண்டாவது குழுவைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் வீரமிக்கவர்கள். மக்களையும், நாட்டையும் காப்பாற்றுதல் இவர்களது முக்கியத் தொழிலாகும். வைசியர்களின் மிக முக்கியமான வேலை வர்த்தகம். விவசாயத் தொழில் செய்தலாகும். சூத்திரர்கள் இதர மூன்று பிரிவினர்களுக்கும் சேவை புரிதலை முக்கியமான வேலையாகக் கொண்டனர். உயர்ந்த சாதியை சார்ந்த பெண்ணிற்கும் தாழ்ந்த சாதியைச் சார்ந்த ஆணுக்கும் இடையில் நடந்தேறிய திருமணங்கள் ஐந்தாவது வகை உதயமாவதற்குக் காரணமாக இருந்தது. இந்த ஐந்தாவது பிரிவு பஞ்சமாஸ் அல்லது அரிசன மக்கள் என்றுக் கொள்ளப்படுகிறது. இந்தக் கோட்பாடு அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளது.

## சமய வழிக் கோட்பாடு (Religious Theory)

சாதி அமைப்பு சமூகத்தில் தோன்ற சமயமே காரணமென சில ஆராய்ச்சி வல்லுநர்கள் கருதுகின்றனர். சமூகத்தில் வெவ்வேறு கடவுள்களின் மேல் நம்பிக்கையுடையவர்கள் வெவ்வேறு சாதிகளாயினர். உயர்ந்த கடவுள்களை வணங்குபவர்கள் உயர்ந்த சாதியினர் என்றும், சிறு தெய்வங்களை வணங்குபவர்கள் கீழ்சாதியினர் என்றும் இக்கோட்பாடு விளக்குகிறது. ஆனால் இக் கோட்பாட்டை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் சமயம் சாதிக்குக் காரணமெனில் சமயத்தில் வேறுபாடுள்ள

அத்தனை சமூகங்களிலும் சாதி தோன்றியிருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் மட்டும் சாதி முறை மிகவும் வலுவுள்ளதாக விளங்கியது.

## தொழில் வழிக் கோட்பாடு (Occupational Theory)

நெஸ்பீல்டு என்ற அறிஞர், வெவ்வேறு விதமான தொழில்கள் பல்வேறு சாதிகள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன ஹஎனக் குறிப்பிடுகிறார். இது வேலைகளைப் பங்கிடுதல் என்ற ஒன்றை அடிப்படையாக வைத்துக் காணப்படுகிறது. சமூகத்தில் சில தொழில்கள் தூய்மையுள்ளதாகவும், சில தூய்மையற்றதாகவும் கருதப்படுகின்றன. தூய்மையற்ற தொழில்களைச் செய்பவர்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப்பட்டமையால் அவர்களைத் தாழ்ந்த சாதியினர் என்று சமூகம் கருதியது, கல்வி பயிற்று வித்தல், போர்த் தொழில் புரிதல், வியாபாரம் செய்தல் போன்ற பிறரால் மெச்சத் தகுந்த தொழில்களைச் செய்பவரை உயர் சாதியினர் என்று சமூகம் கருதியது. தொழில் வேறுபாடுள்ள மற்ற சமூகத்தில் சாதி முறை தோன்றாத காரணத்தினால் இக்கோட்பாட்டை அறிவியல் பூர்வமாக ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

## அரசியல் வழிக் கோட்பாடு (Political Theory)

சமூகத்தில் தங்களுடைய உயர்வை நிலைநிறுத்த அந்தணர்களால் சாதி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. பேராசிரியர் குரே (Ghurye) என்பவர், "சாதியானது இந்து – ஆரியக் கலாச்சாரத்தின் குழந்தை என்றும் அது கங்கை யமுனை நதிக்கரையில் தாலாட்டப்பட்டு அந்தணர்களால் இந்தியாவின் ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டது" எனறும் குறிப்பிடுகிறார்.

## இனவழிக் கோட்பாடு (Racial Theory)

இனவழிக் கோட்பாட்டை ஹெர்பர்ட் ரைஸ்லியும் (Herbert Risely), மஜூம்தாரும். (Majumdar) ஆதரித்தனர்.

இக்கோட்பாட்டின்படி இனவேறுபாடே சாதிகள் தோன்ற காரணமென்று கூறப்படுகிறது. ரிஸ்லியின் கூற்றுப்படி பெர்சியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்த இந்து – ஆரியரின் வருகைக்குப் பின்னரே இந்தியாவில் சாதி அமைப்புத் தோன்றியது. ஆரியர்களின் சமூகமானது முன்னரே நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் அவர்கள் குடியேறிய பின்பு அவை நான்கு சாதிகளாக மாறின.

மஜும்தாரின் கூற்றுப்படி ஆரியர்கள் தங்களை மேலானவர்கள் என்று கருதித் தங்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் தசாக்கள் (Dasas) என்று அழைத்தனர். காலப்போக்கில் ஆரியர்களும் தசாக்களும் இரு இனங்களாக மாறினர்.

## வர்க்க அமைப்பின் சிறப்பியல்புகள் (Characteristics of Clean System)

1. வர்க்கம் ஒரு அந்தஸ்துக் குழு ஆகும். இதில் எல்லா அங்கத்தினர்களும், ஒரே அந்தஸ்தைப் பெற்றவர்களாக இருப்பார்கள்.

2. வர்க்க அமைப்பில் பிறப்பினால் ஏற்பட்ட அந்தஸ்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அவரின் வாழ்க்கைப் பாதிப்பைக் கொண்டு அவரது நிலை நிர்ணயிக்கப்படுகிறது. இதன் மூலம் வர்க்க அமைப்பானது சமூக இயக்கத்திற்கும், சாதனைகளுக்கும் வழிகோலுகிறது.

3. வர்க்க அமைப்பானது ஒரு திறந்த குழுவாகும். இவ்வகை குழுக்களில் ஒரு மனிதன் கீழ் வர்க்கத்திலிருந்து மேல் வர்க்கத்திற்கும், மேல் வர்க்கத்திலிருந்து கீழ் வர்க்கத்திற்கும் அவனுடைய சாதனைகளுக்கேற்ப மாறலாம்.

4. வர்க்கத்தில் உள்ள உறுப்பினர்கள் பொது உணர்வுகளையும் ஒற்றுமைகளையும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

5. வர்க்க முறையில் எந்தவிதமான சமூக உறவுகளுக்கும் கட்டுப்பாடு இல்லை, மேலும் எந்தத் தொழில் வேண்டுமானாலும் ஒருவருடைய விருப்பத்திற்கேற்ப சுதந்திரமாகக் கொள்ளலாம்.

மேற்கூறிய சிறப்பியல்புகள் வர்க்கத்தின் தன்மையை எடுத்துக் கூறுகின்றன.

## சமூக இடம் பெயர்தல் (Social Mobility)

சமூக இடம் பெயர்தல் என்பது ஒரு தகுநிலையிலிருந்து மற்றொரு தகுநிலைக்கு ஒரு தனிநபர் நகர்ந்து செல்வதைக் குறிக்கின்றது. திறந்தவெளி வகுப்புச் சமூகத்தில் இது அதிகமான விதத்தில் காணப்படும். ஆனால் மூடப்பட்ட சமூக அமைப்பில் இது குறைந்த அளவுலேயே உள்ளது. சமூக இடம் பெயர்தலை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள்

1. செங்குத்தான சமூக இடமாற்றம் (Vertical Social Mobility)

2. தட்டையான சமூக இடமாற்றம் (Horizontal Social Mobility)

சமூக இடம்பெயர்தல் தனிநபருக்கு மட்டுமல்லாமல், குழுவினருக்கும் சேர்ந்துக் காணப்படுகிறது. செங்குத்தான சமூக இடம் பெயர்தல் என்பது ஒரு தகுநிலையில் உயர்வு அல்லது தாழ்வு ஆகியவற்றைக் குறிப்பதாகும். திறந்தவெளி சமூக அமைப்பில் எல்லோருக்கும் சரிசமமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதால் பலர் மேலே உயர்ந்த நிலைக்கு வர வாய்ப்புகள் அதிகம். சிலர் தாழ்ந்தும் போவார்கள். தட்டையான சமூக இடம் பெயர்தல் என்பதால் உயர்வான அல்லது தாழ்வான நிலையே கிடையாது. முன்பிருந்த அதே சமூக நிலை (Social Status) தான் இருக்கும்.

ஜோசப் கால் (Joseph Kahl) நான்கு வகையான இடம்பெயர்தலைக் குறிப்பிடுகிறார். அவை இனப்பெருக்க இடம்பெயர்தல் (Reproductive Mobility), இடமாற்ற

இடம்பெயர்தல், (Migratory Mobility), தொழில் நுட்ப இடம் பெயர்தல் (Technological Mobility) மற்றும் தனிமனித இடம்பெயர்தல் (Individual mobility) என்பன. இனப்பெருக்க இடம் பெயர்தல் என்பது உயர்ந்த வர்க்கத்தினர். தங்களது இனத்தை அபிவிருத்தி செய்யத் தவறும்பொழுது ஏற்படுகிறது. உயர்ந்த வர்க்கத்தின் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தாழ்ந்த வர்க்கத்தினர் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படுகிறது. (உ.ம்) சீசரின் காலத்தில் ரோமில் இத்தகைய இடம்பெயர்தல் நிகழ்ந்தது.

இடமாற்ற இடம் பெயர்தல் என்பது கீழிருந்து மேல்நோக்கிச் செல்கிறது. அதிக எண்ணிக்கையில் திறமையற்ற (Unskilled) தொழிலாளிகள் ஒரு சமூகத்தில் குடியேறும்பொழுது அச்சமூகத்திலுள்ள தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் ஒன்று அல்லது இரண்டுபடி உயருகிறார்கள். இதுவே இடமாற்ற இடம்பெயர்தல் எனக் குறிக்கப்படும்.

தொழில்நுட்ப இடம்பெயர்தல், தொழில் அமைப்பில் மாறுதல்கள் ஏற்படும் பொழுது உண்டாகிறது. இத்தகைய மாறுதலானது மக்களை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தள்ளுகிறது. உதாரணமாக வளர்ந்து வரும் நாடுகளில், குறைந்த அளவான மக்களே விவசாயத்திற்குத் தேவைப்படுவதால், மற்றவர்கள் தொழிற்சாலை உற்பத்தி, அல்லது சேவை செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள்.

தனிமனித இடம்பெயர்தல் என்பது தனி மனிதனிடத்தில் ஏற்படுகிறது. ஒரு விவசாயின் மகன் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றுவதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

சமூக அடுக்கமைப்பில் இடம் பெயர்தல் என்பது மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இடம் பெயர்தல் சமூக அடுக்கமைவிற்கு எதிர்மறையானது. அடுக்கமைப்பு மனிதர்களிடம் ஏற்றதாழ்வுகளை ஏற்படுத்துகிறது. ஆனால் இடம் பெயர்தல் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கிறது.

# பாடம் - 16

## சிறுபான்மைக் குழுக்கள் (Minority Gropus)

சிறுபான்மைக் குழுக்கள் உலகின் பல இடங்களில் பல நூற்றாண்டுகளாக வசித்து வருகின்றன. ஐரோப்பிய நாட்டை விரிவுப்படுத்தியதன் காரணமாகவே இத்தகைய சிறுபான்மையினர் தோன்றினர். நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக, ஐரோப்பியர்கள், கண்டுபிடிப்பு, இடம் பெயர்தல், மூலமாக வெவ்வேறு நாடுகளில் குடியேறினார்கள். இவ்வாறு குடியேறும் பொழுது அந்நாட்டில் வாழ்பவர்களைப் புறக்கணித்துச் சிறுபான்மையினராக மாற்றினர்.

சிறுபான்மையினர் தோன்ற மற்றொரு காரணம் அடிமைத்தனமாகும். அனைத்து ஐரோப்பிய நாடுகளும் அடிமைகள் வர்த்தகத்தில் பங்கெடுத்து வந்தன. இது மிகவும் லாபகரமாகவும், கொடுரமானதாகவும் இருந்தது. இரண்டாவதாக ஸ்பானீய, போர்ச்சுகீசிய அடிமைத் தனத்தின் கடுமை அதனைப் பற்றிய சட்டங்கள், சமய விளக்கங்கள் மற்றும் அடிமைகளின் விடுதலை பற்றிய சமுகக்கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது.

### சிறுபான்மையினர் விளக்கம்

சிறுபான்மைக் குழுக்கள் என்பது பொதுவாக இனம் (Ratial) அல்லது மனித இன (Ethnic) மக்களைக் குறிக்கிறது. ஆனால் சிறுபான்மை என்பது மிகத் துல்லியமான வார்த்தையாகும். ஐக்கிய நாடுகளில் இந்தியர்கள் ஆப்பிரிக்கர்கள் மற்றும் ஐரோப்பியாவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தபோதிலும் அவர்கள் சிறுபான்மையினர் என அழைக்கப்பட்டனர். தென் ஆப்பிரிக்காவில் சிறுபான்மையினரான ஆப்பிரிக்கர்களை விட பெரும்பான்மையினர் எனக்கருதப்பட்ட ஐரோப்பிய மக்கள் நான்கில் ஒருபங்கே உள்ளனர். எனவே சிறுபான்மையினர் என்பது மக்கள்

தொகையின் அளவை வைத்து நிர்ணயிக்கப்படுவதில்லை. அது ஒரு கீழ்ப்படிதல் நிலையாகும். ஆனால் பொது வழக்கில் இனம் (Race) அல்லது மனித இனம் (Ethnic Group) என்ற சொற்கள் சிறுபான்மையினர் என்ற சொல்லுடன் இணைந்து பயன்படுத்தப் படுகின்றன. இனம் (Race) மற்றும் மனித இனம் (Ethnic) ஆகியவற்றில் வேறுபாடு உள்ளது. இனம் என்பது உருவ அமைப்பின் அடிப்படையில் உள்ள வேற்றுமையைக் குறிக்கிறது. உதாரணமாக நிறத்தின் அடிப்படையால் இனத்தைப் பிரித்தல் மனித இனம் (Ethnic) என்பது பண்பாடு அல்லது சமூக அடிப்படையில் உள்ள வேற்றுமையைக் குறிக்கிறது. உதாரணமாக மொழி, மதம், பிறந்த இடம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் வேறுபடுத்தப்படுகிறார்கள்.

லூயி விர்த் (Louis Wirth) என்பவர் சிறுபான்மையினரை கீழ்க்கண்டவாறு வரையறை செய்கிறார்.

"ஒரு சமூகத்தில் உடல் அல்லது பண்பாட்டு வேறுபாட்டின் காரணமாக ஒரு குழு மற்றவர்களால் தனித்துவிடப்பட்டு சரிசமமாகக் கருதப்படாமல் வேறுபடுத்தப்பட்டு அதன் காரணமாக அந்தக் குழு தாங்கள் வேறுபட்டவர்கள் என்ற ஒரு உணர்வைப் பெற்றுள்ளதைச் சிறுபான்மையினர் என்று குறிப்பிடலாம்.

இவ்விளக்கத்தின்படி சிறுபான்மையினர் என்பது மற்றவர்களால் சரிசமமின்றி வேறுபாடுகளுடன் நடத்தப்படும் ஒரு குழுவாகும். எனவே சிறுபான்மை, குழு அளவில் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ இருக்கலாம்.

## சிறுபான்மைக் குழுவின் குணங்கள்

சிறுபான்மைக் குழுவின் மிக முக்கியமான குணமானது வேறுபாடு (Discrimination) அல்லது சரிசமமின்றி நடத்துதலாகும். இது சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படவில்லை. வெள்ளையர்களுடன் ஒன்றாக

உணவருந்துதல், பயணம் செய்தல் ஆகியவை மறுக்கப்பட்டன. மற்றொரு முக்கிய குணம் தப்பெண்ணம் (Prejudice) அல்லது காழ்ப்புணர்ச்சி. ஒரே மாதிரியான நம்பிக்கைகளின் காரணமாக மக்களிடையே தவறான எண்ணங்கள் உள்ளன. இதன் காரணமாகச் சிறுபான்மையினரை அவர்கள் வேறுபடுத்துகிறார்கள். தப்பெண்ணம் என்பது தவறான எண்ணத்ததை மனதில் கொண்டுள்ளதாகும். வேறுபடுத்துதல் என்பது நேர்மையற்ற முறையில் சிறுபான்மையினரை நடத்துதல், பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைப் பற்றித் தவறான எண்ணங்களை மட்டும் கொண்டிருக்கலாம் அல்லது தவறான எண்ணங்களிலில்லாமல் அவர்களை வேறுபடுத்தி நடத்தலாம்.

வேறுபடுத்துதலின் விளைவாகச் சிறுபான்மையினர் தங்கள் குழுவில் ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தமது குழுவின் வெளியில் சமூக உறவு கொள்வதைவிட தங்கள் குழுவிலேயே உறவுகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் குழுவிலேயே திருமணம் செய்து கொள்கிறார்கள்.

## சிறுபான்மைக் குழுவின் வகைகள்

சிறுபான்மைக் குழுவினர் வெவ்வேறு அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றனர். உடல் அமைப்பு, பண்பாடு, பொருளாதாரம், நடத்தை ஆகியவற்றில் சில மக்கள் வேறுபடும் பொழுது அவர்கள் சிறுபான்மையினர் என அழைக்கப்படுகின்றனர். சிறுபான்மைக் குழுவினர் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றனர்.

## உடல் ரீதியான சிறுபான்மைக் குழு (Physical Minority)

வலிமை வாய்ந்த பெரும்பான்மையினர் ஒரு குழுவை உடல் வேறுபாடுகளின் காரணமாக வேறுபடுத்தி அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்கும் போது அது உடல்

ரீதியான சிறுபான்மைக் குழு என அழைக்கப்படுகிறது. உதாரணமாகக் கறுப்பர்கள், பெண்கள், வயதானோர் உடல் ரீதியான சிறுபான்மைக் குழுக்களாகும்.

## பண்பாட்டுச் சிறுபான்மைக் குழு (Cultural Minority)

பண்பாட்டு வேறுபாடுகளின் காரணமாக வலிமை வாய்ந்த பெரும்பான்மையினர் சிலகுழுக்களை வேறுபடுத்திக் கட்டுப்படுத்துகிறார்கள். இக்குழுக்களே பண்பாட்டு சிறுபான்மைக் குழு என அழைக்கப்படுகின்றன.

## பொருளதார சிறுபான்மைக் குழு (Economic Minority)

எந்த ஒரு குழு, வலிமை வாய்ந்த குழுவினரால் பொருளாதார அடிப்படையில் வேறுபடுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப் படுகிறதோ அக்குழு பொருளாதார சிறுபான்மைக் குழு என அழைக்கப்படுகிறது. உதாரணமாக ஏழை வர்க்கத்தைப் பொருளாதார சிறுபான்மைக்குழு எனக் குறிப்பிடலாம்.

## நடத்தை ரீதியான சிறுபான்மைக்குழு (Behavioral Minority)

எந்த ஒரு சிறுபான்மைக்குழு வலிமை வாய்ந்த குழுவினால் நடத்தை ரீதியில் வேறுபடுத்தப்பட்டு, கட்டுப்படுத்தப்படுகிறதோ அக்குழு நடத்தை ரீதியான சிறுபான்மைக்குழு என அழைக்கப்படுகிறது. குற்றம் புரிபவர்கள், ஓரினச்சேர்க்கையில் ஈடுபாடுள்ளவர்கள், மனநலம் குன்றியவர்கள் இவ்வகையால் அடங்குவர்.

## சிறுபான்மையினரின் சூழ்நிலைகள் (Minority Situations)

சிறுபான்மையினரின் சூழ்நிலையை அவர்களுடைய கொள்கைகளின் அடிப்படையில் உணரமுடியும் இதன் அடிப்படையில் லூயிஸ் விர்த் (Louis Wirth) சிறுபான்மையினரை நான்கு வகைகளாகப் பிரிக்கிறார் அவை :

(i) பன்மைவாதி (Phuralistic) ஒரு சிறுபான்மைக் குழு மற்ற பெரும்பான்மையினர், சிறுபான்மையினருடன் அமைதியான முறையில் வாழ விரும்பும் பொழுது அக்குழுவைப் பன்மைவாதி என்று குறிப்பிடலாம். பண்பாடு, மொழி, மதம் ஆகியவற்றில் வேற்றுமையைச் சகித்துக்கொண்டு பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றல் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வதே பன்மைவாதம் எனக்கூறப்படுகிறது. கூபர் மற்றும் ஸ்மித் (Kuper and Smith) என்பவர்கள் "இரண்டு அல்லது மேற்பட்ட மக்கள் பிரிவுகள் ஒரு அரசியல் அமைப்பில் இணைந்து பொருட்கள் மற்றும் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு, பண்பாடு, இரத்தம் ஆகியவற்றில் கலப்படமில்லாமல் தூய்மையுடன் இருப்பதே பன்மைவாதம்" எனக்குறிப்பிடுகிறார்கள். பன்மைவாதம் என்பது சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு மாறுபடுகிறது. சில சமூகங்களில் மிககுறைந்த அளவில் பொருளாதார அரசியல் ஒற்றுமை ஏற்படுகிறது. உதாரணமாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய சூழல் ஏற்பட்டது. பண்பாட்டுப் பன்மைவாதம் என்பது மிக அதிக அளவில் பொருளாதார ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரே குறிக்கோளை அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் வெவ்வேறு மரபுகளைப் பகிர்ந்து கொள்ளுதலாகும். ஐக்கிய நாடுகளில் உள்ள வெவ்வேறு மனித இன மக்களிடம் இத்தகைய பன்மைவாதம் காணப்பட்டது.

**ஒன்றுபடுபவர்**

ஒன்றுபடுபவர் (Assimilationist) ஒரு சிறுபான்மையினர் மேம்பட்ட குழுவுடன் ஒன்றுபட்டு அவர்களுடன் இணைந்து வாழ விரும்பும்பொழுது அக்குழுவை ஒன்றுபடுபவர் எனக் குறிப்பிடலாம். ஒன்றுபடுதலில் சிறுபான்மையினரின் தனித்தன்மை பாதிக்கப்பட்டு பெரும்பான்மையினரின் தன்மைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பண்பாடு ஒன்றுபடுதல் பண்பாட்டுக் கலப்பு (Acculturation) என அழைக்கப்படுகிறது. சமூக அமைப்பில் ஒன்றுபடுதல் ஏற்படும்பொழுது சிறுபான்மையினரின் நிறுவனங்கள் மற்றும் சமூக உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக

அமெரிக்காவில் வாழும் நீக்ரோக்கள் தங்களுடைய பண்பாட்டை மாற்றி, அமெரிக்க சமூகத்தில் உள்ள பொதுவான பண்பாட்டை ஏற்றுக் கொண்டார்கள்.

## பிரிந்து செல்பவர் (Seccessionist)

சிறுபான்மையினர் பண்பாட்டு மற்றும் அரசியல் சுதந்திரத்தை நாடும்பொழுது அவர்களைப் பிரிந்து செல்பவர் எனக் குறிப்பிடலாம். பன்மைவாதம் அல்லது ஒன்றுபடுதல் தோல்வியுறும் பொழுது அவர்கள் சுதந்திரத்திற்காக இயக்கங்களை ஏற்படுத்துகிறார்கள். இத்தகைய நிலை முன்பு அரசியல் சுதந்திரம் கொண்டவர்களிடம் ஏற்படுகிறது.

## போராடுகிறவர் (Militant)

சிறுபான்மைக் குழு மற்றவர்களை ஆதிக்கம் செலுத்த விரும்பும்போது அதனைப் போராடுகின்ற குழு என அழைக்கிறார்கள். அக்குழு தன்னுடைய ஆதிக்கத்தை மற்றவர்கள் ஏற்கும்படி செய்ய முயலுகிறது, உதாரணமாக அராபியர்கள், யூதர்களிடம் ஒரு ஆதிக்க நிலையை ஏற்படுத்த முயற்சி செய்தனர்.

மேலே குறிப்பிட்ட வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிறுபான்மையினர் மற்றும் பெரும்பான்மையினரின் உறவுமுறை தீர்மானிக்கப்படுகிறது. மேலும் பெரும்பான்மையினரின் கொள்கைகளும் இவர்களுடைய உறவைப் பாதிக்கின்றன.

## பெரும்பான்மையினரின் கொள்கைகள் (Majority Policies)

பெரும்பான்மையினர் சிறுபான்மையினருடன் ஒன்றுபடுதல் என்ற நிலையிலிருந்து அவர்களை வெளியேற்றுதல் என்ற நிலைவரை வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

இவற்றைப் பற்றிய விளக்கமானது சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் உறவுமுறையை அறிந்து கொள்ள உதவுகிறது.

## ஒன்றுபடுதல் (Assimilation)

பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை அவர்களுடைய மதம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்ற அனுமதிக்காமல் தங்களுடைய பண்பாட்டைப் பின்பற்ற வற்புறுத்துதல் ஒன்றுபடுதல் என அழைக்கபடுகிறது. இதே கொள்கையைச் சிறுபான்மையினர் கொண்டிருந்த போதிலும், அவர்களுடைய அணுகுமுறை இதிலிருந்து வேறுபடுகிறது. அங்கு அவர்கள் தானாகவே ஒன்றுபடுகிறார்கள் இங்குச் சிறுபான்மையினர் வற்புறுத்தப்படுகின்றனர். வேகமான ஒன்றுபடுதல் (Forced Animilation) என்பது இன அமைதியான ஒன்றுபடுதல் (Peaceful Animilation) என்பது நீண்டநாட்கள் நிகழக்கூடிய பண்பாடு மற்றும் இன ஒற்றுமையாகும். இம்முறையில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அவர்களுடைய வழியில் அவர்களுடைய வேகத்தில் ஒன்றுபட அனுமதிக்கிறார்கள்.

## பன்மைவாதம் (Pluralism)

பெரும்பான்மையினர், நாட்டின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு பாதிக்காத வகையில் சிறுபான்மையினரைப் பண்பாடு வேறுபாடுகளைக் கொள்வதற்கு அனுமதிக்கிறார்கள். இதுவே பன்மைவாதம் என அழைக்கப்படுகிறது. பன்மைவாதம் மக்களிடம் பூசலையும், இறுக்கத்தையும் குறைக்கிறது.

## சிறுபான்மையினரின் சட்டப் பாதுகாப்பு (Legal Protection of Minorities)

சட்டப்பாதுகாப்பு என்பது பன்மைவாதத்துடன் தொடர்புடையது. சட்டம் மற்றும் நீதியின் மூலமாகச் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிப்பதே இதன்

நோக்கமாகும். ஆனால் சமூகத்தில் சில முக்கியமான பெரும்பான்மையினர் இத்தகைய சட்டங்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஐக்கிய நாடுகளின் சட்டத்திர் 13, 14 மற்றும் 15 ஆவது சட்டத் திருத்தங்களில் சிறுபான்மையினருக்குக் குறிப்பாகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் இதனை ஐக்கிய நாடுகளில் சில பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்வதில்லை.

## மக்கள் தொகை இடமாற்றம் (Population Transfer)

பெரும்பான்மையினர், சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்பதற்காக மக்கள்தொகை இடமாற்றம் என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றனர். இது சிறுபான்மையினரின் பிரிந்து செல்லுதல் என்ற கொள்கையுடன் ஒத்துப்போகிறது. ஏனெனில் இக்கொள்கைகள் இரண்டிலும் உடல்ரீதியான பிரிவின் காரணமாக அழுத்தம் குறைக்கப்படுகிறது. சில சமயங்களில், மக்கள்தொகை இடமாற்றம் என்பது அமைதியான வழியில் நடைபெறுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகள், விருப்பங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து அவர்களுடைய நிலையை உயர்த்துவதே இதன் நோக்கமாகும். மக்கள்தொகை இடமாற்றம் இரண்டு வகைப்படும். ஒன்று நேரான இடமாற்றம் (Direct) மற்றொன்று மறைமுகமான இடமாற்றம் (Indirect) முதலாவதில், சிறுபான்மையினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் படுகின்றனர். உதாரணமாக இடைநிலைக் காலத்தில் யூதர்கள் பல நாடுகளிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். மறைமுகமான இடமாற்றத்தில் சிறுபான்மையினருக்குப் பலவித துன்பங்களை ஏற்படுத்தி அதன் காரணமாக அவர்களாகவே இடம் பெயரச்செய்வதாகும். இம்முறையில் ரஷ்யப் பேரரசு யூதர்களைத் தன்னுடைய நாட்டியிலிருந்து வெளியேற்றியது.

## தொடர்ந்து அடிமைப்படுத்துதல் (Continued Subjugation)

மேலே குறிப்பிட்ட அனைத்துக் கொள்கைகளும் சிறுபான்மையினரை ஒன்றுபடுத்துவதில் முக்கியத்துவம்

அளிக்கிறது. ஆனால் சில நேரங்களில் பெரும்பான்மையினர், சிறுபான்மையினரைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முனைகின்றனர். அவர்களைத் துன்புறுத்திக் கீழ்ப்படிய வைக்கும் நோக்கத்துடன் செயல்படுகின்றனர். கடினமான வேலைகளைச் செய்ய இவர்களைப் பயன்படுத்துகின்றனர். தென் ஆப்பிரிக்காவில் வாழும் வெள்ளையர்கள், கறுப்பர்களை அடிமைகளாக நடத்தி வந்தனர். கறுப்பர்கள் அல்லாத நாட்டை நினைத்துப் பார்ப்பதே அவர்களுக்குக் கடினமாக உள்ளது. ஏனெனில் குறைந்த ஊதியத்தில் கடினமாக வேலைகளைச் செய்ய இவர்கள் தேவைப்படுகின்றனர்.

## அடியோடு களைதல் (Extermination)

சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் அதிக முரண்பாடு கொள்ளும் போது ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வதைக் கொள்கைகளாகக் கொண்டுள்ளனர். அத்தகைய நடத்தையானது பழங்குடி மக்களிடம் காணப்பட்டது. ஐக்கிய நாடுகள் தம்முடைய கொள்கைகளை மாற்றுவதற்கு முன்பு இவ்வாறு மூன்றில் இரண்டு பங்கு இந்தியர்களை அழித்தனர்.

மேற்குறிப்பிட்ட அனைத்துக் கொள்கைகளும் தனித்தனியானவை அல்ல. சிலநேரங்களில் ஒன்றாகவே பயன்படுத்தப்படுகின்றன. சில நீண்டகால திட்டங்களையும், சில தற்காலிகத் திட்டங்களையும் செயல்-படுத்துகின்றன. கொள்கைகள் அதிகார பூர்வமாக நிறைவேற்றப்படுனின்றன. சில அன்றாட வாழ்க்கையில் பெரும்பான்மையினர் செய்யக் கூடிய செயல்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாறு சிறுபான்மையினர் மற்றும் பெரும்பான்மையினர் கொள்கைகளில் அவர்களது உறவு முறை வெவ்வேறு சமூகத்தில் வேறுபடுகிறது.

## பாடம் - 17

# சமூக வழியிலிருந்து விலகுதலும் சமூகக் கட்டுப்பாடும் (Social Deviance and Social Control)

## சமூக வழியிலிருந்து விலகுதலின் பொருள் (Social Deviance)

சமூக விலகுதலில் (Social Deviance) வேறுபாடும் அடங்கும். சமூக நடைமுறையிலான நடத்தை மாறுபட்டு அல்லது வழக்கத்திற்கு மாறாக இருக்கும். ஒரு தவறான நடத்தை உடையவர் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டு வழக்கத்திற்கு மாறாக இருப்பார் ஒன்றை சமூக வேறுபாடு என்றால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நடத்தை உடைய நெறிகளில் இருந்து அது வேறுபட்டிருக்கும். சமூக வழியிலிருந்து விலகிச் செல்லும் நடத்தை சமூக எதிர்பார்ப்புகளைப் பின்பற்றி இருக்காது. ஒரு மக்கள் அல்லது நடத்தையின் பண்பை சமூக விலகுதல் குறிக்காது. அது சமூக நெறிகளில் இருந்து விலகிச் செல்லும் ஒருவருடைய நடத்தையைத் தீர்மானிப்பது ஆகும். சமூக வழியிலிருந்து விலகிச் செல்லுதல் என்பதில் ஒரு தனி மனிதர் அல்லது குழு மற்றொரு தனி மனிதர் அல்லது குழுவின் ஏற்றுக் கொள்ள முடியாத வழிகளில் உள்ளது எனத் தீர்மானித்தல் ஆகும். நடத்தை, தரங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. இவைகள் பண்பாட்டை ஒட்டியவை தீர்மானத்தை நிச்சயிக்கிற சமூக நிலைகள் மிக அதிகமாக வேறுபடுகின்றன.

சமூக வழியில் விலகிச் செல்லும் தவறான நடத்தை தற்காலிகமானது. ஒரு காலத்தில் தவறான நடத்தை மற்றொரு காலத்தில் சமூகத்தினால் ஆதரிக்கப்படலாம், எடுத்துக்காட்டு கருச்சிதைவு சமூக வழியில் இருந்து விலகிச் செல்லும் சில நடத்தைகள் தண்டிக்கப்படுகின்றன. சில நேரங்களில் அவைகள் அலட்சியப் படுத்தப்படுகின்றன. விலகிச்

செல்லுதல் என்னும் நடத்தை மனிதர்கள் அல்லது அவர்கள் செயல்களின் குண நலங்களைக் குறிப்பது அல்ல. இது மற்ற மனித நடத்தைகளைப் போல ஊடாட்டச் செயலைச் சார்ந்தது ஆகும். ஒருவரின் தகுநிலைக்கு ஏற்ப, அவர் தவறான சமூக வழியில் செல்லும்போது தண்டிக்கப்படுகிறார்.

பெரும்பாலான நமது நடத்தைகள் மற்றவர்கள் அடங்கிய சபை முன்பும், மற்றவர்களுக்காகவும் வழிகாட்டுகின்றன. இந்தச் சபைதான் ஒரு நடத்தையின் பொருள், சமூக நடத்தையிலிருந்து விலகிச் செல்கிறது என விளக்குகிறது. சமூக வழியிலிருந்து விலகிச் செல்லும் நடத்தையைத் தெரிந்து கொள்ள அவர் நடத்தை அல்லது அவர் மீது கவனம் செலுத்தாமல், ஆனால் எந்த சமூக நிலைகளில் அது ஏற்பட்டது என்றும் அதற்கு மற்றவர்களுடைய எதிர்ச்செயலையும் அறிய வேண்டும்.

## சமூகத்தில் தவறான நடத்தையின் செயற்பாடுகள்

பொதுவாக நிலவுகிற கருத்திலிருந்து வேறுபட்ட சமூகவியல் நோக்கமாவது: தவறான நடத்தை சில வகைகளில் நன்மை பயக்கும்; சமூக அமைப்பு நிலைத்திருக்க அது தன் பங்கினைத் தருகிறது. தர்கேம் (Durkheim) இவ்வாறு செய்யப்படும் குற்றம் ஒரு சாதாரண நிகழ்சசி என விவாதிக்கிறார். அதாவது இதை ஒவ்வொரு சமூகத்திலும் காணலாம் என்றும் மேலும் இது ஒவ்வொரு சமூகத்திற்கும் தேவையான ஒரு பொருளாகும் என்றும் கூறுகிறார். இந்த சாதாரண நிகழ்ச்சியின் விளக்கமானது குற்ற நடத்தைகள் மக்களின் திரளான மனச் சான்றை மீண்டும் உயிர்ப்பிக்கிறது அல்லது மனச் சான்றிற்கு ஊக்கமளிக்கிறது. நெறியை மீறுதல் மக்கள் சமூக நெறியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறது. அடிக்கடி, ஒரு சமூக மதிப்பீட்டிற்குச் சவால் விடும்வரை அதைப் பற்றி நாம் எவ்வளவு கவனம் செலுத்துகிறோம் என்பதும் தெரிவதில்லை. கல்வித் துறையின் சுதந்திரத்தை யாராவது ஒருவர் குறைக்க முயலும் போது, சுதந்திரத்தின் மதிப்பு மீண்டும் வலியுறுத்தப்படுவது தெரிகிறது. இந்த

நோக்கத்தில், சமூக தவறான நடத்தை என்பது மிக முக்கிய அலுவலாகிய குழு உணர்வுகளைப் புதுப்பிக்கிறது.

டர்கேம் சமூக தவறான நடத்தையின் இரண்டாவது செயற்பாடாக அது சமூக மாற்றத்திற்குத் தரும் தூண்டு விசையாக அமைவதைக் குறிப்பிடுகிறார். புதியன கண்டு பிடிப்பவர் எல்லாக் காலங்களிலும், இடங்களிலும் தவறான அல்லது சமூக வழியிலிருந்து விலகிச் செல்பவர் எனக் கருதப்படுகிறார். தவறாக நடப்பவர் சமூகத்தில் ஒழுங்கை வளர்க்க உதவுகிறார். ஒரு குழுவில் உள்ள தவறான நடத்தையுடையவர் மற்ற குழு அங்கத்தினர்களுக்குப் பயன் தரக்கூடிய பணியாகிய, பிறர்பழி சுமப்பவராக விளங்குகிறார் மிக தீவிரமாகச் சமூக வழியிலிருந்து விலகிச் செல்பவர் மீது குழு அங்கத்தினர்கள் தங்கள் விரோதங்களைத் தங்களிடமிருந்து அகற்றி, அவர்மீது தள்ளுகின்றனர்.

## தவறான நடத்தையின் செயற்பாடின்மை

சில வழிகளில் ஒருவர் சமூகவழியில் விலகிச் செல்லும் நடத்தை செயற்பாடின்மை ஆக இருக்கக் கூடும். இதற்கு பார்சன்ஸ் (Parsons) கூறும் சமூக முறைகளில் உள்ள நான்குவித தவிர்க்க முடியாத செயற்பாடுகளைக் கையாளலாம். 1. சரிப்படுத்திக் கொள்ளுதல் 2. இலக்கை அடைதல் 3. ஒருமைப்பாடு 4. வகையை நிலை நிறுத்தல். ஒரு சமூக முறை நிலைத்திருக்க இந்தத் தவிர்க்க முடியாதவைகள் தேவை. இந்த நிலைகளை விலக்கினால், தவறான நடத்தை உடைய செயல் ஒருவர் இந்த நான்குவித அலுவல்களுக்கும் தன் பங்கினைச் செலுத்த முடியாமல் தோல்வி அடைகிறார்.

ஒரு சமூக முறையாகிய குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அது அங்கத்தினர்களிடமிருந்து தழுவுதலுக்கு அவர்கள் பங்குகளை வேண்டுகிறது. குடும்ப அங்கத்தினர்களில் ஒருவர் குடும்பம் உயிர் வாழ்வதற்குத் தேவையான வருமானத்தைத் தர வேண்டும். தவறான நடத்தைகளாகிய போதை மருந்துப் பழக்கம், மனநோய்

மற்றும் தற்கொலை முதலியன குடும்பத்தைக் காப்பாற்ற இயலாமல் அங்கத்தினர்களை கைவிட்டுவிடுகின்றன.

ஒரு சமூக முறையில் இலக்கினை அடைய, குடும்பம் தன் வளங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவுகளை ஒரு நம்பிக்கையான சாதனத்தின் வாயிலாக எடுக்க வேண்டும். இம்முடிவுகள் எடுக்கும் பொழுது அங்கத்தினரிடையே கருத்து வேற்றுமை ஏற்படின் சமூக முறையில் பிரச்சனைகள் தென்படும்.

மக்கள் தங்கள் நடத்தையை மற்ற அங்கத்தினர்கள் நோக்கங்களுடன் ஒருமைப்படுத்த தோல்வி அடையும் பொழுது சமூக அமைப்பில் அது ஒரு குற்றம் ஆகிறது, (எ.கா.) குழந்தை இல்லத்திலுள்ள கற்கண்டைத் தன் உபயோகத்திற்காகப் பதுக்கி வைத்தல் ஒரு குற்றமாகும். இத்தகைய தவறான செய்கைகள் அங்கத்தினர்களிடம் உள்ள சுய உறவினை அகற்றி மற்றவர்களை அயலார்களாக எண்ணச் செய்கிறது.

ஒரு சமூக முறையின் தவறான நடத்தை, வகையை நிலை நிறுத்துதலை மீறிச் செல்வதாகும். இச்செய்கை நீதிக்குச் சவால் விடுகிறது. இது போன்ற தவறான நடத்தையைப் பாவம் எனக் கூறலாம். மேலும் இவர் சமூக இயல்பினனாகும் குலநலன்களை வளர்ப்பதில் தோல்வி அடைகிறார். அவருடைய நடத்தை குழுவின் அடிப்படை மதிப்பீடுகளுக்கு ஏற்றவாறு அமைகிறது.

## சமூகக் கட்டுபாடு (Social Control)

மனிதன் குழுக்களில் வாழ்கிறான் குழு ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவருடைய கடமைகளை உணர்த்துகிறது. அவர் தன்னை ஒத்தவர்களுக்கும், தன் குழுவிற்கு உதவிசெய்தலும் தன் பணியாகக் கருதுகிறார். குழு தன் அங்கத்தினர்களைவிட மிக முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. குழுவின் இணக்கமான நடைமுறைக்காக ஒவ்வொரு உறுப்பினரும் அவருடைய விருப்பங்களைக் குழு

விருப்பங்களாகக் கருதி, அவைகளை நிறைவேற்றுவதற்குத் துணை புரிய வேண்டும். எவரும் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது. அவருடைய தேவைகள் அவருடைய குழுவின் நன்மைக்காகவும், அவருடைய சொந்த மகிழ்ச்சிக்காகவும், நலனுக்காகவும், கட்டுப்படுத்தப்படுகிறது. தனி மனிதனின் நன்நடத்தை அவன் குழுவின் நன்மைக்காகவும், மற்ற மனிதர்களுக்காகவும், அவனுக்காகவும் கட்டுப்படுத்தப்-படுகிறது. மனித ஒழுக்கம் வெளிச்சக்திகளால் கட்டுப்படுத்தப் படுகிறது. இது எல்லா குழு வாழ்விலும் காணப்படுகிறது. மேலும் இது குழு வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

## வரையறை

சமூகக் கட்டுப்பாடு ஒரு வழியாகக் கருதப்பட்டு, அதில் சமூக ஒழுங்கு முழுவதும் ஒன்று பட்டும் தொடர்ந்தும் செயல்படுவதாகும். மேலும் சமூகம் எவ்வாறு ஒரு மாற்றமுடைய நடுநிலை அமைதியுடனும் செயல் புரிகிறது என மெக்கைவரும் பேஜும் (MacIver and Page) விவாதிக்கிறார்கள். சமூகக் கட்டுப்பாட்டின் கருத்துப் படிவங்கள் அதன் தொடர்ச்சியான மையப் பிரச்சினைக்கும், சமூக ஒழுங்கிற்கும் தனி மனிதனுக்கும் உள்ள தொடர்பையும் அவர்கள் கூறகிறார்கள். மெக்கைவரும் பேஜும் நம் சமூகம் தனி ானிதனின் ஒழுக்கத்தை முறைப்படுத்தவும், சீராக்கவும் வழிச ளத் தேட வேண்டும் என்று எண்ணுகின்றனர். இது சமூக நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்துக் காப்பாற்ற பயனாகிறது என்கின்றனர்.

எந்த சமூகமும் நன்முறையில் முன்னேற அமைதியும் ஒழுங்கும் தேவை என சாமுவேல் கோயினிங் (Samuel Koening) சொல்கிறார். சில உற்சாகம் உறுப்பினர்களிடையே வேரூன்றவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக நியதிகள் ஒத்துப் போகவும், குழு நன்மையை எண்ணித் தன்னை உணரும் தன்மையம் அங்கு மேலோங்கி நிற்கிறது. இது தனிமனிதனால் மட்டுமே பெற இயலாது. இதைச் சமூகம் அதன் உறுப்பினர்களிடம் கட்டுப்பாட்டைப் பயன்படுத்திப்

பெறுகிறது. இத்தகைய செயல் முறையை சமூகக் கட்டுப்பாடு என சமூக வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கில்லன் மற்றும் கில்லன் (Gillin and Gillin) என்பவர்கள் ஆலோசனைகள், நம்பிக்கை, கட்டுப்பாடு மற்றும் கட்டாயப்படுத்துதல் முதலியனவற்றின் செயற்பாடுகள் மூலம் மனித சமூகத்தில் ஒரு ஒழுங்கு முறையினைத் தனி நபர்கள் மீது புகுத்தி ஒரு சீரான சமூக அமைப்பை உருவாக்கும் பொருட்டு இருக்கக்கூடிய முறையமைப்பே சமூகக் கட்டுப்பாடு ஆகும் என விளக்குகிறார். மெக்கைவர் என்ற சமூகவியல் அறிஞர் சமூக மாற்றம் என்ற நிலையில் முழு சமூக ஒழுங்கு முறையானது நல்ல முறையில் பின்பற்றப்-பட்டு, ஒரு சீரான சமூகம் நிலவுவதற்கு இருக்கும் ஒரு வழிமுறையைச் சமூகக் கட்டுப்பாடு எனக் கூறுகிறார்.

சமூகக் கட்டுப்பாட்டிற்கும், சமூகமயமாகுதலுக்கும் வேறுபாடுகள் உண்டு. சமூக மயமாதலில் ஒருவன் பயிற்சி மற்றும் அநுபவ ரீதியில் சமூக நெறிமுறைகளின் அடிப்படையில் ஒரு சமூக விலங்காக மாற்றப்படுகிறான். சமூகக் கட்டுப்பாட்டில், நெறி முறைகளின் வாயிலாக நடத்தையினை ஒழுங்குபடுத்தக்கூடிய ஒரு பொதுவான முறையைக் காணலாம். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் சமூக நெறிகளைக் குறிக்கின்றன. தனி மனிதனும் சமூகக் குழுவும் பல விதங்களில் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றனர். சமூகத்தில் சமூக ஊடாட்டம் மற்றும் சமூக உறவுமுறைகள் இருக்க சமூகக் கட்டுப்பாடு தேவையாகிறது. சமூக நலன் கருதிப் பல மனிதர்கள் மற்றும் குழுக்களின் நடத்தைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். ஆகவே சமூகக் கட்டுப்பாடு மிக அவசியமாக இருக்கிறது.

## சமூகக்கட்டுப்பாட்டின் நோக்கங்களும் செயற்பாடுகளும்

ஒரு தனி மனிதன் சமூகமின்றித் தனிமையில் வளர்ந்து வந்தால் சமூகத்தில் முழு மனிதனாக நடந்து கொள்ள இயலாது. மேலும் ஒழுங்கான சிறப்புடைய

ஆளுமையைப்பெற இயலாது. சமூகக் குறிக்கோள்களை அடையும் பொருட்டு சமூக நெறிமுறைகளால் மானிட ஊடாட்டம் ஒழுங்கு படுத்தப்படுகிறது. தனிமனிதனை இது ஒரு சீரான நிலைக்குக் கொண்டுவருகிறது. தனி மனிதர்களுக்குள்ள ஆர்வத்துடன் கூடிய குறிக்கோள்களுக்கு அளவேயில்லை. நெறி முறைகள் மற்றும் வழக்கங்கள ஆகியவற்றின் ஒழுங்குமுறை அமைப்பே சமுதாயம் எனப்படும். நெறிமுறைகள் மூலம் சமூக ஒழுங்கினை ஏற்படுத்துவதே சமூகக்கட்டுப்பாட்டின் நோக்கமாகும். சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதே சமூகக் கட்டுப்பாட்டின் குறிக்கோளாகும். "ஒட்டு மொத்தமாக நினைவு கூர்தல்" என்பதை உண்டாக்கவும், மற்றும் சமூகத்தைச் சீராக அமைக்கவும் இது பயனாகிறது.

மனிதனின் ஆர்வமும் ஒற்றுமையுணர்வும் என்றும் தொடர்ந்து சமூகத்திலிருக்கும் சமூக நெறிகள் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு அதிகக் கட்டுப்பாட்டை விதிக்கின்றன. பொதுவாக அதிகார வர்க்கமும் சமூக நெறிகளை ஏற்படுத்துகின்றது. இவைகளை மற்ற வகுப்பினர் எதிர்க்கின்றனர். தனி மனிதர்களின் ஆர்வம், மற்றும் குறிக்கோள் வேறுபடுவதால், சமூக ஒற்றுமை சீராகச் சமூகத்தில் காணப்படுவதில்லை, சமூகத்திலுள்ள பல குழுக்களின் பொதுவான பழக்க வழக்கங்கள் மற்றும் குறிக்கோள் மூலம் சமூகத்தில் ஒற்றுமை நிலவுகிறது. சமூக நெறிகளை மக்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். சமூகக் கட்டுப்பாட்டின் ஒரு முக்கிய குறிக்கோள் சமூக ஒழுங்கினை ஏற்படுத்தி, அதைக் காப்பாற்றி, வளர்ப்பதாகும். சமூக ஒழுங்கு என்ற செயல் ஒரு முழுமைபெறாத ஒன்றாகவும், ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மை உடையதாகவும் உள்ளது. சமூக முன்னேற்றத்தில் சமூக ஒழுங்கு, ஒழுங்கின்மை என்ற நிலைகள் காணப்படுகின்றன. சமூக ஒற்றுமைக்கும், சமூகத் தொடர்நிலைக்கும் சமூகக் கட்டுப்பாடு மிக அவசியமாகும். நெறிகள் காலத்திற்கேற்ப மாறுபவை ஆகும்.

## சமூகக் கட்டுப்பாட்டின் வகைகள்

கட்டுப்பாட்டின் வகைகள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றன. பழங்கால சமூகத்திற்கும் நவீன கால சமூகத்திற்கும் வகைகளில் வேறுபாட்டினைக் காணலாம். பழங்கால சமூகம் இயற்கையாகவும், கடவுள் நம்பிக்கை, மரபு ஒட்டிய வழக்குகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தது. தற்கால சமூகத்தில் ஆலோசனை, மதம் சாராத புகழாரம், கேளிக்கைகள், வெகுமதிப்பு ஆகியவைகளுடன் மரபு ஒட்டிய பழக்க வழக்கங்களும் காணப்படுகின்றன. இரண்டு வித சமூகக் கட்டுப்பாடுகளைக் காண்போம்.

1. முறைசார்ந்த சமூகக்கட்டுப்பாடு
2. முறைசாரா சமூகக்கட்டுப்பாடு

முறை சார்ந்த கட்டுப்பாடு பின் வரும் நிலைகளில் காணப்படுகிறது. விதிகள், ஆலோசனைகள், பொதுக்கருத்து, நவீனக்கல்வி மற்றும் அறிவியல் வழி முறைகள் சமூகத்தில் உள. இவைகள் தனி மனிதர்கள் மற்றும் சமூகக்குழுக்களின் நடத்தையில் ஒழுங்கை ஏற்படுத்துகின்றன. முறைசாரா சமூகக் கட்டுப்பாடு முதல் நிலை சமூகக் குழுவில் காணப்படுகிறது. இந்தக் குழு அங்கத்தனர்களின் உறவு முறைகள் நேர்முகமாகவும் மிக நெருக்கமாகவும் இருக்கும். இங்கு நெறிகளாகிய பொதுமக்கள் வழக்கு, வழக்கடிபாடுகள், மரபு ஒட்டிய பழக்க வழக்கங்கள் மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துகிறது.

## முறை சாராத சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்

### பொதுமக்கள் வழக்கு (Folkways)

வில்லியம் கிரகாம் சம்னா (William Graham sumnar) என்பவர் பொதுவாக அன்றாட வாழ்வில் காணும் ஒழுங்கற்ற நடத்தையைப் பொதுமக்கள் வழக்கு என்று

கூறுகிறார். மேலும் இவர் இயற்கையின் வேகத்தால், உருவாக்கப்பட்டதே பொதுமக்கள் வழக்காகும் என்க கருதுகிறார். இதைப் பொது மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கின்றனர். இதை மெக்கைவர் பொது மக்கள் வழக்கில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நடத்தை வழிமுறைகள் சமூதாயத்தில் காணப்படுகின்றன எனக் கூறுகின்றார், ஆதிவாசிகள், மற்றும் பழங்கால சமூகங்களில் பொதுமக்கள் வழக்கு மற்றும் பழக்க வழக்கங்கள் ஒரே பொருள் அல்லது அர்த்தத்தில் பயன் படுத்தப்பட்டன. பொதுமக்கள் வழக்கம் சட்டத்தால் இயற்றப்பட்டதல்ல. எனவே இது சட்டத்திற்குக் கட்டுப்பட்டதல்ல.

தொன்று தொட்டு வந்த வழக்கங்கள், பழங்காலப்பழக்க வழக்கங்கள் மற்றும் பல வழிமுறைகளில் காணப்படும் நடத்தைகள் பொதுமக்கள் வழக்கில் அடங்கும். இதை அன்றாட சமூக வாழ்விலும், பண்டிகைக் காலங்களிலும் மக்கள் பின்பற்றிப் பயன் பெறுகிறார்கள். சடங்குகள், சாலையின் இடது புறம் செல்லுதல் குடும்ப அங்கத்தினர்கள் ஒன்றாகச் சேர்ந்து உணவு உண்ணல்; பாத்திரங்களைப் பயன்படுத்தும் விதம், உணவு தயாரிக்கும் முறை, குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்தல் குறிப்பிட்ட நேரத்தில் உறங்குதல் முதலியன பழைய காலப் பழக்க வழக்கங்களாகும்.

முற்காலப் பழக்க வழக்கங்கள் நல்ல எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றன மேலும் இவை நல்ல வழிமுறையினைக் குறிப்பிடுகின்றன. உதாரணம் மரியாதை, ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளுதல் நண்பர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தல், நன்றி செலுத்துதல், இருக்கையில் அமரச் சொல்லுதல், வணக்கம் தெரிவித்தல் முதலியவைகளாகும் பல சமூகக்குழுக்களில் பண்பாட்டை வெளிப்படுத்த பொதுமக்கள் வழக்கு இருக்கிறது. பொது மக்கள் பாடல், நடனம், கலை மற்றும் இலக்கியம் முதலியவைகளைக் காப்பாற்றப்படுகிறது. சமூக ஒற்றுமைக்குப் பொதுமக்கள் வழக்கு அவசியமாகிறது.

## வழக்கப்பாடு (Mores)

இது அறநெறியுடன் கூடிய நடத்தையாகும். மேலும் இது பொதுமக்கள் வழக்கிலிருந்து வேறுபடுகிறது வழக்கடிப்பாட்டில் சமூக நலனைக் கருத்தில் கொண்டு மக்கள் நடத்தையில் தவறான மற்றும் சரியானவற்றைக் காணலாம். வழக்கடிபாடு ஒரு குறிப்பிட்ட நிலையில் இருக்கும் மாறா நெறிமுறை ஆகும். இதில் சமூக நீதி அதிகம் இருக்கும் மாறா நெறிமுறை ஆகும். இதில் சமூக நீதி அதிகம் வலியுறுத்தப்படுகிறது. ஆடையின்றி, நிர்வாணமாக ஒருவர் சமூகத்தில் வாழக் கூடாது. மேலும் இருவர்களிடையே நிலவும் உறவு முறைகளின் தன்மையைக் குறிப்பிடுகின்றது. உ.ம். கணவன்–மனைவி உறவு முறைகளைப் பற்றியும் கூறலாம். மருத்துவர் நோயாளி உறவுமுறை ஆசிரியர் – மாணவர் உறவு முறைபற்றி ஆகியவற்றைப் பற்றிக் கூறலாம். உ.ம். உண்மை பேசுதல் சுருசுருப்புடன் வசித்தல், கௌரவமாக வாழ்தல் வீரம் பொறுமை மற்றும் கட்டுப்பாட்டுடன் வசித்தல், இருத்தல் ஆகியவற்றைக் கூறலாம் வழக்கடிபாடு ஒரே சீராக இருக்காது எ.கா., விதவை மறுமணம் ஒரு சில குழுக்கள் இத்திருமணத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

அறிவியல் பூர்வமாக வழக்கடிபாடு அமைவதில்லை மேலும் இதில் எக்காரணத்தையும் சீர்தூக்கிப் பார்க்க இயலாது. பழைய மற்றும் கடந்தகால அனுபவரீதியில் உண்டானது தான் வழக்கடிபாடாகும். இது பலன் தரக்கூடியதாகவும், பயனற்றதாகவும் இருக்கும் சில செயல்களைச் செய்ய இது வற்புறுத்தும். மற்றும் சில செயற்பாட்டினைத் தடுக்கும் அக மணம் புறமணம் ஆகிய திருமண நடைமுறைகள் வழக்கடிபாட்டிற்குச் சாதகமாக மற்றும் சாதகமற்ற விதத்தில் காணப்படுகின்றன குழந்தைப் பருவம் முதற்கொண்டே வழக்கடிபாடு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அதைப்பின்பற்றத் தயார் செய்யப்படுகின்றனர் இதன் வழியாகச் சமூக முன்னேற்றம் ஏற்படுகிறது உறுப்பினர்கள் வழக்கடிபாட்டின் மூலம் நல்ல உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் வளர்க்கின்றனர் வழக்கடிபாட்டை ஏற்றுக்கொள்ளாமல், அதை மீறிச் செயல்படுபவர்களுக்குப் பலவிதமான எதிர்ப்புகள் உண்டு. இதை விலக்கல் மூலம் சமூகம் தெரிவிக்கிறது.

மெக்கைவர் வழக்கடிபாட்டின் ஆலுவல்களை மூன்று வகையாகக் கருதி ஆராய்கிறார். வழக்கடிபாடு சமூகக்குழுக்கள் மற்றும் தனி மனிதர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காக உள்ளது சமூகத்தில் தனி மனிதரை மனிதப் பண்புகளுடன் உருவாக்கும் பொருட்டு வழக்கடிபாடு இருக்கிறது வழக்கடிபாட்டை மீறிச் செயல்படும்போது சட்டப்படி அவருக்குத் தண்டனை இல்லை அவர் சமூகத்தைவிட்டே வெளியேற்றப்படுவார் 2, தான் சார்ந்த சமூகத்தில் நிலவுகிற வழக்கடிபாட்டைப் பின் பற்றிப் பல நன்மைகள் அதன் மூலம் அடைகிறான் சமூகப் பாதுகாப்பு அவனுக்குக் கிடைக்கிறது. 3, சமூக ஒற்றுமைக்கு வழக்கடிபாடு ஒரு பாதுகாவலனாக இருக்கிறது வயது, பாலினம், வகுப்பு குடும்பம் மற்றும் நாடு ஆகியவற்றைச் சார்ந்து வழக்கடிபாடுகள் உள மக்களிடையே சுய உணர்வு உள்ள நிலையிலும் அவ்வாறு இல்லாத நிலையிலும் வழக்கடிபாடுகள் மக்களால் தன் இச்சையாகப் பின்பற்றப்படுகின்றன. சமூக மன்னேற்றத்திற்கு வழக்கடிபாடுகள் உறுதுணையாக உள்ளன சமூக முன்னேற்றத்திற்கு வழக்கடிபாடுகள் உறுதுணையாக உள்ளன தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் வழக்கடிபாடுகள் பயனாகி விரைவாக சமூகத்தை மேம்படச் செய்கின்றன.

வழக்கடிபாடுகளுக்கும் மக்கள் அல்லது நாட்டவர் வழக்குகளுக்கும் உள்ள வேறுபாடுகள்

1. நாட்டவர் வழக்குகள் வழக்கடிபாடுகளை விட மிகப் பொதுப் படையானவை மற்றும் பரந்த பண்புடையவை.

2. நாட்டவர் வழக்குகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை ஆனால் வழக்கடிபாடுகள் கட்டாயமானவை.

3. வழக்கடிபாடுகள் பொதுமக்கள் வழக்குகளை விட மதிப்பு தீர்வு முதலியன உடையதாகும்.

4. வழக்கடிபாடுகள் பொதுமக்கள் வழக்குகளை விட அதிக செயற்பாட்டுடன் தனி மனிதர்களின் விருப்பங்களைக் கட்டுபடுத்துகின்றன.

5. வழக்கடிபாடுகள் நாட்டவர் வழக்குகளை விட மிக ஆழமாக வேர்விட்டு மாறாமல் நிரந்தரமாக இருக்கின்றன.

6. நாட்டவர் வழக்குகள் ஒருவரின் சமூக நிலையும் தொழில் நிலைக்கும் ஏற்ப மாறுபடுகின்றன. ஆனால் வழக்கடிபாடுகள் அவ்வாறு மாறுவதில்லை.

முறைசாரா சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனங்களில் மரபு சடங்குகள், பொதுமக்கள் கருத்து மற்றும் பிரச்சாரம் முதலியன அடங்கும்.

## சட்டங்கள்

சட்டம் வலிமையாக மனிதனை அடக்க இயங்குகிறது இது சில தனிச் சிறப்பான பண்புகளைப் பெற்றுள்ளது. இது சமூகக் குழுக்கள் குறிப்பிட்ட காரணங்களுக்காகவும் மற்றும் சமூகத்தில் ஒழுக்கத்தை ஏற்படுத்தவும் ஆக்கப்பட்டதாகும். குறிப்பிட்ட சட்டத்தை மீறுபவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது, சட்டத்ததை மீறுபவர்களுக்குக் காவலர்களின் உதவியால் நீதி மன்றங்கள் தண்டனைகளை நிறைவேற்றுகின்றன சட்டமன்றம் ஒரு சட்டத்தை ரத்து செய்ய முடியும் நவீன சமூகத்தில் சட்டம் ஒரு நுட்பமாகச் செய்யப்பட்ட எழுத்து வடிவான சட்டத் தொகுப்பாகி நிரந்தர விதிகள் காவலர், வழக்கறிஞர், நீதிபதி, சிறைச்சாலை போன்ற உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது.

சட்டங்கள் ஆற்றலுடைய குழுக்களால் இயற்றப்பட்டு கட்டளைகளாக வெளிவருகின்றன சில சட்டங்களில் வழக்கங்கள், மரபுகளில் உறுதிபெற்ற நிலைகள் முதலியன நிறைந்துள்ளன. அவைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்வதே சட்டங்கள் ஆகும். மேலும் சட்டங்கள் நாட்டவர் வழக்குகள் வழக்கடிபாடுகள் முதலியவைகளிலிருந்து வளர்ச்சியடைந்துள்ளன மேலும் சட்டங்கள் சமூக மாற்றம் சமூகத்தில் தோன்றும் புதியவைகளுக்கு ஏற்ப கையாளப்படுகின்றன. சமூகத்தில் புதிய நிலைகள் உண்டாகும் போது புதிய சட்டங்கள் தேவையாகும், சமுதாய உறவில் சிக்கல் ஏற்பட்டு, சமூக மாற்றம் ஏற்படும் போதும் சட்டங்கள் எண்ணிக்கையில்

அதிகமாகின்றன சிக்கலான பெரிய சமூகத்தை ஒழுங்குகளுடன் நடத்திச் செல்ல சட்டங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன. மேலும் இத்தகைய சமூகங்கள் பொது இணக்க ஒப்பந்தம், மரபு வழக்கம், சமநீதி ஆகியவைகளை நம்பி இருக்க முடியாது முறைப்படி எழுதப்பட்ட மற்றும் சட்டமாக்கப்பட்ட விதிமுறைகள் சமூக நடத்தையை ஒழுங்குபடுத்த மிக அவசியமாகின்றன.

நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மிகவும் அவசியம் என்ற அளவில் உள்ள ஒரு வடிவமே சட்டம் என அழைக்கப்படுகிறது. மெக்கைவர் என்பவர் சட்டங்களில் பல்வேறு ஒழுங்குமுறைகள் விவரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுள்ளன என்று கூறுகிறார் மேலும் அரசு நீதிமன்றங்களால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இவைகள் நடைமுறைப்படுத்தபடுகின்றன. சட்டத்தை மீறினால் அவருக்கு சமூகத்தில் தண்டனை கண்டிப்பாகக் கிடைக்கும். ஆனால் பழக்கவழக்கங்களை மீறுகிறபோது தண்டனை தரப்படுவதில்லை, பழங்கால சமூகத்தில் உறவு முறைகள் நேரடியாகவும் மிக நெருக்கமாவும் காணப்பட்டன. மேலும் சமூக நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதில் பிரச்சனைகள் அவ்வளவாக இல்லை, சட்டங்கள் மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் பழக்கவழக்கங்கள் பழமையாக இருக்கும், விதிகளும் பழக்கவழக்கங்களும் சமூகக் கட்டுபாட்டிற்கு மிகவும் அவசியமாக இருக்கின்றன.

சட்டங்களை மிக வேகமாகச் செயல் படுத்துவது சற்று கடினமாக இருக்கும் தொன்று தொட்டு நிலவும் பழக்கவழக்கங்கள் நடைமுறையில் உள்ள பழக்கவழக்கங்களாகிய விருந்தோம்பல் திருமண முறைகள் சடங்குகள் முதலியன குழுவினுள் அடையாளம் கண்டுகொள்ளப் பயனாகின்றன. சட்டம் தனிப்பட்ட உறவுமுறைக்கு அல்ல அது ஒரு முகவரை போல செயல்படுகிறது. தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்களின் ஆதரவின்றிச் சட்டங்களை சமூகத்தில் நடைமுறைப்படுத்தக் கட்டாயப் படுத்த இயலாது. அறநெறிகளின் அனுமதி மற்றும் ஆதரவுடன் தான் சட்டங்களை மக்கள் மத்தியில் அமுலாக்க முடியும் வழிபாடு மற்றும் சடங்குகளைப் பின்பற்றுதலிலிருந்து மக்களைச்

சட்டங்கள் தடுக்க முடியாது எனவே சமூக நீதியை நிலை நாட்டும் பொருட்டும், சமூக ஒழுங்கு முறையை ஏற்படுத்தவும் மக்கள் மத்தியில் பழக்கத்தில் இருக்கும் அற நெறிகளைப் பொருத்தே இந்தச் சட்டங்கள் அமைகின்றன.

சட்டம் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சமூக முறை சார்ந்த கட்டுப்பாட்டுச் சாதனமாகும். சமூகத்திற்கும், அதன் முன்னேற்றத்திற்கும் இது மிகவும் அவசியமானதாக இருக்கிறது சட்டங்களின் எதிர்மறைக்குப் பின் வருபவைகள் உதாரணமாகும் அபராதம் விதித்தல், சிறைத் தண்டனை, தூக்குத்தண்டனை ஆகும் அற நெறிகளை மீறுபவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப் படுவார்கள். சட்டங்கள் மட்டுமே மக்களிடம் நடத்தையைக் கட்டுப்படுத்துவதில்லை நாட்டவர் வழக்கு, மற்றும் வழக்கடிபாடு ஆகியவற்றுடன் இணைந்த ஒரு சமூகக் கட்டுபாட்டுக் கருவியாக சட்டம் உள்ளது.

**சமயம்**

சமயம் இயற்கையைச் சார்ந்த ஒரு நம்பிக்கையைச் சமூகத்தில் நிலவச் செய்கிறது. இது சமூகத்தில் மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துகிறது. இது மக்களின் கடவுள் நம்பிக்கையை மையமாகக் கொண்டு அறநெறிகளைச் சமூகத்தில் உண்டாக்குகிறது இதன் மூலம் ஒழுங்குமுறை செயலபடுகிறது சமயத்தில்தான் அறநெறிகள் காணப்படுகின்றன மேலும் இதிலிருந்துதான் அறநெறிகள் சமூகத்தில் பரவியுள்ளன என பல சமூக சிந்தனையாளர்கள் கண்டு பிடித்துக் கூறியுள்ளனர் சமயமும் அறநெறிமுறைகளும் ஒன்றுக்கொன்று சமமானதல்ல இந்த இரண்டிற்கும் உள்ள உறவுபற்றிப் பல வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

லூயிஸ் (lewis) என்ற அறிஞர் சமயத்தின் ஆதரவில்லாமல் அறநெறி முறைகள் சமூகத்தில் இருக்க முடியாது என கூறுகிறார் அனைத்துச் சமூகங்களிலும், சமூக வளர்ச்சிக்காக குழந்தைப் பருவம் முதல் சமயம் பற்றிய சருத்துக்கள் போதிக்கப்படுகின்றன எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகள் முதலியவற்றில் மனித நடத்தையைக்

கட்டுப்படுத்தி சமூகமயமாதல் என்பதைச் செயல்படுத்த ஒரு சாதகமாக சமயம் இருக்கின்றது சமயம் ஒருவரின் ஆளுமை பெருகப் பயனாகிறது. மேலும் சமய எண்ணங்கள் ஒரு மனிதனுக்கு அவன் பிறந்த உடன் தகுதி நிலையைத் தருகிறது.

பல்வேறு மாற்றங்கள் சமய வழி முறைகளில் ஏற்பட்டிருக்கின்றன, அதாவது சமயம் என்பது பழமை மற்றும் தொன்று தொட்டு உள்ள பழக்க வழக்கங்கள் முதலியவைகளைக் குறிக்கின்றது. இவைகளில் கற்காலம் முதல்பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, குறிப்பாக இறைவனை மையமாகக் கொண்டு நிலவும் மூட நம்பிக்கைகளின் முக்கியத்துவம் குறைந்து காணப்படுகிறது முக்கிய மாற்றத்தை மானிட வழிமுறை வாயிலாக விளக்கலாம் மானிட வழி முறையில் சமூக அறநெறி முறைகளைக் காணலாம். இந்த அறநெறி முறைகள் நன்மை, தீமை ஆகியவற்றின் உள்ளுணர்வு மற்றும் பயிற்சியின் வாயிலாகத் தெரிகின்றன. சமயக் கட்டுப்பாடு என்பது தொன்று தொட்டு வரும் பழமை பொருந்திய நடத்தையைப்பொருத்து இல்லை மாறாக இது சமூக உண்மை நிலையையும் ஒரு அறநெறிக் கோட்பாட்டையும் குறிக்கின்றது.

சமூகத்தில் சமயத்தின் கட்டுப்பாடு ஒரு பொதுச் செயலாக எண்ணப்படுகின்றது. அனைத்துச் சமூகங்களிலும் இது உள்ளது அறிவியல் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை மேலும் பொதுவுடைமைக் கொள்கை வாதிகள் சமயத்தை ஒரு போதைப் பொருளுக்கு ஒப்பிடுகிறார்கள் இன்று இயற்கை அது சார்ந்த நம்பிக்கைகள், நடவடிக்கைகள் பொருந்தாத ஒன்றாக கருதப்படுகின்றன. பின் வருபவைகள் சமயம் சம்பந்தப்பட்ட வழிமுறைகள் ஆகும். இவ்வழிமுறைகள் மனிதனின் எண்ணம் மற்றும் செயற்பாடு ஆகியவற்றை கட்டுப்படுத்துகின்றன அவைகள் தியானம், இறைவணக்கம் புனித செயல்கள், சமூக ஒற்றுமை புனிதமான பாடல்கள் ஆகும்.

பழங்கால சமூகத்தில் அரசியல் சட்டங்கள் பழைய பழக்க வழக்கங்கள் முதலியன மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காக இருந்தன. பல சமூக

விலக்குகள் நடைமுறையில் இருந்தன. இவைகள் சமூகக் கட்டுப்பாட்டிற்கு மிக முக்கிய காரணங்களாக விளங்கின வரலாற்று ரீதியில் கூறினால் சட்டங்களுக்கும், சமயங்களுக்கும் ஒரு நெருக்கமான தொடர்பு இருந்தது ஆனால் நவீன சமயத்தில் மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்த செயல்கள் இருக்கின்றன மனிதன் தன் குறிக்கோளில் வெற்றி பெற மதம் ஒரு நம்பிக்கையை மக்ளிடையே புகுத்துகின்றது. சமயம் பழங்கால சமூகத்திலிருந்து தற்கால சமூகம் வரை மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக நிலவுகின்றது.

## கல்வி

மனித இனம் பண்பாட்டைத் தன் சந்ததிகளுக்குப் பரப்புகிற ஒரு தகுதியை உடையது அறிவைப் பெற்று மற்றவர்களுக்கும் அதைத் தெரியப் படுத்துவதே கல்வி ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை சமூகம் பயிற்சியையும் அனுபவத்தையும் பெறுகின்றது தனி மனிதனைக் கல்விப் பயிற்சியின் மூலம் வாழ்க்கைக்கு ஏற்றவாறு உருவாக்குகின்றது அதாவது கல்வி சமூக மையமாதலுக்கு மிக மிக அவசியம் பழங்கால சமூகத்தில் கல்வி ஒரு முறையான அமைப்பாகஇருந்தது. குடும்பத்தில் உறுப்பினர்களால் சமூக வாழ்க்கைக்கான பயிற்சியைக் கல்வி வழங்குகின்றது.

பழங்கால இந்திய சமூகத்தில் குருகுல அமைப்பு என்பது ஒரு சக்தி வாய்ந்த கட்டுப்பாட்டுச் சாதனமாக விளங்கியது இன்று கல்வி சமூகத்தில் அதிக மக்களை எழுதவும் படிக்கவும் கூடிய வாய்ப்பை உருவாக்கி இருக்கிறது கல்வி மூலமாக ஒரு கட்டுப்பாட்டை உண்டாக்குதல் தகுதி நிலையை அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது. நவீன சமூகத்திலுள்ள கல்வி சமயத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய அறிவுப் பெட்டகமாக விளங்குகின்றது மனித அறிவை வளர்க்கும் கருவியாகக் கல்வி இருக்கிறது தற்கால சமூகத்தில் கல்வியானது பணபாடு, பொருளாதாரம், அரசியல், அறிவியல் மற்றும் பொழுது போக்கு ஆகிய பகுதிகளில் கட்டுப்பாடு செய்து, சமூக நடத்தையை ஒழுங்கு படுத்துகிறது.

உற்பத்தி, வேலையைப் பிரித்துச் செய்தல், அறிவியல் சாதனை மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாடு ஆகிய செயல்களுக்கு சமூகத்தில் முறைப்படுத்தப்பட்ட கல்வி ஒரு பொதுவான மற்றும் அறிவு பூர்வமான முறையைக் கொண்டுள்ளது. கல்வியை அடிப்படையாகக் கொண்டுதான் அரசியல் கொள்கைகள் இருக்கின்றன குழந்தைகளின் கல்வி சமூகத்தில் மாற்றியமைக்கப்பட்ட புதிய முறைகளால் செயல்படுத்தப் படுகின்றது. கல்வி சமூக முன்னேற்றத்திற்கு ஒரு முகவுரை போல் செயல்படுகின்றது. பொருளாதார மாற்றத்திற்குக் கல்வி மிக அவசியமாகும். உலக அமைதியை நிலை நாட்டக் கல்வி மிக முக்கியமானதாகும்.

# பாடம் - 18

# திரளான அல்லது கூட்டான மக்களின் நடத்தையும் சமூக இயக்கங்களும் (Collective Behaviour & Social Movements)

## திரளான அல்லது கூட்டான நடத்தை

மக்கள் சில சமூக அமைப்புகளை ஒழுங்குபடுத்தி, தோற்றுவித்து அவைகள் முறையாகச் சேர்ந்து வாழும் வகைகளைப் பெரும்பாலான மரபு ஒழுக்கம் சார்ந்த சமூகவியல் ஏற்படுத்தியுள்ளது.

கூட்டான நடத்தை, இதற்கு மாறாக, அமைப்பில்லாத அல்லது அடுக்கமைப்பு வகைகள் இல்லாத மனித சமூக நடத்தை உள்ளடக்கியது. இச்சொல்லை வற்புறுத்திக் கூறக் காரணம் கூட்டு நடத்தையின் எந்த வகையும், அமைப்பும், சமூக அடுக்கமைப்பு ஆகியவைகளைக் கொண்டதாகும். எ.கா. தலைமை என்பது கலவரம் செய்யும் கூட்டம், மற்றும் இல்லத்திலும் காணக்கூடும். ஆனால் தலைமை அல்லது தலைவர் குறைவாக நிறுவப்படுகிறது அல்லது தலைமை குறைந்த அதிகாரம் கொண்டதாக உள்ளது. கூட்டத்தின் தலைமையைக் கூட்டத்தின் மனநிலை நிச்சயிக்கிறது.

கூட்டத்தில் உள்ளவர்களின் நடத்தையைப் பற்றி அறியும்போது நாம் மனித நடத்தையின் கீழ் அமைப்பு மட்டத்தில் மட்டும் கவனம் செலுத்துகிறோம். சமூகவியல் அறிஞர்கள் சமூக வழியிலிருந்து விலகிச் செல்லும் நடத்தையைக் கண்டிப்பதில்லை. ஏனெனில் அது சமூக எதிர்பார்ப்புகளை மீறிச் செயல்படுகிறது. இதைப் போல் அவர் கூட்டான நடத்தையையும் கண்டிப்பதில்லை. ஏனெனில் அதில் அமைப்பு இல்லை. தனி மனிதனின்

தவறான சிறிய செயல்களை மக்கள் கவனித்துக் கூட்டு நடத்தையாகத் தெரிவிக்கின்றனர்.

திரளான மக்களின் நடத்தையைத் தற்கால சமூக அறிவியல் ரீதியான படிப்பு லெபான் (LeBon) எழுதிய "கூட்டம்" என்ற புத்தகத்திலிருந்து ஆரம்பமாகிறது. இவர் இந்த விதமாக மக்கள் சேர்ந்து இருப்பதைக் கூட்டம் எனக் கூறி, ஆனால் ஒரு உளவியல் கூட்டம் என்பது 'திரளான மனத்தினால்' நிச்சயிக்கப்படுகிறது எனக் கூறகிறார். இந்தக் கூட்ட மனத்தினை அறிந்து கொள்ளுதல்தான் முற்கால சமூகவியல் மாணவர்களின் முக்கியக் கடமையாக இருந்தது. லெபான் கட்டத்தின் நடத்தை அல்லது செயல்கள் தனி மனிதர்கள் வழி நடத்தையிலிருந்து வேறுபடுகிறது எனக் கூறுகிறார். இந்த நடத்தையின் பண்புகளில் ஒன்றாகக் கூட்டத்தின் பொறுப்பற்ற நடத்தை இருக்கிறது.

மேலும் லெபான் கூட்டத்தின் உணர்ச்சித் தொடர்பை வலியுறுத்திகிறார். கூட்டத்தில் ஒருவர் நடத்தை மற்றவர்களிடம் அதைப் போன்ற நடத்தையைத் தூண்டும் போக்கினைக் காணலாம். பல அறிஞர்கள் கூட்ட நடத்தையின் மட்டமான மதிநுட்பத்தை வலியுறுத்துகின்றார். கூட்ட மனம் உணருகிறது; ஆனால் அது பயனுடையதாகச் சிந்திப்பதில்லை. இ.எ.ராஸ் (E.A. Rass) என்பவர் கூட்டம் அதன் தனி அங்கத்தினர்களைவிட மதிநுட்பத்திலும், நீதியிலும் கீழ்த் தரமாக உள்ளது என விவாதிக்கிறார்.

சமூகவியல் அறிஞர்கள் கூட்டத்தின் மனம் பற்றிச் சிந்தித்தாலும் அவர்கள் தங்கள் கவனத்தை இதன் சமூக அளவைப்பற்றிச் செலுத்தும் போக்கினைக் காணலாம் பல வித திரளான மக்களின் நடத்தைகளில் நாம் அதன் (1) சமூக சூழ்நிலைப் பற்றிய சமூகவியல் அறிவினைக் காண்போம். சமூக வாழ்வில் எத்தகைய பொது நிலைகள் திரளான மக்களின் நடத்தைக்குக் காரணமாகின்றன (2) பதட்ட சக்திகளால் ஏன் எப்பொழுது எங்கு கலவரங்கள் தோன்றுகின்றன? (3) செய்முறை எந்தவிதமான சமூக ஒழுங்குக் குலைவிலும் அது எங்கேயே ஆரம்பித்து ஒருவித

செய்தித் தொடர்பினால் மற்ற இடங்களுக்கு பரவுகிறது. கீழ்க்கண்ட வினாக்களில் சமூகவியல் அறிஞர்கள் தங்கள் கவனத்தைப் பெரிதும் செலவிடுகிறார்கள் கூட்டுநடத்தை எனப்படும் கதை நிகழ்ச்சிலய யார் துவங்குகிறார்கள்? எத்தகைய மக்கள் தலைமைவகிக்கிறார்கள்? கூட்டத்தில் உள்ளவர்களின் தகுநிலை என்ன? கதைவளரும் போது எவ்வாறு மக்கள் நடத்தையின் தன்மை மாறுகிறது? (4) குறைதல் கதைநிகழ்ச்சி தற்காலிமானது அது பெருகிக்குறையும் தன்மை உடையது. சில சமூக சக்திகள் கதைநிகழ்ச்சியை ஏன் அகற்றுகின்றன என்ற வினா முக்கியமானது சமூகவியல் அறிஞர்களுக்குக் கதைநிகழ்ச்சி நடத்தையை சமூகக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரும் முயற்சியில் விருப்பம் உண்டு.

## கலவரங்களும் கும்பலின் செயல்களும் மூர்க்கமான கூட்டம்

கூட்ட நடத்தையின மூர்க்கமான வகைகளாகக் கலவரம் மற்றும் கும்பல் என்று அழைக்கப்படுகின்றன. இவைகள் உயிர் உடைமைகளை அழிக்கின்றன கும்பல்கள் என்பது ஒருகுறிப்பிட்ட நோக்கத்துடன் கடுமையான கூட்டத்தின் செயல்கள் ஆகும். ஒரு கொலையாளியை உயிருடன் தோலுரித்தல் மற்றும் ஒரு மேடைப் பேச்சாளரைக் குறுக்குக் கேள்விகள் கேட்டுத் தொந்தரவு செய்தல் முலியன அதில் அடங்கும்.

## மூர்க்கத்தனத்தின் தொலை நோக்கு

ஒரு கலவரம் அல்லது கும்பலின் செயல் ஒரு குழுவிலுள்ள மக்கள் தங்கள் கோபத்தைக் கூட்டமாகக் தெரிவிப்பதாகும் கலவரங்களும் கும்பல் செயல்களும் ஏதோ ஒன்று தவறாக இருக்கிறது என்ற கோப உணர்வினால் தூண்டப்படுகின்றன. பல மக்கள் எது தவறு மற்றும் அதைப்பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதில் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பதால் அனேக கலவரங்கள் கூட்டத்திற்கிடையே கை கலப்பில் முடிகின்றன. (எ.கா.) சிகாகோவில் 1919 இல் இனக்கலவரங்கள் சாதாரண சமூகக்

கட்டுப்பாடுகள் உடையும் போது மக்கள் கலவரத்தில் ஈடுபடத் தூண்டப்படுகிறார்கள், என கண்டறியப்பட்டது அனேக மக்கள் சட்டம் ஒழுங்கு குலைவதைத் தங்கள் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர் ஒரு சபையிடம் கலகக் காரர்கள் தங்கள் கருத்துக்களை வேண்டுகோள்கள் மற்றும் விளக்கிக் காட்டுதல் மூலம் கலகத்தைச் சில அரசியல் குறிக்கோளை அடைய ஒரு கருவியாக அமைகிறது. மேலும் கலவரத்தில் பங்கு கொள்பவர்கள் வேடிக்கை அல்லது உற்சாகத்தினால் தூண்டப்படுகிறார்கள்.

### கூட்டத்தின் மூர்கத்தனத்தின் பின்ணனி

ஒருகுழு மற்றொரு குழுவிடம் உள்ள குறைகள் கண்டு அந்தநிலையில் மூர்க்கமான கூட்டச் செயல்கள் ஏற்படுகின்றன மேலும் இந்தத் துயரங்கள் வழக்கமான வழிகளாகிய சட்டம் மனு முதலியவைகளால் தீர்க்கமுடியதாவை என கருதப்படுகின்றன. சிலநேரங்களில் இந்த துயரங்கள் தங்களுக்கு ஒரு அச்சத்தை வலுகறைந்த குழுக்கள் ஏற்படுத்துகின்றன என ஆதிக்கமுள்ள குழுக்கள் எண்ணுகினறன (எ.கா.) வெள்ளையர்களுக்கு எதிராக நீக்ரோக்கலின் குற்றத்திற்காக அவர்களை துன்பறுத்துதல் சிறுபான்மைக் குழுக்களின் கலவரக்காரர்கள் சமூகத்தால் பயனடையாமல் கலவரத்தில் ஈடுபடுகின்றனர்.

## சமூக இயக்கங்கள் (Social Movements)

### சமூக இயக்கங்கள்

#### வரையறை

சமீபத்தில் கண்ட ஒரு வரையுரையின்படி சமூக இயக்கங்கள் என்பதில் சமூகத்தில் மக்கள் பங்கிட்டுக் கொள்ளும் செயல்களும் நம்பிக்கைகளும் ஆகும். இவைகள் சமூக அமைப்பின் ஒரு பகுதியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு வழிகாட்டுகின்றன ஜோசப்கஸ்பீல்டு (Josebh gusfield) இந்த விளக்கம் சமூக இயக்கங்களை நமது பொதுப்

பிரச்சினையாகிய சமூக மாற்றம் எனபதுடன் இணைப்பது மிகவும் பயன்தருவதாகும். சமூக இயக்கங்களில் காணும் மாற்றத்தின் தேவைகளை அறிய மூன்று செய்திகளைக் கவனிக்க வேண்டும்.

எல்லாவிதமான வேண்டுகோள்களையும் சமூக இயக்கங்களுடன் சாதரணமாக செயல்படுத்த இயலாது. மக்கள் சமூக அமைப்பின் சில பகுதியில் அதிருப்தி கொண்டு உதாரணத்திற்கு மாணவர்கள் தங்கள் குறைகளை நீக்க சீர்திருத்தம் என்ற தோரிக்கையைத் தங்கள் கூட்டத்தில் நிறைவேற்றி பள்ளி நிர்வாகத்திடம் தருதல் இதைப் போன்ற கோரிக்கைகள் சமூக இயக்கங்கள் ஒட்டிய நிகழ்ச்சிகள் எனக் கருத முடியாது. எப்பொழுது இந்த செயல் அனுமதிக்கப்பட்ட வழிகளுக்கு அப்பால் சென்று அசாதாரண வழிகளில் கோரிக்கை தெரிவிக்கப்படுகிறதோ கல்லூரித் தலைவர் அலுவலகத்தின் முன்பு மாணவர்கள் உட்கார்ந்திருத்தல் அன்றே சமூகவியல் அறிஞர்கள் இதைச் சமூக இயக்கங்கள் எனக் கூறுகின்றனர். சமூக இயக்கங்களைச் சமூகவியல் கண்ணோட்டத்துடன் படித்தல் அசாதாரண நடத்தைகளைக் 'கூட்டமான மக்களின் நடத்தை' என்ற தலைப்பின் கீழ் படிப்பது போன்று உள்ளது.

கஸ்பீல்டு என்பவரின் சமூக இயக்கங்களுக்குத் தரும் வரையுரையில் நாம் கவனிக்க வேண்டியவை சில. சமூக இயக்கங்கள் மாற்றத்ததை மேம்படுத்தாமல் அதைத் தடைசெய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. சில இயக்கங்கள் சமூக உரிமைகளைப் பெறுவதற்கு எதிராக உள்ளன ஏனெனில் சமூகத்தகு நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் எ.கா, பொது உடைமைவாதிக்கு எதிராக இருத்தல் சமூக அமைப்பில் ஒரு பகுதியை ஒதுக்கித் தள்ளுதலை இந்த வரையுரையில் காணவில்லை.

இத்தகைய காரணங்களால் கீழ்க்கண்ட வரையுரையை சமூக இயக்கங்களுக்குத் தரலாம். ஒரு சமூக இயக்கத்தில் பல மக்களின் கூட்டுச் செயல்களால் சமூக அமைப்பின் ஒரு பகுதியை அல்லது அந்த அமைப்பில் ஒரு மாற்றத்தை ஆதரிக்காமல் இந்தச் சமூக அமைப்பில்

மாற்றத்தை ஒதுக்கித் தள்ளும் முயற்சியில் அசாதாரண முறையற்ற வழிகளைக் கடைப்பிடித்தல் ஆகும்.

சமூக இயக்கங்கள் என்றும் சமூக அமைப்பை ஒதுக்குவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அவைகள் எப்போதும் இலக்குகளைக் கொண்டுள்ளன குறைந்தது மூன்று விதமான இலக்குகள் பொதுவாகத் தெரிகின்றன. 1. ஒரு சமூகத்தில் நிலவுகிற பண்பாட்டு மதிப்பீடுகள் அல்லது விழுமியங்கள் 2. நிலவுகிற அடிப்படை சமூக நிறுவனங்கள் எ.கா. முதலாளித்துவ பொருளாதாரம் 3. நிலவுகிற சமூக அடுக்கமைப்பு முறை.

## சமூக நிலைகளை மாற்றும் இயக்கங்கள்

நிறுவப்பட்ட சமூக நிலைகளில் மாற்றங்களை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட சமூக இயக்கங்களில் சில குறிப்பிட்ட நிலையை மறுத்து அல்லது கண்டனம் செய்து, தீர்வைத் தேடுகின்றன இந்த இயக்கம் ஒரு குறிப்பிட்ட கோரிக்கை மீது கவனம் செலுத்துகிறது. எ.கா. அரசியல் கைதிகளை விடுதலை செய், நீக்கப்பட்ட தொழிலாளியை மீண்டும் பணிக்கு எடுத்துக்கொள், மது விலக்கை அகற்று வயதானவர்கள் ஓய்வு ஊதியத்தை அதிகரிக்கச் செய் மற்ற இயக்கங்கள் மற்ற சமூக இயக்கங்கள் அடிப்படைச் சமூக வகைகளைச் சீர்திருத்தம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன பல்கலைக்கழகத்தை மக்கள் உரிமையாக்குதல் முதலாளித்துவத்தை அகற்றல்.

## குறிப்பிட்ட கோரிக்கைகள் உடைய இயக்கங்கள்

சில சமூக இயக்கங்கள் அவசரக் குழுக்களாகப் பொதுக்கொள்கையில் குறிப்பிட்ட மாற்றத்தை உண்டாக்கத் தோன்றுகின்றன. அத்தகைய இயக்கங்களில் பங்கு கொள்பவர்கள் ஏதோ அங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதற்காக நிலை குலைந்து விடுகிறார்கள் ஆனால் சமூக முறையிலுள்ள அடுக்கமைப்பின் குறைக்குரிய தொந்தரவை அவர்களால் எண்ணமுடிவதில்லை மற்ற எல்லா

சமூக இயக்கங்கள் போல் குறிப்பிட்ட கோரிக்கைக்கான இயக்கங்களுக்கு வளாச்சி வீழ்ச்சி முதலியன பற்றிய வரலாறுகள் உண்டு.

## சீர்திருத்தம் அல்லது புரட்சியான இயக்கங்கள்

பெரும்பான்மையான சமூக இயக்கங்களின் நோக்கங்கள் நாலா பக்கங்களிலும் பரவும் வகையினைச் சார்ந்தாகும், அங்கத்தினர்கள் குறிப்பிட்ட கொள்கை மாற்றங்களைவிட அதிகமாகக் கோருகிறார்கள் தற்போது உள்ள சமூக நிறுவனங்களின் வகைகளை அறவே அகற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள்.

## எதிர்த்து நிற்கும் அல்லது தடைசெய்கிற இயக்கங்கள்

ஒரு தீர்மானிக்கப்பட்ட மாற்றத்தைத் தடுக்கும் முயற்சி அல்லது முன்பே ஏற்பட்ட ஒரு மாற்றத்தை அடியோடு அகற்றுதல் என்பது எதிர்த்து நிற்கும் இயக்கத்தின் செயற்பாடு ஆகும். புரட்சி இயக்கம் தோன்றக் காரணம் மக்கள் மாற்றம் மெதுவாக ஏற்படுவதில் மன நிறைவு இல்லாமை ஆகும். ஆனால் தடை செய்கிற இயக்கம் தோன்றுவது மக்கள் மாற்றங்கள் விரைவாக ஏற்படுகின்றன என எண்ணுதல் ஆகம் (எ.கா.) தி.மு.க. இயக்கம் இந்தி மொழிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதைத் தடைசெய்கின்ற இயக்கத்திற்கு கூறலாம்.

## சமூக இயக்கங்களின் காரணங்கள்

சமூக இயக்கங்கள் திடீரென ஏற்படுவதில்லை சமூக அமைதியின்மையினால் தோன்றுகின்றன சமூக அமைதின்மை கீழ்க்கண்ட காரணங்களால் உண்டாகின்றன.

## 1. பண்பாட்டுப் போக்குகள்

சமூகத்தில் மாற்றங்கள் தொடர்ந்து ஏற்படுகின்றன எல்லா சமூகங்களிலும் மதிப்பீடுகளும், நடத்தைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. பண்பாட்டுப் போக்கிய பெரும்பான்மையினர் புதிய எண்ணங்களை வளர்க்கின்றனர் சமூகத்தில் இந்த எண்ணங்கள் செயற்பட மக்கள் ஒரு இயக்கத்தை அமைக்கின்றனர் குடியரசும் சமூகத்தின வளர்ச்சி, மகளிர் விடுதலை, கல்வி கும்பலுக்குப் பரவுதல் தீண்டாமை அகற்றல் ஆண்,பெண் இருவருக்கும் சம சந்தர்ப்பம், மதச் சார்பின்மையின் வளாச்சி முதலியன பண்பாட்டுப் போக்குகளுக்கு எடுத்துக் காட்டாகும்.

## 2. சமூக அமைப்பில் ஒழுங்கு குலைவு

ஒரு மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமூக அமைபபின் எல்லாப் பகுதிகளிலும் மாற்றம் ஒரே நேரத்தில் உண்டாவதில்லை இதனால் அந்த சமூகத்தில் ஒழுங்குக் குலைவு ஏற்படுகிறது ஒரு பகுதி பண்பாட்டின் மற்ற பகுதியைவிட மிக வேகமாக அல்லது மெதுவாக மாறுவதால் பண்பாட்டுத் நோக்கம் ஏற்படுகிறது. தொழில் மயமாகுதல், நகரமயமாதல் ஏற்படுத்தி இதன் காரணமாகச் சமூகத்தில் பல பிரச்சினைகள் உண்டாகின்றன. ஒழுங்குகுலைவு குழப்பத்தையும் நிச்சயமின்மை முதலியவற்றைக் கொண்டுவருகிறது. பழைய மரபுகள் நடத்தைக்கு வழிகாட்டியாக இருக்க முடியவில்லை மக்கள் சமூகத்திலிருந்து தனிப்படுத்தப் படுவதை உணர்கின்றனர். சமூகத் தலைவர்கள் தங்கள் தேவைகளை உதாசீனப் படுத்துவதாக மக்கள் எண்ணுகின்றனர். மக்கள் பாதுகாப்பின்மை குழப்பம் ஏமாற்றம் முதலியவைகளைக் காண்கின்றனர் குழப்பமும் ஏமாற்றமும் சமூக இயக்கங்களை ஏற்படுத்துகின்றன.

## 3. சமூக அநீதி

ஒரு குழுவைச் சார்ந்த மக்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என உணரும் போது அவர்கள் ஏமாற்றம் அடைந்து அயலராகத் தங்களை எண்ணுகின்றனர்.

இதைப் போன்ற அநீதி என்ற உணர்வு சமூக இயக்கங்ள் செழித்து வளர உதவும் நிலமாகிறது. இத்தகைய அநீதி எனும் உணர்வு ஏழை மக்களுக்குப் பலி ஆகிறது. நகர உடைமை வரம்புச் சட்டத்தினால் ஒரு செல்வந்த வகுப்பு இந்த அநீதி உணர்வைப் பெறலாம்.

கீழ்க்கண்டவர்கள் சமூக இயக்கங்களை ஏற்கும் தன்மையுள்ளவர் ஆவர்.

1. அடிக்கடி இடம் மாறுகிறவர்கள், மற்றும் சமுதாயத்தில் தங்கள் வாழ்வினை ஒன்றாக இணைத்துக் கொள்ள இயலாதவர்கள்.

2. குழுவில் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்படாத, இணையாத வரம்புக் கோட்டில் வசிப்பவர்கள்.

3. சமுதாயத்திலிருந்து தனிப்படுத்தப்பட்டவர் அல்லது துண்டிக்கப் பட்டவர்.

4. பொருளாதாரப் பாதுகாப்பின்மை மற்றும் சமூக தகுதிநிலை இழந்தவர்கள் அச்சுறுத்தப்படுதல்.

5. குடும்பப் பொறுப்புகளிலிருந்து விலகுபவர் அல்லது குடும்பத்தினால் அந்நியராகக் கருதப்படுபவர்.

6. தன்னைச் சமூகத்துடன் சரிசெய்து கொள்ள அல்லது பொருத்திக் கொள்ள இயலாதவர்கள்.

இவ்வாறு வீடில்லாத, சமூகத்தில் வாழத் தகுதியில்லாதவர்கள் சமூக இயக்கங்களை ஆதரிக்கின்றனர். இயக்கங்களின் நோக்கங்களுக்குத் தொடர்பில்லாதவர்கள் சிலர் இதில் பங்கு கொள்வர். சிலர் ஓய்வு நேரத்தைக் கழிக்க இயக்கத்தில் ஈடுபடுகின்றனர். அல்லது இயக்க அங்கத்தினர்களால் கவரப்பட்டு இதில் ஈடுபடுபவர் இயக்கத்தில் சேர்ந்து புகழ் பெற்று அலுவலகத்தில் நல்ல பதவியைப் பெறலாம் என்ற எண்ணம், சிலர் அதிகாரத்ததைப் பயன்படுத்த ஈடுபடுகின்றனர்.

இயக்கத்தின் குறிக்கோள்களை அடைய அதில் சேர்வதில்லை ஆர்வமாகப் பரவிய சமூக அதிருப்தி இருந்தால்தான் இயக்கம் ஆரம்பமாகி வளரும். முழுதும் வளர்ந்த சமூக இயக்கங்கள் நான்கு நிலைகளைக் (அமைதியின்மை, உற்சாகம், அமைப்பு, நிருவனம்) கடந்து செல்கின்றன.

## சமூக இயக்கங்களின் சாதனைகள்

### பிரம்ம சமாஜ்

ராஜாராம் மோஹன் ராய் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்து அதன் சமூக சீர்திருத்தத் தலைவராகவும் இருந்தார். தற்காலத்தில் முஸ்லீம் மற்றும் பிரிட்டிஷ் மக்கள் நமது சமூகப் பிரச்சினைகளாகிய தீண்டாமை, வரதட்சணை, விதவை மறுமணம், உடன்கட்டை ஏறுதல் என்ற சதி, மற்றும் பால்ய விவாகம் முதலியவற்றை சமூகத்திலிருந்து அகற்றத் தீவிர கவனம செலுத்தவில்லை. மேலும் அவர்கள் நம் சமூக வாழ்வில் தலையிடக் கூடாது என்ற கொள்கை கொண்டிருந்தனர். சமூக வாழ்வில் மிகவும் துயரம் தரக்கூடிய கொடிய வழக்கமாகிய சதி, ராஜாராம் மோகன் ராய் மற்றும் பிரம்மசமாஜத்தைத் தொட்டது. மேலும் இவர் மனைவி, கணவன் இறந்த உடன் உயிருடன் அவர் கணவர் உடலுடன் தன் உடலையும் எரித்துக் கொள்ள வேண்டும் என்பது மிகவும் இரக்கமற்ற செயலாகும் எனக் கருதினார். பொது மக்கள் எண்ணத்தை இக்கொடிய வழக்கத்திற்கு எதிராக இந்தியாவிலும், இங்கிலாந்திலும் தூண்டிவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த வழக்கம் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டு, வெற்றி கண்டார். இவ்வாறு ஒரு சமூகத் தீங்கினை அகற்றுவதில் ராஜா ராம் கடும் முயற்சி செய்தார். இவருடைய பிரம்ம சமாஜம் அனைத்துலக சகோதரத்துவம், ஒரே இறைவனை வணங்குதல், விதவை மறுமணம், பெண்கல்வி முதலியவைகளை ஆதரித்து, சிறுவர் திருமணம், சாதி சமத்துவமின்மை முதலியவைகளை எதிர்த்தது.

## பிராத்தன சமாஜ்

இந்த இயக்கம் சமூகத் தீமைகளை மிகத்துணிவாக மக்களுக்கு எடுத்துக் கூறியது. மக்கள் புத்திக்கூர்மையுடன் இறைவனை வணங்க வேண்டும் என்றது. பழமை, மற்றும் மூட நம்பிக்கைகளை சமாஜம் எதிர்த்தது. இதன் உறுப்பினர்கள் கண்மூடித்தனமான நம்பிக்கையை எதிர்த்தனர். பெண்களுக்கு ஆண்களுடன் சம உரிமைகள் தர வேண்டும் என்றனர்.

## ஆரிய சமாஜ்

இதை நிறுவியவர் சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவர். இந்துக்கள் இலக்கியத்தில் உள்ள எல்லா நல்ல செயல்களையும் வெளியில் கொண்டு வந்து, இந்துக்களிடையே, புகழையும் சுயமரியாதை என்ற உணர்வினையும் ஏற்படுத்தியது. இது முஸ்லீம், கிருத்துவ சமூகங்களில் உள்ள தீங்குகள் மற்றும் கெட்ட வழக்கங்களை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்துக்கள் இந்த மதங்களுக்குச் செல்லும் போக்கினைத் தடுத்தது. சுவாமி இந்து சமூகத்தின் கொடுமைகளைத் துணிவாக எடுத்துரைத்தார். சிலையை வணங்குதலைக் கண்டித்தார் மக்களை ஒரே இறைவனை வணங்குமாறு வேண்டினார். இவர் சாதி முறையை எதிர்த்து, கலப்புத் திருமணத்திற்கு ஆதரவு தந்தார். பெண்களுக்கு உயர்தரக் கல்வி தரப்பெற்று, அவர்கள் சமூக வாழ்வில் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட வேண்டும் என்றார். அவர், தூய்மையான பண்பு, இறைவணக்கத்தில் எளிமை, மற்றும், இரக்க உணர்வு, அன்பு முதலியவைகளைப் பெரிதும் போற்றினார். தங்கள் மதத்தை விட்டு வேறு மதம் சென்றவர்கள், இந்து மதத்தில் வந்து சேர வேண்டுகோள் விடுத்தார். ஏழைகளின் துயர் துடைத்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வருதல் அரசின் பொறுப்பு எனக் கூறினார். அந்நியர்கள் நம் நாட்டில் இருந்து தங்கள் நாடு சென்றால் நம் நாட்டுப் பிரச்சினைகள் பெரும்பாலும் தீர்க்கப்பட்டு விடும் எனக் கருதினார். எனவே பிரிட்டிஷ்

மக்கள் இந்தியாவை விட்டு விரைவில் வெளியேற வேண்டும் என்றார். நமது சமய இலக்கியங்களைப் போற்றினார்.

### ராமகிருஷ்ணா மிஷன்

ராமகிருஷ்ண மிஷன் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவரால் நிறுவப்பட்டது. இவர் ஒரு ஞானி. சாரதா தேவியை மணந்து வேத விற்பன்னராக வாழ்ந்தார். காளி தேவியின் அருளைப் பெற்றவர். அவரின் உண்மையான சீடர் சுவாமி விவேகானந்தர். விவேகானந்தர் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்த ஒரு உலகப் புகழ்பெற்ற துறவி ஆவார். இவர் தன் குரு ராமகிருஷ்ணர் இறந்ததும் அவர் கொள்கைகளை நாடெங்கிலும் பரப்பி வந்தார். தெற்குக் கோடியில் கன்னியாகுமரி வந்து கடல் பாறைமீது அமர்ந்து தியானம் செய்து இறை அருளைப் பெற்றவர். இவர் அமெரிக்கா சென்று இந்து மதத்தின் பெருமையை மேல் நாட்டினர் உணரச் செய்தார். அங்கு இந்தியாவின் மதம் மற்றும் தத்துவத்தைப் பற்றி உபதேசம் செய்தது அமெரிக்க மக்களை வியப்பில் ஆழ்த்தியது. இந்தியா பல ஆண்டுகள் வெளிநாட்டவர்களால் ஆட்சி செய்யப்பட்டதால் இந்து மதத்திற்கு அதன் உரிய இடம் உலகில் கிடைக்கவில்லை. இந்த இயக்கம் மகளிர் சமூக நிலை உயரவும், சாதிக் கொடுமைகள், தீண்டாமை முதலியன அகலவும் இன்று வரை நம் நாட்டில் பல இடங்களிலும், மடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் நிறுவி அவைகள் வாயிலாகப் பாடுபட்டு வருகின்றன. மேலும் கொடுமையான மூட நம்பிக்கைகளும், வழக்கங்களும் மறைய தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்தியாவின் கடந்தகாலத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், கல்வியைப் பரப்புவதிலும் இந்தியா தன் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என இந்த இயக்கம் கூறுகிறது.

வெளிநாட்டினர் இந்தியாவில் தங்கி கல்விப் பணியில் ஈடுபட வேண்டும் எனவும், நம் நாட்டினர் வெளிநாடுகளுக்குச் சென்று இந்தியா ஆன்மீகத் துறையில் எவ்வாறு வெற்றி பெற்று வருகிறது என்பதையும் அங்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் இந்த இயக்கம்

கருதுகிறது. குடும்பம், திருமணம் முதலியன நிலையான தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். திருமணம் செய்து கொண்டு வாழ்வில் பேரின்பத்தை அடைய வேண்டும் எனக் கூறுகிறது. சமூக சீர்திருத்த இயக்கம் சமூகம் முன்னேற, அதன் எல்லாப் பகுதிகளிலும் கல்வி, மதம், அரசியல், பொருளியல், இல்லம் தன் கவனத்தைச் செலுத்த வேண்டும் என விவேகானந்தர் போன்ற சீர்திருத்தவாதிகள் எண்ணுகின்றனர்.

இந்து மதத்தில் வைதீகத்தையும், சமூகக் கேடுகளையும் இந்திய சமூக சீர்திருத்தவாதிகளும், சீர்திருத்த இயக்கமும் நீக்க முயன்று வருகின்றனர். அவர்கள் உழைப்பின் பலன் ஓர் அளவு கிடைத்திருக்கிறது. நமது சமூகத்தில் தீமைகள் புரையோடியிருப்பதால் இந்த இயக்கங்கள் சமூகத்தை ஓரளவுக்குத்தான் பாதித்திருக்கின்றன. சமூக சீர்திருத்தங்களுக்கு வைதீகத்திடமிருந்து எதிர்ப்பு உள்ளது. இன்றும் சீர்திருத்தவாதிகள் சமூகக் கேடுகளை நீக்குவதில் முயற்சி செய்து வருகிறார்கள். இந்தப் பணி மிகவும் கடினமானது, தொந்தரவுடையது, சிக்கலானது, ஆனாலும் காலம் செல்லச் செல்ல இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என எண்ணுவோமாக.

## பாடம் - 19

# மக்கள் தொகை இயக்கங்கள் (The Dynamics of Population)

மக்கள் தொகை பற்றி அறிய உதவும் 'மக்களியல்' (Demography) என்ற நூல் இன்று உலகளவில் மிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதற்கு முக்கிய காரணம் வளர்ச்சியுறும் நாடுகளில் நிகழும் பெருவாரியான மக்கள் பெருக்கம், அந்நாடுகளில் சமூகப் பொருளாதார வளர்ச்சியல் சரிவையும், மற்றும் அரசியல் அமைப்பு முறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதோடு அல்லாமல் உலகளவிலும் பாதிப்பை ஏற்படுத்திப் பல வகைச் சமூகப் பிரச்சினையை உருவாக்குவதுதான். மக்கள் தொகை வளர்ச்சியைப் பற்றிய பொது அறிவானது கல்வியாளர்கள், திட்டமிடுபவர்கள் மட்டும் அல்லாமல், சாதாரண மனிதர்களிடமும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

மக்கள் தொகை வளர்ச்சி, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளால் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயல் என்பதை மக்களியல் அறிஞர்கள இன்று ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொழில் நுட்ப முன்னேற்றங்களால் நிகழ்வதில்லை. பல சமூகங்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தத் தொழில் நுட்ப அறிவைப் பெற்றிருந்த போதிலும், அவற்றை நன்கு பயன்படுத்த முடியாமல் இருக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் அந்த சமூகங்களில் உள்ள சமூகப் பொருளாதார காரணிகளேயாகும்.

கருவளம், இறப்பு, இடம் பெயர்தல் போன்ற மக்களியல் செயற்பாங்குகள், மக்கள் தொகை அளவு, கூட்டமைவு மற்றும் பகிர்வு ஆகியவற்றில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய மாறுதல்கள் சமூகத்தில் பல விளைவுகளை உண்டாக்குகின்றன. சமூக பண்பாட்டுக் காரணிகள் எவ்வாறு மக்கள் தொகைக் கூட்டமைப்பு மற்றும்

செயற்பாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பதைப் பற்றி ஆராய்தலே சமூக மக்களியலின் முக்கிய நோக்கமாகும். டோனால்டு ஜெ.போக் (Donald J. Bogue) என்பவர் மக்களியல் என்பது மக்கள் தொகை அளவு, கூட்டமைவு, பகிர்வு ஆகியவற்றில் பிறப்பு, இறப்பு, திருமணம், இடப்பெயர்வு, சமூக நிலை உயர்வு போன்றவற்றால் ஏற்படும் மாற்றங்களைப் புள்ளியியல் மற்றும் கணக்கியல் அடிப்படையில் ஆய்வது என்று கூறுகிறார். மக்களியல் மனிதனின் இன, சமூக, பொருளாதாரக் குணங்களையும் உள்ளடக்கியது எனக் கருதப்படுகின்றது.

## மக்கள் கூட்டமைப்பு - எழுத்தறிவு மற்றும் கல்வித் தேர்ச்சி

மக்கள் உலக அளவில் பொருளாதாரத்தில் ஈடுபடக் கல்வி மிக அவசியம். ஜனநாயக நாடுகளில் மக்கள் நாட்டுப்பிரச்சனைகளை அறிந்து கொள்ளக் கல்வி மிக அவசியம். கல்வித் தேர்ச்சியின் புள்ளி விவரங்கள் பல பயன்களைத் தருகின்றன. பல்வேறு நாட்டினர், பிரிவினர் மற்றும் ஒரே நாட்டில் அரசியல் ரீதியாக பல இடங்களை சார்ந்த மக்கள் ஆகியோரின் சமூக வளர்ச்சியை ஒப்பிட இந்தப் புள்ளி விவரங்கள் உதவுகின்றன. இப்புள்ளி விவரங்களே வளர்ச்சித் திட்டங்களை தீட்டுவதிலும், கல்விக் கொள்கைகளை உருவாக்குவதிலும் அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றன.

## திருமண நிலை

பால் வயது போன்ற திருமண நிலை ஒரு தரப்பட்ட இயல்பான பண்பாகும். குடும்பம் ஏற்பட திருமணம் தான் முதல்படியாக அமைகிறது. அனைத்துச் சமூகங்களிலும் திருமணம் ஆனவர், திருமணம் ஆகாதவர், விதவை, விவாகரத்து ஆனவர் என்ற நான்கு திருமண நிலைகள் ஏற்றுக் கொள்ளப் பட்டு ஒவ்வொரு நிலையிலும் மனித நடத்தைகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையும் சமய, சட்ட மற்றும் சமூக முக்கியத்துவத்தைப்

பெற்றுள்ளன. திருமணம். விவாகரத்து போன்றவை பெற சட்ட அனுமதி தேவை. கீழ்க்கண்ட இரண்டு காரணங்களுக்காக அறிஞர்கள் திருமண நிலையை ஆய்வு செய்கிறார்கள். முதலாவதாக தேசிய மக்கள் கணிப்பில் மக்களின் திருமண நிலையைக் கணக்கு எடுப்பது மிகவும் எளிது. இரண்டாவதாக, திருமண நிலையால் மக்கள் தொகை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

## மதம்

மக்கள் தொகையின் முக்கியமான சமூக குணம் மதம் ஆகும். மக்களியலில் திருமணம், கருவளம், இறப்பு மற்றும் இடப்பெயர்வு ஆகியவை பற்றி ஆய்வு செய்யும் பொழுது மதத்தை ஒரு காரணியாகப் பயன்படுத்துகின்றனர். திருமணம் ஒட்டிய சமூக பழக்க வழக்கங்கள் •மதக் கோட்பாடுகளினால் பாதிக்கப்படுகின்றன. எனவே திருமண முறிவு, விதவை மறுமணம், பலதார மணம் ஆகியவற்றை மதத்துடன் தொடர்பு படுத்தி ஆராய்தல் மிக அவசியம் ஆகும். குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் பெண்களின் நிலையும், மதமும் தொடர்புடையவை. இறப்பைப் பற்றிப் படிக்கும் பொழுது மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் அவசியம். உள்நாட்டுப் பகிர்வு, வெளிநாட்டு இடப்பெயர்வு, மதத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மதம் மக்களியல் ஆய்வில் ஒரு முக்கிய நிலையை வகிக்கிறது.

## ஊரக - நகர வேறுபாடுகள்

இது ஒரு நிலப்பரப்பை வகைப்படுத்தும் வகையாகும். நகரப் பரப்பு என்பது உற்பத்தி, வணிகம், நிர்வாகம் மற்றும் சிறப்புத் தேவைகள் கிடைக்கக் கூடிய அதிக அடர்த்தியான மக்கள் தொகை உடைய ஒரு நிலப்பரப்பு ஆகும். ஊரகப் பரப்பு என்பது குறைந்த மக்கள் தொகை உடைய ஒரு நிலப்பரப்பு. இங்குள்ள மக்கள் விவசாயம், மற்றும் இயற்கை மூலப்பொருள்களை உடைத்துப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சிறந்து விளங்குகிறார்கள். பயிர்த்தொழிலில் ஈடுபடாத பரவலாக உள்ள மக்கட்தொகுப்பு நகரம் என்று அழைக்கப்படுகிறது.

## மொழி

இந்திய மக்கள் பேசும் மொழிகளுக்கான செய்திக் குறிப்புகளின் அடிப்படை ஆதாரம் மக்கட்தொகைக் கணிப்பாகும். தாய்மொழியைப் பற்றிய செய்திக் குறிப்புகள் ஒருவருக்கு இந்தியாவின் பண்பாட்டை அறிந்து கொள்ளப் பயனாக இருக்கிறது. தாய்மொழி மற்றும் இருமொழி குழுக்களிடையே ஏற்படும் இடைவிளைவுகள், ஊரக, நகர இடப்பெயர்வு, சமூக, பொருளாதார நிலை மாற்றம் ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன.

## வயது கூட்டமைவு (Age Composition)

மக்கள் தொகைக் கணிப்புகளில் வயது பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கீழ்க்கண்ட வினாக்களைக் கேட்டு வயது பற்றிய செய்திகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு சேகரிக்கச் சொல்கிறது. 1. பிறந்த தேதி கேட்டு வயது கூறுதல் 2. சென்ற பிறந்த நாளின் மூலம் வயதைக் கேட்டறிதல். 3. மேற்கூறிய இரு வினாக்களையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ பயன்படுத்தி வயதை அறிதல். பல திட்டங்கள் பொதுவாக சமுதாயம், நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களுக்கு வயது கூட்டமைவு பற்றிய செய்திகள் மிக அவசியம். பள்ளியல் உள்ள மக்கள் தொகை, வாக்களிக்கும் மக்கள் தொகை, ஆற்றல் உள்ள மக்கள் தொகை முதலியவற்றை அளவிட வயது ஒரு முக்கியமான மாற்று உருவாகும். மக்கள் தொகை மதிப்பீடு, வீச்சு ஆகியவற்றைக் கணக்கிட வயது அமைப்பு தேவை. பள்ளி செயற்கைத்திட்ட ஏற்பாடுகள், பள்ளிக் கூடங்கள், ஆசிரியர்கள், உடல் வளத் தேவை மையங்கள், உணவு இருப்பிடம் ஆகியவற்றின் தேவைகளைக் கணக்கிட வயது பற்றிய விவரங்கள் மிக அவசியம். கருவளம், இறப்பு, இடப்பெயர்வு மற்றும் மக்களியல் ஆய்வுப் பரப்பினைக் கற்பதற்கு வயது ஒரு முக்கியமான மாற்று உருவாக அமைந்துள்ளது.

## பால் கூட்டமைவு (Sex Composition)

மக்கள் தொகையில் பால்கூட்டமைவு ஒரு அடிப்படைக் குணமாகக் கருதப்படுகிறது. இது நேரிடையாகக் கருவளம், இறப்பு, திருமணம் முதலிய நிகழ்ச்சிகளை உறுதி செய்கிறது கல்வி மற்றும் மருத்துவத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு ஆண், பெண் பற்றிய செய்தி விபரங்களைக் கொண்டு ஆய்வு செய்ய உதவியாக உள்ளது. சமூகவியல் மற்றும் பொருளாதார வல்லுநர்கள் பால் பற்றிய செய்தி விபரங்களில் முக்கிய ஆர்வம் காட்டுகின்றனர். ஆண், பெண் எண்ணிக்கை வேறுபாடு காரணமாகச் சமூக உறவு முறை, சமூகப்பங்கு, பண்பாட்டு முறைகள் பாதிக்கப்படுகின்றன. பால் வீத வேறுபாட்டினால் பிறப்பில் ஏற்படும் விளைவுகள் மிக முக்கியமானவை. ஆண், பெண் ஆகியவரின் இறப்பு விகிதம் கணிசமாக வேறுபடுகிறது. இத்தகைய குறுக்கு வகைப்படுத்துதல் இனக் கூட்டமைவு, கல்வி நிலை, குடி உரிமை நிலை ஆகியவற்றை ஆராய மிகவும் பயன்படுகிறது. பால் என்பது பிறப்பு ஒட்டிய இயல்பான பண்பாக இருப்பதால் இதை வரையறை செய்வதும், வகைப்படுத்துவதும் மிகவும் எளிதாகும். பால் இன புள்ளி விபரங்கள் மிகவும் சுலபமாகவும், துல்லியமாகவும் தரப்படுகின்றன. இந்த பால் இன புள்ளி விவரங்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள், மாதிரி கணக்கெடுப்புகள் மற்றும் பதிவுமுறை ஆகிய மூன்று வழிகளில் பெறப்படுகின்றன.

## மக்கள் தொகைக் கணிப்பு (Population Census)

மக்கள் தொகையை ஆய்வு செய்யத் தேவையான செய்திகளைத் தரும் அடிப்படை ஆதாரம் மக்கள் தொகைக் கணிப்பு எனப்படும். ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைபற்றிய கோட்பாடுகள் மக்கள் தொகைக் கணிப்பைச் கீழ்க்கண்டவாறு வரையுரை செய்கிறது. "சமூகபொருளாதார மக்கள் தொகைத் தொடர்பான விவரங்களை ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் உள்ளடக்கி அல்லது நாட்டின் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட மக்களின் விபரங்களைத்

திரட்டி, தொகுத்து, மதிப்பீடு செய்து வெளியாகும் ஒரு முறைமை".

மக்கள் தொகைக் கணிப்பில் ஒருவரின் முக்கியப் பண்புகளாகிய பால், வயது, திருமண நிலை, மதம், மொழி, கல்வித்தகுதி, பொருளாதார நிலை, தொழில் முதலியன கணக்கொடுக்கப்பட்டு பதிவு செய்யப் படுகின்றன. இது ஒரு நாடு முழுவதும் குறிப்பிட்ட எல்லைக்கு உள்பட்ட பகுதியில் வாழும் மக்களைப் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் முழுமையான மக்கள் தொகை பற்றிய விவரங்களைத் திரட்டித்தரும் ஒரு முழுமையான அமைப்பு மக்கள் தொகைக் கணிப்பாகும். இது இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.

மக்கள்தொகைக் கணிப்பு ஒரு சிக்கலான பணியாக இருப்பதால் இப்பொறுப்பை உள் துறை அமைச்சகம் ஏற்றுக் கொண்டுள்ளது. மக்கள் தொகைக் கணிப்பு வினாத்தாளில் கீழ்க்கண்ட பதிவுகள் உள 1. இல்லத் திரட்டு 2. இல்ல வினாத்தாள் 3. தனி ஒருவரின் விபரத் திரட்டு. அனைத்து இல்லங்களுக்கும் எண்கள் இடப்பட்டு இல்லத்திரட்டு நடைபெறுகிறது. பகுதி 2–இல் அனைத்து இல்லங்களிலும் நிலவுகிற நிலைமைகள், குடிநீர் பெறுமிடம், மின்சாரம், திருமணத் தம்பதிகளின் எண்ணிக்கை விவசாயம் முதலியன இடம் பெறும். பகுதி 3–இல் தனி மனிதர் – பெயர் – வீட்டுத்தலைவருடன் உறவுமுறை ஆண்–பெண், வயது, திருமண நிலை, மதம், மொழி, தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர், எழுத்தறிவு உள்ளவர், இல்லாதவர், வேலை பார்க்கும் இடம், முதலிய விபரங்களைக் காணலாம்.

## மக்கள் தொகைக் கணிப்பின் பயன்கள்

இது நிர்வாகத்திற்கும், சமூக பொருளாதார ஆய்வுகளுக்கும் திட்டங்களுக்கும் பயன்படக்கூடிய ஒரு ஆதாரமாகும். அரசியல் தொகுதிகளைப் பிரிக்கவும், மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும் உதவும். இதனால்

சேகரிக்கப்படும். சமூக பொருளாதாரப் புள்ளி விபரங்கள் தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் பாராளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் ஒதுக்கப்படும் இடங்களைத் தீர்மானம் செய்யப் பயனாகிறது. மாவட்ட நிர்வாக முன்னேற்றத்திற்கு உதவுகிறது. ஒரு நாட்டின் தொழில் அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் எழுத்தறிவு நிலை, கல்வியறிவு, மதம், மொழி பண்புகளில் உண்டாகின்ற மாற்றங்கள் முதலிய செய்திகளை அறிந்திட உதவுகிறது. மேலும் வாழ்க்கை அட்டவனையைத் தயார் செய்யவும் பொருளாதார வளர்ச்சியை ஆராயவும் உதவும். எதிர்கால மக்கள் தொகையின் போக்கினை மதிப்பீடு செய்ய, தேவையான அடிப்படைச் செய்திகளை வழங்குகின்றன. எதிர்கால மக்கள் தொகை பற்றிய மதிப்பீடும் பால் – வயது கட்டமையையும், எதிர்காலத்தில் பள்ளிக்குச் செல்லும் மக்கள் தொகையையும் நகரங்களின் வளர்ச்சியையும், உணவு, நீர், வீட்டுவசதி, உடல்நலத் தேவைகள் முதலியவற்றின் எதிர்காலத் தேவைகளையும் அறிந்துகொள்ள உதவுகின்றன. மேலும் உலகம் முழுமையும் மக்கள் தொகை தொடர்பான அறிவினைப் பெறவும் செய்திகளைச் சேகரிக்கவும் ஒரு பெரும் பங்கினை வகிக்கிறது.

## இன்றியமையா நிகழ்வும் பதிவுமுறையும் (Registration of Vital Events)

மணிதவாழ்வில் இன்றியமையா நிகழ்ச்சிகளாகப் பிறப்பு, திருமணம் போன்றவை நடைபெற்ற காலம் இடம் ஆகியவற்றைப் பதிவு செய்வதே இன்றியமையா நிகழ்வு, பதிவுமுறையின் முக்கிய நோக்கமாகும் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் புள்ளி விபரங்கள் இன்றியமையாப் புள்ளி விபரங்கள் ஆகும்.

ஒரு இன்றியமையா நிகழ்வு பதிவு செய்யப்பட்டவுடன் ஒரு சான்றிதழ் அளிக்கப்படுகிறது. தற்கால சமூகத்தில் ஒருவர் தன்னை அடையாளம் காட்டவும் தன் நாட்டுரிமை குடிஉரிமை ஆகியவற்றை நிலை நாட்டவும் அவருடைய சலுகைகள் கடமைகள் ஆகியவற்றைத்

தீர்மானிக்கவும் பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் பயனாகின்றன. ஒருவர் வயதை நிருபிக்க முக்கிய சான்றாகிறது ஆயுள் காப்பீட்டுத் தொகையைப் பெற பரம்பரைச் சொத்துக்களை அடைய இந்த சான்றிதழ் மிகவும் அவசியம் மேலும் இன்றியமையா நிகழ்வுப் பதிவுமுறையின் மூலமாகப் பெறப்படும் பிறப்பு, இறப்பு, திருமணம், விவாகரத்து போன்ற தகவல்கள் மருத்துவம் பொதுநல அறிவியல் ஆகிய ஆய்வுகளுக்குப் பயனாகின்றன இறப்புச் சன்றிதழ்கள் இறப்பின் காரணங்களைக் கூறுகின்றன இத்தகவல்கள் மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. இந்தச் சான்றிதழ்கள் மூலம் மக்கள் உடல்நலத்தை மதிப்பிட முடிகிறது மலேரியா ஒழிப்புத் திட்டம் காச நோய் மற்றும் தொழு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் முதலியவைகளை மதிப்பிட இறப்பு பற்றிய புள்ளி விபரங்கள் உதவுகின்றன மேலும் கல்வி வசதி ஆசிரியர் பயிற்சிக்கான திட்டம் உணவு வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் ஆகியவற்றைத் திட்டமிட இன்றியமையாப் புள்ளி விபரங்கள் தேவைப்படுகின்றன.

## மாதிரிக் கணக்கெடுப்புகள் (Sample surveys)

இவைகள் மூலம் மக்கள் தொகைப்புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன இந்த முறையில் புள்ளி விவரங்கள் மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடம் பெறப்படுகின்றன. இத்தகைய நபர்கள் மக்கள் தொகையின் பிரதி நிதியாக இருப்பதால் இம்முயில் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்து மக்களுக்கும் பொருத்தமானதாகக் கருதப்படுகின்றன. மக்கள் தொகை கணிப்பு பத்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுவதால் மாதிரிக் கணக்கெடுப்புகள் மிகவும் அவசியம் என உணரப்படுகின்றன. இம்முறையில் திரட்டப்படும் புள்ளி விவரங்கள் குறைந்த எண்ணிக்கை உள்ள மக்களிடம் இருந்து திரட்டப்படுவதால், மக்கள் தொகைக் கணப்பு புள்ளி விவரங்களை விட தரமாக இருக்கின்றது. மாதிரிக் கணக்கெடுப்புகள் திட்டமிடுபவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் அதிக பயனுள்ளதாக இருக்கின்றன.

## மக்கள் தொகை வளர்ச்சிக் கோட்பாடுகள்

மால்த்தூஸ் கோட்பாடு (**Malthusian theory**) மால்தஸ் தன் கட்டுரையில் கீழ்க்கண்ட அனுமானங்களைக் குறிப்பிடுகிறார்.

1. மனித வாழ்க்கைக்கு உணவு மிக அவசியம்.

2. ஆண், பெண் இவர்களின் உணர்ச்சிகள் மிக அவசியமானவை.

3. விவசாயத்தில் குறைந்த நெல் விளைவு விதி முறையாகச் செயல்படுகிறது.

4. மக்கள் தொகையின் ஆற்றல் பூமியின் உணவு உற்பத்தியைப் பெருக்கும் ஆற்றலை விட அதிமாக இருக்கிறது.

மேலும் நாட்டின் உணவு உற்பத்திக் கணக்களவு மாற்றம் அடிப்படையில் உயர்கிறது மக்கள் தொகையின் உற்பத்தி ஒத்த விகித மாற்றம் அடிப்படையில் உயர்கிறது என மால்த்தூஸ் கூறுகிறார். தன் இரண்டாவது கட்டுரையில் பின்வரும் அனுமானங்களைத் தருகிறார். 1. உணவு உற்பத்தி ஒரு நாட்டின் மக்கள் தொகை அளவைத் தீர்மானிக்கிறது. 2. சக்தி வாய்ந்த சில தடைகள் வாயிலாக மக்கட்தொகையைக் கட்டுபடுத்தா விடில் உணவு உற்பத்தி உயரும் பொழுது மக்கள் தொகையும் உயரும். 3. சுய கட்டுப்பாடு தீங்கு மற்றும் துன்பம் முதலியன மக்கள் தொகை உயர்வுத் தட்டுப்பாட்டுத் தடைகளாகும்.

அக்கவ் (**Acuff**) என்பவரும், மற்றவர்களும் மால்தஸ்க்கு முன்னே கோட்பாடுகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறியுள்ளனர் 1. வளர்ந்து வரும் மக்கட்தொகை பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியம் 3. நகரங்களில் அதிகரிக்கும் மக்கள் தொகை இறப்பு விகிதத்தை அதிகரிக்கிறது. 4. வளர்ந்து வரும் மக்களை நகரங்களுக்கு

இடம் பெயர்தலை மக்கள் தொகை அதிகரிப்பதுடன் வேலைப் பங்கீட்டையும் வளர்க்கிறது. 5. மக்கள் எண்ணிக்கை நாட்டு வளம் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். 6. நகரங்களை விட ஊரகங்களில் பிறப்பு விகிதம் உயர்ந்து காணப்படுகிறது மேலும் மக்கள் தொகை வளர்ச்சி பற்றிய கோட்பாடுகள் இயற்கை விதிக் கோட்பாடுகள் சமூகவியல் கோட்பாடுகள் உத்தம மக்கள் தொகைக் கோட்பாடு மற்றும் மக்களியலின் மாறும் கோட்பாடுகள் ஆகும்.

இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சியைப் பல பகுதிகளாகப் படிக்கலாம் 1. மக்கள் தொகை வளர்ச்சி 1600 A.D. வரை பண்டைக்காலம் முதல் இந்தியா அடர்ந்த மக்கட்தொகை உள்ள நாடாகக் கருதப்பட்டது. 2. மக்கள் தொக்க கி.மு. 300 லிருந்து கி.பி. 1600 வரை ஒரே நிலையில் இருந்தது என புலப்படுகிறது. இந்தியாவின் மக்கட் தொகை வளர்ச்சி 1600 A.D. முதல் 1870 வரை.

இக்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி பற்றிய புள்ளி விபரங்கள் கிடைக்க வில்லை. இந்தியாவிற்கு வந்து சென்ற ஐரோப்பியர்கள் விட்டுச் சென்ற தடயங்கள் வாயிலாக இந்திய மக்கள் தொகை நூறில் இருந்து 125 மில்லியனுக்குள் இருந்தது எனத் தெரிகிறது. 3. மக்கள் தொகை வளர்ச்சி 1887 முதல் 1901 வரை ஆயிரத்தில் எண்ணூற்று தொண்ணூற்று ஒன்றில் 236.70 மில்லியனாக இருந்தது 1901 இல் இது 238.40 ஆக உயர்ந்தது

## இந்தியாவின் இன்றைய மக்கள் தொகை

95 ஆம் ஆண்டு 900 மில்லியன் இருந்ததாக அரசாங்கக் குறிப்புகள் கூறுகின்றன உலகில் அதிக மக்களைக் கொண்ட நாடுகளில் இந்திய இரண்டாவது இடம் பெற்றுள்ளது 91 ஆம் ஆண்டு 846.3 மில்லியன் மக்கட்தொகை இருந்தது ஒவ்வொரு ஆண்டும் 20 மில்லியன் மக்கள் மொத்த மக்களுடன் இணைகிறார்கள் ஆண்டு மக்கள் தொகை வளாச்சி 2.11 ஆகும். மக்கள் தொகை அடர்த்தி 273. நகரத்தில் வாழும் மக்கட் தொகை 26.13 சதவீதம் இந்நிலையில் மக்கட் தொகை வளர்ந்தால் 2025 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கட்

தொகையை விட அதிக மக்கள் தொகை இந்தியாவில் காணப்படும்.

## இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சிக்குக் காரணங்கள்

ஒரு நாட்டின் மக்கள் தொகை மாற்றத்திற்கு மிக முக்கிய காரணங்கள் பிறப்பு, இறப்பு, மற்றும் இடப் பெயர்வுகளாகும். இடப்பெயர்வு நம் நாட்டு மக்கள் தொகையில் அதிக மாற்றத்தை விளைவிக்கவில்லை. ஆகவே இந்தியாவின் வேகமான மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு பிறப்பும், இறப்பும் தான் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## சமூகக் காரணிகள்

இளம் வயது திருமணம் நம் நாட்டில் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளது. பெண்கள் குறைவான வயதில் திருமணம் செய்து கொள்கின்றனர். இந்தியாவில் பெண்களுக்கு ஒரு மிக அவசியமான நிகழ்ச்சியாகத் திருமணம் எண்ணப்படுகிறது. இதன் காரணமாக மிக அதிக எண்ணிக்கையிலே இனப் பெருக்கத்தில் ஈடுபட்டு அதிக குழந்தைகளைப் பெறுகிறார்கள்.

## கூட்டுக் குடும்பம்

இளம் வயது திருமணம், மற்றும் பெரிய குடும்பத்தை ஊக்குவிப்பது கூட்டுக் குடும்ப முறை. இக் குடும்பத்தில் குழந்தை பிறத்தல், வளர்த்தல், முதலியன ஒரு சுமையாகத் தோன்றுவதில்லை.

## கும்பலான மக்கள் கல்லாமை

இந்தியாவில் அதிகம் பெண்கள் படிக்காதவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக இளம் வயது திருமணம் மற்றும் குடும்ப அளவு ஆகியவற்றை ஊக்குவிக்கின்றது.

## பொருளாதாரக் காரணிகள்

தனிமனிதர் வருமானம், மற்றும் தொழில் முதலியன மக்களிடம் பிறப்புகள் வேறுபடக் காரணமாகின்றன. நம் நாட்டில் 70 சதவிகித மக்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் படிக்காதவர்கள். எனவே இவர்களுக்கு மற்ற தொழில்களில் உள்ளவர்களைவிட அதிக குழந்தைகள் பிறக்கின்றன. மக்கள் தொகைக் காரணிகள் இந்தியாவின் வயது கூட்டமைப்பு மக்கள் தொகை பெருக்கத்திற்குப் பெரிதும் காரணமாக விளங்குகிறது.

## குறைந்த செயல்திறன் கொண்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

மற்ற முன்னுக்கு வந்த நாடுகளில் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்களை அதிக எண்ணிக்கையில் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் துவங்கிய போது இயற்கையான முறைகள் பயன்பட்டது. மேலும் குடும்பநலப் பணியாளர்கள் பல தவறுகள் செய்வதின் பயனாக மக்கள் தொகை பெருகுகிறது.

## மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்

உணவு உற்பத்திக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் நேரடித் தொடர்பு உண்டு. இந்தியாவில் பசுமைப் புரட்சி ஏற்பட்டும் போதிய உணவு உற்பத்தி இல்லாத காரணத்தால் மக்களுக்குச் சத்துணவு கிடைப்பதில்லை மக்கள் தொகைப் பெருக்கம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட ஒரு தடையாக உள்ளது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு இணையாகக் கல்விக் கூடங்கள் துவங்காததால் இன்று பள்ளியிலும், கல்லூரிகளிலும் படிக்க இடம் கிடைக்காமல் தவிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகிறது. வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.

வேலையில்லாப் பிரச்சினை நம் நாட்டில் மிகப் பெரியதாகும். மக்களின் சுகாதார நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. பலவித பிணிகளால் மக்கள் துன்பப்படுகின்றனர். வீடுகளின் தேவை மக்கள் தொகைப் பெருக்கத்தினால் அதிகரித்துள்ளது. தனிமனிதர் வருமானம் குறைகிறது.

## தீர்வுகள்

### குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

உலகில் முதன் முதலாகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு உண்டு. ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்கள் தொகைப் பெருக்கினைத் தடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்கு அளிக்கப்படும் நிதி கணிசமாக உயர்த்தப்படுகிறது. குடும்ப நலத்திட்டம் 1952-இல் துவங்கி சுகாதார அமைச்சகப் பொறுப்பில் செயல்பட்டு வந்தது. மாவட்டங்களில் குடும்ப நல மையங்கள் அமைக்கப்பட்டன. இது தவிர ஆரம்ப சுகாதார நிலையங்களும் நிறுவப்பட்டன. கருத்தடைச் சாதனங்கள் மக்களுக்கு இலவசமாகத் தரப்பட்டன. அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.

இந்திய குடும்ப நலத்திட்டத்தில் ஒரே முறையைப் பயன்படுத்தாமல் கருத்தடைச் சாதனங்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டன. குடும்ப நலத்திட்டத்தில் முதலில் 'பாதுகாப்பான காலம்' முறையைப் பின்பற்றினார்கள். பின்பு கருத்தடை வளையம், ஜெல்லி, நுரை மாத்திரை, காப்பர் T போன்ற தற்காலிக முறைகள் அளிக்கப்பட்டன. நிரந்தர முறைகளாகிய பெண் அறுவை சிகிச்சை, ஆண் அறுவை சிகிச்சை போன்ற முறைகள் செய்யப்பட்டன. ஆக இந்தியாவில் பல கருத்தடைச் சாதனங்கள் மக்களிடம் சென்று அடையும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பெருகி வரும் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படுகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் அல்லது குடும்ப நலத்திட்டத்தை இந்திய அரசும், ஐந்தாண்டுத் திட்டங்களும் ஆதரித்து, மக்களை இத்திட்டத்தை மேற்கொள்ள வற்புறுத்தி வருகின்றன. சிறிய குடும்பம் உள்ள ஏழை இல்லங்களுக்கு மானியத் தொகை வழங்குகிறது. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கு அரசு ஊக்கத் தொகை தருகிறது. இவ்வாறு அரசு பல வழிகளில் வேகமாகப் பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி, இந்தியா முன்னேற வழிவகுக்கிறது.

# பாடம் - 20

# சமூக மாற்றம் (Social Change)

எல்லாச் சமூகங்களும் பழங்குடி, ஊரக மற்றும் நகர மாற்றமடைகின்றன. மாற்றம் இயற்கையின் நியதி மாறுதல் இன்றி ஏதும் இருக்க முடியாது. ஆனால் சில சமூகங்கள் மெதுவாகவும், சில விரைவாகவும் மாற்றமடைகின்றன. நில நடுக்கம், புதியன கண்டுபிடிப்புகள், புதுக் கருத்துக்கள் போன்ற இயற்கைச் சக்திகளாலும் சமூகம் மாற்றம் அடையும் போது புதிய சிந்தனைகள், கருத்துக்கள், கொள்கைகள் தோன்றுகின்றன. புதிய பழக்க வழக்கங்கள் உண்டாகின்றன. சமூகக் குழுக்கள் தோன்றுகின்றன. ஆனால் சமூகத்தின் எல்லாப் பகுதிகளும் – இல்லம், கல்வி, மதம், அரசியல், பொருளாதாரம் – ஒரே அளவில் மாற்றமடைவதில்லை. எனவே சமூக மாற்றம் சமூக முன்னேற்றத்தையும் குறிக்கலாம். அதற்கு முரணானதையும் குறிக்கலாம்.

## சமூக மாற்றம் விளக்கம்

சமூக மாற்றம் என்பது சமூகவாழ்வில் ஏற்படும் மாறுதல்களைக் குறிக்கும். சமூகத் தொடர்புகள் அல்லது உறவுகளில் உண்டாகும் மாற்றமே சமூக மாற்றமாகும். சமூக மாற்றமென்பது சமூக நடைமுறைகளிலும், சமூக ஊடாட்டங்களிலும் மற்றும் சமூக அமைப்பு முறைகளிலும் ஏற்படும் மாற்றங்களேயாகும். மனித சமூகம் நிலையானது அல்ல. அது தொடர்ந்து மாறிக் கொண்டே வருகிறது. எல்லாச் சமூகங்களிலுமே மீண்டும் மீண்டும் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. சான்றாக ஒரு சமூகத்தின் பெரும்பான்மையினரின் தொழில் அவர்கள் முன்னோர்கள் செய்து வந்த தொழில்களிலிருந்து வேறுபடும் பொழுது சமூக மாற்றம் ஏற்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது. தனிப்பட்ட அங்கத்தினர்களின் பரிமாற்றத்தில் மாறுதல் காணப்படுமேயானால் சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது புலப்படும். இத்தகைய மாற்றங்கள் பல நேரங்களிலும் பல

காரணிகளிடையே உள்ள தொடர்பு, உறவுமுறையைப் புரிந்து கொண்டால் மாறுதல்களின் வேகம், அவை செல்லும் திசை முதலியவற்றை நம்மால் அறிய முடியும். இன்றும் சமூகவியலில் இவற்றை விளக்கக்கூடிய கோட்பாடு ஏற்படவில்லை. ஆயினும் சமூக மாற்றத்தில் ஏற்படும் குறிப்பிட்ட சில வரலாற்று நிலைகளை விளக்கிக் கூற இயலும். மாற்றங்களுக்குச் சமூகத்தின் உட்சக்திகளும் வெளிச் சக்திகளும் காரணமாக இருக்கின்றன. உட்சக்திகளுக்கு எடுத்துக் காட்டுகளாக, புதுக் கருத்துக்கள், புது கண்டுபிடிப்புகள், புதுப்பழக்க வழக்கங்களையும், வெளிச் சக்திகளுக்கு எடுத்துக் காட்டாக பிற சமூகங்களுடன் ஏற்படும் தொடர்புகளையும் கூறலாம். எந்தச் சமூகமும் முழுதும் ஒருங்கிணைந்தோ, முழுவதும் மாறாததாகவோ காணப்படுவதில்லை. சமூகத்தில் மாற்றத்தை என்றும் உண்டாக்கக்கூடிய சக்திகள் இருக்கும்.

## சமூகமாற்றம் வரையுரை

டி.பி. பாட்டமோர் (T.B. Bottomore) என்பவர் சமூக அமைப்பில் ஏற்படும் ஒரு மாற்றம் அல்லது குறிப்பிட்ட சமூக நிறுவனங்களில் ஏற்படும் மாற்றம் அல்லது நிறுவனங்களுக்கிடையே உண்டாகும் மாற்றத்தை சமூக மாற்றம் என கூறகிறார். அவர் பண்பாட்டு மாற்றத்தை பண்பாட்டு நிகழ்ச்சிகளாகிய அறிவு, எண்ணங்கள், கலை, மத மற்றும் நீக்க கொள்கைகளில் உண்டாகும் மாறுதல்களாகக் குறிப்பிடுகிறார். சமூக மாற்றங்கள், சமூக அமைப்பினுள் இருந்து எழும் காரணிகளாவோ, அதற்குப் புறம்பாக எழும் காரணிகளாவோ ஏற்படுகின்றன என ஸ்பிராயிட் (Sproid) கருதுகிறார். தங்கள் நாட்டை விட்டு வேறு நாடு செல்லும் மக்கள், குடியேறுகின்ற மக்கள், வாணிகம், போக்குவரத்து போன்றவைகளின் பண்பாட்டுத் தொடர்பினால் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன. வெள்ளையர் ஆட்சியினால் இந்திய மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம் இதற்கு எடுத்துக்காட்டாகும். சமூக அமைப்பினுள் இருந்து எழும் காரணங்களால் ஏற்படும் மாற்றங்கள் எதிர்பாராத மாற்றங்களாகவோ, முன் குறிக்கப்பட்ட மாற்றங்களாகவோ இருக்கலாம். விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் எதிர்பாராத மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. ஒரு குழந்தையைப்

பொருளாதார சமூக நியதிகளின்படி சமூக இயல்பினை ஆகச் செய்யும் முயற்சி முன்குறிக்கப்பட்ட மாற்றமாகும். சமூக நடைமுறையில் அல்லது சமூக ஊடாட்ட செயற்பாங்குகளில் ஏற்படும் மாற்றமே சமூக மாற்றம் என மற்றும் சில சமூகவியல் வல்லுநர்கள் எண்ணுகின்றனர்.

எச்.எம். ஜான்சன் (H.M. Johnson) என்பவர் சமூகத்தில் அடியிற்கண்டவைகளில் உண்டாகும் மாற்றமே சமூக மாற்றம் என்கிறார்.

1. மதிப்பீடுகள் மற்றும் விழுமியங்களில் ஏற்படும் மாறுதல்கள்

2. சமூக நிறுவனங்களில் ஏற்படும் மாறுதல்கள்

3. சமூக அமைப்புகளில் மற்றும் செயற்பாடு, தகுநிலையில் உண்டாகும் மாற்றம்

4. செல்வத்தைப் பங்கிடும் முறையில் ஏற்படும் மாற்றம்

5. தனிப்பட்ட அங்கத்தினர்களின் மாற்றம்

6. கடைசியாக மனிதர்களின் நடத்தையில் மற்றும் திறமைகளில் மாற்றம்

## இ.கோல் (E.Cole) என்ற பேராசிரியர் கூறும் சமூகமாற்றங்கள்

1. பண்பாட்டுக் கூறுகளில் மாற்றம்

2. பண்பாட்டுத் தொகுதிகளில் மாற்றம்

3. சமூக நிறுவனங்களில் மாற்றம் (உ.ம்.) குடும்பத்தின் அளவு சிறியதாகிறது குடும்பப் பற்று அதிகரிக்கிறது.

4. சமூகத்தின் அளவு, பங்கீடு முதலியவைகளில் மாற்றம் (உ.ம்.) மக்கள் தொகைப் பெருக்கம்.

5. இறுதியாக ஆளுமையில் மாற்றம்

## சமூக மாற்றத்தின் வகைகள்

### 1. திட்டமிட்ட சமூக மாற்றம்

ஒரு சமூகம் பிற்பட்டதாக அல்லது பலதுறைகளில் முன்னேறிய சமூகமாக இருக்கக்கூடும். பின்தங்கிய சமூகத்தை முன்னேறச் செய்ய அந்த சமூகத்திலே சில மாற்றங்கள் ஏற்படச் செய்ய வேண்டும். இவ்வாறு மாற்றங்கள் நிகழச் செய்ய அதில் வாழும் மக்களிடையே புதுக் கருத்துக்களைப் பரப்பி, அதன் பயனை எடுத்துக் கூறி, பழமையை மெதுவாக மறக்கச் செய்து, புதிய கருத்தின் பயனை உணரச் செய்து, ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட அளவேனும் முன்னேற்றமடைய எடுத்துக் கொள்ளும் முயற்சியைத் திட்டமிட்ட மாற்றம் எனக் கூறலாம். எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், விவசாய மற்றும் தொழில் துறைகள் முன்னேற்றமடையவும், கல்வி அறிவு வளர்ச்சி பெறவும் தங்களின் மூலதனங்கள், வசதிகள் முதலியவைகளைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எந்த அளவு முன்னேற்றம் அடையவேண்டும் என அறுதியிட்டுக் கொண்டு திட்டமிட்டுச் செயல்படுகின்றன. இவ்வாறு பொருளாதார முன்னேற்றம் அடையப் பொதுமக்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை. பொதுமக்கள் ஈடுபாடில்லாத எந்தத் திட்டமும் வெற்றி பெறுவதில்லை.

ஆகவே சமூகத்திற்கு மக்களின் மனமாற்றமும் ஈடுபாடும் திட்டமிட்ட மாற்றத்திற்கு அவசியம் தேவையாகும். திட்டமிட்ட சமூகமாறுதலுக்கு உதவியாக இருப்பவை அந்நாட்டின் அரசியல் சாசனம், சட்டம், சட்டமன்றங்கள், நீதி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள், அறிஞர்கள்,

பொதுமக்கள் தொடர்புச் சாதனங்களாகிய செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்றவைகளாகும். இவைகளைவிட ஆர்வமும், ஈடுபாடும் கொண்ட பொதுமக்கள்தான் திட்டமிட்ட சமூகமாற்றம் ஏற்பட வழிவகை செய்ய முடியும். சமுதாய நல அபிவிருத்தித்திட்டம் ஒரு திட்டமிட்ட சமூக மாற்ற முயற்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

2. திட்டமிடப்படாத சமூகமாற்றம்

திட்டமிடாமல், இயற்கையாக, தானாகவே உண்டாகும் மாற்றத்தைத் திட்டமிடப்படாத சமூக மாற்றம் எனலாம். (எ.கா.) போர், மழை, வறட்சி, தட்ப வெட்ப மாறுதல்கள் முதலியனவாகும்.

**மாற்றத்தின் தடைகள்**

இடையூறுகள் இல்லாமல் சமூகத்தில் மாற்றம் விளைவதில்லை என ஆண்டர்சன் மற்றும் பார்க்கர் (Anderson and parker) கூறுகிறார் பல புதிய கண்டுபிடிப்புகள் பயன் தரக்கூடியவை என அறியவும் அதை ஏற்றுக் கொள்ளவும் மக்களுக்குப் பலகாலம் ஆகிறது. இதற்குக் காரணம், அதைப்பற்றிய அர்த்த மற்ற பயம் அதன் விளைவு அதைக் கையாளக் கற்றறுக் கொள்ள வேண்டிய அவசியம் பழமையயை விரும்புதல் மக்களின் பழக்க வழக்கங்கள் முதியவர்களுடைய கடுமையான எதிர்ப்பு முதலியனவாகும். இதை வில்லியம் ஆக்பர்ன் (william ogburn) பண்பாட்டுத் தேக்கம் எனக் கூறுகிறார். பண்பாட்டில் ஒரு துறையில் வேகமாக மாறுதலையும் மாற்றொரு துறையில் மெதுவாக மாறுதலையும் ஆக்பர்ன் பண்பாட்டுத் தேக்கம் என்கிறார். இதன் விளைவாகச் சமூகத்தில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. இந்தப் புதிய கண்டு பிடிப்புகளை மக்கள் ஏற்றுக்கொள்ளப் பல ஆண்டுகள் ஆகலாம். இது போல் சமூகப் பிரச்சினைகளாகிய வரதட்சணை, சாதி அமைப்பு, தீண்டாமை ஒழிப்பு முதலியன சமூகத்திலிருந்து அகற்றப்படாமல் உள்ளன. சமூக மாற்றம் ஏற்படாமல் தடுக்கும் சக்திகளை ஆண்டர்சனும், பார்க்கும் ஆறு வகை எனக் கூறுகிறார்கள். அவைகளாவன செயலற்றதன்மை,

பழக்கங்கள், பரம்பரை வழக்கங்கள், சுயநல இச்சைகள், கல்வியின்மை, அவ நம்பிக்கைகள் மற்றும் சந்தேகம்.

## சமூகமாற்றக் கோட்பாடுகள்

### சூழ்நிலைக் கோட்பாடு

வேப்ளன் (Veblen) என்ற சமூகவியல் அறிஞர், தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சி, மக்களின் பழக்க வழக்கங்கள், மரபுகள், நியதிகள், நடத்தைகள் போன்றவற்றில் மாற்றத்தை உண்டாக்குகிறது என்கிறார்.

### பரிணாமக் கோட்பாடு

லூயிஸ் மார்கன் (Lewis Morgan) 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் நாகரீகம் பிற்போக்கான நிலையிலிருந்து வளர்ந்து படிப்படியாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்கிறார். ஆகஸ்ட் காம்டே (August Comte) (1797 – 1857) என்பவர் சமூகம் மூன்று கட்டங்களில் வளர்ந்தது என்கிறார். அதாவது சமூகம் இறைமை நிலை, நுண்பொருள் கோட்பாட்டு நிலை, மெய்விளக்கக் கோட்பாட்டு நிலை என்ற மூன்று நிலைகளின் வழியாகக் கடந்து செல்கிறது எனக் கூறுகிறார். இறைமை நிலையில் சமூகமானது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியில் நம்பிக்கை வைத்தது. சமூக நடத்தையை அச்சக்தியே கட்டுப்படுத்துகிறது என மனிதன் நம்பினான். நுண்பொருட் கோட்பாட்டு நிலையில் அச்சக்தியே தன் செயல்களைக் கட்டுப்படுத்தி வழி நடத்துகின்றது எனக் கருதினான். மெய்விளக்கக் கோட்பாட்டு நிலையில் மனிதன் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அனுபவரீதியாக ஆராயத்துவங்கினான். இந்நிலையில் மனிதன் பல கொள்கைகளையும் தத்துவங்களையும் கண்டுபிடித்தான். கூர்ந்து கவனித்தலுக்கும், யுக்திக்கும் முக்கியத்துவம் கொடுத்தான். ஸ்பென்சரின் (Spencer) கூற்றுப்படி சமூகமானது முதலில் போரிடுவதாகவும், ஆன்மீகத் துறையில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. பின்பு அச்சமூகம் தொழில் நுட்பச் சமூகமாக மாறியது.

டர்க்ஹெயிமின் (Durkheim) கூற்றுப்படி சமூகத் தொடர்பானது மரபு வழி இயங்குகிற இயந்திர ஒற்றுமையிலிருந்து உயிரியல் சார்ந்த ஒற்றுமையாக மாறுகிறது.

## நடுநிலைக் கோட்பாடு

சமூக அமைப்பில் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம் அதன் மற்ற பகுதிகளிலும் மாற்றங்களை விளைவித்து ஒருமைப்பாட்டைக் கொண்டு வரும்.

## முரண்பாட்டுக் கோட்பாடு

மாற்றம் முரண்பட்ட குழுக்களிடையே போராட்டங்களை ஏற்படுத்தும் என கார்ல் மார்க்ஸ் கூறுகிறார். மேலும் பொருளாதார ரீதியான காரணிகளே சமூக மாற்றத்தை நிர்ணயிக்கின்றன என அவர் கருதுகிறார். பொது உடைமைக் கொள்கை விளக்க அறிவிப்பில் வகுப்புப் போராட்டத்தைக் கீழ்க்கண்டவாறு மார்க்சும், எங்கல்சும் (Marx and Engels) எண்ணுகின்றனர். சமூக வரலாறு வகுப்புக் கலவரத்தின் வரலாறேயாகும். சுதந்திரம் அடைந்தாலும் அடிமையும், பிரபுக்களும், ஒடுக்குகிறவனும், ஒடுக்கப்பட்டவனும் என்றுமே ஒருவருக்கொருவர் முரண்பட்டே காணப்படுகின்றனர். அவர்களுக்குள் ஏற்பட்ட போராட்டத்தில் சமூகமானது புரட்சிகரமாகச் சீராக்கப்பட்டது. பொருளாதார ரீதியல் முன்னேறிய வகுப்பினருக்கும், பின்தங்கிய வகுப்பினருக்கும் தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றமே சமூக மாற்றத்தை நிச்சயிக்கிறது.

## சமயச்சார்பான கோட்பாடு

மேக்ஸ் வேபர் (Max Weber) சமயமே சமூக மாற்றத்தை ஏற்படுத்துகிறது எனக் கருதுகிறார். பிராடெஸ்டாண்டு கொள்கைகள் முதலாளித்துவம் வளரும்

சூழ்நிலையை உருவாக்குகின்றன. உலக பந்தங்களை இக் கொள்கைகள் எதிர்க்கவில்லை. பகுத்தறிவுடன் கூடிய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளித்து புரோடெஸ்டண்டு மதத்தினரை அதிகமாகக் கொண்டுள்ள இங்கிலாந்து, அமெரிக்கா, ஹாலந்து போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேறிய நாடுகளாகும். இவைகள் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் நாடுகளாகவும் உள்ளன. இத்தாலி போன்ற கத்தோலிக்க நாடுகள் பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளாகக் காணப்படுகின்றன.

## முறையான முயற்சிகளை அடிப்படையாக் கொண்ட கோட்பாடு

சமூகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் முறையான முயற்சிகள் தேவை என ஹாப்ஹெவுஸ் (Hobhouse) கூறுகிறார். திட்டமிட்ட ஒழுங்கான முயற்சிகள், திட்டமிடப்படாத ஒழுங்கற்ற முயற்சிகளைவிட அதிக அளவு சமூகமாற்றத்தை ஏற்படுத்தும் என்று மேலும் அவர் கூறுகிறார்.

## சுற்றிச் சுழன்று வரும் கோட்பாடுகள்

ஸ்பெங்ளர் (Spengler), பாரட்டோ (Pareto), சோரோகின் (Sorokin), டாயன்பீ (Toynbee) போன்றவர்கள் காலங்கள் மாறி மாறி வருவது போல் சமூக மாற்றங்களும் மாறி மாறி வருகின்றன எனக் கூறகிறார்கள். ஸ்பெங்ளர் பகல், இரவு மாறி வருவது போல் சமூகத்தில் பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, தேய்வு, இறப்பு முதலியன மாறி மாறி வருகின்றன என்கிறார்.

## சமூகமாற்றமும் சமூக முன்னேற்றமும்

சமூக மாற்றமும், முன்னேற்றமும் மிக நெருங்கிய தொடர்பு உடையதாகும். சமூக முன்னேற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட திசையில் ஏற்படும் மாற்றம் அல்ல என்றும், அது

சமூகக் குறிக்கோள்களை அடைவதே சமூக முன்னேற்றமாகும். தனி மனிதன் அல்லது குழு பயன் அடையும் வண்ணம் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுதலே சமூக முன்னேற்றமாகும். ஒரு மாற்றமானது ஒரு தனி மனிதன் அல்லது குழுவானது முன்பே உள்ள சூழலில் சுலபமான முறையில் வாழ வழிவகுக்குமாயின் அந்த மாற்றமானது சமூக முன்னேற்றத்தைக் குறிக்கிறது எனக் கருதலாம். மேலும் சமூக முன்னேற்றம் மக்களால் சமூக மதிப்பீடுகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

சமூக முன்னேற்றத்தில் மாற்றம் ஒரு குறிப்பிட்ட திசையில் ஏற்படுகிறது. சமூகம் மேம்பாடு அடையும்பொழுது மக்கள் விரும்பும் குறிக்கோள் நிறைவேறுகிறது. குறிக்கோள்கள் சமூக நன்மைக்காக இருக்கக்கூடும். சமூகவியல் கருத்துப்படி முன்னேற்றத்தில் ஒரு குழு முழுவதும் ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கிச் செல்கிறது. சமூக மாற்றத்தில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. முன்னேற்றத்தில் மக்கள் பல அல்லல்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டும். எ.கா. இந்திய சுதந்திரப் போராட்டம். இந்திய விடுதலை வரலாற்றில் ஒவ்வொரு போராட்டமும் சமூக முன்னேற்றத்தின் ஒரு படி ஆகும். முன்னேற்றத்திற்கு மக்களின் முயற்சிகள், துணிவாற்றல், ஆர்வம் முதலியன தேவை. முன்னேற்றம் மாறும் தன்மையுடையது. நம் நாடு முன்னேறக் கல்வி, உணவு தானியம் முதலியன மிக முக்கியமாகும். முன்னேற்றத்திற்கு உரிய காரணிகள். உடல் மன நலம், பொருளாதார வசதி, கல்வி, சமூகப் பாதுகாப்பு, சுதந்திரமும் சமத்துவமும், குறைவான தடைகள் முதலியன ஆகும்.

## சமூக மாற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமுள்ள வேறுபாடுகள்

1. சமூக மாற்றமானது முன்னேற்றத்தையோ, முன்னேற்றம் இன்மையையோ குறிக்கலாம். முன்னேற்றம் என்பது மக்களின் பின்தங்கிய நிலையைக் குறிக்காது. முழுப்பயன் அடையும் வண்ணம் ஏற்படும் மாற்றங்களே முன்னேற்றமாகும்.

2. சமூக மாற்றமானது பயன் உடையதாகவோ, பயனற்றதாகவோ இருக்கலாம். சமூக முன்னேற்றம் சமூக நலத்தையும் சமூகச் சீர்திருத்தத்தையும் மட்டுமே குறிக்கும்.

3. சமூக மாற்றமானது திட்டமிட்டதாகவோ, திட்டமிடாததாகவோ இருக்கலாம். சமூக முன்னேற்றம் உள் நோக்கம் உடையதாகவும் திட்டமிட்டுச் செயல்படுவதாகவும் இருக்கும்.

## சமூக மாற்றம் காரணிகள்

### உயிரியல் காரணிகள்

உயிரியல் காரணிகள் சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பிறப்பு, இறப்பு, திருமணம் முதலியவைகளில் ஏற்படும் மாற்றங்கள் சமூக மனப்பான்மைகளிலும், சமூகத் தொடர்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மக்கள் தொகையில் புத்திக் கூர்மையானவர்கள் விகிதம் அதிகமாக இருந்தால் அந்த சமூகத்தில் மாற்றங்கள் எளிதில் ஏற்படும். இயற்கைத் தேர்வு, வாழ்க்கைப் போராட்டம் போன்ற உயிரியல் கருத்துக்கள் சமூக மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. ஒரு நாட்டின் உயர்வுக்கு அந்த நாட்டு மக்களின் இனம்தான் காரணம் என எழுதப்படுகிறது.

### புவியியல் காரணிகள்

புவியியல் அமைப்புகள், பூமியின் மேற்பரப்பில் காணப்படும் மாறுதல்கள் காடு, மலை, பள்ளத்தாக்கு, பாலை வளம், வெள்ளப் பெருக்கு, நில நடுக்கம், அதிக வெப்பம், மழை, வறட்சி, பருவ கால மாற்றங்கள் நல்ல செழிப்புமிக்க நதியோரப் பகுதிகள் முதலியன மக்கள் வாழ்க்கை முறையைப் பெருமளவிற்குப் பாதிக்கின்றன. மேலும் தட்ப, வெப்ப நிலை, இயற்கை வளங்கள், இயற்கையாக அமைந்த போக்குவரத்து வசதி முதலியன சமூகத்தில் அதிக மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

## மக்கள் தொகைக் காரணிகள்

மக்கள் தொகை சார்ந்த பல நிகழ்ச்சிகள் சமூக மாற்றத்திற்குக் காரணமாகக் கருதப்படுகின்றன. மக்கள் தொகையில் உயர்வும், தாழ்வும், ஆண், பெண் விகிதத்தில் மாற்றம், இளைஞர் – முதியவர் விகிதத்தில் மாற்றம் போன்றவை சமூகத் தொடர்புகளில் அதிக விளைவுகளை ஏற்படுத்தும் மேலும் மக்கள் தொகை வளர்ச்சி, நகர மக்கள் தொகை விகிதம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. (எ.கா.) ஊரகத்திலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறும் போது ஊரக மக்கள் தொகை குறையவும், நகர மக்கள் தொகை கூடவும் செய்கிறது. இதனால் நகரங்களில் பல விளைவுகள், பிரச்சினைகள் ஏற்பட்டு, சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.

## உளவியல் காரணம்

பொதுவாக மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். மனிதன் தன் மன நிலையிலும், அனுபவத்திலும் மாற்றத்தை நாடுகிறான். புதிய அனுபவத்தைப் பெற விரும்புகின்றான். புதிய அனுபவத்தை விரும்புதல் ஒரு தூண்டுதல் உணர்ச்சியாகும்.

## தொழில் நுட்பவியல்

சமூகத்தின் தொழில் நுட்ப அறிவு, திறன் சமூக மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது. தற்காலப் பொறியியல் வளர்ச்சியானது சமூக மாற்றங்களையும் கொண்டு வருகிறது. ஆக்பர்ன் கூறுவதாவது பொறியியலானது நமது சுற்றுப்புறங்களை மாற்றி அமைத்து மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மாற்றங்களுக்குத் தக்கவாறு நடத்தை, பழக்க வழக்கங்களையும், சமூகநிறுவனங்களையும் மாற்றி அமைக்கின்றன. மின்சாரம், நீர் ஆவி, பெட்ரோல் முதலியவற்றால் ஓடும். இயந்திரங்கள், புதிய செய்தித் தொடர்பு போக்குவரத்து முறைகள், ஒவ்வொரு தினமும் நாம் பயன்படுத்தும் பற்பல இயந்திர சாதனங்கள் சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இத்தகைய பொறியியல் காரணிகள் குடும்பம், திருமணம் போன்ற சமூக

நிறுவனங்களையும் பாதிக்கின்றன. தொழிற்சங்கங்கள், தொழில் பகுப்பு, தனித்துறைப் பயிற்சி, வாழ்வின் வேகம், உற்பத்தியின் வளர்ச்சி முதலியன பொறியியல் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள வெளிப்படையான மாற்றங்களாகும். மேலும் சமூக அமைப்பிலும், வாழ்க்கை முறையிலும் பல மாற்றங்கள் புதிய கண்டுபிடிப்புகளால் தோன்றியுள்ளன. அச்சகம், நீராவி எந்திரம், தொலைபேசி, கார், வானொலி, திரைப்படம், டி.வி. போன்ற பல கண்டுபிடிப்புகள் மனித வாழ்வைப் பெரும் அளவிற்கு மாற்றிவிட்டன. மக்களின் சமூக, பண்பாட்டுத்துறை மாற்றங்களுக்கு இந்தப் புதிய தொழில்நுட்ப சாதனங்களின் கண்டுபிடிப்பே காரணமாகும்.

## பொருளாதாரக் காரணம்

காரல் மார்க்ஸ் (Karl Marx) என்பவர் சமூக மாற்றங்களுக்குப் பொருளாதாரமே காரணம் எனக் கூறுகிறார். உயிர் வாழ உணவும், உணவைத் தேட உழைப்பும் தேவை. எனவே உழைப்பின்றி உயிர் வாழ இயலாது. சமூகத்தில் எல்லோருக்குமே தேவையானது கிடைப்பதில்லை. பொருள் பற்றாக் குறையினால் கிடைத்தவர், கிடைக்காதவர் என இரு பெரும் பிரிவுகள் சமூகத்தில் தோன்றுகின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் என்றும் போட்டி போட்டு வாழ்கின்றன. பொருள் உற்பத்திதான் மக்களிடையே பொருளாதார உறவு முறைக்குக் காரணமாக அமைகிறது. உற்பத்தித் திறன் மாறும்போது சமூக உறவுகளும் மாறுகின்றன. சமூகத்தில் உள்ள தொழில் நுட்ப அறிவு பொருளாதார உற்பத்தியையும் மக்களிடையே உறவு முறையையும் விளக்குவதாகவும், சமூக மாறுதல்களுக்குக் காரணமாகவும் விளங்குகிறது. செல்வந்தர், ஏழை இவர்களிடம் என்றும் காணும் வர்க்கப் போராட்டத்தின் விளைவாக, பொருள் இல்லாதவர் தன் நிலையை மாற்ற முயலும் போது செல்வந்தர்கள் தடுக்கிறார்கள். இதனால் சமூகத்தில் புரட்சி ஏற்பட்டு, புரட்சியின் விளைவாக சமூக மாறுதல்கள் உண்டாகின்றன என காரல் மார்க்ஸ் கூறுகிறார்.

## சமூகத் தன்மைகளும் ஒழுக்க நெறிகளும்

சமூகத் தன்மையும், நன் நெறிகளும் சமூக மாற்றத்தின் வேகத்தையும் அது உண்டாகும் திசையையும் பாதிக்கின்றன. பிற சமூகத்தின் பழக்க வழக்கங்களையும், நடத்தைகளையும் ஒரு சமூகம் ஏற்றுக் கொண்டு தன் பழக்க வழக்கங்களைக் கைவிடலாம். தங்கள் சமூகத்தின் நல்லொழுக்க நெறிகளுக்கும், சமூகத் தன்மைகளுக்கும் அப்பாற்பட்ட பண்பாடுகளை ஒதுக்கிவிடுகிறார்கள்.

## சமயத்தின் பங்கு

மார்க்ஸ் வெபரின் கூற்றுப்படி சமயமே சமூக மாற்றத்தைக் கொண்டு வருகிறது. சமூகத்தில் அதிக ஆட்சி உரிமை உடையவர்கள் அதிக மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். எ.கா. இஸ்லாமிய நாடுகளில் மக்களின் சமூக வாழ்வு முழுவதும் அந்த நாட்டின் சமயத் தலைவர்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. சமயக் கொள்கை நாட்டில் பொருளாதார மாற்றத்தையும் கொண்டு வரும்.

## சமூக சீர்திருத்த வாதிகளம் அறிஞர்களும்

ராசாராராம் மோஹன் ராய், சுவாமி விவேகானந்தர், கார்ல் மார்க்ஸ், நேரு, மகாத்மா காந்தி போன்ற சமூக சீர்திருத்தவதிகளும், அறிஞர்களும் சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சமூக மாற்றத்தை விளைவித்தனர். எ.கா. இந்தியாவில் சாதி அமைப்பு ஒழிக்கப்பட்டு, சமூக வகுப்பு அமைப்பிற்கு முக்கியத்துவம் தருகின்றனர். கலப்பு மணங்கள் அதிகரித்து வருகின்றன. தீண்டாமை அகற்றப்பட்டு அரிசனங்கள் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மகளிர் நிலையில் மாற்றம் காண்கிறோம். கல்வித்துறையிலும், பல பணிகளிலும், மற்ற துறைகளிலும் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுகின்றனர். சதி எனும் வழக்கம் ஒழிக்கப்பட்டு விதவைத் திருமணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பால்ய விவாகம் அறவே நீக்கப்பட்டுள்ளது.

## சமூக மாற்றம் என்பது கூட்டு வாழ்க்கையின் பலன் ஆகும்

சமூக மாற்றம் மனிதனின் விருப்பம், நோக்கம் முதலியவைகளுடன் தொடர்புடையதாகும். சில நேரத்தில் விருப்பமும் நோக்கமும் இணையும் போது திட்டமிடப்படாத பல மாற்றங்கள் உண்டாகின்றன. எ.கா. தொழில் துறையில் தான் இயங்கிகளின் கண்டுபிடிப்பு சமூகத்தில் பல எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

மேலே கூறப்பட்ட காரணங்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி, வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பெருமளவில் மாற்றங்களை உண்டாக்கியுள்ளது. சமூகம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் பல புதிய நிறுவனங்களும், சங்கங்களும் தோன்றியுள்ளன. குடும்பம், திருமணம், சாதி, அரசு, சமயம், பண்பாடு, கல்வி முறைகள், பொருளாதாரம் போன்ற சமூக அமைப்புகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.